ஸரஸ்வதி பூஜா மலர்

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3

மாலை 12	SEPTEMBER 1944 : தாரண ௵ புரட்டாசி ௴	முத்து 3

பொருளடக்கம்

விஷயம் — பக்கம்

1. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமுகம் ... 85
2. ஷியாரின் நன்மொழிகள் ... 86
3. ஸரஸ்வதி பூஜை ... 88
4. நவராத்திரி விழாவும் புது உலகமும்—ஸ்ரீ. கி. பாலசுப்பிரமணிய ஐயர், பி.ஏ., பி. எல். ... 90
5. ஆலயந் தொழு—ஸ்ரீ. வே. நாராயணன், எம். ஏ., எம். எல். ... 92
6. பாரதி—டாக்டர் வே. ராகவன், எம்.ஏ. ... 93
7. கண் திறக்கும் அறிவு—சுவாமி சிவானந்தாஜீ ... 95
8. கலைவாணி—சூடாமணி ... 98

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

விஷயம்		பக்கம்
9. காணிக்கை—ஸ்ரீ. ந. பிச்சமூர்த்தி	...	99
10. ஊருக்குப் பெரிய மனுஷர்—ரவிகன்	...	101
11. பிரளயம் வென்ற காகம்—ஸ்ரீ.டி.எஸ்.இராமானுஜம், எம்.ஏ.,எல்.பி.(லண்டன்)		131
12. விஞ்ஞான மாளிகையின் சிகரம்—ஸ்ரீ. ஜே. பி. மாணிக்கம் - பெ. நா. அப்புஸ்வாமி	...	139
13. ஜிஜாபாய்—திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்	...	140
14. பிரதிபலன்—ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ ஆர். ஸ்ரீனிவாஸன்	...	147
15. ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ஸ்ரீ. யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள்	...	150
16. முதலாளி யார் ?—ஸ்ரீ. டி.வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ.,எல்.ஐ.எம்.	...	153
17. நான் படித்த முதற் கதைகள்—ஸ்ரீமதி. கி. சாவித்திரி அம்மாள்	...	161
18. நாட்டில் துணி பஞ்சமிருப்பதேன் ?—'எம்.ஏ.'	...	165
19. பதினாயிரம் பேர்—ஸ்ரீ. ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி பி.ஏ., பி.எல்.	...	167
20. ஆண்டு நிறைவு—ஸ்ரீ பி. என். தியாகராஜன்	...	170
21. கச்சேரி பிளான்—ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.	...	173
22. அவனும் அவளும்—'ஜெமன்'	...	183
23. ஒலி பெருக்கலும், பரப்பலும்—ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ.	...	188
24. பைத்தியம் யார் ?—தஞ்சை டி. எஸ். சுந்தரேச சர்மா	...	194
25. ஸத்ஸங்கம்—ஸ்ரீ. கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி.எல்.	...	201
26. மணக்குடி பிச்சு—ஸ்ரீ. தி. கோ. ஆராவமுதன், எம்.ஏ., பி.எல்.	...	207
27. ஸமாதானம்—பண்டிட் எம். வி. எஸ். ராம், பி.ஏ., பி.எல்.	...	216
28. பாகிஸ்தான் : பாக்யஸ்தானா படுகுழியா ?—ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி	...	217
29. காளிதாஸரின் உவமைகள்—ஸ்ரீ. புரசு-பாலகிருஷ்ணன்	...	221
30. ஜப்பான் - சோவியத் போர் வருமா ?—ஸ்ரீ ஏ. ஜி. வேங்கடாச்சாரி	...	229
31. 'டிராப்ட் ஹிந்து கோட்'	...	232
32. மூவர் அழல்—'த்ருஷ்ட கர்மா'	...	236
33. சுவேதாரண்ய ஆசிரம பால பாடம்—ஸ்ரீ. கா. சி. வேங்கடரமணி	...	239
34. சரஸ்வதிக்கும் லக்ஷ்மிக்கும் சண்டை—ஸ்ரீ. சூடாமணி	...	240
35. "கல்வி" அன்றும் இன்றும்—டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி	...	244
36. கலைமகள்—பி. ஸ்ரீ.	...	247
37. போகிற போக்கில்—மணி	...	250
38. வலைவீச்சு	...	254
39. சென்ற மாத நிகழ்ச்சிகள்	...	256

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீ முகம்

இப்பூவுலகில் எல்லா வகையாலும் நீர்வளம் நிலவளம் முதலிய யாவும் ஒருங்கே அமையப்பெற்றதாகிய நாமகள் அருள் வண்மை ஓங்கிய நாவலர் மிக்க இந்நாவலந் தீவிலே (ஜம்பூத்வீபத்திலே), புகழுடன் போற்றப்படும் பாரதவர்ஷ (Greater India)த்தின் கண்ணே போன்ற பரதகண்ட (India)த்தின் தென்பாகத்திலே, தேன் பாகமேயாகி நின்ற புண்ணிய பூமியாம் பாரத நாட்டின் தர்மம், தத்வம், கலை, நாகரிகம் இவைகளின் மேம்பாட்டுக்காகத் தொண்டு புரியும் பாரத மணிப் பத்திரிகைக்கு ஆறுவது ஆண்டு நிறைந்து ஏழாம் ஆண்டு எழுவதை அறிந்து மிக மிக மகிழ்வெய்துகிறோம்.

பாரத தேசத்தின் மணியாகிய இப் 'பாரத மணி' குழவி (குழந்தை)ப் பருவமிருந்தேறி வந்து, யௌவன தசையை எட்டிப் பிடித்து, வாழ்க்கையின் லக்ஷ்யமான நமது தாய்நாட்டின் உயிர் நிலையான தர்மத்திற்கு சேவை புரிந்து, மாந்தர்களை அதர்மத் தொடர்பு அறவே அற்றதாகிய முறையிலே ஈடுபடச் செய்து, தேசசேவை, மக்கட்பணி, சமூகத் தொண்டு, கலாபிவிருத்தி முதலிய உயர்நிலைக்குரித்தாகிய பாட்டைகளிலே என்றென்றும் சிறப்புற அமர்ந்து, மாநிலமெங்கும் மங்களமான தனது இசைமணியோசையைப் பரப்ப அருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

தென்மொழியாய்த் தேனினும் இனியதாகிய தமிழ் மொழியாகிய நம் தாய்மொழியிலே, தமிழிசை, வளம், கவிப்புலமை வனப்புகளுடன் சீரிய சேவை செய்திடும் பத்திரிகாசிரியர் ஸ்ரீ. கா. சி. வேங்கடரமணி அவர்களும் பெரும்பேருடனும் சீருடனும் மானிடர் யாவருக்கும் பொதுவாகவும், பாரத மக்களுக்கும் மற்றும் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களுக்குங் குறிப்பாகவும் திருத்தமிழ்ப் பெரும்பணியை நெடுங்காலம் செய்து வந்து மென்மேலும் வளர்க.

முகாம் எசையனூர்
3—9—1944

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்

செய்த உபந்நியாசங்களினின்று தொகுத்த

நன்மொழிகள்

சாரத நவராத்ரி

ஸகல ஜனங்களுக்கும் இன்பத்தைத் தருவது பரிபூர்ண சந்திரன். சரத்கால சந்திரன் மிகவும் விசேஷமானது என்று காவ்ய சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இப்பொழுது நடப்பது சரத்ருதுதான். சரத்கால சந்த்ரன் ஆனந்தத்தைத் தருகிறான்.

ஒவ்வொரு ருது ஆரம்பத்திலும் நவராத்ரி உண்டு. அப்பொழுது அம்பிகையைப் பூஜிக்கவேண்டும். அப்படி உள்ள ஆறு நவராத்ரிகளுக்குள் வஸந்த நவராத்ரியும் சாரத நவராத்திரியும் விசேஷமானவை. சாரத நவராத்ரி என்பது சரத் காலத்தில் ஏற்பட்ட நவராத்ரி. நாம் அனுஷ்டிக்கும் நவராத்ரி அதுதான்.

* * *

சந்த்ர மண்டலத்தில் அம்பாள் வஸிக்கிறாள். லலிதா ஸஹஸ்ரநாம பலச்ருதியில் அம்பாளைச் சந்திர மண்டலத்தில் த்யானம் பண்ணச் சொல்லுகிறது....... அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்கிச் சாந்தத்தைத் தருவதால் அம்பிகையைச் சந்த்ர மண்டலத்தில் த்யானம் பண்ண வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

* * *

அம்பாள் யார்? ஔவை 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று சொல்லியிருக்கிறாள். 'மாத்ரு தேவோ பவ', 'பித்ருதேவோ பவ' என்று உபநிஷத்தும் சொல்லுகிறது. 'மாதாவைத் தெய்வமாக வணங்கு', 'பிதாவைத் தெய்வமாக வணங்கு' என்பது அவைகளுக்கு அர்த்தம். இந்த ஒரு ஜன்மத்துக்கு ஏற்பட்ட ஒரு தாயையே தெய்வமாகக் கொண்டாட வேண்டும். அம்பிகை எந்த ஜன்மத்துக்கும் மாதா. இந்த லோகத்தில் நாலைந்து குழந்தைகளுக்கு ஒருத்தி தாயாக இருக்கிறாள். எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாக் காலத்திலும் தாயாய் இருப்பவள் அம்பிகையே. லோகம் முழுதிலும் உள்ளவர்கள் யாவரும் ஸஹோதரர்களே; பக்ஷி, புழு முதலியவை எல்லாம் நம்முடைய ஸஹோதரர்களே. இவ்வளவு பேருக்கும் ஒரு தாயாக இருப்பவள் அம்பிகையே. அந்த ஒரு தாய் வயிற்றிலிருந்து யாவரும் உண்டானவர்கள். 'தாயாரைத் தெய்வமாக நினை' என்பதனால் அவ்வாறு நினைக்க முடியும் என்பது தெரிகிறது. அதைத் திருப்பி, 'தெய்வத்தைத் தாயாக நினைப்பது' தான் அம்பிகையின் த்யானம். க்ருஷ்ணனை, அர்ஜுனன் ஸ்நேகிதனை நினைத்தான்; குழந்தையாக யசோதை நினைத்தாள்; ருக்மிணி ஸத்யபாமை பர்த்தாவாக நினைத்தார்கள்; நாமெல்லாம் குழந்தைகளாகையினால் பரமாத்மாவை அம்பிகையாக, அதாவது தாயாக, நினைத்தால் அப்படியே வந்து அனுக்ரஹம் செய்வாள். எந்த ரூபமாக எண்ணினாலும் அந்த ரூபமாக வந்து அனுக்ரஹம் செய்யும் தன்மை பரமாத்மாவுக்கு உண்டு. ஸாக்ஷாத் பரப்ரம்மமே அம்பிகையாய் இருந்து தாயைப் போல் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் அனுக்ரஹம் பண்ணிக்கொண்டிருக்கிறாள். அம்பாளை ஆராதனை பண்ணி எவ்வளவோ மஹா புருஷர்கள் அனுக்ரஹத்தை அடைந்திருக்கிறார்கள்.

அம்பிகையே வாக் ஸ்வரூபமாக இருப்பவள். அம்பாள் உருவம் முழுவதும் அக்ஷரங்கள். நம்முடைய உடம்பில் எல்லாம் நாற்றமுள்ள வஸ்துக்களே நிரம்பி இருக்கின்றன; இந்த ஆஸா பாஸங்களுக்குள் அறிவு என்ற ஒரு மணி இருக்கிறது. அம்பாள் உடம்போ அகாராதி க்ஷகாராந்தம் இருக்கும் அக்ஷரங்கள்தான். அம்பிகையை ஆராதித்தால் ஸகல தேவதைகளையும் ஆராதித்த மாதிரி யாகும் என்ற அர்த்தத்தைத் தரும் சுலோகம் ஒன்று 'ஸௌந்தரிய லஹரி'யில் (25) இருக்கிறது. 'ஸத்' என்பது உண்மையான வஸ்து; 'சித்' என்பது அறிவான பொருள்; 'ஸத்' ஈசுவர ஸ்வரூபம்; அதை அறிவதற்கு அறிவு வேண்டும். அது அம்பிகை ஸ்வரூபம். ஸத்தை ஈசுவரனாகவும் சித்தை அம்பிகையாகவும் சொல்வதுண்டு. அறிகிறது இல்லை என்றால் உள்ளதால் பிரயோஜனம் இல்லை. இரண்டும் ஒன்றேதான்.

எல்லா சாஸ்திரங்களும் முடிவில் ஞானமடைவதைத் தான் சொல்லுகின்றன. ஸாக்ஷாத் ஞானம் தான் மோக்ஷ ஸாதனம். ஞானஸ்வரூபிணீ பரதேவதை. அவள் அனுக்ரஹம் பெற்றால் ஜன்ம விடுதலை யாகி மோக்ஷ மடையலாம்.

ஸகஸ்ர இதழ்களையுடைய தாமரை சிரஸுக்குமேல் பிரம்ம ரந்திரத்தில் இருக்கிறது; அதில், சந்திர பிம்பத்துள் அம்பிகை இருக்கிறாள். சிரஸ் ஞான ஸ்தானம். அங்கிருந்து ப்ரவஹிக்கும் அமிர்த தாரையால் பேரானந்தம் உண்டாகிறது. ஸ்ரீ வித்யையாக அம்பிகை அங்கே இருக்கிறாள். அவளை ஆராதித்தால் ஞானம் ஆவிர்ப்பாவமாகி அஞ்ஞானம் போகும். இது 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் தான் அம்பிகையை ஆராதிப்பது எல்லாத் தேவதைகளையும் ஆராதித்த மாதிரி ஆகின்றது. நாமாக ஆராதிக்கா விட்டாலும் பெரிய ரிஷிகளும் மஹாத்மாக்களும் அம்பிகையை ஆராதித்த கோயில் முதலிய இடத்திற்குப் போய் வணங்கினால், அம்பிகை கடாக்ஷம் ஏற்பட்டு எந்தக் காலத்திலும் க்ஷேமமாக இருக்கும் அனுக்ரஹம் கிடைக்கும்.

* * *

ஜகத்துக்குத் தாயாகவும் கருணையுடையவளாகவும் இருக்கும் பரதேவதையிடம் கன்றுக் குட்டியைப் போன்ற பக்தி இருக்க வேண்டும். எப்படி குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தருவாளோ, அப்படி அவள் இஹ லோகத்தில் வித்தை, பணம், முதலியவைகளை அடையச்செய்து, பின்பு தானாகப் பழுத்துப் பரமானந்தத்தைப் பெறும்படி அனுக்ரஹம் செய்வாள்.

(ஆசார்யர்கள் அருளிய நன்மொழிகளிலிருந்து பொறுக்கியவை.)

திருமந்திர மணிகள்

எய்தி வழிப்படில் எய்தா தனஇல்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வம்;முன்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே. 1

அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறை கின்றன மறையீறுகள் தாமே. 2

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 3

ஸரஸ்வதி பூஜை

ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்யர்கள் மந்திர சாஸ்திரங்கள் முதலிய விஷயங்கள் பலவற்றையும் தமது ‘பிரபஞ்ச ஸாரம்’ என்னும் நூலிலே சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்கள். அந்நூலின் காப்புச் செய்யுளிலே அவர்கள் சாரதா தேவியைப் பிரார்த்தித் திருப்பதினின்றும் சரத் காலத்து நவராத்திரியிலே பூஜிக்கப்பெறும் தேவியின் வழிபாட்டினையே அவர் தலை சிறந்ததாகக் கருதினார்கள் என்பது தெளிவு. அச்செய்யுள்வருமாறு: “அகர முதலான உயிரெழுத்து வர்க்கம், கவர்க்கம், சவர்க்கம், டவர்க்கம். தவர்க்கம், பவர்க்கம், யவர்க்கம் ஆகிய ஏழு எழுத்து வர்க்கங்களையும் தனக்கு, வாய், கை, பாதம், இடை, இதயம் ஆகிய அவயவங்களாகக் கொண்டவளாய், என்றுமுள்ளவளாய், எல்லாப் பொருட்களையும் தோற்றுவித்தவளாய், உலகனைத்திற்கும் ஈசுவரியாய் விளங்கும் சாரதா உங்களுக்கு மனத் தூய்மையை அளிப்பாளாக.” எட்டாவது படலத்திலே, அவர்களே வாக் தேவியை வணங்கிக் காட்டி, “இந்த வாகீசீ ஸ்தவத்தை எவனொருவன் ஜபம், அர்ச்சனை, ஹோமம் ஆகிய வேளைகளிலே உச்சரிக்கிறானோ, அவன் மாசற்ற சித்த விருத்தியை யுடையவனாகி, தேகத்தை நீத்துச் செல்லும்போது, நித்திய சுத்தமான நிலையைப் பெறுகிறான்” என்று உலகோரை வழிபடுத்துகிறார்கள். அந்த ஸ்தோத்திரம் இங்கு மொழிபெயர்த்துக் கூறப்படும் :—

அமல கமலத்தில்
அமர்ந்து வாழ்பவளே !
மனத்துறை மாசுகளை
மாற்றி யருள்பவளே !
மனத்திற் கினியாளே !
மாண்புறு வடிவினளே !
நன்னடை யுடையவளே !
நின்னடிக் கமலத்தே
என்றுமே எப்பொழுதும்
வணங்கியே நிற்பேனே. 1

மலைபெறு மகளென்றும்
மலையுறு துர்க்கையென்றும்
மலர்மேற் கமலையென்றும்
திரிபுரை தானென்றும்
பலபடி பிரித்தெவளைப்
பகர்வர்கள் இவ்வுலகில்
அவ்வடி வனைத்தும்நீ,
அஞ்சொல் லனைத்திற்கும்
இறைவீ ! இனிதருள்வாய்
எத்திறத்தினும் எனக்கு. 2

நின்னிரு மலர்த்தாளிற்
பணிவது புரியானேல்
அந்தணனா யினுமே
அவன் மீண்டுஞ்செவிடாய்
ஊமனாய்த்தான் பிறப்பான்;
ஊமனாய்ப் பிறந்தாலும்
தேவியே!நின் பக்தன் ஆயின்
முற்றுணர் வோனே. 3

எழுத்தனைத்தும் உடம்பாய்
அமுதகன் மேனியளாய்
எப்பொழுதங் காணும்
யோகியர்க்கும் என்றும்
ஈதிவள் வண்ணம்என்று
சுட்டுதற் கியலாதாய்!
இதுவேதான் என்று
துணிவதற் கெட்டாதாய் !
தேவி !நினை வர்ணிக்குந்
திறலினைத் தந்தருள்வாய். 4

தேவாசுரர் வணங்கும்
முடிகளின் மீதொளிரும்
மணியொளியா லொளிருந்
துணைமலர்த் திருவடியாய் !

சகலாக மத்தினையுஞ்
சொரூபமாக் கொண்டவளே !
எல்லோர்க்கும் இறைவீ !
என்முனே வீற்றிருப்பாய். 5

புத்தக மொருகையுஞ்
செபவட மொருகையும்
அபயமெனுங் கையும்
வரமருளுங் கையும்
கொண்டு கொலுவிருக்குஞ்
சொற்கிழத்தி ! அருளாய்
கருப்பூர மயமான
தூவெள்ளை மேனியளே !
மாசற்ற தாக்குகஎன்
நெஞ்சினை இப்பொழுதே. 6

வெண்பட் டுடுத்தவளே !
வெண்முத் தணிந்தவளே !
வெண்ணகைக் குறைவிடமே !
வெண்ணிலவின் னொளியால்
விளங்கிய வதனமதி
மண்டல முடையவளே !
என்றுமே யெப்பொழுதும்
அருளுக என்றனக்கே. 7

மூன்று முகத்தினளே !
முதுமொழி வடிவினளே !
திரிபுரையே ! தேவர்
தொழுந்துணைத் தாளுடையாய் !
முக்கண்ணொடு விளங்கும்
முகமண்டல முடையாய் !
மூவர்முதல் வருக்கும்
மூலம தானவளே !
என்றுமே யெப்பொழுதும்
அருளுக என்றனக்கே. 8

வித்தை வடிவினளே !
அவித்தை யழிப்பவளே !
உள்ளத் துறைபொருளை
யுணர்பவ ருள்ளத்தில்
ஒள்ளொளி பெற்றொளிர்வாய் !
முன்னை முனிவர்களால்
உரைநடை மொழியாலும்
பலபல வகையாய
பாடற் றொகையாலும்
பரவப் பெற்றவளே !
என்றுமே யெப்பொழுதும்
அருளுக என்றனக்கே. 9

இலக்கணம் நற்சந்தம்
நிருக்தமும் சோதிடமும்
கற்பமும் சிட்சையுமே
நிலையுறு மங்கமதாய்
வேத வடிவாகி
விளங்குவாய் ! அருள்எனக்கே. 10

நின்னடித் தாமரையிற்
படிந்த பேரறிஞர்க்கு
மாசொன்றும் படியாது ;
பிராட்டி ! பரம்பரையே !
ஆதலின் பரபக்தி
நின்னிடை யெனக்கருள்வாய் ! 11

அறிவுடையோர்க் கென்றும்
அறிவாம் வடிவினளே !
மனமலர் மணியரங்கில்
நடன முவப்பவளே !
நற்பொருள் அளிப்பவளே !
பிராட்டியே ! என்றனுடைப்
பிறவியை யொறுக்கவல்ல
பரபக்தியை யருள்வாய். 12

நவராத்திரி விழாவும் புது உலகமும்

[கி. பாலசுப்பிரமணிய ஐயர் பி. ஏ., பி. எல்.]

தொன்றுதொட்டு நம் பாரதநாடு முழுவதும் எல்லா பிரதேசங்களிலும் நவராத்திரி விழா ஹிந்து மக்களின் இல்லங்தோறும் வெகு விமரிசையாகவும் ஆர்வத்துடனும் களிப்புடனும் நடந்துவருகிறதை நாம் எல்லோரும் நன்கறிவோம். நவராத்திரி என்கிற பெயரிலிருந்தே அவ்விழா ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறதென்று தெரிகிறது. சில வருஷங்களில் பஞ்சாங்கங்களின் கட்டளைப் பிரகாரம் ஒருநாள் குறையலாம். ஆனல் வெகுவாக ஒன்பது நாட்கள் செய்யவேண்டிய விழா என்றே நாம் வைத்துக்கொள்ளலாம். அவ்விழாவில் புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள், வேலைக்காரர்கள், தொழிலாளர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஈடுபடுவதை நாம் பார்க்கின்ருேம். எல்லாக் கோயில்களிலும் மற்றைப் பொது இடங்களிலும் இவ்விழாவை மிகச் சிறப்பாக நடத்தி வருகிருர்கள். வீடுதோறும் கொலுவும் கொண்டாட்டமும் எங்கே பார்த்தாலும் தீபவொளிகளும் பட்டுப் பட்டாடைகளும் காணப்படுகின்றன. முக்கியமாக இந்நாட்களில் இவ்வுலகமீன்ற அன்னையாகிய தேவியின் வழிபாடு செய்யப்படுகிறது. நம் பாரதநாட்டில் தேவி பூஜையானது ஆறு சமயங்களில் ஒரு முக்கிய சமயமாகவே விளங்கிவருகிறது. அந்த சமயம் வேதங்கள் தொடங்கிய காலம் முதல் நம் தேசத்தில் பெரும்பான்மையோருடைய மனதைக் கவர்ந்து அவர்களை ஈடுபடும்படி செய்திருக்கிறது.

இவ்விழா ஏற்பட்ட காரணமும் அதனுடைய உட்கருத்தும் நன்ருக கவனிக்கத்தக்கது. தேவி பாகவதம் லலிதோபாக்யானம், காமாக்ஷி விலாஸம் என்கிற உயர்ந்த புராண நூல்களை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இக்கருத்து நன்கு விளங்கும். அந்நூல்களில் தேவி ஆவிர்பவித்த காரணமும் சந்தர்ப்பமும் தேவியின் சக்திஸ்வரூபமும் அந்த சக்தியின் விலாஸத்தால் உலகத்திற்கேற்பட்ட நன்னிலையும் உலகத்திலுள்ள கேடுகளும், தோஷங்களும் உருவெடுத்துவந்த அசுரர்களின் தோல்வியும், நன்னெறியையும் செல்வத்தையும் வெற்றியையும் பற்றி விரிவாக அழகான முறையில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதை நாம் படித்து ஆனந்தமடையலாம். திரிமூர்த்திகளுடையவும் மற்றுமுள்ள எல்லா தேவர்களுடையவும் சக்திகளையும் ஒருங்கே திரட்டி ஆகர்ஷித்துக்கொண்டு ஆதி சக்திஸ்வரூபமாகிய தேவியானவள் சிதக்னி குண்டத்தில் ஆவிர்பவித்தாள் என்றும், மந்த்ரிண் யம்பா முதலான ஸேனு நாயிகைகளுடனும் கோடிக்கணக்கான சக்தி ஸேனைகளுடனும் வெள்ளிமிளிர்கின்ற ரதத்தில் கையில் வில்லும், அம்பும், வாளுமாக தேவியானவள் ஏறிக்கொண்டு காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்கிற உடன்பிறந்த சத்ருக்களும், அக்ஞானம், சோம்பல் முதலான பெரும் குற்றங்களும் பண்டன், விஷங்கன் முதலான அசுரர்களாக உருவங்கொண்டு உலகத்தைச் சீர்குலைத்து அழியும்படி செய்கின்றவர்களை ஒன்பது நாட்களில் நடந்த பெரும்போரில் அழித்து மாய்த்து வெற்றியடைந்த ஸந்தோஷ சரித்திரத்தையும் அந்நூல்களில் பெரியோர்கள் கூறியிருக்கிருர்கள். ஆகையாலேதான் நவராத்திரி ஆரம்பமான பிறகு பத்தாவது நாளுக்கு விஜயதசமி என்கிற பெயர் வழங்கிவருகிறது. இந்த தேவி விஜயத்தையும் அவள் சக்தியின் விலாஸத்தையும் நன்னெறியின் வெற்றியையும் கொண்டாடுவதற்குத் தான் இந் நவராத்திரி விழாவானது நம் பாரதநாட்டில் ஏற்பட்டிருக்கிறதென்று இந் நூல்களிலிருந்து நாம்

கற்றுணரலாம். இப் பெரும் வெற்றியினுல் பண்டன், விஷங்கன் முதலான அசுரர்களின் ஆட்சி அடங்கி கல்வியும், அறிவும், நற்குணங்களும், ஒற்றுமையும், செல்வமும், சாந்தமும் ஓங்கி வளர்ந்துகொண்டிருக்கிற புது உலகம் உண்டாயிற்றல்லவா! ஆகையினுலேதான் இவ்விழாவில் கல்விப் பயிற்சியும், வேதகோஷங்களும் உயர்ந்து, நூல்களின் பாராயணமும் எல்லா கலைகளின் விலாஸமும், கொலுவும், பாட்டும் கூத்தும், இம்மாதிரி எல்லாவித நற்செய்கைகளும் ஓங்கி ஒளிர்கின்றன. இக்காலத்தில் முன் சொன்ன காமம் குரோதம் முதலான தலைவிரித்தாடும் பேய்களினுல் பீடிக்கப்பட்டு உலகம் முழுவதும் ஆக்ரமித்து ரத்தக் களஞ்சியமாகச் செய்யும் பெருஞ் சண்டையில் ஆழ்ந்து கிடக்கும் இவ்வுலகம் அச்சண்டை நீங்கி அமைதி ஏற்பட்டு சீர் ஓங்கும் புது உலகம் ஆகவேணுமென்று பேரார்வத்துடன் தேவியை வழிபாடு செய்து இவ்விழாவை நாம் கொண்டாட வேண்டியது முறையே. தேவியின் பூர்ண பிரஸாதத்தினுலேதான் இப் புது உலகம் அமைக்கப்பட வேணுமே தவிர, மாந்தர்களால் ஒன்றும் ஆகாதென்பது திண்ணம். உலகமீன்ற அன்னைதான் அவள் குழந்தைகளைத் தேற்றவேணுமே தவிர, மற்ற எவருக்கு அந்த உரிமை, அந்த சக்தி?

இவ்விழாவை பழைய முறையிலேயே கொண்டாட வேண்டுமென்கிற நிர்பந்தமில்லை; புது முறைகளில் நாம் இந்நாட்களில் கொண்டாடலாம். தேவி வழிபாடு செய்வது முக்கியமென்பதில் ஐயமில்லை. மலைமகளை மூன்று நாளும், பூமகளை மூன்று நாளும், நாமகளை மூன்று நாட்களுமாக, கலைமகள், அலைமகள், மலைமகள் இம்மூன்று தேவிகளும் சேர்ந்து ஓர் உருவமாகிய இராஜராஜேச்வரியின் பூஜைதான் மேன்மையை தருமென்பது நிச்சயம். அத்துடன் இவ்வொன்பது நாட்களிலே நம் நாட்டின் க்ஷேமத்திற்காகவும், பொது மக்களின் நன்மைக்காகவும், பொருளாதார மேன்மைக்காகவும் செய்துவருகிற எல்லா உழைப்புகளின் வருஷாந்தர கொண்டாட்டமாக இந்நாட்களை அமைப்பது நலம். வரும் காலங்களில் நம் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய நற்செயல்களைப் பற்றியுள்ள ஆழ்ந்த ஆலோசனைக்காக இந்நாட்களில் பெரும் கூட்டம் கூட்டுவது நல்ல பலனைத் தரும். கலை அபிவிருத்தி, தொழில்களின் சிறப்பு, நல்ல வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்யும் முறைகளின் அமைப்பு, மனை வாழ்க்கைக்கு அழகு தரும் கைத்தொழில்களின் அபிவிருத்தி இவை எல்லாம் தொடங்கும் புண்ணிய தினங்களாக இந்த தினங்களைக்கொண்டாடலாம். கடைசியாக, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நம் பாரத நாடு சுதந்திரத்தை அடைவதற்கு செய்யும் தொண்டு வெற்றிபெற இந்த நவராத்திரி புண்ய தினங்களிலே வேருன்ற வேணும். சாந்தமும், சீரும், செல்வமும் ஓங்கி வளர்ந்து பிரகாசிக்கின்ற புது உலகம் அமைக்க இராஜராஜேச்வரியின் வழிபாட்டில் ஈடுபடுவது நம் பாரதத் தாய்க்கு மக்கள் செய்யும் கடமையாகும். இவர்களுக்கு தேவி பூர்ண அருள்புரிவாளாக.

ஆலயந் தொழு

[வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.]

தன்னை மறந்திருப்பது தான் 'லயம்' என்று சொல்லப்படும். எல்லோரும் எல்லாவற்றையும் மறந்து தெய்வ சிந்தனையிலே ஆழ்ந்திருப்பதற்காகஅமைந்த இடமே 'ஆலயம்' என்பது. ஆலயத்தின் கோபுரங்கள் நிமிர்ந்து ஓங்கி நின்று நம்மைக் கூவியழைக்கின்றன; அவையே தெய்வத்தைத் தொழுவோர் எவ்வாறு ஓங்கி நிமிர்ந்து பெருமை பெறுவார்கள் என்பதையும் குறிக்கின்றன. கோபுர தரிசனத்தாலேயே காண்போர் மனத்திற் படிந்த மாசு அனைத்தும் நீங்கிவிடும். அதனாலேதான், 'அந்திய சாதியினர் கோபுரத்தைத் தொழுதாலே போதும். ஆலயத்தினுள் அமர்ந்த தெய்வத்தைத் தொழ வேண்டிய அவசியம் இல்லை' என்று விதிக்கப்பட்டது. இதுவே 'ஆலயந் தொழுதல்' ஆகும். அவ்வப்போது நம்முடைய மனத்திலே சேர்கின்ற மாசுகளை யெல்லாம் தினந்தோறும் அப்புறப் படுத்துவதற்காக நாம் தொழத்தக்க திருக்கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

நம்முடைய வீட்டிலே தாய் தந்தையராகிய தெய்வங்கள் இருக்கின்றன; அத்தெய்வங்களை நாம் உபசரிப்பதுபோலவே கோயிலிலே நம்மை உய்விப்பதற்காக மூர்த்திகரித்து வந்துள்ள தெய்வங்களையும் நீராட்டியும் நல்லாடை புனைவித்தும், புஷ்பங்கள் முதலியவற்றால் அலங்கரித்தும் நல்லுணவுகளை நிவேதித்தும் போற்றி வழிபடுகிறோம். ஆனால் அந்தத் தெய்வங்களை வழிபடுவதோடு நிற்கக் கூடாது. அவை கோயில்கொண்டுள்ள ஆலயத்தையும் தொழ வேண்டும். ஆலயத்தை வலம் வருவோரின் கால்களை முள் முதலியன வருத்தாதவாறு, அவற்றைக் களைகொட்டியாற் களைந்தெறிய வேண்டும். ஆலயத்தின் தூய்மை பொருந்திய தோற்றத்தைப் பாதுகாக்க வேண்டும். கோயிலின் மதிட்சுவர்களை செடி கொடிகள் பாழ்ப்படுத்தா வண்ணம் அவற்றைப் பிடுங்கி யெறிய வேண்டும். கோயிலுள் அலகிட்டு மெழுகிக் கோல மிடவேண்டும். மதிட் சுவர்களுக்கு வெண்பட்டை சிவப்புப் பட்டை தீற்ற வேண்டும். கோயிலுக்குச் செல்லும் போதும், அங்கு தெய்வங்களைப் பிரார்த்தித்து நிற்கும்போதும், மீண்டும் திரும்ப வரும்போதும், தெய்வ சந்நிதியிலே இருக்கிறோம் என்பதை மறவாமல், ராஜாவின் அரண்மனையிலேயும் பெரியோர் திருமுன்பும் எவ்வாறு அடக்க வொடுக்கத்தோடு நடந்துகொள்கிறோமோ அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும். இவையெல்லாம்செய்தால் மட்டுமே, நாம் ஆலயந் தொழுதவர்கள் ஆவோம்.

இது போலவே, நம்முடைய உடலும் ஓர் ஆலயம்; நம் இருதயத்திலே கடவுள் என்றும் எப்பொழுதும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். அதனால், ஆலயத்தைப் போற்றுவதைப் போலவே, உடலையும் நன்றாகப் பாதுகாக்க வேண்டும்; உடல் என்பது ஆன்மாவாகிய அரசனுடைய பட்டிணம், ஆன்மாவாகிய தெய்வத்தின் கோயில். இதை உணர்ந்தால், நமக்கு நமது உடலின்மீது அலட்சிய புத்தியோ அருவருப்போ தோன்றாது. நம்முடைய உடலாகிய ஆலயத்துள் அழுக்குச் சேரும்படி விடக்கூடாது; அதனை உள்ளும் புறமும் தூயதாக வைத்துக் கொள்ள வேண்டும்; இதன் பொருட்டு சுகாதார விதிகளின்படி நடக்க வேண்டும். அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். காலைக் கடன்களை முடித்துக்கொண்டும் பல் விளக்கியும் துணிகளைத் தோய்த்தும் ஆன பிறகு, நீராட வேண்டும். குறிப்பிட்ட வேளைகளில், நன்றாகப் பசி யெழுந்தபின் பக்

பாரதி

[டாக்டர் வே. ராகவன், எம். ஏ.]

நவராத்ரி விழாவும் ஸுப்ரமண்ய பாரதியின் கொண்டாட்ட விழாவும் நெருங்கி நேர்ந்திருக்கின்றன. சக்தியைப் பாடி வழிபட்ட பாரதியைப்பற்றிய இரண்டொரு வார்த்தைகள் பாரதமணியின் நவராத்திரி மலரில் பொருத்தமற்றதாய் இருக்காது.

ராஜசேகரன் என்று பத்தாவது நூற்றுண்டிலிருந்த ஸம்ஸ்க்ருத கவி தன் அலங்கார நூலான காவ்ய மீமாம்ஸையில் " நம் வாழ்நாளில் நம்முன் இருக்கும் கவியும், தன் மனைவியின் அழகும், வீட்டு வைத்யனின் வித்தையும் ஏதோ ஒருவனுக்குப் பிடித்திருந்தால் இருக்கலாம் " என்று சொல்லுகிறார். அது போல் பாரதியை நாம் மேலும் கொண்டாடாததற்குக் காரணம் அவர் நம் தென்னாட்டில் தோன்றியதும், அவர் மறைந்து அதிக காலம் ஆகாததுமே தான். உண்மையில் தேசியக் கிளர்ச்சி தோன்றியதற்குப் பின் இவ் விந்திய நாட்டில் அவரவ்வளவு ஏராளமாயும், போற்றத்தக்கதுமான தேசிய கவிகளைப் பாடிய கவி வேறு மாகாணங்கள் ஒன்றிலும் தோன்றவே இல்லை என்று சொல்லலாம். நவீன இந்தியக் கவிகளுக்குள் அவரை ஸ்ரீ டாகூர் அவர்களுடன் தான் சேர்த்துப் பேசலாம் ; டாகூர் வாழ்ந்த நீண்டஆயுளில் ஒரு பங்குகூட நம் பாரதியார் வாழவில்லை ; ஆகையால் டாகூர் எழுதிய அளவிற்கு இவர் எழுதியதன் அளவுகுறைந்ததே; ஆயினும்டாகூரைப் போல் இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் தம் சிறந்த எழுத்துகளை நமது பாரதி விட்டுவிட்டுப் போயிருக்கிறார் ; கவி, வசனம், பத்திரிகைக் கட்டுரைகள், சிறு கதை, நீண்ட கதை, எல்லா வகைகளிலும் தம் சிறப்பை விளக்கியிருக்கிறார்.

குயில்போல் சற்று கூவுவதும், சற்று புயல்போல் அடிப்பதுமான அவருடைய கவிதை அழகு, வலிமை (Beauty and Strength) என்ற இருகுணங்களையும் நிரம்பக்கொண்டிருக்கிறது. அவருக்கு வேதத்திலும், வேத ரிஷிகளிடத்திலும் பெரும் மோஹமிருந்தது ; அவர் பல வேத மந்த்ரங்களை மொழி பெயர்த்ததுமல்லாமல், தன் கவிதையிலேயே ஒரு மந்த்ர ரீதியையும் கையாண்டார். கேவல காவ்யத்தின் அழகு முறைகளைக் கடந்து மந்த்ரம் (incantation) போல், புனருக்தியின் வலிவோடு விழுந்தன அவர் சொற்கள் : " ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் "; "விடுதலை, விடுதலை, விடு

குவமான ஆகாரத்தை மிதமாக உண்ண வேண்டும்; பரிசுத்தமான தண்ணீரையே பருக வேண்டும். மாலை வேளையில் தேகப் பயிற்சியாலும் விளையாட்டுகளாலும் மனதையும் உடலையும் வசப்படுத்திக்கொண்டு இன்புற வேண்டும். பகலிலே தூங்காமலும் இரவிலே நெடு நேரம் கண் விழியாமலும் இருக்க வேண்டும். இவை யெல்லாம் தேகமாகிய தேவாலயத்தை நாம் தொழுவதற்கான முறைகள் ஆவன. இவ்வாறு உடலை ஓம்புதல் தவறு என்ற அபிப்பிராயம் தவறான அபிப்பிராயமே. உடலைப் போற்றாமல், நோய்களுக்கு இடங் கொடுத்தால், நாம் துன்புறுவதோடு, அறஞ் செய்வதற்குரிய முக்கிய சாதனமாக நாம் நமது உடலை அமைத்துக் கொள்ளாத பாபத்திற்கும் ஆளாவோம். ஆகையால், நாம் அனைவரும், பெரியாழ்வாரைப் போல, 'சிங்கப்பிரான் அவன் எம்மான் சேருந் திருக்கோயில் கண்டீர்' என்று மார்தட்டி, 'மங்கிய வல்வினை நோய்காள், இங்குப் புகேன்மின் ! பங்கப் படாது உய்யப் போமின் !' என்று வினைகளையும் நோய்களையுமே வெருட்டியோட்டுஞ் சக்தியைப் பெறுவோமாக.

தலே" ஒரு பாட்டில் (I பக்கம் 595) " இவ்வுலக மினிது, வானினிது, காற்றினிது " என்கிறார்; இது "மது வாதா ரிதாயதே, மது க்ஷரந்தி ஸிந்தவ : * * மதுமத் பார்த்திவம் ரஜ :" என்ற வேத மந்த்ரத்தை நினைவு மூட்டுகிறது. அவருடைய 'குடுகுடுப்பாண்டி' பாட்டில் இந்தியாவை "வேதபுரம்" என்கிறார். ஹிந்துவுக்கும் வேதத்தை நம்புபவன் என்று இலக்கணம் சொல்லுகிறார்.

நிறைந்த அழகிய வாழ்க்கையை நாம் வாழவேண்டுமென்று அவர் தம் தமிழ் ஆங்கிலப் பாட்டுக்களில் லக்ஷ்மியைப் பாடினார்; இந்த நிறைவிலும் அழகிலும் உழவு, தொழில், கல்வி, வியாபாரம், யந்திரம், மாதர் முன்னேற்றம் ஏழைக்கு முன்னேற்றம் ஒற்றுமை கடைசியில் ஸ்வதந்திரம் அவ்வளவும் அவருக்கு அடங்கியிருந்தன. " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்." "ஆயுதம் செய்வோம், நல்லக்காகிதம் செய்வோம்."

" வேத புரத்தில் வியாபாரம் பெருகுது,
தொழில் பெருகுது,
சாத்திரம் வளருது, சூத்திரம் தெரியுது,
யந்திரம் பெருகுது, தந்திரம் வளருது,
மந்திரமெல்லாம் வளருது, வளருது,
குடுகுடுகுடு குடுகுடு குடுகுடு "

இப்படி பலவகைப்பட்ட வாழ்க்கையின் பூர்த்தியை யடைய அவர் ஸாதனமாய்க் கருதியது சக்தி. இந்தச் சக்தி தனக்கு வேண்டுமென்பதற்கு அவர் வேதத்தில் முக்யமாய் புகழப்படும் அக்னியை வழிபடுகிறார்; அக்னி தேஜஸுக்கும், தாய்மைக்கும், ப்ரகாசத்திற்கும், வீர்யத்திற்கும் வாழ்க்கைக்குமே அறிகுறி; பெருங் கார்யங்களைச் செய்து முடிக்கவேண்டும் என்ற மன உறுதியும் தீவ்ரமான எண்ணமும் இவ் வக்னியே; 'ஞானபானு' என்ற பாட்டில் 'மனத்திலே சக்தியாக வளர்வது நெருப்புத் தெய்வம்' என்கிறார். குமரக் கடவுள் மீதுள்ள தம் ஆங்கிலத் தமிழ் பாட்டுகளில் ஸுப்ரமண்யன் என்பது ஆன்மாவில் வீர்ய ரூபமாகிய அக்னி தேவனுக்குப் பெயர் என்கிறார். இவ் வக்னி சக்தி நம்பிக்கையிலிருந்து வந்ததே அவருடைய தைர்யமும் பயமின்மையும் "அச்சமில்லே, அச்சமில்லே, அச்சமென்பதில்லையே", "ஜயமுண்டு பயமில்லை மனமே", "வலிமை, வலிமை என்று பாடுவோம்." " நாயமாத்மா பலஹீனேன லப்ய :" என்ற உபநிஷத்தை நன்கு உணர்ந்தார். தமது புது ஆத்திசூடியையும் இதே துணிபு, வலிமை, பயமின்மை என்ற கொள்கைகளைக் கொண்டே தொகுத்தார் :

" அச்சந்தவிர்; ஆண்மை தவறேல்; இளைத்தல் இகழ்ச்சி; உடலினை உறுதி செய்தி; ஏறுபோல் நட."

' ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ' என்று அவர் பாடும் போதும், நாட்டின் விடுதலையைப் பாடினபோதும் அவர் நம் வாழ்க்கையில் ஸமூஹத்திலும் நாட்டிலும் ஏற்படக்கூடும் ஒற்றுமை மூலமும் விமோசன மூலமும் ஆன்ம ஒற்றுமையையும் ஆன்ம மோக்ஷத்தையும் மனத்திலே எண்ணிக்கொண்டே தான் பாடினார். ஸ்வராஜ்யத்தை ஸ்வாராஜ்யத்தின் அறிகுறியாகக் கருதினார். உபாஸனையில் சக்தியை நாடிய கவி, மூலக்கொள்கையில் இரண்டற்ற ஒற்றுமையான அத்வைதத்தையே கடைப்பிடித்தார்: "இவை ஒரு பொருளின் பல தோற்றம். உள்ளதெல்லாம் ஒரே பொருள், ஒன்று. இந்த ஒன்றின் பெயர் 'தான்'. 'தானே' தெய்வம். 'தான்' அமுதம், இறவாதது."

நாட்டின் உருவாய்த் தன்னையும், நாட்டின் விடுதலையைத் தன் ஆன்மாவின் விடுதலையாகவும், ஸ்வாராஜ்யத்தை ஸ்வாராஜ்யத்தின் ஒரு தோற்றமாயும், தேசிய-ஆன்மீகக் கலப்புணர்ச்சியில் பாடிய பாரதி பாரதமாதாவையே தன் உபாஸன தெய்வமான சக்தி, பராசக்தியெனக் கருதினார். பாரதமாதா தேவியின் உபாஸனையை அவர் தம் பாப்பா பாட்டில் உருப்படுத்திக் காட்டுகிறார்: இம்மாதாவின் பிம்பத்தை ஏற்படுத்தி அதை "தெய்வமெனக் கும்பிடடி பாப்பா " என்கிறார். பாரதி பெருங்கவியானதால் வருங்கால வுண்மைகளைக் கண்டவராகவே பாடினார்; இன்று மக்களைக் கலக்கி வரும் 'பாகிஸ்

கண் திறக்கும் அறிவு

[சுவாமி சிவானந்தாஜீ, ரிஷீகேசம்]

இவ்வுலகம் நாமரூப லீலை. புலன்களினா லறியப்படும் இவ்வுலகம் நாடிகளைக் கொண்டு ஆட்டுவிக்கப்படுகிறது. மாயை, மனது புலன்கள் இவைகளினால் நிலை நாட்டப்பெறும் பொய்த் தோற்றம். இந்திரியங்கள் வலுவுடனிருக்கும் இருபது வருடங்களில் விஷய சுகங்களை யனுபவக்கிறீர்கள். எல்லையற்ற கால வரம்பில் இக்குறுகிய மங்கும் இருபது வருடங்கள் எம்மாத்திரம்? உள்ளிருக்கும் அழிவற்ற ஆன்மாவில் கலந்திருக்கும் நித்யமாயும் சாந்தியும் நிறைந்த வாழ்க்கையுடன் ஒப்பிடும்பொழுது இந்த சாரமற்ற வெறுக்கத் தக்க விஷய சுக வாழ்க்கை எத்தன்மையது?

உலக வாழ்க்கை பின்னுனுபவமும் குழப்பமும் நிறைந்தது. இறைச்சல், கஷ்டங்கள், சஞ்சலம், தத்தளிப்பு, கொந்தளிப்பு இவைகளே வாழ்க்கையில் நிறைந்துள. சமூகத்தில் மிகப் பெரிய பதவியோ, பட்டமோ, செல்வாக்கோ பெற்றிருந்தாலும் உலகாயத மனிதன் ஆன்மஞான சூன்யனே. ஆன்ம ஞானமாகிற தனமே உண்மையான குறைவற்ற தனம். ஆன்ம ஞானமே உண்மையறிவு. ஆன்ம தத்துவத்தை யொட்டி வாழ்வதே உண்மை வாழ்வு. தேர்ந்த யோகி உலகம் பூராவிற்கும் உண்மையான சக்கிரவர்த்தி.

கேவலம் லௌகிக பற்றேயுள்ள மனிதன் அஞ்ஞானப் படுகுழியில் ஆழப் பதிந்தவன். அவன் செய்யும் காரியங்களின் தத்துவங்களை அவனே யறிய மாட்டான். காம வெறிக்கும் பொன் வெறிக்கும் அவன் வயப்பட்டிருக்கிறான். ஆனால் "நான் மிக்க புத்திசாலி, மற்றயவர்களைவிட நான் மிக்க அறிந்தவன்," என்று எண்ணுகிறான். இது மாயை என்கிற அவித்யையினால் ஏற்பட்ட பிரமை. தன்னைத் தான் அறிகிறவனே உண்மையில் அறிவாளி.

நடந்தவைகளைக் குறித்து மனிதன் சந்தோஷப்படுகிறான். எப்பொழுதும் நிகழ்கால வ்யவகாரங்களில் அதிருப்தி கொள்ளுகிறான். வருங் காலத்தில் நம்பிக்கை வைக்கிறான். இது மனித சுபாவம். இது பூலோக வாழ்க்கையின் தன்மை. இக்காலத்தை ஜயித்த முனி காலபேதமே இல்லாத நித்யமான பரிபூர்ணானந்த மயமான தன் ஆன்ம நிலையில் அமைதி காண்கிறான்.

இந்த விஞ்ஞான சகாப்தத்தில் - நவநாகரீக சகாப்தத்தில் - பேராசை, காமம், சுயநலம் இவைகள் தினத்திற்கு தினம், மணிக்கு மணி வளருகின்றன. ஒரு தேசம் மற்றொரு தேசத்தை விழுங்க விரும்புகிறது. மனிதன் பௌருஷத்தை இழந்துவிட்டிருக்கிறான். காமத்தின் வயப்பட்டு பெண்களின் இறுகிய

தான்' என்ற 'பிம்பச்சேதம்' அவர் கண் முன் எழுந்திருந்தது; எப்படி நாம் வழிபடும் பிம்பத்தில் சிறிதளவு ஒரு மூலையில் மூளி ஏற்பட்டாலும் அது உபாஸனைக்கு யோக்யமில்லையோ, அதுபோல் தாம் வழிபட்டு, தம் 'பாப்பா'வும் வழிபடவேண்டும் என்று அவர் பாடிய பாரத தேவியின் பிம்பத்தில் சிறிதளவேனும் சேதத்தை அவர் ஸஹிக்கமாட்டார். "அகண்ட் ஹிந்துஸ்தான்" என்ற சொல் இன்று பத்திரிகைகளில் அடிபடுகிறது; கிட்டத்தட்ட இதே சொல்லை பாரதி அன்றே தம் பாட்டில் வைத்திருக்கிறார்:

வடககில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா.

* * *

வேதமுடையது இந்த நாடு—நல்ல
வீரர் பிறந்தது இந்த நாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதை
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

பிடியில் சிக்குகிறான். தனயன் தந்தையிடம் பாகம்பெற நியாய மன்றத்திற்கு செல்லுகிறான். மனைவி புருஷனை புறக்கணித்து இன்னும் பால்யமும், அழகும், தனமும் படைத்த மற்றொருவனை மணக்க வேண்டி விவாகரத்துக் கோருகிறாள். பதிவ்ரதா தர்மம் அழிந்தே விட்டதெனலாம். தம்பி சொத்தை யடைவதற்காக தமயனுக்கு விஷமிடுகிறான். எங்கு பார்த்தாலும் நீங்கள் பார்ப்பது இரக்கமற்ற திம்புகள், நேர்மையற்ற நடக்கை, அக்கிரமம் துராக்ரகம் இவைகளே. சொன்ன சொல்லை ஒருவனும் காப்பாற்றுகிறதில்லை. தகப்பனுக்கு பிள்ளையிடத்தில் நம்பிக்கையில்லை. மனைவிக்கு புருஷனிடமும், புருஷனுக்கு மனைவியிடமும் நம்பிக்கையில்லை.

இப்படி வேகமாக ஓடும் விஷய சுகங்களாகிய சுழலின் மத்தியில் நீங்கள் வாழ்க்கை எதற்காக வென்றும் அதன் லக்ஷியம் என்னவென்பதையும் மறந்துவிட்டீர்கள். ஆன்மாவைவிட சரீரத்தைப் போஷிக்கவே வாழ்கிறீர்கள். இந்த மாயா பிரபஞ்ச விநோதங்களை தேடிப் பிடிக்கும் மோஹத்தில் உங்கள் ஆன்மீக உணர்ச்சிகளையும் வேட்கைகளையும் சிதற அடித்துவிட்டீர்கள். என்ன துக்கம்! மாயையின் மாயை! மாயா மோஹம்! உங்கள் கண்களை இப்பொழுது திறவுங்கள். நீண்ட அஞ்ஞான தூக்கத்திலிருந்து விழித் தெழுங்கள். பர தத்துவத்தைக்கண்டறிந்து நித்யானந்தத்தை அனுபவியுங்கள்.

இவ்வுலகில் சிலர் ஆனந்தத்துடன் ஆடுகிறார்கள்; சிலர் அழுகிறார்கள்; பாடுகிறார்கள் சிலர்; மற்றும் சிலர் கஷ்டம் பொறுக்காமற் கதறுகிறார்கள். சிலர் பிரசங்கம் புரிகிறார்கள்; இடையில் கந்தை புடுத்தி கையில் ஓடு தாங்கி சிலர் காட்டுக்கு ஓடுகிறார்கள். சிலர் ஐரோப்பிய உடை தரித்து பாரீஸ் நகரத்துச் சிற்றுண்டி சாலையை யடைகிறார்கள்; சிலர் வாயை மூடி மௌன வ்ரதம் பூணுகிறார்கள். ஓ கடவுளே! இவ்வுலகத்தில் அம்ருதம் இருக்கிறதா விஷம் இருக்கிறதா என்று நான் அறிகிலேன். உலகம் ஒரு புதிர். உலகம் ஓர் ஆச்சரியம். உலகம் வர்ணிக்க முடியாதது. இது சத்தும் இல்லை, அசத்தும் இல்லை; ஜடமும் இல்லை, சைதன்யமும் இல்லை; பின்னமும் இல்லை; அபின்னமும் இல்லை; பிரம்மத்தின் சித் சக்தியினால் உண்டானது. இது மாயையின் காரியம்.

வீட்டுக்காரன் வீட்டிற்குள் நுழையும் ஜனங்களைத் தடுப்பதற்காக வாயிலில் இரண்டு நாய்களை கட்டி வைக்கிறான். அதேபோல பரந்தாமன் மாயையின் ஸ்வரூபமாக ஏற்பட்ட பெண்கள், பணம் என்ற இரண்டு நாய்களை முன்வைத்து, நீங்கள் அவனை யடைய முடியாமல் தடுக்கிறான். அவனிடத்தில் நீங்கள் தீவ்ர பக்தி வைத்தால் இம் மாயப் பிரமையை விலக்குகிறான். இந்த நாய்கள் குரைக்கா. அவன் அறையினுள் தடங்கலில்லாமல் நீங்கள் நுழைபலாம். பெண்ணும் பொன்னும் உங்களை இப்பொழுது ஏமாற்ற முடியாது.

மாயை என்பது பெண்ணும் பொன்னும்தான். பெண்ணும் பொன்னும் அக்கரையிலிருக்கும் பரந்தாமனை யடைய நாம் கடக்க வேண்டிய ஆற்றில் இருக்கும் இரண்டு முதலைகள்.

மாயை மனதின் மூலம் சங்கடங்களைக் கொடுக்கிறது. பெண் அழகியல்ல. ஆனால் மனதில் ஏற்பட்ட தோற்றம் அழகு. சர்க்கரை தித்திக்கவில்லை. ஆனால் மனதில் ஏற்படுத்திய எண்ணம் தித்திப்பைக் கொடுக்கிறது. ஆகாரம் ருசிக்கவில்லை. மனோ ப்ராந்தி ருசிக்கிறது. மனிதன் பலஹீனனில்லை. மனதில் ஏற்பட்ட பாவம் பலஹீனத்தைக் கொடுக்கிறது. இந்த மாயை, மனது இவைகளின் தன்மைகளையறிந்து அறிவாளிகள் ஆகுங்கள். நன்கு ஆத்மவிசாரம் செய்து இந்த மனதின் கல்மஷத்தை யகற்றி கல்மஷமோ, சங்கல்பமோ எண்ணமோ அற்ற பிரம்மத்தில் நிலை பெறுங்கள். லௌகிகனை உழலுபவனுடைய ஆசைக்கோர் அளவில்லை. அதனால் தான் சௌகரியங்களும் தனமும் இருந்தும் லௌகிகனுக்குச் சஞ்சலமே இருக்கிறது. எப்பொழுதும் தன் நிலையைக்

குறித்து அதிருப்தியே யடைகிறான். எப்பொழுதும் திருப்தியே இல்லை. ஓர் ஆசை பூர்த்தியாவதற்குமுன் இன்னொரு ஆசை முளைக்கிறது; இதைப் பூர்த்தி செய்ய மனத்தை யலைக்கிறான். கர்மேந்திரியங்களுடனும் மனதுடனும் உழன்று விஷயங்களைக் கைப்பற்றி அனுபவிக்க விழைகிறான். தன் ஆன்மீகத் தன்மையை மறந்து சம்சார சாகரத்தில் மூழ்குகிறான்.

இந்த சரீரம் முதல் மாயத்தளை. மனைவி இவன் கழுத்தைச்சுற்றி போட்ட இரண்டாவது முடிச்சு. இடுப்பைச் சுற்றி இறுகிய முடிப்பு பிள்ளை. முழங்காலை சுற்றும் நான்காவது முடிப்பு பெண். கணுக்காலைக் கவ்வும் ஐந்தாம் முடி பேரன். இந்த பாசங்களை எவன் துண்டித் தெறிகிறானோ, எவனுக்கு மோஹமில்லையோ, அவனே தீரன். மார்பின்மீது பாறாங் கல்லையோ மோட்டாரையோ தாங்குபவனோ, முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அதிகாரம்படைத்தவனோ, இரட்டைக் குழல் துப்பாக்கி யுடையவனோ, அரசாங்க சபை அங்கத்தினனோ, சட்ட சபை அங்கத்தினனோ, 'பாராளும் மன்ற'த்து அங்கத்தினனோ தீரன் இல்லை.

உயரிய உண்மையை ஆராய்வது, அதிகாலையில் ஆன்மாவைக் குறித்து சிறிதே தியானித்தல், நியமத்துடன் வாழ்க்கையை நடத்துதல், ஆன்மாவின் அழிவற்ற தன்மையை ஞாபகத்தி லிருத்தி, சமூகத்திலாகட்டும் தனிமையி லாகட்டும், 'நீயே அந்த அகில வியாபியான ஆன்மா' என்று உணர முயலுவது, ஆகிய இவைகளெல்லாம் உன் வாழ்க்கைக்கு ஓர் ஆதாரத்தையும் ஒய்யாரமாகச் செல்லும் அலை நிலையையும் கொடுப்பதல்லாமல், உள்ளூர ஓர் ஆன்ம பலத்தையும் தைரியத்தையும் கொடுக்கும்.

" சுயநலத்தையும் மமதையையும் ஒழி. காமக் குரோதாதிகளை அடக்கு. ஹ்ருதயத்தை நிர்மலமாக்கு. உன் எண்ணங்களையே அலசி அலசிப் பார். உன் ஆசைகளை ஆராய்ந்துப் பார். அழுக்காகிய ஜடங்களை விலக்கு. கடவுளை யடை " இதே எல்லா தீர்க்கதரிசிகளின் பல்லவியாக இருக்கிறது. எக்காலத்திலும் எல்லா ஞானிகளும் மதக் குருக்களும் இதையே சொன்னார்கள். புத்தர், இயேசு, முகம்மத், கன்பூஷ்யஸ், ஷிண்டோ, சைதன்யர், சங்கரர் அல்லது வேறெந்த மதாசாரியருடைய உபதேசங்களையும் படி. தன்னைத் தான் சுத்தப்படுத்திக் கொள்ளுவது என்ற இதே உன் முக்கிய கடமை. இதுதான் கடவுளை யடையும் மார்க்கம்.

கலைவாணி

[சூடாமணி]

நான்முகன் நாவிலே நடமாடி—அந்த
நான்மறை ஓதிய கலைவாணி
ஓமெனும் ஒலியிலே உருவானுள்—எங்கும்
ஒலித்திடும் இசைஒலி வடிவானுள்.

உயிர்தொறும் உணர்வென உலவுகிருள்—உள்ளம்
உணர்ந்திடும் அளவிலே வளருகிருள்
துயர்தரும் இருள் எலாம் அகற்றுகிருள்—முற்றத்
துறந்தவர் உளம்புகும் கலைவாணி.

மொழிதொறும் தவழ்ந்தொரு பொருள் செய்வாள்-எந்த
மொழிக்கும் ஓர் இசை தரும் கலைவாணி
அழிவிலா மொழியெனத் தமிழ்மொழியில்—தனி
அழகுற வளர்ந்தவள் பொலிகின்ருள்.

வண்ணக் கொள்ளையிலே மகிழ்கின்ருள்—ஒளியின்
வண்ணக் கலவையிலே உருவானுள்
எண்ணில் வண்ணச் சித்திரமெழுதி—எல்லாம்
இனிதாய் விளங்கவைக்கும் கலைவாணி.

பலவகை இசையிலே ஒலிக்கின்ருள்—கம்பன்
பாட்டிலே அடிதொறும் நடிக்கின்ருள்
உலகிடை வாத்தியக் கருவிகளாய்—வந்து
உயிர்களைக் கணந்தொறும் மகிழ்விப்பாள்.

கிண்கிணிச் சதங்கைகள் கிணுகிணென—மணி
கங்கண கரங்களும் அபிநயிக்க
கண்கவர் நாட்டியக் கலைவளர்ப்பாள்—அழகுக்
காதலை மூட்டிடும் கலைவாணி.

வீரரின் கைக்கொரு வேலுருவாய்த்—தீமை
வென்றிடப் போரிடும் கலைவாணி
சீருயர் செந்தமிழ் வீரரது—வெற்றித்
திறங்களைப் பாடிய நாவழகி.

கலைபல கற்றவர் நெஞ்சினிலே—தோன்றும்
அலை அறத்தெளியும் நீர் நிலையினில்
உலகத்தின் உயிரென இலங்கிடுமோர்—ஞான
மலரிலே கொலுவளர் கலைவாணி.

———

காணிக்கை

[ந. பிச்சமூர்த்தி]

சதங்கை ஓசையுடன் வண்டி வாசலில் நின்றதுதான் தாமதம், உள்ளே இருந்து குழந்தைகள் திண்ணைக்கு வந்து வெறி பிடித்தவர்கள் போல் குதித்துக் கூச்ச லிட்டார்கள்.

தகப்பனார் டவுனுக்குப் போய் திரும்பி னார் என்றால், ஏழைக் குழந்தைகளுக்குப் பட்டாணிக் கடலை, வாழைப்பழம் என்று பொருள். பணக்காரக் குழந்தைகளுக் குப் பீஸ் பீஸாகச் சட்டைத் துணி, டஜன் கணக்கில் பட்டுப் பாவாடை என்று பொருள். இந்தக் குழந்தைகளுக் குத் தின்பண்டம், தையல் நூல் என்ற பொருள்.

வண்டியிலிருந்து ராமேசம் இறங்கித் திண்ணை ஏறியதும், குழந்தைகள் ஆளு க்கு ஒரு பக்கமாய்ப் பிடித்துக்கொண் டார்கள். தகப்பனருக்கு இந்த அதிசய சுங்கச் சாவடியின் கெடுபிடி நன்றாய்த் தெரியும். எனவே, சுங்க வரியைச் செலுத்தும் அடக்கத்துடன் சிறு பையன்களுக்குத் தின்பண்டமும், பெண் குழந்தைகளுக்குத் தையல் நூலும் நீட்டி விட்டு உள்ளே நுழைந்தார்.

கூடத்தில் யாருமில்லை. பெரிய கடி காரம் மட்டும் தகரக் கடைக்காரன் தட் டுவதுபோல ஒழுங்காகச் சத்தம் செய்து கொண்டிருந்தது.

வண்டிச்சத்தமும், குழந்தைகள் கொம் மாளமும் தெருக்கோடி வரையில் எட் டக்கூடியதான போதிலும் அவை கூடத் தைத் தாண்டிச் சமையலறைப் பக்கம் போனதாகவே தெரியவில்லை. ஏனென் றால், குழந்தைகள் வெளியே வந்தார் களே, அவருடைய மனைவி சமையலறை யிலிருந்து தலையையாவது நீட்ட வேண் டாமா ? நீட்டவில்லை. ஆனால், இதில் வியப்பொன்றும் இல்லை. தலையை நீட்டி யிருந்தால் தான் வியப்பு. ஏனெனில் கணவரோ இதை எதிர்பார்க்கவில்லை. நிதானமாகக் கூடத்தைக் கடந்து சமய லறை வாசலண்டை போனார். நேரம் தாண்டி மனிதன் தூங்கினாலும் கடமை யில் தவறாது, செம்மேனியாய்க் கிழக் கில் மலரும் வானத்துத் தாமரைபோல் மனைவி அடுப்பண்டை ஊதுகுழாயை வைத்து ஊதிக்கொண்டிருந்தாள். அவர் பேசவில்லை. மனைவி ஊதிக்கொண்டே இருந்தாள். ஈர விறகு. மஞ்சளாகப் புகை கிளம்பி, ஊதுகுழாயின் வழியாக ஏறிக் கொஞ்சம் வாய்க்குள்ளும் கண் ணுக்குள்ளும் போய்விட்டது. கண்களைக் கசக்கிக்கொண்டு மெதுவாக இருமி விட் டுத் திரும்பாமலே, "பாப்பா! போன வண்டி இன்னும் வரவில்லையா?" என் றாள். "வந்து விட்டதே" என்றார் ராமேசம். மனைவி கொஞ்சம் திடுக்கிட் டுத் திரும்பிப் பார்த்தாள்.

"சமயல் ஞாபகம். நீங்கள் வந்தது எனக்குத் தெரியவில்லை."

அதனால் பரவாயில்லை என்று சொல்ல அவருக்கு விருப்பம். ஆனால் வார்த்தை நெஞ்சத்தின் சிறையிலிருந்து விடுதலைப் பட்டால் தானே! அப்பொழுதைப் போல் அவர் நெஞ்சம் என்றும் குழம் பியதில்லை.

மௌனமாகத் தாமரை இலையில் சுற் றப்பட்ட ஒரு பொட்டலத்தையும் ஒரு மடித்த கடிதத்தையும் நீட்டினான்.

"இதென்ன பூவா ?"

"ஆமாம், வாங்கிக்கொண்டு வந்தேன்."

பொட்டலத்தை அவிழ்த்துப் பார்த் தாள். மருதாணிப் பூவும், வெட்டி வேரும், மல்லிகையும், நில சம்பங்கியும் சேர்ந்த கதம்பம். தவிர, முழு ரோஜாக் கள் தொடுத்த சரம் வேறு இருந்தது. பொட்டலம் கட்டியிருந்ததைவிட இப் பொழுது அதிக வாசனை வீசிற்று.

"ரொம்ப நன்றாய் இருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே ஒரு உதிரி ரோஜா புஷ்பத்தை எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

"இதென்ன, பன்னீர் தெளித்தாற் போல் இருக்கிறதே?"

"ஆமாம், இது பன்னீர்க் கதம்பம்."

"அப்பொழுது விலை ஜாஸ்தியாய் இருக்குமே?"

"என்ன ஜாஸ்தி. கொஞ்சம்தான் கூட. விலை."

"அப்படிக் கூட காசு போட்டு எதற்காக?"

"சும்மாத் தான்."

மனைவிக்கு இது கொஞ்சம் ஆச்சர்யமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் "இதென்ன கடுதாசு" என்றாள்.

"பாரேன்" என்று தனக்குச் சம்பந்தமற்றவரைப் போல் பேசினர்.

மனைவி கடிதத்தைப் பிரித்தாள். 'ஊர் தேதி ஒன்றும் காணோம். 'ருக்மணிக்கு' என்று ஆரம்பித்திருந்தது. அவள் மேலே படிக்கவில்லை. "ஆமாம், இது யார் எழுதி இருக்கிறார்?"

"அடியில் பார்த்தால் தெரிகிறது."

"சொல்லப்படாதா?"

"நீ பாரேன். அப்புறம் சொல்கிறேன்."

ருக்மணி கடிதத்தின் அடிப்பாகத்தைப் பார்த்தாள். 'ராமேசம்' என்று கையெழுத்திட்டிருந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இது யார் ராமேசம்? ருக்மணிக்கு என்று ஆரம்பித்திருக்கிறது. யாருக்கு யார் எழுதினது என்று புரியவில்லை. என்னிடத்தில் கொடுப்பானேன்?"

"புரியவில்லையா? ருக்மணி என்றால் நீ தான்."

"அப்பொழுது அது?"

"நான்தான்."

"நீங்களா? எனக்கா?" என்று திகைத்து ஒரு நிமிஷம் நின்றாள்.

ஒரு வினாடி கழிந்தது. "நான் இருப்பதும் இங்கேதான். நீங்கள் இருப்பதும் இங்கேதான். எனக்கு நீங்கள் தபால் எழுதுவானேன்? புரியவே இல்லை" என்றாள்.

"படித்தால் தெரிகிறது."

மனைவி கடிதத்தை ஊன்றிப் படித்தாள். படித்து முடிந்ததும் கணவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மறுபடியும் கடிதத்தைப் படித்தாள். பிறகு நிதானமாகக் கடிதத்தை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு கணவனை நோக்கினாள்.

"கடுதாசி புரியவில்லையே."

"நீதான் இரண்டுதரம் படித்தாயே."

"படித்தேன். என்னவோ புதிதாக என்னிடம் கண்டு பிடித்திருக்கிறீர்களே, அதற்காகத்தான் கேட்கிறேன். இது ரொம்ப பழசு; புதுசே அல்ல. இந்த வீட்டில் அடி எடுத்து வைத்தது முதல் பெரியவர்கள் உபதேசம் செய்ததுபோல் நடந்து வந்திருக்கிறேன். பத்து வருஷமாய் நடக்கிற பழசில் புதுசைக் கண்டீர்களே அதுதான் ஆச்சர்யமாய் இருக்கிறது."

"கண்ணை மறைத்த திரை இப்பொழுதுதான் கழன்றது."

"தபால், திரை, பன்னீர்க் கதம்பம்—எல்லாம் கதைமாதிரி இருக்கு."

"நிஜம் கதை சுவாரஸ்யமாய்த்தானிருக்கும். பார்க்க மட்டும் நமக்குக் கண் இருப்பதில்லை. இப்பொழுது எனக்குக் கண் திறந்துபோச்சு."

"திறந்த கண்ணைத் திறந்த டாக்டர் யார் என்று தெரிந்தால், நல்லது."

"அதெல்லாம் கிடையாது. நானும் தாலூகா ஆபீஸ் குமாஸ்தா மாத்யூஸூம் ஊருக்குப் போய்வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு கிளம்பினோமல்லவா?"

"ஆமாம். பின்மாலை அந்த நேரத்திலே காப்பிபோட்டுத் தந்தது எனக்கே பிடிக்கவில்லை. ராத்திரிப் பால். அதுவும்

(198-ம் பக்கம் பார்க்க)

ஊருக்குப் பெரிய மனுஷர்

[ரஸிகன்]

1

ரங்கபுரம் கிராமம் பெரிய மிராசுதாரர் மணி அய்யர் தன் வீட்டுக் கூடத்தில் பகல் போஜனத்திற்குத் தயாராக விருந்தாடிகளுடன் அமர்ந்திருந்தார். ஆறு பெரிய நுனி யிலைகள், ஒன்றைப் பார்த்தால் மற்றவைகளைப் பார்க்க வேண்டாம், அவ்வளவு சீராக அமைந்திருந்தன. அவை பக்கத்திலே வெள்ளி டம்ளர்களில் தீர்த்தமும் நுணிப் பக்கத்தில் பாயஸத்திற்கென வெள்ளித் தொன்னைகளும் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு பரிசாரகர்கள் விதம் விதமான கறி கோசும்பரி வகைகளைப் பரிமாறி, அன்னத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஸமயம் எதிர்பாராமல் இரண்டாங் கட்டுக் கதவைத் திறந்துகொண்டு வண்டிக்கார வீரமுத்து உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் ஒரே கூக்குரல்: பரிசாரகர்கள் தட்டுக்களைக் கையிலேந்தினபடி இன்னசெய்வதென்று தெரியாமல் நின்றார்கள். கணக்குப் பிள்ளை கோவிந்தஸாமி அய்யர் பந்தி விசாரிக்க விருந்தவர் வீரமுத்துவை அறைந்துவிடுவார்போல் கையை ஓங்கிக்கொண்டு, "காமாட்டி படவா! அன்னண்டை இன்னண்டை பார்த்துண்டு வரவேண்டியதில்லையா?" என்று அதட்டிக்கொண்டே அவன் பக்கம் பாய்ந்தார். திகைத்து நின்ற அவன், அவர் சொன்னாரே என்றோ என்னவோ, நாலா பக்கமும் கண்களைச் சுழற்றி, 'அய்யம்மார்கள்' 'பூசை' பண்ண உட்கார்ந்திருப்பதைத் தெரிந்துகொண்டு, தான் பண்ணின அபசாரத்தை மாற்றிக்கொள்ள வேணுமென்கிற கவலை ஒருபுறம், தப்பி ஓட வேணுமென்ற பயம் ஒருபுறம், என்ன பண்ணுவதென்று அங்கு நடந்த அமளியில் தெளிய முடியாமல் தடுமாறித் திரும்பக் கொல்லைப்புறமே போகலாமென்று இரண்டு தப்படி பின்வைத்து மறுபடி வேறு யோசனை தோன்ற ஒரே ஓட்டமாய் ஓடி நல்ல வேளையாய்த் திறந்திருந்த ரேழிக் கதவைத் தாண்டிக் கண் மறைந்தான். மணி அய்யர் வெகு கோபமாய் "என்னங்காணும், வாசக் கதவு கொல்லைக் கதவுக் கூடப் பார்க்கணும்னு தோணல்லையோ உமக்கு, பிரமாதமாய் பந்தி உலாவ வந்துட்டீரே!" என்று கணக்குப்பிள்ளைமேல் எறிந்துவிழ, அவர் "இந்த மடையன்கள் வரபோது திறந்து போட்டுட்டு வந்துட்டாப்பிலேருக்கு" என்று பரிசாரகர்கள் மேல் தாக்கினார். மணி அய்யருக்குக் கோபம் அதிகரிக்கும் போல் இருந்தது.

சென்னையிலிருந்து 'கேஸ்' விஷயமாய் வந்திருந்த பிரபல வக்கீல் விசுவநாத ராவுக்கு விஷயமே புரியவில்லை. அவருக்கு தினம் 'ஹைகோர்ட்'டுக்கு மத்தியான போஜனம் 'டீபன் ஸெட்'டில் கொண்டு வைப்பதென்ற கைங்கரியம் அவருடைய 'கோச்மன்' பஞ்சம வகுப்பைச் சேர்ந்த மாரியே வெகு வருஷங்களாய் நடத்தி வந்தபடியால் சூத்திரன் பார்த்த மாத்திரத்தில் அசுத்தம் ஏற்பட்டுவிடும் என்ற விஷயம் அவருக்கெப்படி விளங்கும்? அவருக்கு ஒத்தாசையாய் வந்திருக்கும் ஜில்லா 'கோர்ட்' வக்கீல் 'டால்' மீனாக்ஷி சுந்தரமையரோ 'கோர்ட்டு'க்குப் போன நேரம் தவிரத் தன் தாஸி மரகதத்தின் வீட்டிலேயே குடியாய்க் கிடப்பவர். தீர்த்தம் அவள் வீட்டில் வாங்கிச் சாப்பிடுவது தோஷமென்று பாலாகவே (அவருக்கு வேண்டாதவர்கள் பாலைவிட வேகமுள்ள பானங்களில்தான் அவருக்கும் அந்த அம்மாளுக்கும் அதிகப் பிரி

யம் என்று சொல்லிக்கொண்டார்கள், அது எப்படி வேணுமானாலும் இருக்கட்டும்) சாப்பிடுவது வழக்கம். ஆகாரம் மட்டில் வீட்டிலிருந்தது பரிசாரகன் தான் கொண்டு வரவேண்டும். அதற்கென்று பிரத்தியேகமாய் வைக்கப்பட்ட ஓர் அறையில் அதை அவன் கொணர்ந்து வைப்பான். பன்னீர் கலந்த தண்ணீரில் ஸ்நானம் செய்து ஸங்க்ஷேபமாய் ஜபதபங்களை முடித்துக்கொண்டு மந்திரத்தினால் பரிசுத்தமான ஜலத்தைக்கொண்டு தான் சாப்பிடப் போகும் இடத்தை பிரோக்ஷித்த பிறகே அவர் உண்பது வழக்கம். கையலம்பி விட்டால் அப்புறம் காந்தர்வ தர்மந்தான். மரகதம்தான் வெற்றிலை மடித்துக் கொடுக்கவேணும். இவருக்கு வண்டிக்காரன் திருஷ்டி தோஷம் தோஷமேயென்று தோன்றினாலும் தங்கள் பந்தியில் ஸஹபோஜனத்திற்கு இருக்கும் ராமாயண சாஸ்திரிகள் 'புண்யாஹ' மந்திரத்தை ஒரு தடவை ஜபித்தால் சரியாய்ப் போகிறது, இதற்கிவ்வளவு அமுர்க்களமேன்? என்று எண்ணினாற்போல் அமர்த்தலும் பரிஹாஸமும் கலந்த சிரிப்புச் சிரித்தார். மணி அய்யர் தம்பி சுந்தரம், ரொம்பக் கடுமைக்காரன், இதைக் கண்டதும் தங்கள் குலத்திற்கே பெரிய அவமானம் விளைந்ததாக எண்ணிக் கையை உதறி ஒரே ஓட்டமாய் ஓடி வீரமுத்துவை இழுத்துப் போட்டுப் பத்து அறையாவது அறைந்துதான் விடுவான்போலிருந்தது.

நல்ல வேளையாய்க் கலவரம் வலுக்காதபடி ஸமய ஸஞ்சீவி என்று பிரக்கியாதி பெற்ற பண்ணை வக்கீல் ராகவையர் ஒரு யுக்தி செய்தார். அது வெகு சின்னத் தந்திரந்தான். அதுதான் பாக்கிப் பேருக்கு எட்டுவதில்லை. ஒரு 'குஷால்' சிரிப்புச் சிரித்துக்கொண்டு "அய்யர்வாள், நம்ம வீரமுத்து தானே, அவனுக்கு தோஷமில்லேன்னா!" என்று புதியதாய் ஒரு தர்ம சாஸ்திரம் அந்தக்ஷணம் கண்டவர்போல் பூர்ண நம்பிக்கை தொனிக்கச் சொல்லவே, மணி அய்யர் கோபம் மாறி, "ஏண்டா, நிற்கிறேள், சாம்பார் எடுக்கிறத்துக்கென்ன மெனக்கிடு?" என்று மேல் ஆக வேண்டிய காரியத்தைக் கெவனித்தார். தம்பி சுந்தரம் சாந்தமடைந்து பாயஸத்தை ருசி பார்த்தான். விருந்தாடிகளும் புயலடிக்க இருந்த வானத்தில் மேகங்கள் கலைந்து நக்ஷத்திரங்கள் வெளிப் போந்தாப்போல, அதிக் கலகலப்பாய்ச் சம்பாஷித்துக் கொண்டு போஜனத்தை நடத்தினார்கள். ரேழியில் 'வெட வெட'வென்று நடுங்கி நின்ற வீரமுத்து ராகவையரைக் கோவிலில் வைத்துக் கும்பிட வேண்டிய தெய்வமாக எண்ணி அவருக்கு அடிமையாகி விட்டான்.

2

இதுதான் ராகவையர் முன்னுக்கு வந்த சூக்ஷமம். ஒரு 'முன்சீப் கோர்ட்'டும் ஒரு 'ஸப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு'மேயுள்ள கொல்லாபுரம் என்ற சின்னப் பட்டணத்தில் 'பஸ்ட்கிரேட் ப்ளீடரா'க அவர் தொழில் நடத்த ஆரம்பித்து இன்னும் இருபது வருஷமாகவில்லை. இன்றைத் தேதியில் லக்ஷ ரூபாய் ரொக்கமும் ஐந்து மைலுக்குள் இருக்கும் ரங்கபுரத்தில் அயனான நிலம் நஞ்சையும் புஞ்சையுமாக எழு வேலியும் பட்டணத்தில் பெரிய வீடும் வெகு இயற்கையாக காலக்ஷேபம் பண்ணி வருகிறார். இவ்வளவு ஐசுவரியத்திற்கும் அவர் வாய் நயமும் ஸமயோசித புத்தியும் காரியத்திலேயே கண்ணாயிருக்கும் ஸாமர்த்தியமும் அவர் ஸம்ஸாரம் மோஹாம்பாளின் 'காகிதா'வும்தான் காரணம். புதிதாய்ச் சட்டம் படித்துவிட்டு நாலுகைச் சட்டையை மாட்டிக்கொண்டு 'கோர்ட்'டில் வேறு வேலையில்லாமையால் 'பார் ரூமி'ல் தினசரிகளைப் படித்துக்கொண்டும் சதா ஊர்வம்பு வளர்த்துக் கொண்டும் இருக்கும் சிறு பிள்ளைகள் ராகவையருக்குச் சட்டமென்கிற வாசனையே கிடையாதென்றும், அவர் பேசுவது ஆங்கிலமல்ல மணிப்ரவாளமே என்றும் அதிகாரிகளுக்கு 'லோட்டா'ப் போட்டே 'கேஸ்'களை ஜெயிக்கிறார் என்றும் வாயில் வந்தபடி சொல்லிக் கொள்கிறார்களென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் வருஷா வருஷம் 'அஸ்ஸோஸியேஷன்

வைஸ் பிரெஸிடெண்ட்' உத்தியோகம் செப்புப் பட்டயம் அடித்தாப்போல் அவருக்குத்தான். இந்தக் கன்றுக் குட்டிகள் அதைத் தடுக்க இரண்டொரு தடவை முயன்றும் அது பலிக்கவில்லை.

ராகவையர் தனக்காகப் போய் ஒருவரையும் 'வோட்' கேட்பதில்லை. தற்சமயம் யார் கை வலுவாயிருக்கிறது என்று நிர்ணயித்து அவரிடம் சென்று "இந்த வருஷம் 'அஸ்ஸோஸியேஷன் ப்ரெஸிடெண்ட்' பதவியைத் தாங்களே ஏற்க வேண்டுமென்பது வெகுபேரின் கோரிக்கை. தாங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். ஸம்மதம் கொடுத்தால் போதும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன் பாக்கி எல்லா விஷயமும்" என்று அச்கறையாய்ச் சொல்லுவார். அவரும், உபசாரத்திற்கு, "என்னை சிரமப்படுத்தாதேயுங்கோ, ஸார், எவ்வளவோ புடுங்கலிருக்கு எனக்கு. வேளா வேளையில் சோறு தண்ணிக்குக் கூடப் பொழுது அகப்பட மாட்டேனென்கிறது" என்று தன் பிரதாபத்தை வெளிப்படுத்தி, "ஏன், 'யங்கர் மென்'னுக்கு ஒரு 'சான்ஸ்' கொடுங்களேன்" என்று பாய்ச்சுக் காட்டுவார். அதற்கவர் எதிர்பார்த்தபடியே, "'ஆல் இன் குட் டைம்'. தோலைக் கடிச்சுத் துருத்தியைக் கடிச்சுத் தானே வேட்டை நாயாகணும். 'பாரி'னுடைய 'ஸ்டேட்டஸ்' ஸைநிர்வகிக்கிறதற்குத் தகுந்த 'ஸ்டாண்டிங்'கும் 'ஆபீஸர்'ஸிண்டே மதிப்பும் இருக்கிறவாள் தானே அந்தப் பதவியை வகிக்கலாம். 'யங்கர் மென்'னையும் ரொம்பப் பேரைக் 'கன்ஸல்ட்' பண்ணினேன், அவாளும் ஒரு முகமாக நீங்கள்தான் இருக்கணும் என்று அபிப்பிராயப்படுகிருள்" என்று பத்தியமாய்ச் சொல்லுவார். உடனே அந்த 'லீடர்' "நீங்கள் இப்படிக் கட்டாயம் பண்ணினுல் நான் எப்படி மாட்டேனென்கிறது? ஆனல், ஒரு 'கண்டிஷன்', நீங்கள் 'வைஸ் பிரெஸிடெண்ட்'டுக்கு நிற்கணும், அப்போதான் நான் ஒப்புக்கொள்ளுவேன்" என்பார். இதைக் கேட்டதும் ராகவையர் வெகு வணக்கத்துடன், "இல்லை, நான்தான் இத்தனை நாளாய் இருந்துட்டேனே, வேறு யாராவது நிற்கட்டும். 'ப்ரெஷ் ப்ளட்' இருந்தால் தேவலேனு ரொம்பப் பேர் ஆஸ்தைப் படருப்பிலே தோணறது, அதுவும் நியாயம் தானே" என்று பதிலுரைப்பார். உடனே 'லீடர்' "அவன்கள் கடக்கான், அதிகப் பிரஸங்கிகள்! நீங்கள் இல்லா போனுல் 'அஸ்ஸோஸியேஷன்' ஏதுன்ன? 'நோ, நோ'. நானே இன்னிக்கு உங்கள் 'நாமிநேஷ'னைப் போட்டுடறேன்" என்று தீர்மானமாய்ச் சொல்லி விடுவார். "காரியம் முடிஞ்சு போச்சு", என்று ராகவையர் தன் மனைவியிடம் வந்து சொல்லி விடுவார். முடிந்துதான் போயிற்று. 'லீட'ருக்கு 'இலெக்ஷன்' அவர் செல்வாக்குக்காகவும் ராகவையருக்கு 'இலெக்ஷன்' 'லீடர்' சலுகையின் பேரிலும் ஒரு இடுக்கணுமில்லாமல் நடந்தேறும்.

அடுத்த பன்னிரண்டு மாதத்திற்கு ஒரு குமாஸ்தா சம்பளம் மிச்சம். 'அஸ்ஸோஸியேஷன்' குமாஸ்தாவை ராகவையர் வீட்டில் வேலை செய்தது போக ஒழிந்த நேரத்தில் தான் சம்பளம் வாங்கும் இடத்தில் காணலாம். 'லைப்ரரி'யில் இருக்கிற புஸ்தகங்களில் முடையாய்ப் பார்க்கவேணு மென்று எதைக் கேட்டாலும் அவன் "'வைஸ் ப்ரெஸிடெண்ட்' கிட்டே இருக்கு" என்று அலக்ஷியமாய்ப் பதில் சொல்லுகிறுன் என்று மேற்கூறிய சிறு பிள்ளைகள் புகார் செய்வார்கள். செய்து என்ன பயன்? 'ப்ரெஸிடெண்ட்'டோ பாக்கி 'ஸீனியர்'களோ புகார் பண்ண இடம் கொடுக்கக்கூடாதென்று அவர் எச்சரிக்கை பண்ணியிருந்தபடி அவன் நடந்து கொண்டதால் 'கத்துக்குட்டிகள்' அந்தப் பெருச்சாளியை என்ன பண்ணமுடியும்? மேலும், 'ப்ரெஸிடெண்'டுகள் வருவதும் 'ப்ரெஸிடெண்'டுகள்போவதும் ஸகஜம். ராகவையர் தானே சாசுவத 'வைஸ்ப்ரெஸிடெண்ட்'?

3

இவருக்கு மேலும் மேலும் இப்படி அதிர்ஷ்டம் பொங்குவதைக் கண்டு சகிக்காத சில பொறாமைக்காரர்கள் சேர்ந்து ஒரு சமயம் இவர்மேல் தொழில் முறைக்கு விரோதமாக நடந்ததாக வழக்குத் தொடுத்தார்கள். 'கேஸ்' பலமாக நடந்தது. கொஞ்சம் சிக்கலான ஸமாச்சாரம்தான். ரங்கபுரத்தில் ராகவையருக்கு நிலம் நீச்சிருப்பதாகச் சொன்னேனே, அதன் மூலம் ஏற்பட்ட விவஹாரம்தான் இது. இந்த நிலங்கள் ஏற்கெனவே பண்ணையைச் சேர்ந்தவை. (பண்ணை யென்றால் கிராமாந்தர பரிபாஷையில் ஊரில் பெரிய மிராசு யாரோ அவர் என்று பொருள்). மணி அய்யர் தகப்பனார் காலத்திலிருந்தே ராகவையர் பண்ணை வக்கீல். இருந்தாலும் மணி அய்யர் நாட்டாண்மைக்கு வந்த பிறகேதான் 'ராப்தா' ஜாஸ்தி. மணி அய்யர் ஸம்ஸாரத்திற்குப் புருஷனிடத்தில் கோபம் வந்த வேளைகளில் அவர் அவளைச் சமாதானம் செய்ய எண்ணி எதையாவது அழகான ஒரு சில்லரை நகையையோ ஒரு புது தினுசான புடைவையையோ வாங்கிவந்து, "உனக்காக ரொம்ப வலே போட்டுத் தேடிப் பார்த்துக் கொணர்ந்திருக்கேன்" என்று பிரேமை பொங்கி வழியச் சொன்னால் அந்த அம்மாள் அருவருப்பும் பதட்டமும் போட்டி போடும் குரலில், "போரும் போரும் ஒங்க பொய்யும் பித்தலாட்டமும்! எனக்கென்னத்துக்கதெல்லாம்? அவளுக்குக் கொண்டே ஸமர்ப்பியுங்கோ, பின்னையூர்த் தேவடியாளுக்கு!" என்று எறிந்து விழுந்து, "ராகவையன் கழிச்சல்லே போக, அவன் எத்தனை ஜன்மத்துக்குக் கஷ்டப்படப் போறானோ, என் வயத்தெரிச்சக் கொட்டிக்கிண்டானே ஒங்களை அந்தப் பாழு மடுவிலே தள்ளி!" என்று வயிறார வாழ்த்தி அழ உட்கார்ந்து விடுவாள். மணி அய்யரோ, தன் நண்பனுக்காகப் பரிந்து பேச வேண்டி யிருக்க, வாய்திறவாமல் மெதுவாய், முகத்தில் அசட்டுச் சிரிப்பு வழிய, அந்த இடத்தை விட்டு நழுவிவிடுவார். இவர் ராகவையருக்கு உள்ளூரில் பண்ணை நிலங்களில் பொறுக்கான நிலங்களை ரொம்ப மட்டவிலைக்குச் சாஸனம் பண்ணினது வெகுநாள் வரையில் அவர் ஸம்ஸாரத்திற்குத் தெரியாது. பராபரியாய்க் கேள்விப்பட்டதும், "குதிரை குப்புறத்தள்ளினது போறாதுன்னு குழிவேறே பறிச்சுதா! அந்தக் கழிச்சல்லே போறவன் ஒங்களை அந்தப் படுகுழியிலே தள்ளினதுக்கு இது கூலியா?" என்று ஆவேசம் வந்தவள்போல அவர் பேரில் பாய்ந்தாள். என்ன உபயோகம்? காரியம் மிஞ்சிப் போய் விட்டது.

ஆனால் அணைந்து போயிற்று என்றெண்ணிய நெருப்பு மறுபடி புகைய ஆரம்பித்ததும் மணி அய்யர் ஸம்ஸாரம் "ஆப்பிட்டுக்கிண்டாரையா,தும்மட்டிக்கா பட்டர்!" என்றுகொக்கரித்தாள். 'கேஸ்' தான், சொன்னேனே, வெகு பலம். தன் கக்ஷிக்காரரான மணி அய்யரிடம் சட்ட விரோதமாகச் சொத்துக்களை மட்டக் கிரயத்திற்குப் பறிமுதல் பண்ணும் தினுசில் ராகவையர் வாங்கிவிட்டதாகவும் அதற்கு ஆஸ்பதம் பின்னையூர் காமவல்லியின் சிநேகத்தை மணி அய்யருக்கு ராகவையரே சம்பாதித்துக் கொடுத்தது என்றும் நடவடிக்கை. ஊர் ஒரு மாதம் அமர்க்களப்பட்டது. 'கோர்ட் காம்பவுண்டி'ல் எள்ளு போட்டால் எள்ளு விழாது. மணி அய்யர், காமவல்லி, ராகவையர் இவர்கள் விசாரணை நடக்கும்போது முன்சிப்பின் உத்தரவு வக்கீல்கள் தவிர வேறு யாரும் உள்ளே வரக்கூடாதென்று ரொம்பக் கடுமையாய்ப் பிறந்திருந்தது. இருந்தாலும் அவர் 'டலாயத்'தின் (தலைக்கொரு ரூபாய் வீதம் கொடுத்துப் பெற்ற) தயவின் மூலமாய் அந்த ஊரில் பெரிய வம்புக்காரர்கள் என்று பேர்போன ஐந்தாறு பேர்வழிகள் பூரா விசாரணையையும் கேட்டு ஒருவார்த்தை விடாமல் விளக்கு வைப்பதற்குள் காவேரிப்படித்துறையில் விளம்பரம் செய்தார்கள். அதில் ரொம்ப ரஸமான இரண்டொரு விஷயங்களை

மட்டுமே இங்கே தெரிவிக்க நமக்கு அவகாசம்.

மணி அய்யர் ஐந்து விரல்களிலும் ஐந்து மோதிரங்கள் அணிந்து, மயில்கண் வேஷ்டியும் வைரக்கடுக்கனும் ஜவ்வாதுப் பொட்டுமாக ஆடம்பரமாய்க் 'கோர்ட்'டில் ஆஜராகி, சாக்ஷி சொல்ல வந்திருந்த காமவல்லிப் பக்கம் கண்ணை ஒரு வீசல் வீசி உல்லாஸமாய்ப் புன்சிரிப்புச் சிரித்து ஆஸனத்தில் அமர்ந்ததாகவும், இதைக் கண்ட மாத்திரத்தில் "இவர்தானோ 'மைனர்' மணி அய்யர்?" என்று எல்லோர் காதிலும் விழும்படி முன்சிப்தார் குமாஸ்தாவைத் 'தனிப்பட'க் கேட்டதாகவும், இந்த கௌரவத்தை அங்கிகரித்தவர் போல் மணி அய்யர் எழுந்து 'கோர்ட்'டாருக்கு ஒரு கும்பிடு போட்டதாகவும், அதைக்கண்டதும் முன்சிப் கடுகடுப்பாய் அவரை அக்தக்ஷணம்தான் பார்த்தவர் போல், "நீர் யார்? 'கோர்ட்' நடப்பது தெரியவில்லே? எதற்காக அனுவசியமாய் நின்று 'கோர்ட்'டார் பொழுதைப் போக்குகிறீர்?" என்று அதட்ட மணி அய்யர் பொத்தென்று 'பெஞ்சி'யில் உட்கார்ந்து ஒடுங்கிவிட்டதாகவும், பிறகு கூட்டில் ஏறி, ராகவையர் தரப்பு வக்கீல் சில நாடோடிக் கேள்விகள் கேட்டதும் முன்சிப்பே, "என்னங்காணும், பின்னையூர் காமவல்லி என்பவளை உமக்கு எவ்வளவு நாளாய்ப் பழக்கம்?" என்றுகேட்ட போதுதான் அவருக்கு முகம் மலர்ந்தது என்றும் இந்தப் போக்கிரிகள் ஊரில் கிரைவிதை விதைத்தாப்போல் வாரி இறைத்தார்கள். அதுமட்டா? காமவல்லி விசாரணை நடக்கும்போது முன்சீப்புக்கும் அவளுக்கும் கீழ்க்கண்ட தர்க்கம் நடந்ததாம்.

"வக்கீல் ராகவையரை நீ இதற்கு முன் பார்த்திருக்கிறாயா?"

"ரெண்டொருதரம் அய்யாவோடே கண்டிருக்கேனுங்க."

"ராத்திரியிலா பகலிலா?"

(நாணிக்கோணிக்கொண்டு) "ராவிலே தானுங்க, பவல்லே நம்ம வூட்டுலே என்ன வேலே அவுங்களுக்கு?—வக்கிலேயா எசமான் வண்டிலே வந்து எசமானே விட்டுட்டு வண்டியோடே பூடுவாரு."

(விஷமமாக)—"வக்கிலேயா ஒரு சமயமும் உன்னிடம் தனியாக வந்ததில்லேயா?"

(கோர்ட்டிலிருப்போர் எல்லோரையும் ஒரு சுற்று சுற்றிப்பார்த்து, நாற்காலியில் ஒடுங்கி உட்கார்ந்து ஒட்டிச் சுருங்கித் தேவாங்கு போன்ற தன் மூஞ்சியை வலது கையில் ஏந்தி விசனமே சொரூபம் எடுத்தாப்போல் இருக்கும் ராகவையரை ஒரு நொடிப்பொழுது உற்று நோக்கிக் களுக்கென்றுசிரித்து)—"ஐயோ பாவம், அவர் எதுக்கு வரப்போறாருங்க!"

இதைக் கேட்டதும் கோர்ட்டில் எல்லோரும் 'கொல்'லென்று சிரிக்க, முன்சிப் தன் சிரிப்பை அடக்கிக்கொண்டு, கடுமையாய், "'ஸைலென்ஸ் ப்ளீஸ்! அதர்வைஸ் ஐ ஷல் ஹாவ் டு ஆர்டர் தி கோர்ட் டு பி க்ளியர்ட்' என்று தன் அதிகாரத்தைக் காட்டி, சாக்ஷியை அதட்டும் குரலில், "என்ன, அதிகப் பிரஸங்கியாயிருக்கிறாய்! உன் வீட்டிற்கு ராகவையர் தனியாக மணி அய்யர் சம்பந்தமாய்ப் பணங்காசைப் பற்றிப் பேச வந்தாரா? ஏதோ கேட்டால் ஏதோ பதில் சொல்லுகிறாயே. உஷார், இது 'கோர்ட்' டென்று ஞாபகமிருக்கட்டும்!" என்று வெருட்டினார். அவள் கொஞ்சம் பயந்தாலும் அனுபோக மிகுதியால் அதை வெளிக்காட்டாமல்,

"அப்படிக் கேட்டிருந்தா அப்பவே சொல்லி யிருப்பேனுங்களே. அதெல்லாம் அவர் தனியா வந்ததே யில்லீங்க. பணங்காசைப்பத்தி அவர்என்ன எனக்கு வக்காலத்தா?" என்று சொல்லி மணி அய்யர் இருக்குமிடம் திரும்பி ஒரு அந்தரங்கச் சிரிப்புச் சிரித்தாள். ராகவையர் விரோதிகளுக்கு மூக்கு வெளுத்தது.

மணி அய்யர் தன் விசாரணையில் ராகவையருக்கும் தன் ரதி விலாஸங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லே யென்

றும், வெகு காலமாய்ப் பண்ணை வக்கி லாய் இருந்து நடவடிக்கைகள் நடத்தி வந்த வகையில் 'பீஸ்' சுமார் ஐயாயிர ரூபாய் வரையில் பாக்கி என்றும், அடுத் தடுத்து இரண்டு வருஷம் விளைவு இல்லா மல் போகவே கிஸ்திக்கே கடன் வாங்க நேர்ந்ததென்றும், வேறு குடும்பச் செலவு களும் இருந்ததால் எல்லாவற்றையும் யோசித்துச் சொத்தில் சொர்ப்பத்தைக் கிரயம் பண்ணுவதென்று தீர்மானித்து விலை கூறியும் காலக்கரிப்பால் ஒருவரும் கேட்காமல் போகவே தானே வற்புறுத்தி ராகவையரை எடுத்துக்கொள்ளச் செய்த தாகவும், அப்பொழுது அவர் கொடுத் தது கிரம விலை என்றும், அதற்குப் பிறகு விலைவாசி உயர்ந்ததற்கு அவர் ஜவாபு ஆகமாட்டாரென்றும் தனக்கும் தன் தம்பி சுந்தரத்திற்கும் நிலம் அவ ரிடம் இருப்பது பூர்ண ஸம்மதம் என் றும் உறுதியாய்ச் சொன்னதன்பேரில் 'கேஸ்' தள்ளப்பட்டது.

மணி அய்யர் வீட்டுக்கு போனதும் அவர் ஸம்ஸாரம், "போறது, தேவடியா தயவை வேண்டி சொத்துப் போனது போறுதுன்னு பொய்ச் சத்தியம் வேறே பண்ணியாச்சு!" என்று ஏசி எதிர்கொண் டழைத்தாள். ராகவையர் வீடு சென்ற தும் தன் அருமை இளையாளிடம் பிரத்தி யேகமாய், "உன் யோசனையிலேதான் இன்னிக்குத் தலை தப்பிச்சுது. அந்த நாறக்கழுதையை என்னைத் தெரியா துன்னு சொல்லும்படித் தயார்ப் பண் ணினமா, அவளும்—நாடக மாடற ஜாதி தானே!—வெகு அலக்ஷியமாய், 'ஐயோ, பாவம், அவர் எதுக்கு வரப்போரா ருங்க! 'ன்னு, நான் மனுஷனே இல்லெ, ஏதோ ஒரு கட்டேன்னு நெனச்சாப் பிலே துடுக்காச் சொன்ன பாரு! கோர்ட்டிலிருந்த காமாட்டிப் பயல்கள் ளாம் விழுந்து விழுந்து சிரிக்கிறான். அந்த முன்சிப் ஒரு குறும்புக்காரன், வேணும்னு அப்படிக் கேட்டான். அது வும் நமக்கு நல்லதாத்தான் போச்சு!" என்றார். அந்த அம்மாள், எவ்வளவு தன்னைத் தன் புருஷன் பூஷித்துப் பேசி னாலும் அது தனக்குரித்தே என்று எண்ணினவள் போல், "ஆமான், நானில்லா போனா நீங்க இருந்த எடம் இத்தனெ நாள் பில்லு மொளச்சிருக் கும்" என்று அனுகூலமாய்ச் சொல்லி, அரைகுறையாய் அவர் காதில் விழும் படி, "ஏன், அந்தப் பட்டிமுண்டெ உள் ளத்தெத் தானே சொன்னா!" என்று 'கூட'மாய் முடித்தாள். ஐயர் மூஞ்சியில் சொரத் திறங்கிவிட்டது. சட்டென் றப்புறம் போய்விட்டார்.

4

இதிலிருந்து மோஹனாம்பாள் கொர்வி என்று நேயர்கள் எண்ணலாம். வாஸ்த வந்தான். இருந்தாலும், அவள் கொர்வம் அடைவதற்கு வேண்டிய காரணம் இருந் தது. அவளுக்குக்கலியாணம்ஆகும்போது ராகவையருக்கு வயது முப்பத்தைந்து தான். ஆனாலும் ஐம்பதுக்குச் சொல்ல லாம். பாலியத்தில் ரொம்பச் சிறுமைப் பட்டவர். நாரைக் கழுத்துப்போல் நீண்ட கழுத்தும், எலும்பு தெரியும் மண்டை யும், கோடி சிவந்து புருவத்து மயிர் அனேகமாய் உதிர்ந்து விட்டபடியால் எப்பொழுதும் விழிப்பனபோல் காணப் பட்ட கண்களும், சிடுசிடு என்ற தோற் றத்தையுண்டுபண்ணும் உதட்டுச் சுருக் கமும்தான் அவரைப் பார்த்தவர்களுக்கு அவர் தோற்றத்தில் முக்கிய அம்சங் களாய்ப்படும். முதற் கலியாணம் பந் துக்கள் வீட்டுப் பெண். தன்னைப் போல ஏழை. போதாததற்கு, வீட்டுக்கு வந்தது முதல் வியாதி பிடுங்கித் தின் றது. கலியாணசுந்தரத்தைப் பெற்ற அறையில் படுத்தவள்தான். படுத்த படுக் கையாய் எட்டு வருஷம் கிடந்து தானும் எல்லையில்லாக் கஷ்டப்பட்டு பிறரும் துன்பப்பட்டுத் தேறுமலே கடைசியில் இறந்தாள். அதன் பிறகு ஐந்தாறு வரு ஷம் ராகவையர் கலியாணம் பண்ணிக் கொள்ளவில்லை. நல்ல ஜீவேனம் சம்பா தித்து விட்டபோதிலும் முதல் கலியா ணத்திலடைந்த அனுபோகத்தின் பய னாய்க் கலியாணமென்றாலே அவருக்குப் பயமாய் இருந்தது. தவிர, பிள்ளை

ஒன்று இருந்ததால் மூத்தாள்கூர் இளை யாள்கூர் என்றெல்லாம் உபத்திரவங்கள் ஏற்படுமே என்ற எண்ணம் ஒரு பக்கம். இப்படிச் சிலகாலமாக, வீட்டில் பொறுப் பான மனுஷியாள் இல்லாததால் ஏற் படும் சிரமத்தோடு, சரியான கண் காணிப்பு இல்லாத காரணமாய்க் கலி யாணம் தத்தாரியாய்விடவே ஆன் போ யிருந்தது. கடைசியில் அவளை உத்தே சித்தே மறு கலியாணம் பண்ணிக் கொள்வதென்று தீர்மானித்தார்.

இதற்கு உதவுபிடியாய் வேலை செய் தது அவர் குமாஸ்தா கோபாலையர் (குருணிக் கோபாலையர் என்று கியாதி பெற்றவர், போஜனப் பிரியர், பிறர் சொத்தை அபகரிப்பதிலும் வெகு சாமர்த்தியசாலி என்பதையே அந்த மறு பெயர் குறிக்கும்). இவருக்கு வெகு காலத்து சினேகிதர் 'ரிடையர்ட் ஸகிண்ட் க்ரேட் ப்ளீடர்' ஸாம்பசிவய்யருக்கு வயதான பெண் கலியாணத்திற்கிருந் தாள். அவர் ஐந்து பெண்பெற்று ஆண்டியான ஜாபிதாவில் சேர்ந்தவர். நல்ல வேளையாய்க் கடைசிப் பெண் கண் ணுக்கு லக்ஷணமாயும் கெட்டிக் காரியாயு மிருந்தாள். ரொம்ப நல்ல ஜாதகம் என்று சொல்லிக் கொண்டார்கள். உப் பிலியப்பன் ஸந்நிதியில் ஒரு நாளைக் கலி யாணம் பண்ணிக் கொடுத்தார். மறுநாள் புக்ககம்வந்தவள்தான், திரும்பிப் பிறந்த கம் புகவேயில்லை. அதற்குப் பதிலாய்த் தன் தகப்பனரை (தாயார் வெகு நாளை க்குமுன் காலமாய்விட்டாள்) வீட்டோடு கொண்டுவந்து வைத்துக் கொண்டாள். அவர் யோசனை சொல்வதும் மோஹம் உத்தரவு பண்ணுவதும் அந்த உத்த ரவை உலகம் ராகவையர் செய்வதாய் எண்ணுவதுமாய்க் குடித்தனம் ஏகோ பித்து நடந்துவந்தது.

ஜோஸியர்கள் சொன்னது என்னவோ வாஸ்தவந்தான். மோஹம் வீட்டில் அடி எடுத்து வைத்த முகூர்த்தம் ராக வையருக்கு நாளுக்குநாள் அதிர்ஷ்டம் பொங்கிற்று. குடித்தனக் கவலை அவ ருக்கு அறவே நீங்கிற்று. ஏதாவது ஒரு சமயம் "மாவி குதிரைக்குக் கொள்ளுச் செல்லல்லேங்கிறனே. 'மடிசலாயிருக்கு முத்துகிருஷ்ண செட்டிக் கடைக் கொள் ளு'ங்கிறன். வேறே எங்கேயாவது நல்ல தாய்ப் பார்த்து வாங்கச் சொல்லப் படாதோ?" என்று வேறு யாராவது இருக்கும்போது அவர் கேட்டால் (இவ் விதப் புகார்களைப் பிறர் இருக்கும் சம யத்தில்தான் அவர் அனேகமாகப் பிர ஸ்தாபிப்பது) அவள் தனது வசீகரச் சிரிப்பை (ஊரிலுள்ள அசூயைக் காரிப் பெண்கள் அவளுக்கு 'பசப்பி' என்று புனைப் பெயர் வைத்திருந் தார்கள்) வெளிப்படுத்தி, "இல்லை யே, நல்லதாய்த் தானே இருந்தது, நாங்கூட வேகவைக்கறபோது பார்த் தேனே! ஆனா கொள்ளுப் பரீக்ஷை நமக்கென்ன தெரியும்? மாவி அனு போகப்பட்டவன். இனிமேல் அவன் சொல்லறபடியே செய்துப் பிட்டால் போறது, அவனும் புள்ளைகுட்டிக்காரன் பொழைக்கணுமோல்லியோ!" என்று உச்சந்தலையில் செறுப்பாலடிக்கிற தினு சில் இறக்குவாள். அவர் உடனே, "சேச்சே! கொள்ளைப்பாத்து வாங்க ணும்னு குதிரைக் காஸாரியைக் கொண்டு ஸாமான் வாங்கணும்னு சொன் னேன்? செட்டிகடை சாமான் சுத்தமா யிருக்குமே? ஏதோ சில்லரைச் சிப்பந்தி கள் அஜாக்கிரதையாயிருக்கணும். நான் சாயந்தரம் 'டௌன் ஹாலு'க்குப் போற போது பாத்துக் கண்டிச்சுட்டுப் போறேன்" என்பார். "ஒண்ணும் வாண்டாம், நீங்க பாட்டுக்கு ஒங்க காரி யத்தைப் பாருங்கோ, எல்லாம் தானே நடக்கும். வெங்கட்டராமனை அனுப்ப றேன்" என்று அடக்கிவிடுவாள்.

5

இந்த வெங்கட்டராமன் ராகவையர் மருமகன். அவர் ஏழைக்குடியில் பிறந்த வரென்று ஏற்கெனவே சொன்னேமல் லவா? அவர் பந்துக்களும் வெகுசாய் அதே ஸ்திதியில் இருந்தவர்களே. ஆகையால் அவர் கை உயர ஆரம்பிக் கவே படிக்கவேண்டிய பிள்ளைகள் இருப்

பவரும் கலியாணம் ஆகவேண்டிய பெண்கள் இருப்பவரும் வயதானவரும் வியாதியில் அடிபட்டவரும் இவ்விதம் பலவிதமான குறைகளையுடைய பந்துக்கள் அவருடைய ஒத்தாசையையும் சிபார்சையும் தேடினார்கள். ராகவையரும் தாய்தந்தையரைப் பேணுவது, உற்றார் உறவினரை ஆதரிப்பது, ஏழைகளுக்கன்னமிடுவது, இல்லை யென்று வந்தார்க்கு இல்லை யென்று சொல்லாமல் இயன்றதைச் செய்யவேண்டியது என்ற தர்மங்களைத் தானும் நடத்தவேணும் என்ற ஆஸ்தையுள்ளவர்தான். அவைகள் தர்மம் என்றதற்காக அவர் அப்படி அக்கறைப்படவில்லை. தமது அந்தஸ்துக் கேற்ற கடமைகள் என்று ஊரார் எண்ணக் கூடியதால் அந்த வேஷம் போடப்போட அது அவருக்கு இயற்கையாகவே தோன்றலாயிற்று.

ஆகிலும், புத்தி பூர்வமாய்ச் செய்த ஸங்கல்பங்களைக் காரியாம்சையில் கொண்டுவருவது கொஞ்சம்சிரமமாகவே யிருந்தது. ஏழை பந்துக்கள் யாராவது வந்தால் அவர்களைக் கண்டதும், "வந்துட்டானு! எத்தனை நாளைக்குத் தண்டச்சோறு ஆப்பிட்டுதுன்னு சாப்பிட்டுண்டு கொட்டமடிக்கப் போறானோ தெரியல்லியே!" என்ற ஆத்திரமும் வெறுப்பும்தான் சுபாவமாய் அவர் மனதில் எழும்பும். வந்தவன் இவர் முகஜாடையிலிருந்து மனதி விருப்பதை ஊகித்தும் தன் காரியம் ஆகவேண்டியதை உத்தேசித்துப் பல்லைக் காட்டி வினயமாய்ப் பேசி ஊர் யோகக்ஷேமங்களை அவர் கேட்காமற் போனாலும் சொல்ல ஆரம்பிப்பான். அதற்குள் சந்தோஷக் குறியை முகத்தில் வரவழைத்துக்கொண்டு, "என்ன அத்தான்!" "எப்பொ வந்தே அம்மாஞ்சி!" "எங்கே, ஒன்னெக் கண்ணிலேயே காண்றதில்லையே, முத்தண்ணா!" என்றெல்லாம் உறவு வைத்து வெகுப் பிரியமாய் விசாரிப்பதுபோல் நடித்து, "சரி, நாழியாகறது, பல்லைத் தேய்,காப்பி சாப்பிடலாம்," "சுருக்க ஸ்நானம் பண்ணிப்பிட்டு வா, சாப்பிடுவோம், எனக்குக் கோர்ட்டுக்குப் போகணும்" என்று உபசரிப்பார். அப்புறம் அவன் நாலு நாளோ இரண்டு நாளோ இருக்கிறவரையில்"எங்கருடா?" என்று கேட்பார் கிடையாது. வீட்டிலிருக்கும் வேளையில் வந்த மனுஷன் கண்ணில் தென்பட்டால் ஏதோ அவசரக் காரியமிருப்பது போல் மெத்தைக்குப் போய்விடுவார். சமயற்காரன் தயவில் அவன் பொழுதைக் கடத்தி, அவர் சாப்பிடும் வேளையிலோ ஸ்நானம் பண்ணும்பொழுதோ கூர்ச்சம்போல் எதிரே போய் நின்று தான் வந்த விஷயம் இன்னதென்று தெரிவித்துத் தன் கோரிக்கையையும் வெளிப்படுத்தினால், ஏதாவது சால்ஜாப்புச் சொல்லி 'ஆகட்டும் போகட்டும்' என்று போக்குக் காட்டித் தப்பித்துக்கொண்டு போய்விடுவார்.

அன்றிரவு அவன் ஊருக்குப் போய் விட்டானா என்று விசாரித்துத் தெரிந்துகொண்டே 'கிளப்'பிலிருந்து வீடு திரும்புவார். வந்தவனோ, "ஏதடா, ஒரு வாரம் கவலையில்லாமல் சாப்பிட்டோமே" என்றெண்ணாமல், "அல்பனுக்கு ஐசுவரியம் வந்தா அர்த்த ராத்திரியிலே கொடை புடிப்பானும்னு" சொல்லறது சரியாத்தானிருக்கு. ஏதோ காசும் பணமும் சௌகரியமாயிருக்கானே, நம்ம கரிப்பை சொல்லிக்குவோம்னு போனா, தான் இருந்த இருப்பு மறந்துபோச்சே! சீ, மதியாதார் வாசல் மிதியாதேன்னு பெரியவா தெரியாமையாச் சொன்னா? இவனை ஒரு மநுஷனா எண்ணிப் போனேனே, எம்புத்தியெச் சொல்லு" என்று தன் சுற்றுவட்டத்திலுள்ள எல்லோரிடமும் தமுக்கடிப்பான். அதற்காக, நாலு மாதம் போனதும் மறுபடி ராகவையர் வீட்டுச் சோற்றுக்கு நாக்கை நீட்டிக்கொண்டு வாராம லிருப்பதில்லை. அவருக்கு மட்டும் நல்ல பேர் கிடையாது. "சத்திரத்திலே சாப்பிடுறப்பிலே தின்னுப்பிட்டுத் தூறிப்பிட்டுப் போறான்கள், போக்கிரிப் பயல்கள்!" என்று அவர் மாத்ஸரியப் படுவார். இதுதான் அவர் தர்மத்தின் கோடியைக் கண்டது.

சைக்கிள்

சைக்கிள் சாமான்கள்,

டயர்கள், டியூபுகள்



இவைகளின்

விலைகள்

கண்ட்ரோல்

செய்யப்பட்

டிருக்கின்றன.

ராயல் சைக்கிள் & மோட்டார் கம்பெனி,

போன் நெ. 3949 13/14, பிராட்வே, மதராஸ்

பயனீர் சைக்கிள் ஹௌஸ்,

மேலக்கோபுர வீதி — மதுரை

அவன் ஊக்கங் குறை
யாமல் இருக்கச் செய்வது
உங்கள் வேலை!

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்க மளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியது அவசியம். Dept. B109 P.O. Box No. 353, Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

தாய்மார்களே: உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு தடவை சமையல் செய்யும்பொழுதும் உங்களால் எவ்வளவு செய்யலா மென்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களி லும், அவைகளைத் தயாரிக்கும் முறையிலுமே உங்கள் குழந் தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறுவதோ, அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆவதோ இருக்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ள தாகவும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்க மளிப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில. அமித உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப் படுவது இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின் நிரம்பிய டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாக யிருக்கும். டால்டா இயற்கையின் முக்கியமான "உணவு சத்துக்களை" அளிக்கிறது—இந்த சத்துக்கள் நாம் சாதாரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 33-23-40 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

இவ்வித ஈதிபாதைகளெல்லாம் மோஹாம்பாளை ராகவையர் மணப்பதற்கு முன் ஏற்பட்டவையே. அந்தக் காலத்தில் அவரிடம் வந்தண்டிய பந்துக்களுக்குள் அவர் உதறித் தள்ளினாலும் அட்டை பிடித்தாப்போல் விடாப்பிடியாய் ஒட்டிக் கொண்டவன் வெங்கட்டராமன் ஒருவனே. ராகவையருக்கு எடுத்ததற்கெல்லாம் மூக்குக்குமேல் கோபம் வந்துவிடும். அந்தக் கோபம் வெளியே விசிறியடிக்கத் தருணம் வாய்ப்பதில்லை; உலகம் அவரைச் சாந்த ஸ்வரூபி என்றும் பொறுமைக் கிருப்பிடமென்று மல்லவா எண்ணியிருந்தது? உள்ளேயே குமுறிக் கொண்டிருந்த சினத்தை, அவர் முகத்தில் அச்சுப்போட்டாப்போல் அது ஊன்றி முக வோட்டத்தையே மாற்றியிருப்பதைக் கூர்ந்து கவனித்தோரே உணரலாம். ஆனால் வெங்கட்டராமன் வந்ததுமுதல் பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைக்கும் கல்போல் ராகவையர் உள்ளத்தில் சதா குடிகொண்ட கோபத்திற்கும் வெறுப்பிற்கும் பூரண பாத்திரமானான். அவர் சிற்றத்தையவன் கொஞ்சமும் லக்ஷியம் பண்ணுவதில்லை. கூடிய சிக்கிரத்தில் 'வெங்கட்டராமன் காரியவாதி' என்று ஊரிலேயே பெயரெடுக்கத் தலைப்பட்டான். மோஹாம்பாள் புக்ககம் வந்ததும் அவள் மனப்பான்மையை அறிந்துகொண்டு அவளுக்குத் தகுந்தபடி நடந்துகொண்டது மன்னியில் அவள் இவன் தன் மனோபீஷ்டங்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த சாதனமெனக் கண்டதும் தன் மாமனின் குணதிசயங்களை அவளுக்கொருவாறு விளக்கி அவர் கோபாக்கினியினின்று தன்னை விடுவிக்குமாறு அவளிடம் சரண் புகுந்தான்.

அதுமுதல் அவனுக்கும் விடிந்தது. மோஹத்திற்கும் ஒரு தகுந்த கையாள் வாய்த்தான். ராகவையர் மனமில்லாமற் செய்துவந்த தர்மமும் பலனளிக்க ஆரம்பித்தது. அவருடைய பந்துக்கள் இப்பொழுது ஒரு மாறுதலைக் கண்டார்கள். 'மோஹம் நல்ல பொண். ராகவன் அதிர்ஷ்டசாலிதான். மனஷாளிண்டே என்னப் பிரியம்! 'வாங்கோ அம்மாமி' என்னு சொல்ற அனுகூலம் ஒண்ணே போறும்" என்று வாய்க்கு வாய் மெச்சிக் கொள்ள ஆரம்பித்தார்கள். முற்காலங்களில் ஒருவாரம் ராகவையர் வீட்டில் தங்கினவர்கள் இப்பொழுது அனேகமாய் இரண்டு நாளுக்குமேல் தங்குவதில்லை. ஆனால் ஊருக்குப் போகும்போது மனப்பூர்வமாய் வாழ்த்திச் செல்வார்கள். மறுபடி எப்பொழுதாவது வந்தால் தங்கள் கையில் அகப்பட்டதை—கறியோ காயோ ஒரு படி நல்ல நெய்யோ கொண்டுதான் வருவார்கள், வீசம் அரைக்கால் கடனாவது வாங்கி. முன் தடவை போயிருந்தபோது மோஹம் வெங்கட்டராமன் மூலமாய்க் காட்டுப்பட்டிக் கிராமத்தின் வசதிகளை விசாரித்துத் தெரிந்துகொண்டு, "என் அம்மாமி, ஒங்க ஊரிலே மாவடு ரொம்ப விசேஷமாமே? இங்கே நல்லதா அப்படறதேயில்லை.வருவாளும் போவாளுமாயிருக்கேன்னு வருஷத்திலே கலவடு வாசல்லே வரத்தெ வாங்கிப் போடறேன். உப்புச் சேதம்தான், காட்டாமணிக் காயாட்டமாயிருக்கு. நல்ல வடுவா அப்பட்டா, ஒரு ஆளை வரச் சொல்றேன் பணத்தைக் கொடுத்து, வாங்கி யனுப்பரேளா?" என்று கேட்கும் குளுமையில் ஈடுபட்டுக் காட்டுப்பட்டி நாகம்மாள் உள்ளூர் பெரிய முதலாளியிடம் வேலை பார்க்கும் தன் மூத்த பிள்ளையிடம், "அப்பா, நாளைக்கி ராகவனைப்போய்ப் பார்த்துட்டு அம்பியைப் பள்ளிக்கூடம் சேர்க்கறதுக்கு ஏதாவது வழி பண்ணனும்னு கேட்டுட்டு வரலாமுன்னிருக்கேன். மொதலியார் தோட்டத்து வடு மரத்திலேருந்து கலவடு எறக்கிண்டு வா. அப்பிசி மாசம் போனபோதே மோஹம் நம்ம ஊர் வடுவெ ரொம்ப சிலாகிச்சுண்டா. அய்யோ பாவம்! செறுச, ஆசைப்படறது" என்பாள். அவனும் (பிறத்தியாருக்குத் தெரியாமல்) வடுவிறக்கி ஒரு ஆள் தலையில் ஏற்றித் தன் தாயாருடன் அனுப்புவான். மோஹத்தின் உபசாரம் பிரமாதமாய் நடக்கும் வந்த ஆளுக்குட்பட. சாப்பிடும்

போது கிழவி பேரன் படிப்பு விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிப்பாள். "அதுக்கென்ன, செட்டியார் தர்மப்பள்ளிக்கூடத்திலே 'ஹாஸ்டல்'லே சேத்துட்டாப் போறது. அவா கிட்டே சொல்லி செட்டியாரிண்டே நேரச் சொல்லச் சொல்றேன். 'அப்ளிகேஷன்' போடச் சொல்லுங்கோ" என்று தங்கு தடை இல்லாமல் நம்பிக்கை பண்ணுவாள். "இல்லெ, சுந்தரம் சொன்னான், 'அவர் ஒரு கடுதாசு கொடுத்தாத் தேவல்லே'ன்னு" என்று கிழவி சொல்ல வாயெடுத்தால், "கடுதாசு குடுக்கலாம் தங்கமா, ஆனா இவா 'ஸ்கூல் கமிட்டி'யிலே இருக்காளோன்னோ, அதனாலே கடுதாசு கொடுக்கறது உசிதமாயிருக்காது. அதுதான் பார்க்கிறேன். கடுதாசுக்கென்ன, ஆயிரம் வாங்கலாம். என்னயிருந்தாலும் நேரச் சொல்லறாப்பிலே ஆகுமா?" என்று அவள் பொறுத்தமாய்ச் சொல்லும் காரணத்தை ஒப்புக்கொண்டு, முன்னைவிட அதிகப் பிரியத்தோடு மோஹத்தினிடம் கிழவி அளவளாவுவாள். அவள் குடும்ப யோகக்ஷேமம் ஜாடாவும் அவள் வாக்குமூலமாகவே அறிந்துகொண்டு, சின்ன நாட்டுப் பெண் பிரஸவிக்கும் காலம் நெருங்கி விட்டதென்பதைச் சாதுரியமாக உபயோகப்படுத்தி, "ஐயோ, அம்மாமி, நாட்டுப் பொண்ணுக்குக் கொதப்ப காலங்கறேளே, எனக்கு விசாரமான்னாயிருக்கு! செறுசுகளைத் தனியா விட்டுட்டு வந்திருக்கேளே" என்று அவள் பரிவுடன் சொல்லும் வார்த்தைகளால் வாஸ்தவத்தில் கவலைக்கிடமில்லாமலிருந்தாலும் கவலை தூண்டப்படும். கிழவி மறுநாளே ஊருக்குப் போகத் தீர்மானிப்பாள். "ரெண்டுநா இருந்துட்டுப் போகலாம்" என்று மோஹம் கட்டாயம் பண்ணுவதையும் தட்டிக்கொண்டு, அடுத்த தடவை வரும்போது குத்தின புளி ஒரு குடலை கொண்டுவருவதாய்ச் சொல்லிப் போவாள்.

பேரன் 'அப்ளிகேஷன்' ராகவையரிடம் வந்து சேரும். முறையாகச் சிபார்சு செய்ய வேண்டிய பேர்வழிகள் மற்றும் எவ்வளவோ பேர் இருப்பார்கள். ஆகையால் கிழவி பேரன் விஷயமாய் ராகவையர் ஒரு முயற்சியும் செய்யச் சௌகரியப்படாது. அதனாலென்ன? அடுத்த தடவை கிழவி வந்ததும் மோஹம் அனுதாபம் ததும்பும் குரலில் "அந்தப் பள்ளிக்கூடத்திலே ஒங்காத்துக் கொழந்தையைச் சேர்க்கறத்துக்கு அவாளும் எத்தனையோ பாடுதான் பட்டா. என்ன பண்ணறது, ஐவேஜி அரைக்காசுகூட இல்லேன்னு சத்தியம் பண்ணணுமாம். அப்படிப் பண்ணினாத்தான் சேர்க்கலாம்னு இருக்காம். அப்படி ஒங்களைப் பத்திச் சொல்லறத்துக்கு அவருக்கு துணியுமா, மனசுதான் வருமா? 'கடந்துட்டுப் போறது, அந்தப் பேய்ப் பயல்கள் சேர்த்துக்காப்போனாப் போகட்டும், நம்மாத்திலே கொணந்து வெச்சுண்டுட்டாப் போறது'ன்னுகூடச் சொன்னா. சிவனேன்னு கொணந்து வெச்சுண்டுடுவேன், அம்மாமி, எனக்கொரு புள்ளை ப்ரதிவிந்தமா வந்திருக்கே, நான் என்ன பண்ணுறது? அது கழுதையாப் போறது மன்னியிலே ஊரார் புள்ளையும்னா கெடுத்துக் குட்டிச் செவரா அடிச்சுப்புடும்" என்று ஒப்பாரி வைக்கும் சுவாரசியத்தில் கிழவி தன் கஷ்டத்தைவிட மோஹம்(கலியாண சுந்தரம் மூலமாய்) அநியாயமாய்ப் படும் கஷ்டம் பதின்மடங்கு அதிகம் என்று பரிபூர்ணமாய் நம்பினவளாய், மனதுக்குள் கொஞ்சம் ஸந்துஷ்டியும் வெளிப்படையாய் ரொம்பக் கருணையும் பெருக, "ஆமாண்டியம்மா, ரொம்பப் பாடுதாம் படுத்தறது அந்தப் புள்ளெ. நீயாக் கொண்டுதான் வெச்சுண்டு நல்ல பேறெடுக்கறே" என்று ஒத்துப்பாடுவாள்.

6

"இருந்தாலும், வெறுங்கை மொழம் போடுமோ? நம்மை அண்டின ஏழைகளுக்கு நாமெங்கேயாவது கையைக் காட்டினாத்தான் நாளைக்கி ஒரு காரியா காரியம்னா எள்ளுங்கறத்துக்கு மின்னே எண்ணேனு நிக்கறத்துக்கு நாலு பேர் இருப்பா" என்று சதிபதிகள் தனித்

திருக்கும்போது மோஹம் போதிப்பது வழக்கம். இந்த அந்தரங்கச் சம்பாஷணைகள் வீட்டில் அமளியடங்கின பிறகு ராத்திரி சுமார் பத்துப் பதினொரு மணிக்கு முதற்கட்டுக் கூடத்தில் நடக்கும். பெரிய கூடந்தாழ்வாரம், அதற்குத் தகுந்த முற்றம். வெப்பம் தெரியாமலிருக்கத் தென் பக்கம் தூக்கிவிட்ட காற்றுப்பந்தல் நிரந்தரமாய்ப் போட்டிருக்கும். பகலில் கூடத்து ஊஞ்சலில் படுத்தால் தாலாட்டுவதுபோல் தணிந்த குரலில் அந்தரங்கமாய்க் காலப்போக்கை எண்ணும் குயில் படம் போட்ட கெடியாரத்தின் நிதான அடியைத் தவிர வேறு எவ்விதச் சத்தமும் கேட்காத அந்த அமைதியில் தூக்கம் அதுவாய் வரும். சாயந்தரம் வேலைக்காரப் பக்கிரி முற்றம் முழுதும் தண்ணீர் விட்டு அலம்பிச் சுத்தம் செய்து 'எசமான்' சாய்வுநாற்காலியை எடுத்துப் போட்டு அருகே வென்னீர்க்கூஜா வைப்பதற்குச் சிறு மேஜை ஒன்றும் கொணர்ந்து சேர்ப்பான். ராகவையர் ஏழு மணிக்கே ராபோஜனம் முடித்துக்கொண்டு—அவருக்கு 'வயறு சரியாயில்லை' என்ற சாசுவதப் புகார் இருந்ததால் ஒரு நாள் தவறாமல் இரவில் மணத்தக்காளிக்காய் வற்றக்குழம்பும் வேப்பம்பூ ரசமும் தான் சமையல், இதை மோஹம் வேடிக்கையாய் 'முத்துவெத்தலும் புஷ்பரஸமும்' என்று சொல்லுவது வழக்கம்—அவருக்கேற்பட்டிருந்த பல ஜோலிகள் சம்பந்தமான கட்டுக்களைப் பார்த்துவிட்டு 'அப்பாடா!' என்று சாய்வு நாற்காலியில் வந்து சாய்வார். அச்சமயம் மோஹம் தன் போஜனம் முடித்துப் பரிசாரகன் சாப்பிட்டதும் அவனை அப்புறப்படுத்தி உக்கிராண உள் முதலான இடங்களைப் பூட்டிக்கொண்டு, தன் 'பிள்ளை', அதாவது, ராகவையர் மூத்தாள் பிள்ளை கலியாணசுந்தரம், வழக்கம் போல் இன்னும் சாப்பிட வரவில்லை என்பதைப் பரிசாரகன் சொல்ல, "எந்த 'ட்ராமா'க் கொட்டகையிலே நிக்கறானோ, காலாடி, பத்து மணிக்குமேலே வந்தாப் பொடைக்கறத்துக்கு ஒக்காந்திருக்காளோ இங்கே ஒத்தர், சோறில்லாமெ திண்ணையிலே மறியட்டும்" என்று சொல்லிக் கூடத்திற்கு வெற்றிலைத் தட்டும் கையுமாய் வந்து முற்றத்தின் இறக்கத்தில் தாழ்வாரத்தில் தன் கணவன் சாய்வு நாற்காலிக்குச் சமீபத்தில் உட்காருவாள். 'பிள்ளை'யைப்பற்றிச் சொன்ன வார்த்தை அவர் காதில் நிச்சயமாய் விழுந்தும் கெவனிக்காதவர் போல் 'பேப்பர்' பார்த்துக்கொண்டிருப்பார். ஸம்ஸாரத்தைக் கண்டதும் 'பேப்ப'ரைக் கீழே போட்டுவிட்டு அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்த வண்ணமிருப்பார்.

"சாரதா ஆத்துக்காரருக்கு ஒடையார் 'கேஸி'லே 'ரிஸீவர்' நீங்கிப் போச்சாமே!" என்று பேச்சை ஆரம்பிப்பாள். "அவள் சொல்லல்லே, சாயந்தரம் கோவில்லே கண்டபோது 'அவருக்கு அடிக்கடி கிறுகிறுன்னு வரது, டாக்டர் வேறெ காத்துப்பட்டாத் தேவலேங்கறார். நாலுமாஸம் திருக்கழுக்குன்றம் போய் ஸ்தலவாஸமிருக்கலாம்னு யோசனை'ன்னா. ஆத்துக்கு வந்தேன். நம்ம சம்பு புள்ளை கோதண்டம் வந்தான். அவன் சொல்லித்தான் விஷயம் புரிஞ்சுது. ஒரு வருஷமாக் கணக்கே குடுக்கல்லியாம். முன்ஸீப் ஒடனே 'ரிஸீவர்'லேயிருந்து நீக்கி, ஒரு வாரத்திலே கணக்கு வழக்குகள் ஒப்பிக்காபோனா 'ஹைகோர்ட்'டுக்கு இழுதிப்பிடுவேன்னுட்டாறாம். ஒதைச்சுண்டு கடக்கா, வெளிக்கிடம்பமாச் சொல்லிக்கிறத்திலே கொறைச்சலில்லே! நீங்க காலம்பற முன்ஸீப்தாரைப் பாருங்கோ, வருஷத்திலே ஆயிர ரூபாய்க்கி மேலே வராதாம் அந்த 'ரிஸீவர்'லே, 'யாராவது ஒரு பையனெப்புடிச்சுப் போட்டுட்டா மாமா வாரத்திலே ரெண்டு மணி கெவனிச்சாப்போறும். அதுக்குத்தான் இத்தனை நாளாப் பாத்துண்டிருந்தேன்'னு சொன்னான் கோதண்டம். அவனும் அதுக்கு வேண்டிய வேலை செய்திருக்கான். 'டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்' 'இன்ஸ்பெக்ஷ'னுக்கு வரப்போறான்னு கேள்விப்பட்டதும் 'ரிஸீவர்' கணக்குகளைத்தான் அவன் மொதல்லெ

பார்ப்பான்னு சொல்லி, இந்தக் கட்டெடல்லாம் முன்ஸீப் கிட்டக்கொண்டெ வெச்சு, எல்லாத்துக்கும் மேலே ஒடபார் கேஸ்' 'ரிகார்டு'களை வெச்சேன். எனக்குத்தெரியாதா அந்த முசுடு சமாச்சாரம்? நான் எண்ணினபடி, கிருஷ்ணய்யர் ஊழலைப் பார்த்ததும் அவரை வரவழைச்சுக் கொடை கொடைன்னு கொடஞ்சுப் பிட்டுது. பாவம், இன்ன சொல்றதுன்னு தெரியாமெத் தடுமாடினான் பிராம்மணன். நான் முன்ஸீப் 'டபன்' பண்ணறபோது தனியா அழைச்சுண்டுபோய், 'ஒங்களுக்கென்னத்துக்கு அண்ணா, இந்தத் தொல்லை யெல்லாம்? ஏதோ பையன் சம்பாதிக்கிறான், இம்மே சௌக்கியமாயிருக்கறத்தெ விட்டுட்டு! என்னைக் கேட்டேளாணா, இந்த 'ரிஸீவர்' வேண்டாம்னு ராஜிநாமாப் பண்ணிப் பிட்டு ஒரு வாரத்திலே கணக்கு ஒப்பிக்கிறேன்னு சொல்லிப் பிடுங்கோ, நான் ராப்பகலா ஒக்காந்து ஒங்களுக்குக் கணக்கு நேர் பண்ணித்தறேன்'னேன்! 'அப்பா, கோதண்டம், நீ சொல்றது தாண்டா யோஜனை'ன்னு ஒடனே காக்கடுதாசு எழுதிக் கொடுத்துட்டார். மாமா போய் முன்ஸீப்பைப் பார்க்கட்டும். ஒடனே 'ஆர்டர்' கொடுத்துடுவர். மாமா கையிலே வெசையிருக்கு' ன்னான். 'என்னடா?'ன்னேன். 'முன்ஸீப்புக்குப் புள்ளே செதம்பரத்திலே படிக்கறான், அங்கே மாத்திக்கணம்னு ஒத்தக்கால்லே நிக்கறார். மாமா 'டால்' மீனாக்ஷிசுந்தரமையரிண்டே ஒரு வார்த்தை சொல்லிப் பிட்டார்னாப் போரும். 'டென்னிஸ்' ஆடும்போது 'டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்'காதிலே அவர் குசுகுசுங்க வேண்டியதுதான், 'முன்ஸீப்' காரியம் ஆயிடும்'னான் கோதண்டம்".

இவ்விதம் மறுநாள் வேட்டைக்குப் 'பிளான்' போட்டுவிட்டுப் பின்னோடு "கோதண்டத்தும் புள்ளைக்கி 'எஸ். எஸ். எல். ஸி'யிலே மறுபடி ஒரு 'ஸப்ஜக்ட்' தேறல்லியாம். 'இம்மே பணத்தை வீணாக்கவாண்டாம்னு பார்க்கறேன். 'முன்சிபாலிடி'யிலே 'பில்கலெக்டர்'எடுக்கறாளாம். 'சேர்ம'னிண்டே மாமா சொன்னாத் தேவலை. எனக்கு வெளக்கேத்தி வெச்சாப்பிலே என் கொழந்தைக்கும் அவர்தான் கண் தறந்துவிடணும்'னான். 'சேர்ம'னைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுங்கோ" என்று சிபார்சும் செய்வாள். ஐயர் புருவத்தை நெறித்துக்கொண்டு இடுப்பில் செறுகியிருக்கும் 'ருமால்'கைக் குட்டையை எடுத்துதறி மூக்கைச் சிந்திவிட்டு, "இந்தப் பயல்களுக்கு வேறெ வேலையே இல்லே. தினம் போதுவிடிஞ்சா 'அவனுக்குச் சொல்லு', 'இவனுக்கொரு கடுதாசு குடு', இதே காரியமாப் போச்சு! வெறும்பயல்களை யெல்லாம் அள்ளுக்கட்டவேண்டியிருக்கு" என்று சலிப்புடன் பதில் சொன்னால், அப்பொழுது தான் ஏற்கெனவே கண்டபடி ஏழைகளுக்கு உதவவேண்டுமென்னும் தர்மத்தை மோஹம் எடுத்துக் கூறுவது வழக்கம். ஆனால் வாஸ்தவத்தில் கோதண்டத்தின் விஷயத்தில் தன்னாலானதைச் செய்ய ராகவையருக்கும் சம்மதம்தான். ஏனென்றால் காட்டுப்பட்டிக் கிழவிபோலல்லாமல் கோதண்டம் குறும்பனென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். அவன் கேட்டதைச் செய்யா போனால் நாளைக்கு நமக்கும் கிருஷ்ணய்யர் கதி ஆய்விடாலென்ன பண்ணுகிறது என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு, மறுநாள் முன்ஸீப்பைப் பார்த்து 'ரிஸீவர்' வேலைக்கு வேண்டிய முயற்சியைப் பண்ணித் திரும்புகையில் 'சேர்ம'னிடமும் கோதண்டத்தின் பையனுக்காக வலுவாய்ச் சிபார்சு செய்து வருவார்.

இவ்விதம் பிழைப்புக்கு வழி ராகவையர் மூலம் அடைந்தவர்கள் வெகு பேர். அவர்கள் வர்க்கம் விருத்தியாக ஆக அவருக்குப் பக்கபலம் வலுத்தது. நாளடைவில் அந்த ஊரில் எந்தக் காரியம் நடக்க வேணுமாயிருந்தாலும் எத்தரத்தாரும் அவரிடம் வந்து சொல்லிக் கொள்ளாதவரில்லை. 'முன்சிபல் கௌன்ஸில்', தேவஸ்தானம் 'கமிட்டி', 'டிஸ்ட்ரிக்ட் போர்ட்' இதுகளில் தான் ஒரு முயற்சியுமே செய்யாமலிருக்க ஏகோபித்துத் தன்னை பொறுக்கி யெடுத்ததாக

உபசாரம் கூற வந்தவர்களிடத்தில் சொல்லுவதோடு, தனக்கிருக்கும் பல ஜோலிகளிடையே இதுகளைக் கெவனிக்க அவகாசமில்லை யென்று மறுத்துவிடலா மென்றெண்ணியும் அப்படிச் செய்தால் தன் அபிமானிகளுக்கு வருத்தமா யிருக்குமென்றே செய்யவில்லை என்றும் அவர் விநயமாய்ச் சொல்லுவதைச் செவியுற்ற அவர்கள்,"எவ்வளவு அடக்க ஒடுக்கம் பாரு! அதுதான் பெரிய மனுஷ னுக்கு லக்ஷணம்" என்று ஒருவருக் கொருவர் புகழ்ந்து பேசிப் போவார்கள். சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவு மல்லவா ?

7

ராகவையருக்கு மட்டும் கியாதிக்குத் தகுந்த ஸந்துஷ்டி ஏற்படவில்லை. என் றைக்கோ அபூர்வமாய் இந்த விஷயங் களை ஆத்மார்த்தமாக ஆராயப் புகும் காலங்களில் "இவ்வளவு பாடெல்லாம் எதற்கு ?" என்கிறதாகக்கூட அவர் எண்ணினதுண்டு. முதல் பக்ஷம், மேற் கூறிய பதவிகள் அவர் வெளிப்படை யாய்ச் சொல்லிக் கொள்ளுவது போல் செலவில்லாமலோ சிரமமில் லாமலோ கிடைப்பதில்லை. வாக்காளர் களுக்குப் பணங் காசு கொடுத்தால்தானு செலவு? வண்டியென்ன காடியென்ன 'டிபன்' என்ன 'ஒர்க்கர்ஸ்' என்று சொல்லிக்கொண்டு பிறர் செலவிலேயே காலக்ஷேபம் செய்வதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் மகானுபாவர்கள் காப்பிச் செலவென்ன, கடைசி நிமிஷத் தில் 'நாமிநேஷன்' போடும் வம்புக்காரர் களை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி செய் யும் வாய்முட்டென்ன, இதெல்லாம் செல வில்லையா ? தேர்தல் ஒன்றுக்கு ஐயாயிரம் பதினாயிரத்துக்குள் அடங்கினால் பிள்ளை யாருக்குத் தேங்காய் உடைக்க வேணும். இவ்வளவுக் கெல்லாம் வக்கீல் தொழிலில்—அதுவும் ஒரு சாமாங்கியப் பட்டணத்தில் நாடோடி வக்கீலுக்கு— வரும்படி ஏது? ராகவையருக்கு என் றைக்குமே 'கோர்ட்'டில் அதிக வேலை கிடையாது. அவருக்கு வேலையெல்லாம் 'கோர்ட்'டுக்கு 'கேஸ்' வருவதற்கு முன்னாலேயோ, 'கோர்ட்'டில் நடவ டிக்கை நடக்கும்போது 'கோர்ட்'டுக்கு வெளியிலேயோதான் ஜாஸ்தி. தான் 'வக்காலத்'போடும்'கேஸ்'களில் வெகு சில வற்றிலேதான் அவர் நேரே ஆஜராவது. அவைகளில் அவர் எழுந்திருந்து நாலு வார்த்தை சொல்லுவதற்கு அவசியம் இராது. பாக்கி எல்லா வழக்குகளுக் கும் ஜில்லா கோர்ட்டிலிருந்தோ சென் னையிலிருந்தோ பெரிய வக்கீலை அழைத்து வந்துவிடுவார். அதனாலேயே கக்ஷிக்காரர் களுக்கு அவரிடம் மிகுந்த நம்பிக்கை. 'பீஸ்'ஸைவிடப் படியிலும் 'கமிஷனி' லும் குறைந்த பக்ஷம் இரண்டு பங்காவது கிடைக்கும். போதாதற்கு வெகு கியாதி வாய்ந்த 'ஸீநியர்'களும் இவர் தயவை எதிர்பார்த்தார்கள். அந்த ஊர் வந்தால் அவர் வீட்டில்தான் அவர்கள் தங்குவது. அவருடைய கௌரவத்தையும் அவர் ஸம்ஸாரம் உபசரிக்கும் அருமையையும் அவர்கள் தங்கள் நண்பர்களான பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களிடம் வர்ணிக் கும் வர்ணனையில் அந்த உத்தியோகஸ்தர் களும் அவர்கள் பாரியைகளும் மயங்கி, போனால் வந்தால் ராகவையர் வீட்டில் தங்குவதும் அந்தப் பழக்கத்தின் காரண மாய் அவர் குடும்பத்திற்கு ஆப்த நண்பர் களாய் இவர்களும் ஆகிவிடுவார்கள். 'ஹைகோர்ட் ஜட்ஜ்'கள் முதற்கொண்டு சாதாரண 'டெபுடி கலெக்டர்'கள் வரை யில் எவ்வித உத்தியோகஸ்தரையும் அவர் வீட்டில் காணலாமென்றால் அவர் களுக்கு அந்த ஊரிலிருந்த மதிப்புக்கு வேறு காரணம் வேண்டுமோ ?

இவ்வித ஆதித்தியம் ஏராளச் செலவின் பேரில்தான் நடந்துவந்தது. ராகவையர் தொழில் வரும்படியோ இச்செலவுக்கு மூக்குக் கொடுக்காது என்று அவருக்கும் அவர் ஸம்ஸாரத்திற்கும் நன்கு தெரியும். ஆகவே மோஹம் ஒரு ஏற்பாடு செய் தாள். ராகவையர் அந்த ஊரிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் ஐந்தாறுக்கு பொக்கிஷதாரர் என்னும் ஹோதாவைச் சம்பாதித்து ஊர்ஜிதப் படுத்திக்கொண் டார். என்ன குறைந்தாலும் மாதம்

பதினாயிர ரூபாயாவது அவரிடம் புரளாத காலம் இல்லை. அந்தக் காலத்தில் இந்தப் பொதுச் சொத்துக்களைக் கையாளுவதில் தற்காலமுள்ள நிர்ப்பந்தங்கள் அதிகமாக இல்லை. 'பாங்கி'கள் சின்னப் பட்டணங்களில் ஏற்படாத அந்நாளில் ராகவையரைப்போன்ற நாணயஸ்தரிடம் இந்தச் சொத்துக்களின் பரிபாலனத்தை ஒப்புவிப்பதும், அவர்கள் சௌகரியம்போல் வெளியில் வட்டிவாசிக்கு விட்டுக் 'கிரம' வட்டி என்ற கால் வட்டி வீதம் மூல தனத்தோடு சேர்த்து ஈவு ஏதேனும் உண்டானால் அதைத் தங்கள் சிரமத்திற்குக் கைம்மாறாய் ஏற்றுக்கொள்வது ஸகஜமா யிருந்தது. இந்த முறையில் ராகவையர் தனக்குப் பழக்கமாயுள்ள வெகு பெரிய மனுஷர்களுக்கு முடைக்குதவும் சஜ்ஜனாவாய் விளங்கினார். உள்ளூரில் சில்லரை விவஹாரமே வைத்துக் கொள்ளுகிறதில்லை. யாராவது கேட்டால் 'அதெல்லாம் தெரிந்தவிடத்தில் பொல்லாப்பு நமக்கேன்? தர்ம சொத்து, நமக்கா தாக்ஷிண்யம், இள வழக்கிலே காரியம் கெட்டுப் போம்' என்று சொல்லுவார். தன் சிநேகிதர்களுக்குக் கொடுக்கும் வகையில் அநேக சௌகரியங்கள் உண்டு. அவர்கள் 'அட்டுக் கணக்கு சொட்டுக் கணக்கு'ப் பார்ப்பதில்லை. காலா காலத்தில் வட்டி வாசி கொடுப்பதில்லை. ஆனால் கையில் அகப்பட்டபோது மொத்தத் தொகையாய்க் கொடுப்பார்கள். வட்டி ராகவையர் வைத்ததுதான். கணக்கு வழக்கு அவரே பார்த்துச் சொல்லவேண்டியது.

இவ்விதம் உபயோகப்படுத்தின பணம் போக பாக்கிக்கு மோஹம் ஒரு விநியோகம் கண்டு பிடித்தாள். அவளுக்கு ரத்தினப் பரீக்ஷை நன்றாய்த் தெரியும். அந்த ஊர் 'ஷராப்' கடை ரங்கதாஸ் செட்டியைவிடக்கூட அவள் தேர்ந்தவள் என்ற நம்பிக்கையில் அவனிடம் நகைகள் வாங்குபவர் இவளிடம் காட்டி இவள் மதிப்பின் பேரிலேதான் வாங்குவார்கள். இதனால் செட்டிக்குத் தன் பிழைப்பைக் கெடுக்கும் பாதகி என்று மோஹத்தினிடத்திலும் அது காரணமாய் அவள் புருஷனிடத்திலும் வெறுப்பு ஏற்பட்டாலும் அவன் அவர்களுக் கவ்வூரில் இருந்த செல்வாக்கை உத்தேசித்து அதை வெளிக் காட்டிக் கொள்வதில்லை. மோஹமும் அவனிடம் துவேஷம் பாராட்டாமல் அவனையும் உபயோகப்படுத்தி வந்தாள். தன் புருஷனுடைய வெளியூர்ப் பணக்காரச் சிநேகிதர்களின் குடும்பங்களுக்கு நகை நட்டுகளை வாங்குவதில் அவளே மந்திரியானாள். பழையதை மாற்றிப் புதியது வாங்கித் தருவாள். எப்பொழுதும் நாலு தட்டார்கள் வீட்டில் வேலைசெய்தவண்ண மிருப்பார்கள். எண்ணையிறங்கின இனங்களைப் பிரித்துக் கட்டுவதோ கல்களை மாற்றுவதோ மற்றும் என்னென்ன செய்ய வேண்டுமோ எல்லாம் செய்து கொடுப்பாள். இவ்வளவுக்கும் தன் நண்பர்களின் சந்தோஷமும் நல்ல வேலைப்பாட்டில் தனக்கிருக்கும் ஆர்வமுமே போதுமான ஊதியம் என்று அவள் மனப்பூர்வமாய் எண்ணி வந்தாளென்றே மேற்படி நண்பர்களின் நிச்சயமான நம்பிக்கை. இப்படிக் காலக்ஷேபம் நடந்து வரும்போது எல்லாம் லாபகரமா யிருக்குமா? லாபமும் உண்டு நஷ்டமும் உண்டுதான், பருப்பும் அரிசியும் கலந்தாப்போலே. பணக்காரச் சிநேகிதர்கள் எதிர்பாராதபடி 'இன்ஸால்வெண்ட்' ஆகிவிடுவ்தும் உண்டு. அடகு பிடித்த சில நகைகள் கொடுத்த பணத்திற்குப் பாதிக்குக்கூடப் போதாததுமாய் ஏற்படுவதுமுண்டு. ஆகிலும் சராசரிக்கு லாபமேயொழிய நஷ்டமில்லை என்பது நிச்சயம்தான். லாபமில்லாமலா லக்ஷ ரூபாய் ரொக்கமேற்பட்டது இவ்வளவு செலவு சித்தாயமும் போய்? ஏன், ஊரிலிருப்பவர்கள் இரண்டு மூன்று லக்ஷத்திற்குச் சொல்லிக்கொண்டார்கள். வாஸ்தவம் ராகவையருக்குக்கூடத் தெரியாது. 'நோட்டு' முதலான தஸ்தாவேஜிகள் ஜாடாவும் மோஹத்தின்பேரிலே. வரவு செலவும் அவள்தான். ராகவையருக்கு இது விவரங்களை விசாரிக்க வேணுமென்ற அவா எப்பொழுதாவது ஏற்பட்

டதோ என்னவோ தெரியாது. விசாரிக்க வேண்டிய தைரியம் மட்டுமில்லை.

காரணமென்ன வென்றால், பணம் என்ற பேச்சை எடுத்தாலே மோஹம் குடும்பத்தைத் தான் நடத்தி வருவதில் படும் சிரமத்தையும் அதன் அருமையைக் கொஞ்சமும் பாராட்டாமல் ராகவையர் எல்லாம் தானக நடப்பதாக நினைத்தவர்போல் அலக்ஷியமாயிருப்பதையும் 'ஓரடி ஏறினல் இரண்டடி சறுக்குகிறது'என்றாப்போல் அவள் படும் பாட்டுக்கு முற்றிலும் முறணக அவர் பிள்ளையாண்டான் பணங்காசை தொம்சம் பண்ணுவதையும்பற்றி ஒரு ராமாயணம் ஆரம்பித்து விடுவாள். இதற்குப் பயந்தே அவர் அந்தப் பேச்சையே எடுப்பதில்லை. ஆனல் வாரத்திற்கொரு முறையாவது அவள் வலுவிலே அவரை இழுத்து வைத்து இந்தப் பிரசங்கத்தை நடத்துவாள். அப்படிச் செய்தால்தான் அவர் ஊக்கம் குறையாமல் கிருககிருத்தியத்தை நடத்திவருவார் என்பது அவள் துணிபு. இரண்டொரு சமயங்களில் 'இப்படி விழுந்துவிழுந்து சம்பாதிச்சு என்னத்தைக் கண்டது, நல்ல தூக்கம் தூங்கி எத்தனையோ நாளாச்சு. எங்கப்பா வைதிகம்தான், எவ்வளவு விச்ராந்தியாக் காலந்தள்ளினர்!' என்று அவர் அலுத்துச் சொல்லுவதைக் கேட்டு, இவ்விதச் சோர்வுக்கு இடம் கொடுத்தால் காரியம் கெட்டுப்போம் என்று பயந்து ஜட்கா வண்டிக் குதிரையை முடுக்குவதுபோல் முடுக்குவாள். ஜட்காக் குதிரை ஓடிக்கொண்டே இருந்தால் தான் இருந்தது, நின்றால் 'பொட்' டென்று பிராணன் போய்விடுமென்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் குடித்தன யோக க்ஷேமமும் எப்பொழுதும்போல் ஓடிக்கொண்டிருந்தால் தான் பிழைத்தது, இல்லையேல் சட்டென்று கலகலத்து அக்கு வேறு ஆணி வேறாய்க் கொட்டிவிடுமென்று நன்குணர்ந்தவள் அல்லவா?

நல்ல வேளையாய் இவ்வித வைராக்கியத்திற் காஸ்பதமான எண்ணங்கள் ராகவையர் மனதில் அடிக்கடி எழும்புவதில்லை. அன்றன்றைக்குத் தன் ஸம்ஸாரம் கோடித்த நாடகத்தைச் செவ்வனே ஆடுவதே குறியாகக் கொண்டு வருஷக்கணக்காய்க் காலந்தள்ளிவந்த அவருக்குச் சுவாபாவிகமாய் நடப்பதோ, மனதிலிருப்பதை அந்தரங்கமாய்ப் பிறரிடம் வெளிப்படுத்துவதோ, காரணமற்ற விசுவாஸத்தை எந்த வஸ்துவினிடத்திலாவது அர்ப்பணம் பண்ணுவதோ, உண்மையாக எந்தக் காரியத்திலாவது நடப்பதோ ஒன்றும் ஸாத்திமில்லாமல் ஆகிவிட்டது. ஸதிபதிகளுக்குள்ளே கூட இந்த அந்தரங்கமில்லை. அவருக்கு அது வருவதில்லை. அவளுக்கு அதற்குப் பொழுது இருப்பதில்லை. அப்படி ஒரு கால் அவகாசம் ஏற்பட்டாலும் அந்தரங்கத்திற்கு அவரைப் பாத்திரமாக அவள் கருதவுமில்லை. அவரை மணந்த கொஞ்சக்காலத்திற்கெல்லாம் அவருடன் தான் கடத்தவேண்டிய வாழ்நாளில் இவ்வித அந்தரங்கங்களுக் கிடமில்லை என்று தீர்மானித்துப் 'பெரிய மனுஷா'ளாவது என்னும் வியாபாரத்தை நடத்த வேண்டிய ஒரு காரியத்தில் மட்டும் இருவரும் கூட்டாயிருந்து தன் ஸாமர்த்தியத்தையும் தன் புருஷன் தன்மையையும் முதலாகக் கொண்டு தொழில் நடத்தவேண்டியது, பாக்கி விஷயங்களில் சத்திரத்தில் குடியிருப்பவர்போல் இருவரும் அவரவர் காரியத்தை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டியது என்று வேலை திட்டம் நிர்மாணம் செய்துகொண்டாள் போலும். மேலெழுந்த வாரியாய்ப் பார்த்தவர்கள், "மோஹத்துக் கென்ன, மஹாராஜி, அவ வயத்திலே ஒரு கொழந்தை பொறக்கல்லியே, அது ஒரு கொறைதான். பகவான் கண்ணைத்தறந்து பாக்கல்லியே, என்ன பண்ணலாம்!" என்று அங்கலாய்ப்பார்கள். அவள் அதைக் குறையாகவே எண்ணவில்லை.

8

இவ்விதம் வாய்ந்த தாம்பத்தியத்திற்கு வேலிக்கு முள்ளிட்டாப்போல் கலியாணசுந்தரம் வற்றாத நெரநெரப்பை

உண்டுபண்ணி வந்தான். ராகவையர் அவனைப் பார்க்கும்போதெல்லாம் "எத்தனை ஜென்மாவிலே பண்ணின பாவமோ எனக்கிப்படி ஒரு புள்ளை வாச்சிருக்கே!" என்று தனக்குள்ளே எண்ணி மாய்ந்துபோவார். அதை வெளிப்படையாய்ச் சொல்லி ஆற்றிக்கொள்ள அந்தரங்க மனுஷ்யாள் அவருக்குக்கிடையாது. மோஹமோ, சாதாரணமாய்க் கோபமோ படபடப்போ மனதில் எழும்பினால் வெளிக்காட்டாமல் அடக்கிக்கொள்ளும் தன்மை வாய்ந்தவளானாலும், கலியாண சுந்தரம் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே கொந்தளிப்பாள். மூத்தாள் கூர் இளையாள் கூர் என்று சாமாந்நியமாய்ச் சொல்லக்கூடிய காரணம் இவளிடத்தில் பொருந்தாது. புக்ககம் வந்து பல வருஷங்கள் தன்னாலானமட்டும் மூத்தாள் பிள்ளையிடத்தில் வாஞ்சையாயும் அன்னியோன்னியமாயும் இருக்கிறாள் என்ற பெயர் எடுக்கவேண்டுமென்றுரொம்பவும் சிரமப்பட்டுத்தான் பார்த்தாள். பலிக்கவில்லை. கலியாணசுந்தரத்திற்கு இவள் என்ன கொண்டாடியும் இவளிடம் சாதாரண விசுவாஸம்கூட ஏற்படவில்லை. இதற்குக் காரணம் அவளுக்குத் தெரியாமலே அவனைப்பற்றி நினைத்தமாத்திரத்தில் உண்டாகும் வெறுப்புத்தான் என்ற விஷயத்தை மட்டும் எல்லாக் காரியங்களிலும் சூசனையுள்ளவளாயிருந்தும் அவள் தெரிந்துகொள்ளவில்லை.

அந்த வெறுப்புக்கும் பலவிதத்தில் நியாயம் இருக்கத்தான் இருந்தது. கலியாணசுந்தரத்தின் குணத்தை ஒரேவார்த்தையில் சொல்லப்புகும் பக்ஷத்தில், அவன் அஸத்து. எட்டாவது வயது வரை அவன் தாய் இருந்தும், தாயில்லாப் பிள்ளைகளுக்கு எப்படித் தன்னைத் தவிர வேறொரு பிராணியிடமும் ஸகஜமாய்ப் பிரேமை ஏற்படுவதில்லையோ அவ்விதமே அவனும் காணப்பட்டான். அந்தக் காலத்திலும் அதற்குப் பிறகும் ராகவையருக்கு அவனுடைய படிப்பு நடத்தை முதலிய விஷயங்களைச் செவ்வனே மேற்பார்வை பார்க்க முடியாமற் போகவே அவனுக்கு வீட்டு வேலைக்காரர்களிடம்தான் ஜாஸ்தி 'ராப்தா'. அவனைக் காணவில்லையென்றால் குதிரை லாயத்தில்தான் தேடவேணும். பத்து வயதுக்கு முன், ஆசாரம் பெருத்த அவ்வூரில் சொர்ப்பனத்திலும் நினைக்கக்கூடாத காரியம் பிராம்மணன் பீடி பிடிப்பது, அதில் நன்றாய்ப் பழகிக்கொண்டான். பொடியும் வெற்றிலையும் பின்னோடு வந்துவிட்டன. செலவு இல்விதம் அதிகரிக்கக் கடை கண்ணிகளில் காவற்காரர்கள் கெவனிக்காத சமயம் பார்த்துக் கையில் அகப்பட்டதைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுவான். அகப்பட்டுக்கொண்டால் தெரியாதவர்களிடம் தான் யார் இன்னார் என்று சொல்லிக் கொள்ளுவதில்லை. யாரோ ஏழைப்பிள்ளை என்று கடைக்காரன் இரண்டடி கொடுத்து விரட்டிவிட்டால் வாயைத் திறவாமல் வந்துவிடுவான். ஆனால் திருட்டுத்தொழில் மட்டும் நின்றபாடில்லை. இது கடைசில் ராகவையர் காதுக் கெட்ட அவர் அடித்து உதைத்துப் பார்த்தார். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. இந்த அழகில் படிப்பு எப்படி ஏறும்? பாடத்திற்கொருவராய் ஏற்படுத்தப்பட்ட மூன்று 'பிரைவேட் 'யூடர்'கள் பிழைத்தார்களேயொழியப் பையன் தேறுவதாயில்லை. இதைக் கண்டு, கைத்தொழில் சம்பந்தமான படிப்புத்தான் தேச முன்னேற்றமடைய முக்கியச் சாதனம் என்ற பிரசாரம் அச்சமயம் மும்முறமாய் ஏற்பட்டிருந்தபடியால், ஒருவேளை கலியாணத்தின் 'அடங்காப் பிடாரி'த்தனத்திற்கு அது மருந்தாகுமோவென்றெண்ணி அந்த ஊரில் புதிதாய்க் கைத்தரி ஏற்படுத்திச் சுதேசித் துணிகள் நெசவு செய்யும் ஒருவரிடம் இவனை ஒப்புவித்தார். இரண்டு மாதத்தில் அவர் ராகவையரைக் கண்டு "ஸ்வாமி, தயவு செய்து ஒங்க பையனை இனிமேல் வரச் சொல்லாதேயுங்கோ, அவன் இருக்கிற திக்குக்கொரு ஸலாம்! தினம் குஸ்தி பழகினபடி இருக்கான். தரிக் கம்பைப் புடிங்கிக்கிண்டு அடிக்கப் போயிடறான் ஆராவது ஏதாவது சொன்னா. இவனாலே பாக்கிப் பேரும்

கொலம்பியா ரிகார்டுகளில்
கிருஷ்ணா பிக்சர்ஸ் பிரபாவதி
டாக்கீ பாட்டுகள்
T.R. ராஜகுமாரி
GE. 6150 கோமாதா நீயே
வருவாரே
நாகர்கோயில் மகாதேவன்
GE. 6151
ஏன் தடுமாறுகின்றாய்
நீயே துணை
T.V. நமசிவாயம்
ப்ரத்யுனன் பாட்டு
GE. 6153
சித்தமிரங்காதா..
வனிதையிவள்
குறத்தி பாட்டுகள்
GE. 6154 வெள்ளிமலை
திருமாது..
G.H.RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மவுண்ட்ரோட், மதராஸ்.

சென்னைக்கு வரும் நண்பர்களுக்கு

ம கோ ன் ன த

ஹோட்டல் எவரெஸ்ட்

வரவேற்க இருக்கிறது

உபசரிப்பிலும்
உணவளிப்பதிலும் நிகரற்றது

எக்மோர் சென்டிரல் மத்தியில் ஹோட்டல் எவரெஸ்ட் டிராம் பஸ் நிற்கும் இடத்தில்

கெட்டுப்போகுன்கள். தவிர, இந்தத் தொழிலெல்லாம் மட்ட ஜாதிகளுக்குத் தான் லாயக்கு" என்று ராகவையர் மனம் நோவாமலிருக்கும்படி ஏதோ ஸால்ஜாப்புச் சொல்லிக் கலியாணம் செசவு சாலைப் பக்கம் வராமல் தடுத்துப் போனுர். ராகவையருக்கு என்னதான் பண்ணுவதென்று தெரியவில்லை. ஆசை யென்ற யீரமே யில்லாமல் வறண்டுபோ யிருந்த அவர் உள்ளத்தில் இந்த உருப் படாப் பிள்ளையைப்பற்றி நினைத்தமாத் திரத்தில் ஒரு விபரீத வாத்ஸல்யம் பொங்கி எழும். இதை வெளிக்காட்டிக் கொள்ளுவதற்கு அவருக்கு வெட்கம். இருந்தாலும் மோஹம் அதை நன் குணர்ந்திருந்தாள். அதனுலேயே அவ ளுக்குக் கலியாணத்தினிடத்தில் வைரம் பாய்ந்த துவேஷம்.

கலியாணத்துக்கு இதற்குள் வயது இருபது ஆகிவிட்டது. "ஒரு கால்கட் டுக் கட்டிப்போட்டால் திருந்தலாமோ?" என்று அவன் தகப்பனுர் எண்ணலானுர். அவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? குணமோ ஊருக்கெல்லாம் தம்பட்டம் போட்ட விஷயம். ஐவேஜி அரைக் காசு இல்லையென்றும் ஜாடா சொத்தும் மாற்ருந்தாய்பேரில் இருக்கிறது என்றும் எல்லோருக்கும் தெரியும். முடிவில், தன் ஏழைத் தங்கைக்கொரு பெண் தாய் தகப்பனில்லாமல் யாரோ எட்டின உற வினர் வீட்டில் வளர்ந்து வருவதை வெங்கட்டராமன் நினைவூட்ட அந்தப் பெண்ணைப்பேசித் தன் பிள்ளைக்குக் கலி யாணம் செய்துவைத்தார். அந்த எட்டின பந்துக்கள் 'விட்டது பளு' என்று அப் புறம் எட்டிப் பார்க்கவேயில்லை. இது காரணமாய் மோஹம் ஓயாமல் 'மாலாசு' பண்ண அந்தப் பெண் (பாவம்! நல்ல கால மென்பதையே கண்டறியாதவள்) எப்பொழுது பார்த்தாலும் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்பதுஒருபுறமும், கலி யாணம் வழக்கம்போலச் சீட்டாடுவதும் 'ட்ராமா'ப் பார்ப்பதும் ஒழிந்த வேளை யில் தன் வீட்டிற்கெதிரே இருக்கும் வெற்றிலை பாக்குக் கடையில் இன்னும் நாலு குல்லேரிகளோடு சேர்ந்து உட் கார்ந்து வாயில் வந்தபடி பேசுவதும் ஊர் சிரிக்க அடிப்பதும் ஒருபுறமுமாய் ராகவையருக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் ஆய்விட்டது.

கலியாணத்துக்குப் படிப்பில் புத்தி செல்லாமற் போனுலும் முட்டாளில்லை. புத்தியை நல்ல வழியில் செல்ல விடமட் டும் வருவதில்லை. அவன் குறும்புப் பேச்சை ருசியாய்க் கேட்டுக் கைகொட்டி உற்சாகப்படுத்துவதற்குச் சிலச் சோம் பேறிகள் எப்போதும் அவனைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். (ராகவையருக்கு 'டீபன்' ஆகுமுன் அவர்களுக்குக் கடைக்குப் பின்புறமுள்ள அறையில் தயாரா யிருக்கும். கொண்டுவந்து வைக் காமற் போனுல் பரிசாரகன் பிழைக்க முடியுமா?) தன் சிறிய தாயார் ராஜ்ய பாரம் பண்ணுவதையும் தன் தகப்பனுர் வாலைக் குழைத்து பல்லைக்காட்டி அவள் பிரஸன்னத்தை எதிர்பார்த்து நிற்பதை யும் இருவருமாய்ச் சேர்ந்து ஊரிலிருப்ப வர்கள் கண்ணில் மண்ணைத் தூவுவதை யும் வருணித்து, "அந்த வித்தையெல் லாம் நம்ம கிட்ட பலிக்குமா! ஐயர்வாள் அந்தெபோலக் கண்ணை மூடி மூடித் திறந்துண்டு இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமோன்னிருக்காரேன்னு ஏமாந்துடாதேயுங்கோடா, கெழவன் வாயெல்லாம் பல்லு. ஒடலுக்குள்ளே நாக்கு வழிப்பான். பாயுஸாயப்பு கேக்க வேண்டியதில்லை. ஜகத்திலே ஒரு பெரிய மனுஷா பாக்கி இல்லே, எல்லாரையும் புடிச்சுத் தன் ஜேபிலே போட்டிண்டுட் டதாகத்தான் எண்ணம். அப்பா, அவ படுத்தற பாடுதான் என்ன! இந்தக் கெழவனை என்ன ஆட்டம் ஆட்டி வைக் கறு!" என்று பிரஸங்கித்து, "பெத்த புள்ளைக்கிக் காலணு ஐவேஜி இல்லாமெ பண்ணிப்புட்டாளே, அந்த ராக்ஷஸி, அவ என்னதான் பண்ணமாட்டா? என் னிக்குக் கெழவன் தொண்டெக் குழி யிலே பாக்கு வெச்சு அமுத்தப் போருளோ!" என்று தன் வயிற்றெரிச் சலை வெளிப்படுத்துவான். ஆனல் அவன் வைராக்கியமோ வைஷம்மியமோ விவே கமோ ஒன்றும் நீடித்து நிற்பதில்லை;

16

இது மோஹத்திற்கு நன்றாய்த் தெரியும். இருந்தாலும் இவன் இப்படி வம்பு வளர்ப்பதை வியாஜமாய் வைத்து, "அந்தக் கழிச்செல்லே போறவன் இம்மே இந்த வீட்டு வழி வந்தா நான் இங்கே இருக்கச் சரிப்படாது" என்று கணவனுக்கு ஆணையிட அவர் வேறு ஜாகை ஒன்று பார்த்து அங்கே பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் குடிவைத்துக் கோர்ட்டில் அவனுக்கு ஒரு 'காபியிஸ்ட்' வேலை வாங்கிக் கொடுத்தார். (தான் மணி மணியாய் எழுதுவதைப்பற்றிக் கலியாணம் பெருமை பீற்றிக்கொள்ளுவான் அடிக்கடி தன் ஸகபாடிகளுடன். வேறு என்ன பெருமையை அவன் கொள்ளுவது ?) போதும் போதாததற்கு ராகவையர் மோஹத்திற்குத் தெரிந்தும் தெரியாமலும் அவ்வப்பொழுது ஒன்று அரை நாட்டுப் பெண் கையில் கொடுத்து வந்தார். நாவிலே இரண்டிலே ஒரு நாள் போய்ப் பார்த்தும் வருவார். அனேகமாய்ப் பிள்ளையைச் சந்திப்பதே யில்லை. அவனுக்கு எவ்வளவோ விவஹாரம், ராத்திரிப் பதினொரு மணிக்கு முன் வீடு திரும்புவதில்லை. என்றைக்காவது தற்செயலாய் அவர் வந்திருக்கும் போது வீடுவந்து சேர்ந்தால் உடனே குஸ்திதான். "புள்ளெ ஏழாவது உப்பரிகையிலே ஹம்ஸ தூளிகா மஞ்சத்திலே உல்லாஸமா யிருக்கிறதெப் பார்க்க வந்தாப்பிலே யிருக்கு!" என்று விஷமமாய் ஆரம்பிக்கும்போதே ஏதோ அவசரக் காரியம் அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்ததுபோல் அவன் தகப்பனார் சரேலென்று எழுந்திருப்பார். இதைக் கண்டதும் "அதிசய மாமாகிட்ட ஒறவு கொண்டாடறயோ, மானங்கெட்ட படவா!" என்று அகமுடையாளை ஒரு அறை அறைவான். "ஐயோ, அதைப் போட்டு ஏண்டா கொலை பண்ணறே, பாவி!" என்று சொல்லிக்கொண்டே விர்ரென்று வெளியே போய்விடுவார். "அங்கே போனத்தானே இந்த எழவெல்லாம் பார்க்க வேண்டிருக்கு, இனிமே அங்கே போகவே வேண்டாம்," என்று தனக்குள் வைராக்கியம் பண்ணிக் கொள்வார். இருந்தாலும் அந்த அனாதைப் பெண்ணின் பேதைமையையும் தன் பிள்ளையின் மூர்க்கதனத்தையும் நினைத்து, அவனுக்குத் தன்னிடம் உண்டாகும் ஆத்திரத்திற்குக் காரணமில்லாமலில்லை என்ற விவேகமும் பின்னோடு வரவே அவன் பண்ணும் ஹடமெல்லாவற்றையும் மறந்து தாயார் எட்டாவது பிராயத்தில் விட்டு விட்டுப் போன போது அவன் இருந்த நிலைமையையும் வேறு கதியற்ற அந்த நிஷ்கபடமான குழந்தையின் லாலனையில் தான் அடைந்த ஆறுதலையும் எண்ணி, ஒட்டியுலர்ந்த தன் நெஞ்சில் மறுபடி அன்பெனும் பால் சுறக்கக் கண்டு ஒரு பக்கம் வியப்பும் ஒரு பக்கம் சந்தோஷமும் எழத் திரும்பவும் பிள்ளை வீட்டிற்குப் போய் நாட்டுப் பெண்ணிடம் பத்து நிமிஷம் பேசி வந்தால்தான் அவருக்குப் பாந்தப்படும். இப்படி அவர் வந்து போவதில் அவனுக்கு எதார்த்தத்தில் இஷ்டமில்லை என்று சொல்லுவதற்கில்லை. அவர் வந்து போனதாய்த் தெரிந்தால் "கெழவன் என்ன குடுத்தான்?" என்று பெண்ஜாதியை அதட்டி உருட்டித் தெரிந்து கொண்டு அது முழுமையுமோ ஒரு பாகத்தையோ (அவள் அதிர்ஷ்டத்தையும் அவன் தற்கால குணத்தையும் பொறுத்தது அது) பிடுங்கிக்கொண்டு விடுவது வழக்கமா யிருந்தாலும், அவர் ஐந்தாறு நாளாய் அந்தப் பக்கமே வரவில்லை யென்றால் "என்ன வந்துட்டுது கேடு, அந்தக் குடோரக்காரி ஆணையிட்டுட்டாளோ?" என்று கேட்கும் குரலில் கோபத்தோடு கொஞ்சம் வருத்தமும் கலந்து நிற்கும். ஆனால் அப்பனும் பிள்ளையும் நேரே சந்தித்தால் முஷ்டியுத்தம்தான். இப்படி நடந்து வந்தது கலியாணத்தின் அவலக் குடித்தனம்.

9

ஒரு நாள் ராகவையர் வீட்டிற்கொரு தந்தி வந்தது. அவர் மாமனார் தன் பந்துக்களில் ஒருவருக்கு உடம்பு உபாதி என்று கேள்விப்பட்டுப் பார்த்து வரப் போன இடத்தில் அவருக்குத் திடீ

ரென்று பாரிசவ வாயுபோல் ஒரு பக்கத்தை இழுத்து விட்டதாகவும் வைத்யர்கள் அவர் நிலைமை அபாயமாய் இருப்பதால் உடனே வர வேண்டுமென்று சொல்லுவதாகவும் அதில் கண்டிருந்தது. மோஹத்திற்கு அண்ணன் தம்பிகளில்லை. அவள் தமக்கைகளும் காலமாய் விட்டார்கள். ஆகையால் எல்லாம் அவள் பொறுப்பாய்விட்டது. தவிர, தகப்பனர் ஒரு பிராணியிடம்தான் அவளுக்கு அந்தரங்கப் பிரியம். தானடாமற் போனாலும் தன் சதையாடுமென்றல்லவா உலக வழக்கு? தந்தியைப் பார்த்ததும் அவளுக்கு உடம்பு பறப்பாய்ப் பறந்தது. ராகவையருக்கு அவசியமான வேலையிருந்ததால் பின்னேடு போகச் சரிப்படவில்லை. வெங்கட்டராமனைச் சேர்த்து அனுப்பிவிட்டு, முடிந்தால் ரயிலில் 'பஸ்ட்கிளாஸி'ல் கிழவரை ஏற்றிவந்து விடும்படியும் அது செய்யக் கூடாதென்று 'டாக்டர்'கள் சொன்னல் தான் அங்கே நாலு நாளில் வருவதாகவும் சொல்லி அனுப்பினர். மோஹம் அந்த ஊர் போய்ச் சேரும்போது அவள் தகப்பனருக்குத் தொண்டையடைத்துப் போயிற்று. 'டாக்டர்'கள் எந்த நிமிஷமும் முடிவேற்படலாமென்றும் அவரை இருக்குமிடம் விட்டுக் கிளப்புவது அபாயம் என்றும் சொல்லி விட்டார்கள். ஆகையால் அவள் அங்கே தங்கும்படி நேர்ந்தது.

அவள் ஊருக்குப் போன மறுநாள் ராத்திரிப் பத்துமணி இருக்கும். பரிசாரகன் சாப்பிட்டுவிட்டுத் திண்ணைக்குப் போய்விட்டான். ராகவையர் கூடத்து மூலையில் வைத்திருக்கும் இரும்புப் பெட்டியண்டையில் ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு ஒரு கை விளக்கை ஏற்றிவிட்டுப் பெட்டியைத் திறந்து அன்றை தினம் வந்த பணத்தை அதில் எண்ணி வைத்தார். பிறகு அதிலுள்ள ஒவ்வொரு அறையையும் திறந்து சற்று சாவகாசமாயும் குருகுருப்போடும் உள்ளேயிருக்கும் சாமான்களை எடுத்துப் பார்த்தார். அவர் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்து வெகு காலம் இருக்கும். பணம் சம்பாதிக்க வேண்டியது அவர் வேலையே ஒழிய உள்ளே வைக்க வேண்டிய வேலை அவருக்கில்லை. ஆகையால் அதிலுள்ள சாமான்கள் அனேகம் அவருக்கு முற்றிலும் புதியனவாயிருந்தன. ஒரு தகரப் பெட்டியில் சுமார் இரண்டாயிர மூவாயிர ரூபாய் பெருமானமுள்ள தங்க நகைகள் சில ஒடிந்தும் சில மெருகு அழிந்தும் மற்றும் சில திருகுசுரை முதலிய அங்கங்கள் இல்லாமலும் சில பார்வைக்கு அனேகமாய்ப் புதியனவாயும்காணப்பட்டன.ஒவ்வொன்றுக்கும் ஒரு சின்ன வில்லையட்டையில் ஒரு பெயர் எழுதி நூலில் கோர்த்துக் கட்டியிருந்தது. இவை தன் ஸம்ஸாரம் நாட்டோடிகளிடம் அடகு பிடித்து வைத்திருக்கும் நகைகள் என்று விளங்கிற்று. ஒரு சிறு டப்பியில் ஜவ்வுத் தாளில் மடித்த உதிரி வைரங்களும் கெம்புகளும் காணப்பட்டன. மேல் தட்டில் ஒரு பழைய பழுக்காய்ச் செப்பின் கவிழ்த்துக் கிடத்திய மூடியில் ஒரு ஜோடி வைரத்தோடுகள் வைத்திருப்பதைக் கண்டார். அந்தப் பெட்டிக்குள் இருந்த சாமான்கள் எல்லாவற்றிலும் இவையே அவருக்குப் பழய காலத்து ஞாபகங்களை வெள்ளமாய் வரவழைத்தன. தோடுகளைக் கையில் எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார். "ஆமாம், ஏழு கல்லும் நடுவிலே ஒரு மரகதமும் இது அவள் தோடுதான்" என்று சற்று நேரம் எதையோ நினைத்துக் கொண்டிருந்தவர்போல் பெட்டியின் கதவைப் பிடித்துக் கொண்டே நின்றர்.

அவர் மூத்த ஸம்ஸாரம் அலமேலுவின் ஞாபகம் வெகு காலத்திற்கப்புறம் அன்றைக்குத்தான் தைரியமாய் அவர் மனதில் நடமாடிற்று. அவள் கலியாணமாகி உடம்பு சௌகரியமா யிருந்த சொற்பக் காலத்தில்கூட ஒருவருக்கொருவர் அதிக 'ராப்தா'க் கிடையாது. ராகவையர் புதிதாகப்பணம் சம்பாதிக்கத் தலைப்பட்டவரானதால் அதில் இறங்கியிருந்த மும்முறத்தில் இதர விஷயங்களுக்கு அவருக்குப் பொழுதில்லை. அலமேலுவும் மேலே விழுந்து தன் புருஷ

னுடைய அன்பையும் நன்மதிப்பையும் சம்பாதிக்க வேண்டுமென்ற சுபாவமுள்ளவளல்ல. ஏதோ ‘காமாச் சோமா’ வென்று குடித்தனம் நடந்து வந்தது. ஆகிலும் இந்த வைரத் தோடுகளை ராகவையர் மறக்கமுடியாது. தன் கையால் சம்பாதித்து முதல்முதல் வாங்கிய நகை அதுதான். அலமேலு முதலில் “ஆமாம்! எனக்கென்னத்துக்கு வைரமும் கியிரமும்” என்றாலும் அவர் தங்களுக்கேற்பட்டவரும் அந்தஸ்துக்கு அறிகுறியாய் அது அவசியம் என்று தீர்மானித்து வாங்கியபின்னர் அதைப் போட்டுக் கொண்டதுமன்னியில் அப்புறம் ஒரு நாள்கூட அதைக் கழட்டினதில்லை. உயிர்விடும் தருணத்தில் “இந்தத் தோட்டை வேறொருத்தருக்கும் போடாதேயுங்கோ. நாளைக்கி நம்ப பயனுக்கு ஒரு கலியாணங் கார்த்தி பண்ணினு அவனும்படையாளுக்குப் போடலாம். நல்ல அதிர்ஷ்டமான தோடு. எனக்குத்தான் குடுத்து வைக்கல்லெ, நீங்களாவது கொழந்தைக்கிக்கலியாணங் கார்த்தி பண்ணிப் பார்த்து சந்தோஷப் படணும்” என்று தன் விருப்பத்தை வெளிப்படுத்திச் சென்றாள். செத்தவள் சட்டம் புதிதாய்வந்த எஜமானியிடம் செல்லுமா? மோஹம் இந்த வைரத் தோடுகளைச் சுவாதீனமாகச் சுவீகரித்துக் கொண்டாள். பாவம், ராகவையர் அதைத் தடுப்பதற்குத் துணியவில்லை. “அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்” என்றிருந்தார். பிள்ளைக்குக் கலியாணம் செய்து நாட்டுப் பெண் வீட்டுக்கு வந்ததும் தன் ஸம்ஸாரத்தினிடம் மெதுவாய்ச் சிபார்சு செய்து பார்த்தார். “ஒனக்கு இன்னும் நல்லதாய் வாங்கினுப் போறது. இது பழசு, அந்தப் பொண்ணுக்குப் போடுவோமே, அது ஒரு உபயோகமத்த சேப்புத் தோடு தானே போட்டிண்டிருக்கு. அவள் மாமியார் அவளுக்குன்னு குடுத்தது தானே”, என்று பணிவாய்ச் சொன்னார். அதற்கவள் “ஆமாம், இவள் வரப் போறான்னு கண்டா! மாமியாருங்கறேளே, நான் மாமியாரத் தோணல்லியோ? எனக்கப்பறம்னு அவளுக்கு பாத்தியம்? எனக்குத்தான் வேணும் இது. நல்ல அதிர்ஷ்டமானதோடு. நான் நன்னுயிருந்தாத் தானே நீங்க நன்னுயிருக்கலாம்?” என்று கேலி பண்ணுவதுபோல் தன் மனதிலிருந்த பிடிவாதத்தை வெளிக் காட்டவே ராகவையர் ஒன்றும் சொல்லச் சரிப்படவில்லை. மனதுக்குள் மட்டும் அது குருகுரு என்று உறுத்திக் கொண்டிருந்தது. சொத்துச் சுதந்திரம் என்ற கரிசனமே இல்லாத கலியாணசுந்தரம்கூட சில சமயங்களில் “எனக்குத்தான் ஒண்ணும் சொத்தேயில்லேன்னு பண்ணிப்புட்டே. எங்கம்மா தோட்டையாவது எனக்குக் குடுக்கப்படாதா? ஒங்க ஸம்ஸாரம், வயசு அம்பதாச்சு, வெக்கமில்லாமெக் காதிலே போட்டுண்டு மினுக்கறாளே! ஒங்க மருமாள் சிறுசு தானே, அதுக்குப் போட்டுக்கணும்னு ஆசை இருக்காதோ? மாமாவும் மருமாளும் குலாவறத்திலே கொறைச்சலில்லியே!” என்று ஏசினது அவருக்கு ஞாபகம் வரவும் மனதில் கொஞ்சம் வெட்கமும் துக்கமும் கூட எழும்பின.

10

இந்த விபரீதங்களை யோசித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்திருந்த அவருக்குப் பொழுது போனதே தெரியவில்லை. திடீரென்று யாரோ வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுக் கடியாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று. “இத்தனை நாழிக்கி மேலே யார் வரப் போறா?” என்று யோசித்துக் கொண்டே இரும்புப் பெட்டியின் கதவை வெறுமனே சார்த்திவிட்டு வாசற் கதவைத் திறக்கப் போனார். போகும்போதே தயக்கம், கதவு தட்டின தினுசு அவருக்கு எதையோ ஞாபகப்படுத்த, “ஒருவேளை....சே! அவன் எங்கே வரப் போறான்” என்று தன் மனதில் எழுந்த சந்தேகத்தைத் தலைக் கிளப்பாதவண்ணம் அடக்கிக்கொண்டு கதவைத் திறந்தார். கலியாணம் வாசற்படியில் நின்றான். அவருக்குத் தூக்கிவாரிப் போட்

டது. ஒன்றும் பேசாமல் நின்ற அவரைக் கண்டு அவர்மேல் இடித்துக் கொண்டே உள்ளே வந்து, "என்ன, நல்ல தூக்கமோ? ஒரு நாழியா இடிக்கிறேன், பேச்சு மூச்சைக் காணுமே!" என்றான். அவர் பதில் சொல்லாமல் கதவைத் தாழிட்டு அவன்பின் கூடத்திற்கு வந்தார். இரும்புப் பெட்டிப் பூட்டில் சாவி தொங்குவதையும் அதன் அருகாமையில் நாற்காலியும் விளக்கும் இருப்பதையும் கண்டு, "ஓஹோ, பொக்கிஷப் பரிசோதனை ஆரம்பிலே யிருக்கு! அதான் நான் கும்பா கும்பான்னு கத்தினதுகூடக் காதிலே விழல்லே!" என்று பரிஹாஸம் பண்ணிவிட்டு, "எஜமானி அம்மா இல்லாத வேளையிலே ஏதாவது தட்டிப்புடலாம்னு பாக்கறயா?" என்று தகப்பனாரைக் கேட்டுக்கொண்டே விழுந்து விழுந்து சிரித்தான். மனதுக்குள் கொஞ்சம் அச்சமிருந்தாலும் வெளிப்படையாய் அதைக் காட்டிக் கொள்ளாமல் தகப்பனார் என்ற ஹோதாவில் காகிதா செலுத்துபவர்போல, "போரும்! அசட்டுப் பிசட்டுன்னு பேசாதே. இத்தனை நாழி கழிச்சு எங்கே வந்தே, வீட்டிலே ரெண்டுங் கெட்டானைத் தனியா விட்டுட்டு?" என்று அதட்டும் பாவனையாய்க் கேட்டார். அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், "நான் அசடுன்னு இன்னிக்கித்தானா தெரியும் ஒமக்கு? வெகு நாளாகத் தெரியுமே! இல்லா போனா நான் இப்படிச் சந்திலே நிப்பானே, மகாராஜி மோஹாம்பாள் அம்மாள் ஏகச்சக்ராதிபத்யம் பண்ணுவானே!" என்று விரஸமாய்ப் பேச்சை எடுக்கவே ராகவையருக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்தார். அங்கேயிருந்த ஒரு 'ஸ்டூலை' இழுத்துப் போட்டுக்கொண்டு கலியாணமும் அவர் பக்கத்தில் உட்கார்ந்தான். அவர் பதில் சொல்லியிருந்தால் அவனுக்கு ஆத்திரம் அதிகரித்திருக்கலாம். வாய் திறவாமலிருக்கவே சற்று மௌனமாயிருந்து சாந்தமான குரலில், "சின்னம்மா ஊரிலில்லே, அவப்பாக்கு ஒடம்பு சரிப்படலேன்னு தந்திவந்தது, போயிருக்கான்னு கோவாலன் சொன்னான். என்ன சேதின்னு கேட்டுட்டுப் போவோம்னு வந்தேன்" என்று சொல்லி, உடனே முகக்குறி மாற, "இங்கே என்னடான்னா, 'ஆடிட்' நடக்கிறது! அம்மா என்னைத் தான் ஏச்சுப்பிட்டாளா ஒனக்கும் நாமஞ் சாத்தறத்துக்கு ஏற்பாடு பண்ணிண்டிருக்காளோ?" என்று விகடமாய்ப் பேசிக்கொண்டே இரும்புப்பெட்டிக் கதவைத் திறந்தான். அதைச் சட்டென்று தடுக்கக் கைநீட்டினவர் அடுத்த கணத்தில் கையை மடக்கிக்கொண்டு சும்மாயிருந்து விட்டார்.

கலியாணம் இதையொன்றும் கெவனிக்கவில்லை. ஒவ்வொரு அறையாய்த் திறந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தகப்பனாரும் கண்கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். "ஏப்பா! ஒரு ஷாப்புக்கடை வெச்சுடலாம் போலேருக்கே அவ்வளவு ஸாமான்னாயிருக்கு! எத்தனை பேரைக் கொள்ளையடிச்சதோ!" என்று முணுமுணுத்துக்கொண்டு பழுக்காய்ச் சிமிழைத் திறந்தான். அதன் மேல்மூடியில் இருந்த தோடுகளைக் கண்டதும் அவசரமாய் அவைகளைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் தன் தகப்பனாருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு சற்றுநேரம் நின்று பிறகு அவரைத் திரும்பிப் பார்த்தான். இரண்டு கண்களிலும் இரண்டு பொட்டு ஜலம் விளக்கு வெளிச்சத்தில் அவன் கையிலிருந்த தோட்டுக் கல்கள் ஜொலித்தன போல் ஜொலித்தது. ராகவையர் பயந்து போனார். தொண்டை யடைத்தாற்போல் விழுங்கி விழுங்கிக்கொண்டு கலியாணம், "இதெங்கம்மா தோடுதானே?" என்றான். அவர் இன்னது சொல்லுவதென்று தெரியாமல் இல்லே, இல்லே என்று சொல்லும் பழக்கம் உடம்போடு ஒட்டியதாகி விட்டபடியால் 'இல்லே' என்று குறிப்பிடுபவர்போல் தலையை ஆட்டினார். அவன் வெகு கோபமாய், "எதுக்குப் பொய்யெச் சொல்லறே! இந்தப் பச்செக்கல் வெச்ச தோடு

இங்கே வேறெ யாரு போட்டின்டிருக்கா. நான் கொழந்தையா யிருக்கற போது எங்கம்மா காதிலே இது பளிச் சப் பளிச்சின்னும், நான் பச்சையைத் தடவிப் பாத்திருக்கேனே எத்தனையோ தரம்" என்று பழைய நினைவுகள் தன் மனதில் எழுந்ததை ஒருவாறு வெளியிட்டுக் கண்ணைத் துடைத்துக்கொண்டு மறுபடி 'ஷோக்'காய்ப் பேசும் குரலில் "இந்தாத்து எஜமானி இந்தத் தோட்டைக் கயட்டறதேயில்லியே, என்ன விசேஷம் இங்கே வெச்சுட்டுப் போயிட்டா? ஒரு வேளை பொறந்தாத்துக் காரா வைரத்தோடுங் காதுமாப் பாத்துட்டா வயத்தெரிச்சப்படப்போருள்னு போஜனை போலேருக்கு!" என்ருன். ராகவையரும் தன் மனதுக்குள்ளே "ஆமாம், அவள் கழட்டி வைப்பதில் லியே?....ஓகோ, நேத்திக்கி எண்ணை தேச்சுண்டாளே, அதுக்காகக் கயட்டிருப்பிலேருக்கு. சேப்புத் தோட்டைப் போட்டுண்டு போயிருப்பள்" என்று தனக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டார். கலியாணம் மீண்டும், "யார் வயத்தெரிச்சப்படருளோ படல்லியோ, எனக்கு வயத்தெரிச்சல் வயத்தெரிச்சல் தான்!" என்று பதட்டமாய்ச் சொல்லித் தன் கையால் அவர் முகத்தில் இடித்து விடுவான்போலக் கிட்டே சென்று "எனக்கொரு பைசா இல்லாமல் ஆம் படையான் பொண்டாட்டி ரெண்டுபேருமாச் சேந்து மோசம் பண்ணிப் புட்டேளே!—வன்ன, புள்ளையுங் குட்டியும் தாமணியடிக்கிறது! எந்த வழுங்கிப் பய நாளேக்கிக் கொள்ளே யடிச்சுண்டு போகப் போருனே நீ குத்துசுருங் கொலேயுசுருமாக் கடக்கறத்தேயே—" என்று மேலும் மேலும் உத்தண்டமாய்ப் பேசத் தலைப்படவே ராகவையர் தலையை ஆட்டிக் கொண்டு "கன்னுப் பின்னுங்காதே, எல்லாம் ஒனக்குத்தான்" என்று ஏதோ ஸால் ஜாப்புச் சொல்ல ஆரம்பித்தார்.

அவன் முன்னைவிட இன்னும் அதிகக் கோபமாய் "போரும் போரும், மோசம் பண்ணியாச்சு, பொய்ச் சத்தியம் வேறையா?—அதிருக்கட்டும், நீ எனக்கு மகுடாபிஷேகம் பண்ணறது அப்புறம் ஆகட்டும். இந்தத் தோடு எங்கம்மா தோடு என்னம்படையாளுக்கு வேணும்னு குடுத்தாள்னு நீயே சொல்லி யிருக்கியே, இதையானும் குடுன்னு எத்தனை தரம் கேட்டேன். ஆகட்டும் போகட்டும்னு டிமிக்கி குடுத்திண்டிருக்கியே. இது ஒனக்கு அழகாத் தோணறதா? ஆருக்காகக் கேக்கறேன், ஒம்மருமாளுக்குத்தானே. மருமாளுக்காக ரொம்பக் கறையுருப்பிலே நாடக மாடுறியே!" என்று கெஞ்சுவதும் நையாண்டி பண்ணுவதுமாய் ராகவையரை வாதித்தான். அவருக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. "வாயிலே கொழக்கட்டையா அடச்சிருக்கு? வாயெத்தறந்து சரீன்னு சொன்னு என்ன, ஒங்கப்பன் தேடிவெச்ச ஆஸ்தி பாழைபோயிடுமோ? பூர்வீகமாய் இருந்ததைக் கூடத்தான் வித்துச்சுட்டு வாயிலே போட்டுண்டுட்டியே! அதாவது இருந்தால் நாம்பாட்டுக்கு ஊரோடே போய் ஆப்பிட்டுதோ ஆப்பிடல்லியோ எப்படியாவது வயத்தெ வளப்பேனேனே? அதுவும் போச்சு. போராதத்துக்கு, கலியாணமில்லேனு அழுதேனே ஓங்கிட்ட? இந்த எழவு வேறெ ஒண்ணெப்பண்ணி வெச்சுட்டே! நீயும் பட்டமகிஷியுமா நாளேக்கி மூணு வேளை காப்பி சாப்பிடறது, கோச்சு ஸவாரி பண்ணறது, நான் சாதத்துக்கு லாக்குப் போடறது, இது என்ன நியாயமோ?" என்ருன். ராகவையர் ஏதாவது சொல்லவேணுமே என்று "பண்ணி வெச்சிருக்கிற வேலையை சரியாச் செஞ்சான்னு காயமாகும், அப்பறம் ஏதாவது பெரிய குமாஸ்தா வேலைக்கிச் சிபார்சு பண்ணலாம். ஊர்லே யிருக்கிற குல்லேரிகளோடே சேந்துண்டு திரியறத்துக்குத்தானே ஒனக்குப் போதிருக்கு!" என்று ஆரம்பித்தார். அவன் ஆவேசம் வந்தவன் போல், "போரும் போரும், ஒன் சிபார்சும் வாண்டாம் ஒன்ஹிதோபதேசமும் வாண்டாம். என் தலையிலே இழுதினவன் முட்டாளில்லே—அது கடக்கட்டும், இந்தத் தோடு எனக்குத்

தான் வேணும். இத்தனை நாளா ஆட்டம் போட்டே, இப்பொ மாட்டிக்கிண்டியே, என்ன பண்ணப்போறே!" என்று தொக்கரித்தான். ராகவையருக்குப் பெருத்த பயம் பிடித்துவிட்டது. "ஐயையோ! அதுவாண்டாம். இங்கே வெச்சுடு, நான் அந்தக் குட்டிக்கி வேறெ வாங்கிப் போடறேன்" என்று அவஸரமாய் அவன் கையிலிருந்து தோடுகளைப் பிடுங்குவார் போல் எழுந்திருந்தார். "அதெல்லாம் சரிப்படாது. இத்தனை நாளா எச்சாப்பிலே ஏய்க்கலாம்னு எண்ணிண்டிருக்கியா? முடியாது முடியாது. அது எனக்குத்தான்னு நீயே எத்தனையோ தரம் சொல்லி யிருக்கயோனே? இப்பொ நான் எடுத்துண்டு போறேன்," என்று சொல்லிவிட்டு, அவனைத் தடுப்பதுபோல் கையை நீட்டின அவரைப் புறக்கையால் விலக்கிக்கொண்டு தோடுகளைக் கையில் மூடினபடியே விடுவிடென்று வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியே போய்விட்டான்.

ராகவையரும் அவனை உள்ளபடி மறிக்கும் பிரயத்தனம் செய்யவில்லை. அவன் ஒரு உந்தலுக்குக் காணுவாரா அவர்? தவிர, அவன் செய்த காரியத்தால் ஏற்பட்ட கவலைக்கும் பயத்திற்கும் இடையே அவர் மனதில் கொஞ்சம் சந்தோஷமும் திருப்தியும் கூடத் தலைக் காட்டின. "இந்த மொரட்டுப் பயலே என்ன பண்ணித் தொலைக்கிறது! அவள் நாளைக்கி வந்தால் அமக்களப்படுத்திப்புடுவளே!' என்று ஏங்கினார். உடனே, "போறது, செறுசு, அந்தக் குட்டிதான் பத்து நாள் போட்டிண்டிருக்கட்டுமே. அப்பறம் அவனுக்குத் தெரியாமெ அவளைக் கேட்டு வாய்ண்டு வந்துட்டாப் போறது. அவள் சமத்து, இங்கிதம் தெரிஞ்சவள். 'அம்மா, ஒனக்கு வேறே வாங்கித்தறேன்'னுக் குடுத்துடுவள். நல்ல வேளையா மோஹம் வரத்துக்குப் பத்து நாள் ஆகும்போலேருக்கே", என்று தன்னையே சமாதானம் பண்ணிக்கொண்டார். அடுத்த நிமிஷம் "இந்த அஸத்து நகையை எங்கேயாவது கொண்டு தொலைச்சுப்பிட்டா என்ன பண்ணறது!" என்ற சந்தேகம் உதிக்கவே அடிவயிற்றைக் கலக்கிற்று. "சே! அப்படிப் பண்ணுவனா! மொரடனே யொழிய தன்னுது பொறத்தயாருதுன்னு தெரியாமலா கடக்கான்? இன்னிக்கித் தன் நெலமையைப் பத்தியும் தன் தாயார் சொத்துக்குத்தான் கர்த்தாளின்னும் எவ்வளவு கருத்தாப் பேசினான்! சுவாமி புண்ணியத்திலே நல்ல புத்திவரப்படாதா" என்று தியானித்து, "வாஸ்தவத்திலே நமக்குத்தான் வேறே யாரு? அது கண்ணெக்கசக்கினால் நமக்குத்தான் கஷ்டமாயிருக்கு. ஏதாவது பண்ணினாத் தேவலை. அவள் கிட்ட சொல்லறத்துக்குன்னா பயமா யிருக்கு. இந்த அசட்டுப்புள்ளே அவளைப் பகச்சுண்டுட்டுதே!" என்றெல்லாம் யோசித்து முடிவு புரியாமல் கதவைத் தாழிட்டு விளக்கை யணைத்துப்படுத்துக் கொண்டார். ராத்திரி வெகு நாழிகை வரையில் தூக்கம் வரவில்லை.

11

கலியாணம் நேரே வீட்டுக்குப்போனான். நாலு பேரோடு ஒண்டிக்குடியிருந்த அந்த வீட்டில் இரவில் அவன் ஸஞ்சாரங்கள் முடித்துவரும் வேளையில் கதவு திறப்பதைப் பெரிய அலுப்பாகக் கருதின முதல் கட்டுக் குடித்தனத்திற்கும் அவனுக்கும் ஸதா யுத்தம். அன்றைக்குத் தற்செயலாய்க் கதவு திறந்தே யிருந்தது. மூன்றும் கட்டில் மினுமினுவென்று ஒரு காலணா விளக்கு எறிந்துகொண்டிருந்தது. அவன் மனைவி வெகு நேரம் காத்திருந்து பசியும் சிரமமும் அதிகரித்ததால் தரையில் படுத்தபடி கண் அயர்ந்து விட்டாள். கலியாணம் இதைக் கண்டு வெகு கோபமாய் அவளைக் காலால் எற்றத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். "வாசக் கதவையுங் கொல்லைக்கதவையுந் தறந்து போட்டுட்டு வாயெப் பொளந்துண்டு இப்படித்தான் தூங்கறதோ?" என்று ஆக்கினை பண்ணினான். "ஆமாம், இங்கே இருக்கிற ஆஸ்தியைக் கொள்ளையடிச்சுண்டுபோயிடப் போறானே!" என்று வெறுப்பாய்

பதில் சொல்லி விட்டு ஒரு இலைக்கிழி சலை விளக்குக்கருகில் எடுத்துப் போட்டுத் தண்ணீரும் வைத்தாள். காலலம்பி விட்டு இலைபண்டையில் உட்கார்ந்தான். மத்தியானச் சோறும் மோரும் காய்ந்த நார்த்தங்காயும் எடுத்து வைத்தாள். "ஒரு நாளைப்போலே இந்த எழவுதானா? ஒரு மரத்தங்கள்ளிக்காக் கொழும்பாவ்து வைக்கப்படாதா?" என்று புகார் பண்ணிக்கொண்டே கசந்து விழுங்கி அந்தச் சோற்றை உள்ளே யிறக்கினன். "ரெண்டு வேளை சமயல் பண்ணறத்துக்குச் சட்டிலே சாமானும் பரன்லே வெறகு மிருந்தான்னா ஆகும். எங்கையை வெச்சு அடுப்பெறிக்கிறதா?" என்றாத் திறப்பட்டாள் அவன் பெண்டாட்டி. இது ஸகஜமாய் நடக்கும் சம்பாஷணை யானதால் அவன் அதற்கொன்றும் பதில் சொல்லாமல் கையலம்பிப் பாக்குவெட்டியும் பாக்கும் எடுத்துச் சீவிக்கொண்டு உட்கார்ந்தான். அந்த இலையில் அவன் ஸம்ஸாரமும் சோற்றை வைத்துக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

"என்னமோ ரொம்ப ரொம்பக் கொறைப்பட்டுக்கிறியே, என்னைப் போலே ஆம்படையான் வாய்ச்சதுக்கு நீ எவ்வளவு தபஸ் பண்ணியிருக்கணும் தெரியுமா?" என்று சீவலை வாயிலே போட்டுக்கொண்டே வெற்றிலை போடப் போகும் மோக்களாவில் உல்லாஸமாய்ச் சொன்னன். அவள் சிரிக்கப்படாதென்று தீர்மானங் கொண்டாலும் வந்த சிரிப்பை முழுதும் அடக்க முடியாமல் ஒரு கோணச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "ஆரில்லேங்கறா? என் ஒசத்தியெக் கண்டு 'கலெக்டர்' ஆம்படையா மொதக் கொண்டு வயத்திலே பொரண்டையெ வெச்சுன்னா கட்டிக்கிறாளாம், அஸியை தாங்கமுடியாமெ!" என்று ஏளனம் பண்ணிக் கொண்டே எழுந்து கையலம்பி விட்டு அவளும் விளக்கின் சமீபத்தில் வந்துட்கார்ந்தாள். "அதுக்கென்ன ஆக்ஷேபணை? 'கலெக்டர்' ஆம்படையாள் இப்பேர்ப்பட்ட தோடு போட்டிண்டிருக்காளோ, பாரேன்," என்று சொல்லிக்கொண்டே இடுப்பிலிருந்து வைரத்தோடுகளை எடுத்து அவளிடம் சொப்படிவித்தைக்காரன்போல் திடீரென்று காட்டினன். விளக்கு வெளிச்சத்தில் அவை பச்சையும் சிவப்புமாய்ப் பொலபொல வென்று 'டால்' உருத்தன. அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "ஐயோ, இதென்ன மோசம்! ஒங்களுக்கேது இது?" என்று வாரிப்புடைத்த குரலில் கேட்டாள். "எல்லாம் ஒன் தயவுக்காகத்தான் ஸம்பாதிச்சேன்" என்று அவன் பதில் சொல்ல அவளுக்கு இன்னும் கவலை அதிகரித்தது. "வௌயாடாதேயுங்கோ. இது ஏது? என்னத்தையாவது பண்ணி என் தலையிலே இடி விழும்படியாப் பண்ணிப்பிடாதேயுங்கோ!" என்று படபடத்தாள். "சே! என்ன பேச்சுப் பேசறே! எங்கம்மா தோட்டை நான் வாயிண்டுவந்தால் ஒன் தலையிலே இடி விழறதென்ன?" என்று சொல்லி அவளை ஆசுவாஸப்படுத்தித் தன் பெருமையை வெளிப்படுத்த நிகழ்ந்ததைச் சொன்னன். அவள் அவன் வார்த்தையை முழுதும் நம்பினதாகத் தெரியவில்லை. இந்த மனப்பான்மையை மாத்றவேணுமென் றெண்ணினவனுய், "புதன்கிழமை இன்னிக்கி, பொன்னுப் பட்டாலும் புதனுப் படாது. அந்த திராபைச் சேப்புத் தோட்டைக் கயட்டிப்புட்டு இதைப் போட்டுக்கோ," என்றான். அவளுக்கு அவன் எதிர்பார்த்ததற்கு நேர்விரோதமாய்ச் சந்தேகம் தான் அதிகரித்தது. "எனக்கொண்ணும் வாண்டாம். என் சந்தத்துக்கு வைரத்தோடு ஒண்ணுதான் கொறச்சல்! நாளைக்கி ஒங்க சின்னம்மா வந்தால் ஊர் கிடுகிடுத்துப் போகும் அவள் படுத்தற பாட்டிலே. அப்பறம் நான் இந்த ஊரிலேயே இருக்கமுடியாது. போரும் எனக்கு, நாலு நாளைக்கி வைரத் தோட்டைப் போட்டிண்டு மினிக்கிப்புட்டாச் சரியாப் போச்சா? ஊரிலே யிருக்கறவா பழைய சேப்புத் தோட்டைக் கண்டதும் கைகொட்டிச் சிரிக்கமாட்டாளா?" என்று கண்டிப்பாய் மறுத்துவிட்டாள். தான் அன்புமிக்கக் கொணர்ந்து கொடுத்

For
Quality
&
Reliability

Jewellery

Sastry & Sastry

JEWELLERS

26 & 27, East Mada Street

MYLAPORE P. O., MADRAS

எங்களிடம் கிடைக்கும்

எல்லாவித மோட்டார் வண்டிகளுக்கும் டிரக்குகளுக்கும்
தேவையான
மோட்டார் வண்டியின் பாகங்கள்
மோட்டார் வண்டியின் உபகரணங்கள்
முதலியன

நாங்கள் விற்கிறோம்

எல்லாச் சாமான்களையும் நிர்ணய விலைக்கே

நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்

கார்கள், டிரக்குகள் இவற்றின் எல்லாவிதமான
ரிப்பேர்களையும்

பூர்ண திருப்திக்கு உத்தரவாதம்
ஒருதரம் பரிக்ஷித்தால் நிச்சயம் திருப்தி ஏற்படும்

Telegrams
"Aut oworks"

Telephone
3595

RANE (MADRAS) LIMITED

Distributors: G. M. C. TRUCKS HILLMAN & HUMBER CARS
3/33, MOUNT ROAD — MADRAS

Branches: TRICHUR & BANGALORE CITY

ததை இவ்விதம் வேண்டாமென்று அவள் நிராகரித்தாள் என்ற ஆத்திரத்தில், “வேண்டாம்னுப் போயேன், மூதேவி, மோசமாப் போச்சு! நல்ல நகை போட்டுக்கறத்துக்குக் குடுத்து வைக்க வேண்டாமா?” என்று திட்டிக்கொண்டே எழுந்து திண்ணைக்குப் படுக்கப் போய்விட்டான்.

படுத்தும் தூக்கம் வரவில்லை. அன்றைக்கு நடந்த ஸம்பவங்களே மனதில் நடமாடிக்கொண்டிருந்தன. நிதானமாய் யோசித்தபோது அவன் மனைவி சொன்னதிலும் ஒரு நியாயமிருப்பதாகப் பட்டது. இடுப்பில் கட்டிக்கொள்வதற்குக் கூட ஒரு நல்ல துணியில்லாதவள் விலையுயர்ந்த வைரத் தோட்டைக் காதில் அணிந்தால் அது பரிஹாஸத்திற் கிடமாகக் கூடியதுதான். தவிர, மோஹாம்பாள் திரும்பிவந்தால் அமர்க்களப் படுத்திவிடுவாள் என்றும் தன் தகப்பனாருக்கு அவளை யடக்கி ஆளத் திறமை இல்லாததால் அவள் தோடுகளை நிச்சயமாய்ப் பிடுங்கிக்கொண்டே போய்விடுவாளென்றும் அவனுக்குப் பட்டது. பின்னோடு ஒரு யோசனையும் தோன்றிற்று. “தோடு நம்மிண்டே இருந்தாத்தானே ஆட்டுப் பூட்டுன்னு அதிகாரம் பண்ணி இந்த அசடை (தன் ஸம்ஸாரத்தை) பயமுறுத்தி அவள் அடிச்சுண்டு போயிடுவள். தோட்டை வித்துட்டா என்ன பண்ணப் போறா? கொறஞ்சபக்ஷம் ஆயிர ரூபாய்க்கிப் போகும். இதைக்கொண்டு நம்மூரோடே போய் ஒரு சின்ன மளிகைக்கடை வெச்சுண்டு ராமா கிருஷ்ணானு காலத்தைத் தள்ளலாம். இந்த மகா பாபிகள் மூஞ்சிலேயே முழிக்கவேண்டியதில்லை” என்றெண்ணினதுதான் தாமதம். பாயைப் போட்டுவிட்டு நாலு வீட்டிற் கப்பாலுள்ள ஒரு வீட்டில் குடியிருந்த தன் ஆப்த நண்பன் ஆத்மநாதனை அந்த நிமிஷமே கண்டு ஏற்பாடு செய்வதென்று அங்கே சென்றான். திண்ணையில் படுத்திருந்த அவனை எழுப்பிச் சமாச்சாரத்தைச் சொன்னான். அவன் ரங்கதாஸ் செட்டி கடையில் குமாஸ்தா. கவியாணம் குணம் தெரிந்தவனாதலால் “இதில் ஏதாவது செடுக்கிருக்குமோ?” என்று எண்ணினபோதிலும் “நமக்கென்ன ஆகவேண்டியது, இழுத்துப் பரிச்சுண்டு நிக்கறான்கள். இப்பொ ஸத்தியா அம்பது ரூபாய்க்கிக் கொறச்சவில்லே நமக்குத் தரகு” என்று தன் நலத்தைக் கெவனித்து, “சரி, சாமானைக் குடுத்துட்டுப் போ. நாளைக்கி செட்டியார் கிட்டே காட்டி என்ன சொல்றார்னு வந்து சொல்றேன்” என்று இனத்தை வாங்கி வைத்துக்கொண்டான்.

12

மறுநாள் செட்டியாரிடம் தோடுகளைக் காட்டி விலைக்கு வந்திருப்பதாய்ச் சொல்லவே அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் ரொம்ப நாழிவரையில் அவைகளைப் பரீக்ஷிப்பவர்போல் உற்று நோக்கிவிட்டு, “யார் உருப்படி?” என்று கேட்டார் நடந்த விஷயத்தை குமாஸ்தா தெரிவிக்க, “சரிதான், இருக்கட்டும், மத்தியானமும் பார்ப்போம். நீர் கோபாலபுரம் போய்ப் பண்ணைக் கணக்கை நேர்பண்ணிப்புட்டாத் தேவலேன்னு கேட்டுக்கிட்டேன்னு சொல்லி ஏதாவது ஆப்பட்டவரையில் வசூல் பண்ணிக்கிட்டு வாரும். ஆச்சுப் போச்சுன்னு ஏதாவது சால்ஜாப்பு சொன்னாப் பேசாமெ வந்துராதியும். பழி கடந்து நூறு இருநூறுவது வாங்கிக்கிட்டு வாரும். பொழுது போக வந்தாலும் குத்தமில்லை,” என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு, ஒரு ஆசாமியை மேலைத்தெரு சுப்பிரமணியய்யர் வீட்டுக்கனுப்பி ‘ஏதோ முக்கியமான சமாச்சாரம், செட்டியார் கையோடு அழைத்துவரச் சொன்னார்’ என்று சொல்லி அவரை அவசரமாய்க் கூட்டிவரச் சொன்னார். அவர் வந்ததும், “ஐயா, வாங்க. கடையெ விட்டுட்டு வரப்படல்லெ. அதான் கூப்பிட்டுவரச் சொன்னேன். மன்னிக்கணும்” என்று உபசாரம் சொல்லிக் கைப்பெட்டியைத் திறந்து தோடுகளை எடுத்துக் காட்டினார். சுப்பிரமணியய்யர் அவைகளைப் பார்த்ததும், “வக்கீலாத்து அம்மாகிட்டே மதிப்புப் போடறத்துக்குன்னு குடுத்திருந்

தேன். இது எப்படி இங்கே வந்தது ?'' என்று ஆச்சரியப்பட்டார்.

வெகுநாளாய்த் தன் வலையில் மோஹத்தைச் சிக்கவைக்க வேணுமென்ற தீர்மானம் கொண்ட செட்டியார் அவள் அந்தக்ஷணமே காராகிருகம் அடைந்து விட்டதாக எண்ணி உற்சாகமாய் "அந்த விபரீதத்தை என்ன சொல்லச் சொல்ரீங்க!'' என்ற பூர்வ பீடிகையுடன் தன் கேள்விக்கு வந்ததை விஸ்தாரமாய்ச் சொன்னர். அவ்வளவுதான், வந்து விட்டது சுப்பிரமணியய்யருக்கு ரௌத்திராகாரமாய்க் கோபம். சாதாரணமாகவே முன் கோபி. போதாததற்கு, இந்தத் தோடுகள் பணக்கார இடத்தில் கொடுத்த தன் பெண்ணுக்கு அவர் நாலு வருஷத்திற்கு முன் வாங்கிப் போட்டது. மாப்பிள்ளை வெறும் காலியாய்ப் போய்க் குடித்தனம் இத்திளைத்துப் போகவே சுமார் இரண்டாயிர ரூபாய் பெறக்கூடிய இத்தத் தோட்டையாவது விற்றுப் பெண்ணுக்கு மூலதனமாக வைக்கலாம் என்று எண்ணி மாப்பிள்ளைக்குத் தெரியாமல் அவளிடமிருந்து அதை வாங்கி வந்திருந்தார். செட்டியாரிடம் காட்டிய போது அவர் அவ்வளவுக்கு மதிக்கவில்லை. செட்டியார் வியாபாரியானபடியால் அவர் பேச்சை முழுவதும் நம்ப இஷ்டமில்லாமல் மோஹாம்பாளிடம் அனுப்பினர். அவள் எவ்வளவோபேருக்குப் பார்த்துச் சொல்லுவது வழக்கம். மதிப்புப் பார்க்க வந்தால் எட்டு நாள் பத்து நாள் என்று தன் காதில் போட்டுக்கொண்டு — எல்லா வெளிச்சத்திலும் பார்த்தால் தான் பிடிபடும் என்பாள்—ஆற அமர விலை கட்டிச் சொன்னளானல் அதே விலைக்குத் தான் வியாபாரம் முடியும். இவ் விதமே இந்தத் தோடுகளையும் பதினைந்து நாள் காதில் அணிந்துதான் இருந்தாள் திடீரென்று தந்தி வந்து ஊருக்குப் போக நேரிடவே, அன்றைக் காலையில் எண்ணை தேய்த்துக்கொள்வதற்காக அதைக் கழட்டி வைத்திருந்தபடியால் 'ஊரார் சாமானை' வெளியே போகும் இடத்தில் போட்டுக்கொள்ள வேண்டாமென்று எண்ணி அதை மறுபடி போட்டுக் கொள்ளாமல் தன் தோட்டையே எடுத்துப் போட்டுக்கொண்டு இதைப் பத்திரமாய் வீட்டு இரும்புப் பெட்டியில் வைத்துச் சென்றுள். விபரீதமாக, மதிப்புப் பார்க்க வந்த தோடுகளிலும் அவளுடைய தோடுகளிற் போலவே நடுவில் ஒரு பச்சைக்கல் வைத்திருந்தபடியால் ராகவையரும் கலியாணமும் பெட்டியிலிருந்த தோடுகள் வீட்டுத் தோடுகள் என்றே நினைக்க இடம் ஏற்பட்டது. இந்தக் கோளாறுகளெல்லாம் சுப்பிரமணியய்யருக்குத் தெரியுமா ? மதிப்புப் போடக் கொடுத்த தோட்டை விற்பனைக்குக் கொடுத்தாளென்று போலீஸாரிடம் பிரியாது கொடுத்துவிட்டார். அவர்கள் செட்டியார் வாக்குமூலத்தின் பேரில் மறு நாள் கலியாணசுந்தரத்தை 'அர்ரெஸ்ட்' செய்துவிட்டார்கள்.

13

அன்றை தினம் ஏதோ அலுவலாக ராகவையர் வெகு தூரத்திற்கப்பாலுள்ள ஒரு குக்கிராமத்திற்குப் போயிருந்தார். ஆகையால் அவருக்குத் தகவல் தெரிவிக்க முடியவில்லை. விஷயம் பிரமாதமாய் ஆகிவிடும்போல் இருந்ததால் வெங்கட்டராமன் மோஹத்திற்கொரு தந்திகொடுத்தான். அவள் அலறிப்புடைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். செட்டி கடை குமாஸ்தாவை விசாரித்ததில் விஷயம் இன்னதென்று ஒருவாறு விளங்கிற்று. "இந்த மகா பாவிக்கி அவ்வளவு கெட்ட எண்ணமா! நான் இல்லாமே இருக்கறத்தே வீட்டிலிருக்கற சாமானை எடுத்து அந்தக் காலாடிக்குக் குடுத்துடறதுன்னு அப்பறம் எது தான் நடக்காது? செட்டி இழுத்து அம்பலத்திலே நிறுத்திப்புட்டானே! புள்ளெ ஜெயிலுக்குப் போறத்தோடே கெழவனும் போகவேண்டியதுதான் நானும் போகவேண்டியதுதான்! இருக்கட்டும், இதுக்குத் தகுந்த வழி பண்ணறேன்'' என்று தனக்குள் சபதம் பண்ணிக் கொண்டு, 'போலீஸ் ஸ்டேஷ'னுக்குப்

போய்த் தான் ஊரில் இல்லாதபோது பெட்டியில் வைத்திருந்த நகைகள் களவு போயின என்று 'கம்ப்ளெயின்ட்' பதிவு பண்ணிவிட்டாள்.

ராகவையர் இரண்டு நாள் கழித்து ஊருக்கு வந்து நடந்ததைத் தெரிந்து கொண்டு அகமுடையாள் பேரில் அவள் என்றைக்கும் காணுத கோபத்தைக் காட்டிச் சீறி விழுந்து, "இருக்கற ஒரு புள்ளை ஜெயிலுக்குப்போய் எனக்கென்ன வாழ்வு வேண்டியிருக்கு. நான் சந்நியாசம் வாங்கிண்டு காசியெப் பாக்கப் போறேன். வீடு வாசல் நெலம் பலம் எல்லாத்தையும் கட்டிண்டு அழு" என்று விரக்தி கொண்டார். அவள் இங்கிதம் தெரிந்தவளாதலால் அந்தச் சமயம் எதிர்த்துப் பேசவில்லை. அவள் எதிர்பார்த்தபடி அவர் வைராக்கியம் நீடித்து நிற்கவில்லை. 'போலீஸ்' விசாரணையோ மும்முறமாய் நடந்தது. ஊரில் வெகு காலமாய் இவர்கள் நன்ருய் இருப்பதைக் கண்டு அசூயை கொண்டவர்கள் இது தான் சமயம் இவர்கள் தலையில் கல்லுப் போட என்று ஏகோபித்துத் தீர்மானம் செய்தவர்கள்போல் தங்களால் முடிந்த இடையூறுகளைச் செய்து வந்தார்கள். மோஹத்தினிடம் அடகு வைத்தவர்கள் அனேகர் பித்தலாட்ட வழக்குகள் தொடங்கினுர்கள். ராகவையரைத் தினம் ஒருதரமாவது கண்டு கும்பிடு போடா விட்டால் வாழ்நாளே வியர்த்தம் என்று கருதின அனேகர் இப்பொழுது கண்ணில் படுவதேயில்லை. ராகவையர் குடும்பத்திற்கு ஏராளக் கடன் இருப்பதாகவும் நோண்ட நோண்ட இன்னும் அனேக ஊழல்கள் வெளிப்படும் என்றும் யாதொரு முகாந்தரமுமின்றித் தமக்குள்ளே சித்தாந்தம் செய்துகொண்டு கை கொட்ட வெகு பேர்கள் தயாரானுர்கள். இந்த நிலைமையில் தன் 'கண்ணியத்தை'க் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதே தன் முதற்கடமை என்று ராகவையர் நினைப்பது ஸகஜம் தானே. மேலும் அந்த எண்ணம் அவர் மனதில் வேரூன்றும் வண்ணம் வெங்கட்டராமனும் மோஹாம்பாளும் இடைவிடாமல் வற்புறுத்தி வந்தார்கள். 'ரிமாண்'டில் இருக்கும் தன் பிள்ளையைப் போய்ப் பார்க்கவேணுமென்று அவருக்கு ஆசைதான். ஆனல் வெங்கட்டராமன் வக்கீலுக்கு 'இன்ஸ்ட்ரக்ஷன்' வாங்குவதற்காக அந்தவூர் பிரபல 'மாஜிஸ்ட்ரேட் கோர்ட்' வக்கீல் பாலசுந்தர முதலியாரை அழைத்துக்கொண்டு கலியாணசுந்தரத்தைப் போய்ப் பார்த்தபோது,தன்னை ஏதாவது சூது பண்ணி ஜெயிலில் அடைத்துவிட வேண்டுமென்று சதியாலோசனை பண்ணித் தன் தகப்பனுர் சித்தம்மை தூண்டுதலின்பேரில் சமயத்தை எதிர்பார்த்திருந்திருக்கவேண்டும் என்றும்,தான் தற்செயலாய் அவரைத் தனித்துக் கண்டபோது இந்தத் தோடுகள் அங்கே இருப்பதைப் பார்த்து வாஸ்தவத்தில் அவை தன் தாயுடையவை என்று எண்ணி அவள் இஷ்டப்படிக்கும் அவர் வெகுகாலமாய்ச் சொல்லிவந்தப் பிரகாரமும் அவை தனக்கே கிடைக்கவேண்டும் என்ற பாத்தியத்தை ஒட்டி அவைகள் தனக்கு வேண்டுமென்று கேட்க அவரும் மனப்பூர்வமாகச் சம்மதித்துக் கொடுத்ததாக எண்ணி அவைகளைப் பெற்றுக்கொண்டு போனதாயும், பிறகு நடந்த சம்பவங்களிலிருந்து அவருக்கு இந்தத் தோடுகள் தங்கள் வீட்டுத்தோடுகள் அல்லவென்று நன்ருய்த் தெரிந்திருந்தும் தன்னைச் 'சந்தி'யில் நிறுத்துவதென்ற கெட்டெண்ணத்துடனேயே அவர் அவைகளைத் தன்னிடம் கொடுத்து மோசம் பண்ணினுர் என்றும் வாயில் வந்தபடி அவன் முறட்டுச் சுபாவத்திற்கேற்பக் கலியாணசுந்தரம் 'ஸ்டேட்மெண்ட்' கொடுத்திருப்பதாக வெங்கட்டராமன் சொல்லத் தெரியவந்தது. நடவடிக்கை நடத்த வக்கீலுக்குப் 'பீஸ்' தன் தகப்பனுர் கொடுக்கவேண்டிய நிலைமையிலிருக்க, அவன் வக்கீலை மேற்கண்டபடி 'கேஸை'க் கொண்டுபோக வேண்டுமென்று காகிதாப் பண்ணவே அவர் சிரித்துக்கொண்டு, "நீ ஒண்ணும் கவலைப்படாதே, அப்பா. நான் பாத்துக்கிறேன் எல்லாம்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து வெங்கட்டராமனிடம்

"ஏது, அசாத்தமா யிருக்கே இந்தப் புள்ளே! தான் போறதுமன்னியில் ஐய ரையுமல்ல கட்டிபிழுக்குது. இவன் பண்ணியிருக்கிற கோளாறிலே நாம் என்ன காது மூக்கு வெச்சாலும் இவன் தப்ப முடியாது. தலைக்கு வந்தது தலைப் பாவோடே போகட்டும்னு பாக்க வேண் டியதுதான்" என்று சொன்னதாக வெங்கட்டராமன் கதையை முடித்தான்.

ராகவையருக்கு மனதுக்குள் ஆத் திரம் ஒருபுறமும் வெட்கம் ஒரு புறமு மாய்க் கரைபுறண்டு கிளம்பிய வேகத்தில் இருந்த சொற்பத் துக்கத்தையும் அவை அடித்துக்கொண்டே போயின. "நம்ம கையே நம்ம கண்ணைக் குத்தினுப்பிலே ஆச்சே! நான் ஊரார் நகைனு தெரிஞ் சுண்டிருந்தால் அந்தப்படவா எடுத்துண் போடறத்துக்கு விட்டிருப்பேனு? போ ராத்துக்கு, நானுக இவனைக் கூப்பிட்டுக் குடுத்தேங்கறுனே, என்ன ஆழ்மை! நான், 'வாண்டாம்டா, வேறெ வாங்கித் தரேன்'னு சொல்றத்தே என்னெப் புடிச்சன்னண்டே தள்ளிப்புட்டு ஓடினுன், நான் கூச்சல் கிச்சல் போட்டிருந்தாக் கொலை பண்ணினுலும் பண்ணியிருப் பான். இப்பேர்ப்பட்ட நெஞ்சழுத்தக் காரன் என்னதான் பண்ணமாட்டான்" எனத் தன் மனதுக்குள் எண்ணிக் குமுறக் குமுறத் தன்பேரில் யாதொரு குத்தமும் இல்லையென்றும் கலியாணத் தின் பூர்வ ஜன்மத்தின் வினையும் அவன் விபரீத எண்ணங்களுமே அவன் இந்த ஆபத்தில் மாட்டிக் கொண்டதற்குக் காரணமென்றும், அவனைத் தப்புவித்து விடத் தன்னுலான முயற்சியைப் பண்ண வேண்டியது தன் கடமையானுலும் தன் னையும் தன் கௌரவத்தையும் அந்தக் கௌரவத்திற்கு ஆணி வேரான தன் அகமுடையாளையும் காப்பாத்திக் கொள் ளவேண்டியதுதான் முக்கிய தர்மமென் றும் துணிந்தார்.

இவ்விதம் முடிவுகட்டியபடியால் கலி யாணம் 'ரிமாண்டி'ல் இருக்கையில் அவ ரைப் பார்க்க வேணுமென்று அக்கறை யாய்ச் சொல்லியனுப்பியும் ஏதோ சாக் குப் போக்குச் சொல்லிப் போகாமல் இருந்து விட்டார். வக்கீல் முதலியா ரிடம் கலந்து பேசிக் 'கேஸை' எவ்வி தம் கொண்டுபோவது என்ற விஷயத் தைத் தீர்க்கமாய் ஆராய்ந்தார். இதி லும் கடைசியில் மோஹத்தின் யோசனை தான் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவள் ஊரிலில்லாதபோது கலியாணம் தற்செய லாய்த் தகப்பனுரைக் காண வந்ததாயும் அவர் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு கணக்கு வழக்குப் பார்த்துக் கொண்டிருந்தபடியால் கலியாணம் மேல் தட்டில் திறந்த சிமிழில் வைத்திருந்த 'கம்மல்'களைப் பார்க்க நேர்ந்ததென்றும் அவன் அவை தன் தாயார் தோடுகள் தானே என்று கேட்டதற்குக் கணக்கில் ஏதோ விட்டுப்போனதை ஞாபகத்திற் குக் கொண்டு வருவதில் ஆழ்ந்திருந்த அவர் வாயைத் திறவாமல் இல்லையென்று குறிக்கத் தலையை ஆட்டினதாகவும், அப்புறம் சிற்றைக்கெல்லாம் அவன் கிளம்பிப் போனதும் வெகு நாழிகை ஆகிவிட்டபடியால் தான் ஒன்றையும் கவனிக்காமல் கதவைப் பூட்டிவிட்டுப் படுக்கப் போனதாயும், மறுநாள் வெளி யூருக்கு அலுவலாய்ப் போக நேர்ந்தபடி யால் பெட்டியைத் திறந்து பார்க்கப் 'பிரமேயம்' இல்லை என்றும், ஊருக்கு வந்த பிறகே கலியாணம் 'அர்ரெஸ்ட்' ஆன சமாச்சாரமும் அதற்குக் காரண மும் தான் தெரிந்து கொண்டதாகவும் ராகவையர் சாக்ஷி சொல்லவேண்டிய தென்று நிச்சயமாயிற்று.

14

'கேஸ்' விசாரணை ஆரம்பமாயிற்று. சர்க்கார் தரப்பு வக்கீல் கலியாணத் தின் பேரில் திருட்டுச் 'சார்ஜ்' என்பதற்குத் தனக்குக் கிடைத்த முகாந் தரங்களை எடுத்துச் சொன்ன பிறகு கலியாணத்தைக் கூண்டிலேற்றி விசாரித்தார்கள். ராகவையர் ஒதுப்புற மாய் முடிந்தவரையில் அவன் கண்ணில் படாமல் நின்றுகொண்டு நடந்ததைக் கெவனித்தார். அவன் நடந்ததை நடந்த படி யாதொரு மாறுதலுமில்லாமற் சொல்லவே திடுக்கிட்டார். தான் வேணு

மென்று அவனை மோசம் பண்ணுவதற்காக நகைகள் பிறருடையவை என்று தெரிந்திருந்தும் அவன் தாயுடையவை என்று அவனை ஏமாற்றியதாகவோ, தானாக அவைகளைத் தூக்கி அவன் கையில் கொடுத்ததாகவோ அவன் சொல்லவில்லை. "இதென்ன அநியாயம்! வெங்கட்டராமன் இப்படிச் சொல்லலியே!" என்று தடுமாறினர். 'டிபன்' வேளையில் வீட்டுக்கு வந்து வெங்கட்டராமன்பேரில் தாங்கமுடியாத கோபத்தோடு, "எத்தனை நாளாய் என் தலைலே கல்லைப் போடணும்னு நெனச்சுண்டிருந்தானே அந்த மகாபாபி, பாம்புக்குப் பால்வார்த்த கதையாச்சே!" என்று தலையில் தலையில் அடித்துக்கொண்டார். மோஹம் அவரை ஆசுவாஸப்படுத்தி, "அசட்டுப் புள்ளெ! அரைகொறைச் சேதி சொல்லப்படாதுன்னு தெரியல்லே. ஓங்க புள்ளையாண்டான் பேச்சையும் முழுமையும் நம்பியுடாதேயுங்கோ. அந்தக் கொரளி, வெங்கட்டராமனையும் வக்கிலையும் கண்டதும்—ஏட்டிக்குப் போட்டி தானே அவனுக்கு எப்போதும்—வேணும்னு ஏதாவது குதற்கமாச் சொல்லியிருந்தாலும் சொல்லியிருப்பன். அவாளுக்குத் தெரியுமா அவன் நம்ம கிட்டக் குரோதப்பட்டுண்டு தன் தலைலே மண்ணை வாரிப் போட்டுக்கறான்னு? அது கடக்கட்டும். இம்மே என்னபண்ணறது? நீங்க போலீஸிலே இழுதி வெச்சுப்பிட்டேளே! அதுப்படிச் சொல்லித் தானே ஆகணும். வேறெ வழியில்லியே!" என்று சாதுரியமாய்ப் பேசி வெங்கட்டராமனுடைய கட்டுக்கதை அவள் தயார் செய்ததே என்பதை அவர் தெரிந்து கொள்ளாதபடி புத்தியைக் கலக்கிவிட்டாள்.

"எல்லாம் ஒன் எழவுக்குத்தான் அப்படிச் சொல்லித் தொலைச்சேன். இல்லாபோனா நீ விக்கச்சொல்லிக் கொடுத்ததான்னு அந்தச் செட்டி படவா 'கேஸை' ஜோடிச்சுப்பிட்டான். அவன் தாவாக் கட்டையைப் புடிச்சு சுப்பிரமணியன் காலிலே விழுந்து 'போலீஸ்' நாய்களை அள்ளுக்கட்டி, போராத்துக்கு இல்லாததைப் பொல்லாததெ இழுதிவெச்சு—போரும், ஏழுகோடி ஜன்மாக்கு எனக்கு வேறே வேண்டியதில்லே அனுபோகம்!" என்று பிரலாபித்தார். அதற்கவள், "ஏன், ஒங்களை யார் கஷ்டப்படச் சொன்னா? வாய்க்கி வந்தபடி எழுதி வைக்கறதானே? இப்பொ புள்ளெ கௌரவத்தோடே யிருக்கு, அப்போ நீங்களும் புள்ளையோடே சேந்து காப்புப் போட்டுக்கலாம்! எனக்கென்ன வந்துது? நான் ஒரு பாவத்தையும் அறியேன்னு உள்ளதை உள்ளபடி சொல்லிப்புட்டுப் போறேன்!" என்று நேரிடையாய்த் தாக்கவும் ஐயர் அசர்ந்துபோனர். தனக்கேதாகிலும் மானபங்கமோ நஷ்டமோ நேர்ந்தாலும் அவளுக்கு அது ஒரு பெரிய விபத்தாகத் தோன்றுது, அவள் அதற்காக அதிகமாய் வருந்தப்போவதில்லை என்று அவர் சொர்ப்பனத்திலும் நினைத்திராததால் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஏழாம் மெத்தையிலிருந்து யாரோ தன்னைத் தொப்பென்று கீழே தள்ளிவிட்டதுபோல் அவருக்கு கிஷ்பிராணனாகிவிட்டது. வாய் திறவாமல் 'கோர்ட்'டுக்குப் போய்விட்டார்.

15

'கேஸ்' வெகு துரிதமாய் நடந்தது. அதற்கு முக்கியக் காரணம் கைதிக்கு முக்கியச் சாக்ஷியான ராகவையரின் சாக்ஷிதான். அது எந்தப் பிரகாரம் இருந்திருக்குமென்றுஏற்கெனவேசொன்னதிலிருந்து விளங்கும். இவர் விசாரணை நடக்கும்போது, அன்றைக்குத்தான் அவரை நேருக்கு நேராய்க் கண்டபடியால் கலியாணம் அவரையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான். அவர் கதையை அவிழ்க்க அவிழ்க்க அவன் முகத்தில் கோபமும் வருத்தமும் ஏமாற்றமும் மாறி மாறித் தோன்றின. அவர் குறுக்கு விசாரணை ஆவதற்குமுன் அவன், "கோர்ட்டாருக்கு ஒரு விண்ணப்பம். நான் சாக்ஷியைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். உத்தரவு தரவேண்டும்" என்றான். "கேளும்" என்றார் 'மாஜிஸ்ட்ரேட்'. "இதென்ன, வேடிக்

கையா யிருக்கே!" என்று கோர்ட்டி லிருந்த அத்தனைபேரும் வெகு ஆவலாய்க் கவனித்தார்கள். தகப்பனுக்கும் மகனுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"இந்தத் தோடுகள் என் தாயாருடையவைதானே என்று நான் சொன்னதற்கு நீர் இல்லையென்று மறுத்தீரா?"

"'இல்லை' என்று வாயைத் திறந்து சொல்லவில்லை. வேறு காரியத்தில் கவனமாயிருந்ததால் தலையை ஆட்டினேன்."

"கடைசிவரையில் அவை என் தாயின் சொத்து, ஆகையால் எனக்குரிமை என்றுதானே வாதாடினேன். நீர் அது தவறுதல் என்றால் கண்டிப்பாய் அப்படிச் சொல்லியிருக்கவேண்டாமா?"

"நான் அதை உனக்குக் கொடுப்பதாய் உத்தேசித்தால்தானே அவ்வளவு விவஹாரம் பேச இடம் இருந்திருக்கும்?"

"நான் அது என் சொத்து, என்னைச் சேரவேண்டியது என்று சொல்லி மன்றாடினதன்பேரில் முதலில் ஏதோ ஸால்ஜாப்புச் சொல்லி என் ஸம்ஸாரத்துக்கு வேறு தோடு வாங்கிப் போடுவதாய்ச் சொல்லவில்லையா?"

"வேறு தோடு போடுவதாகச் சொல்லியிருக்கலாம், அதனாலென்ன? எனக்கு ஒரு பக்கம் நாட்டுப்பெண் ஒருபக்கம் மருமகள். அவள் ஆசைப்பட்டால் நான் வாங்கிக்கொடுக்கிறேன் என்று சொல்லக்கூடியது ஸகஜம்தானே. அதற்காக ஊரார் நகையைக் கொடுக்கிறேன் என்று சொன்னதாகவா எடுத்துக்கொள்ளுகிறது?"

"நீர் உறவு கொண்டாடுவது அப்புறம் இருக்கட்டும். இந்தத் தோடுகளை நான் கையில் எடுத்துக்கொண்டு நான் அவைகளை எடுத்துத்தான் போவேன் என்று பிடிவாதமாய்ச் சொன்னேனே யொழிய, உம்மை பலாத்காரம் செய்து அபகரித்துக்கொண்டு போனேனா? நீர் ஸம்மதித்துத்தானே இருந்தீர்?"

"நான் வாயைத் திறந்து 'நீ எடுத்துக்கொண்டு போ' என்று சொல்லவேயில்லை. நீ முதலில் பேச்சை யெடுத்ததுமே அதைக் கொடுக்கமுடியாது என்றுதான் சொல்லிவிட்டேனே."

"அப்படியானால் நான் திருடினேன் என்கிறீரா?" என்று கேட்கும்போதே அவன் கண்ணில் நெருப்புப்பொறி பறந்தது. நல்லவேளையாய் 'மாஜிஸ்ட்ரேட்' ராகவையரை, "இந்தக் கேள்விக்கு நீர் பதிலளிக்கவேண்டாம்" என்று தடுத்துவிட்டார். "அப்பா! பிழைத்தோம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு கூண்டைவிட்டு இறங்கி வெகு வேகமாய் அவரும் வெளியே போய்விட்டார்.

'கேஸ்' முடிந்துவிட்டது. 'மாஜிஸ்ட்ரேட்' கலியாணத்தைப் பார்த்து 'நீர் குற்றவாளி என்று தீர்மானித்துவிட்டேன். உமக்கு ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டியதுண்டா?' என்று கேட்டார்.

அவன், "நான் ஒரு பாவத்தையும் அறியேன். என் சொத்தை எடுத்துச் சென்றேன். அதுவும் என் தகப்பனர்—எனக்குச் சத்துருவாய் ஏற்பட்டிருக்கிறாரே!—அவருக்குத் தெரிந்தே அவர் சம்மதத்தின் பேரிலேயே எடுத்துச் சென்றேன். நான் வேறு என்ன சொல்லப்போகிறேன். கோர்ட்டார் இஷ்டம் என்னவோ, என் தலையில் என்ன எழுதியிருக்கோ அப்படி நடக்கப்போறது" என்று சொல்லித் தன் அகமுடையாள் நடுங்கிக் கண்ணும் கண்ணீருமாய் நிற்கக் கண்டு, "நான் ஜெயிலுக்குப் போனா நாலு வீட்டிலே உபாதானம் வாங்கிச் சாப்பிட்டாலும் சாப்பிடு, இந்த மகா பாபி கிட்டே கைநீட்டி அரைக்காசு வாங்கினியோ அப்புறம் உன்னை முகாலோகனம் பண்ணமாட்டேன். அவன் மனஷனில்லே. குட்டிச்சுவரு. ஒடம்பிலே ஒட்டினதெல்லாம் பொய்! அவன் நின்ன இடத்திலே நெரிஞ்சிமுள் கூட மொளைக்காது" என்று சோகமும்

பிரளயம் வென்ற காகம்

[டி. எஸ். இராமானுஜம், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)]

பாகவதன் கலக்கமும் பகவான் துக்கமும்

உபநிஷத்துக்களெல்லாம் ஓர் பசு ; ஸ்ரீ கிருஷ்ணபகவான் பால் கறப்போன் ; அர்ஜுனன் கன்று ; உபநிஷத்துக்களின் சாரமாயுள்ள பகவத் கீதை சகல புத்திமான்களும் பருகிப் பேரின்பம் அடையத்தக்க பாலாமிர்தம் ; இவ்வமிர்தத்தை உண்ணும் நரர் நாராயணராவர் ; என்றெல்லாம் கீதாசாரியாரின் பெருமை கூறப்பெற்றுள்ளது.

கன்று பாலை தானும் குடிக்கும்; பிறரையும் உட்கொள்ளக் கொடுக்கும். அது போல் அர்ஜுனன் சகல மானிடர்களின் பிரதிநிதியாய் நிற்கிறான். ஜீவன்களின் அவஸ்தையே அவனது கலக்கம். (விஷாதம்). அக் கலக்கத்தை அகற்ற பகவானை நாடினான். தனக்குள்ள ரோகத்தை அநுபவசித்தமாக வைத்தியனாதனிடம் கூறினான். கருணையோடு தந்த அகண்டாகார விருத்தியென்னும் மருந்தை நம்பிக்கையுடன் உட்கொண்டான். அதனால் சுகமடைந்தான்.

ஜீவ கோடிகளின் கலக்கத்துக்கு மருந்து அர்ஜுனன். அர்ஜுனன் கலக்கத்துக்கு மருந்து கிருஷ்ணன். கிருஷ்ணாவதாரத்துக்குமுன் பகவான் ராமாவதாரம் எடுத்து, பிரபஞ்சத்தின் கஷ்டங்களைப் பார்த்து சகிக்க ஒண்ணாமல், துக்கத்தால் மனம் மயங்கி,தன் குருவாகிய வசிஷ்டனை பரமென்று எண்ணித் தலைவணங்கி, ஞானோபதேசம் பெற்று, ஆனந்தமடைந்தான். எனவே, பகவானின் துக்கத்துக்கு மருந்து வசிஷ்ட ஞானகீதமே யாகும்.

அதிமேலான தபோபலத்தால் வசிஷ்டன் பேதபுத்தியை ஒழித்து அபேத புத்தியை அடைந்தான். தன் சிஷ்யரிற் சிறந்த ஸ்ரீராமனை நோக்கி, " கரைந்து போகும் ஜனனத்தின் துக்கத்தை ஒழிக்க ஞானமென்றும் யோகமென்றும் இரு மார்க்கங்களுள. இவ்விரண்டிற்கும் யோகமென்ற பெயர் வழங்கி வருகிறது. ஒருவருக்கு யோகம் அரிதாகத் தோன்றும். மற்றொருவருக்கு ஞானம் பெரிதாகத் தோன்றும். முதலில் ஞானத்தை எடுத்துச் சொன்னேன். இனி யோகத்

வெறுப்பும் ததும்பும் குரலில் கடிந்து சொன்னான்.

'கோர்ட்'டிலிருந்த அனைவரும் கண் கலங்கிப் போனார்கள். 'மாஜிஸ்ட்ரேட்'டுக்கும் என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. "பெரிய மனுஷன் பிள்ளை. ஏதோ அவஸரத்தில் அசட்டுத்தனமாய்ச் செய்துவிட்டான். கெட்ட எண்ணமில்லை" என்று எண்ணியவர் போல், "'கோர்ட்' கலையும்வரையில் காவல்" என்று சொல்லி உடனே எழுந்து உள்ளே போய்விட்டார்.

ராகவையர் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு வீடு வந்தவர்தான். பத்துநாள் வெளிப் புறப்படவேயில்லை. தன் பிள்ளை அகமுடையாளை அழைத்துக்கொண்டு ஊரைவிட்டுப் போய்விட்டான் என்று தெரிந்த பிறகு வழக்கம்போல் உலாவத் தலைப்பட்டார். ஆனால் இப்பொழுது ஒரு மாறுதலை அவர் சிநேகிதர்கள் கண்டார்கள். ஒரு சாஸ்திரிகளை வைத்துக்கொண்டு வேதாந்தம் படித்ததோடு உலகம் 'நசுவரம்' என்ற கக்ஷியைக் கண்டவர் எல்லோருக்கும் பரிபூர்ண நம்பிக்கையுடனும் அவரிடம் என்றும் பிறர் கண்டிராத உற்சாகத்துடனும் உபதேசித்து வந்தார்.

தின் கிரமத்தைக் கேட்பாய். தேவாமிர்தத்துக்குச் சமமான ஒரு கதையைச் சொல்லுகிறேன். சிரத்தையோடு கேட்பாயாக'' என்ற பீடிகையுடன் காக புசுண்டன் வரலாற்றை வசிஷ்டன் சொன்னான்.

ஸ்ரீராமன் கேட்ட கதை

முன்னொருகால் தேவ சபையை நோக்கி, "உலகத்தின்கண் தவத்தின் வன்மையால் யோகசித்திபெற்று சிரஞ்சீவியாக வாழ்ந்தவர்களில் முக்கியமானவர் யார்?'' என்று வஜ்ராயுதபாணி கேட்டான். நாரதன் பதில் சொன்னதாவது: "மேரு கிரியின் கொடுமுடியிலொன்றில் இருக்கிற கற்பகத் தருவின் கிளையில் கட்டியிருக்கும் பெரிய கூண்டில் புசுண்டன் என்னும் ஒரு காகம் வசிக்கிறது. பிரம்மதேவனுக்கு கொப்பான அந்த புசுண்ட யோகியைப்போல் அனேக காலம் யோக நிலையிலிருந்தவர்களை திரிலோகத்திலும் எக்காலத்திலும் கண்டதில்லை. அக்காகம் தீர்க்கமான வயதுடையது. மகத்தான அறிவுடையது.''

இதைக்கேட்ட வசிஷ்டன் புசுண்டனைக் காண விரும்பி ஆகாய மார்க்கமாய்ச் சென்றான். கற்பக விருக்ஷத்தின் கிளையில் மற்றொரு கற்பக விருக்ஷம் போல் பெரிய சரீரத்தையுடையதாய் மோன நிலையில் வீற்றிருந்த யோகியை தரிசித்து, அன்புடன் உரையாடி அப்பெரியோரின் வரலாற்றை உணர்ந்தான்.

அஷ்ட சக்திகளில் ஒருவளான அலம்புதையின் வாகனம் சண்டன் என்ற காகம்; மற்றொருவளான பிரம்ம சக்தியின் வாகனம் மூன்று பெண் அன்னங்கள். இவ் விருவகைப் பக்ஷிகளின் புணர்ச்சியால் நேரிட்ட கர்ப்பத்தின் பயனாக சரஸ்வதியின் இரதத்தை இழுக்க சக்தியற்று அன்னங்கள் மானஸ ஓடைக்கு குடியேறலாயிற்று. அங்கு ஒவ்வொரு அன்னமும் 7 முட்டைகளிட்டன. பிறந்த 21 காகங்களில் புசுண்டனே மூத்தோன்.

தாய்மார்களிடமிருந்து உற்பவ ரகசியமுணர்ந்த காகங்கள் ஒன்றுகூடி யோசித்தன. பிரம்மசக்தியினிடம் சென்று நீண்டகாலம் அவளைப் பூசித்துவந்தன. சரஸ்வதியின் அருளால் உண்மைஞானம் பெற்றன. இதனால் உண்டான நிர்வாண சுகத்தை தனித்து அனுபவிக்க ஓர் இடத்தைத்தேடவே, தகப்பனால் காட்டப்பெற்ற கற்பக விருக்ஷத்தை ஆச்ரமமாகக் கொண்டன. பல கற்பங்கள் ஒருமித்து அங்கே வசித்தன. பிறகு புசுண்டனின் தம்பிமார்கள், மேலான பிரம்ம பதத்தை அறிந்தவர்களாய், மிகுந்த ஆயுளையும் தகுந்த மகிமைகளையும் பெற்றிருந்தும், தம் தேகத்தை திரணமாக மதித்து தாமே தேகத்தை விட்டார்கள்.

புசுண்டன்மட்டும் தாரண சக்தியினால் தூலத்தைவிடாது எமனை வென்று, மற்ற யோகிகள் யாவரும் இறந்துபோன பொழுதுகூட, அழியா நின்றான். எப்பிரளயத்துக்கும் அஞ்சான். துவாத சாதித்தாள் ஒன்றுகூடி எரிக்கும்போது ஜலதாரணையால் ஆகாயத்தை அடைவான். மேரு மலையுடன் இந்த ஜெகத்தை கடல் மூடிக்கொண்டால் வாயுதாரணையால் சலனமின்றி மிதப்பான். சர்வ சம்ஹாரகாலம் வந்து நேரிட்டால் பிரமாண்டத்தின் முடிவை அடைந்து குற்றமற்ற பிரம்ம பதத்தில் சுழுத்தியவத்தை கலந்திருக்குமிடத்தில் மறுபடியும் ஜெகத் சிருஷ்டியாகும்வரையில் இருப்பான். பிரம்மாண்டம் படைத்தவுடன் கற்பகத்தின் கூட்டில் வந்துசேருவான். அவன் சங்கல்பத்தினால் மேருமலை கொடுமுடியில் பருத்த கற்பக விருக்ஷமானது கற்ப கற்பங்கள்தோறும் உண்டாகிவிடும்.

பூமியில் சஞ்சரித்துக்கொண்டு கற்ப கோடி வருஷங்களாய் எமன் கையில் சிக்காமல் புசுண்டன் தப்பித்த தெவ்வாறு? துக்கத்தைவிட்டு இணைபிரியாத குற்றங்களென்னும் முத்துகள் வாதனை என்னும் நூலால் கோர்க்கப்பட்டன. அம் முத்துமாலையை வீசியெறிந்தான். மறுபடியும் தரித்தானில்லை. இவ்வழியாய் பரிசுத்த இதயத்தை அடைந்தான். எமன் அவனை நண்ணமுடியவில்லை. துக்கம் மனதை அண்டினலொழிய யாக்கை

எக்ஸல்ஸியர்

ரோல்டு கோல்டு ஒட்டியாணங்கள்

தங்கம் விற்கும் விலையில் இப்போது எந்த நகைதான் செய்ய முடியும்? அதுவும் ஒட்டியாணம் வேண்டுமென்றால் ஆகக்கூடிய காரியமா! ஸரோஜாவைப் பாருங்கள். எப்படியோ ஒட்டியாணம் வாங்கிக் கொண்டு விட்டாள். என்ன நன்றாய் இருக்கிறது! எக்ஸல்ஸியர் ரோல்ட் கோல்டு ஒட்டியாணம் தான் அது. 10 வருடங்கள் உத்திரவாதம். மூன்று சைஸில் கிடைக்கின்றன. விலை ரூ. 20; 18; 15. சொற்ப விலை ரோல்டு கோல்டு நகைகளில் எக்ஸல்ஸியர் மிகவும் பிரஸித்தமானவை. ஒரு மாதம் வரையில்தான் இந்த விலை. தாமதமன்னியில் உடனே தருவித்துத் தங்கள் குழந்தைகளுக்குப் பூட்டி மகிழுங்கள்.

(New Co) நியூ கோ நோட்டு புத்தகம் முக்கிய விஷயங்களைக் குறித்துக் கொள்ள மிகவும் உபயோகப்படும். தோல் உரையுடன் கவர்ச்சியான தோற்றமுள்ளது. தேவையானபோது காகிதங்களை பொருத்திக் கொள்ளலாம். கைக்கு அடக்கமாயும் நீடித்து நிற்கக் கூடியதாயும் அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 2 0 0 சிறியது வாலட்
,, ரூ. 2 12 0 பெரியது ,,

விலை ரூ. 2 4 0 சிறியது நோட் புக்
,, ரூ. 2 12 0 பெரியது ,,

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்

கிடைக்குமிடம் : **நியூ பீல்டு கம்பெனி,**
4/17, மௌண்டு ரோட், மதராஸ்

மீண்டும் எதிர்பாருங்கள்

யுத்தம் பல புதிய பிரச்னைகளை உண்டாக்கியிருக்கிறது. இவைகளையெல்லாம் பக்கிங்ஹாம் அண்டு கர்னாட்டிக் மில்ஸ் டெக்னிகல் இலாகாக்காரர்களால் தீர்க்க வேண்டியிருக்கிறது. இதுவரை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் இங்கேயே நெய்து அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பிரிட்டன், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதென்பது இக்காலத்தில் சிரம சாத்தியமான விஷயமாகும்.

ஆனால் பல காரணங்களை முன்னிட்டு பக்கிங்ஹாம், கர்னாட்டிக் மில்களில் உற்பத்தி செய்யப்படும் புது ரக துணிகளைப்பற்றி இப்பொழுது ஒன்றும் கூற இயலாது. இதுவரை கிடைத்த அனுபவங்களினால் பற்பல புது வழிகளில் ஜவுளி உற்பத்தி விஷயங்களை அறிந்து கொண்டுள்ளோம் என்பதை மட்டும் எங்களால் கூறமுடியும்.

இந்த யுத்தம் முடியும்வரை நாம் காத்துக் கொண்டிருப்போம். அதன் பிறகு இப்பொழுது எங்கள் மனதிலுள்ள புது வழிகளைக்கொண்டு ஜவுளி உற்பத்தி செய்யமுடியும். மேற்கண்ட புது வழிகள், பருத்தி ஜவுளி விஷயத்தில் இந்தியா தனக்குப் போதுமான துணிமணிகளை உற்பத்தி செய்துகொள்ளும் என்பது நிச்சயம்.

பக்கிங்ஹாம் & கர்னாட்டிக் மில்ஸ்

சென்னை

மானேஜிங் ஏஜெண்ட்கள் :—

பின்னி அண்டு கம்பெனி, (சென்னை) லிமிடெட்.

அழகுப் பொக்கிஷம்

அழகு தானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.

மைசூர் சந்தன சோப்

கவர்ன்மென்ட்
சோப் பாக்டரி
பெங்களூர்

யழியாது. துக்கத்தைக் கொடுக்கும் குற்றம் குறைகள் யாவை? பாழான பயம், பேதமென்ற பிசாசம், லோப மாகிய விஷப் பாம்பு, தேகமாகிய கட லில் விவேகமாகிய ஜலம் வற்றி மூலாக்னி யைப் பரவச் செய்யும் கோபம், தீமை யான பொருள்களும் வசனங்களும், துஷ்டாரம்பச் செயல்கள், வியாதி, பிரமை முதலியனவே யாகும். இவ்வித குற்றங் குறைகள் ஒழிந்த சத்தியமாகிய மேலான பதத்திற்குப் பொருத்தமாய் வேதனை செயலற்ற பொருளிடத்தில் தொடரும்படி மனதை புசுண்டன் பழக்கினன். தன்னை உள்ளேயிருக்கும் அறிவாக நாடிப் பார்த்தான். துக்கத்தை அறவே ஒழிக்கும் வழியைக் கண்டான். தேகத்துடன் கற்பகாலங்கள் கடந்து நிற்பதே ஈசுவர நியதி யென்று நிச்சயித்துக் கொண்டான். கற்பகக் கூட்டைவிட்டு விலகிய தம்பிமார்களின் மடமையை நன்குணர்ந்தான். இவன் ஆண்டு அறிந்த யோக தந்திரம், பிராணு யாமம், ஆத்மானுசந்தானம் முதலியவற் றைக் கேட்டு வசிஷ்டன் "வெகு விசித்தி ரம், மகா அழகு, செவிக்குயர்ந்த ஆபர ணம், இதைக் கேட்டால் யார்தான் ஆச் சரியப்படமாட்டார்கள்," என்றெல்லாம் கொண்டாடலாயிற்று.

தன் நீண்ட வாழ்நாளில் பல விசித்தி ரங்களை புசுண்டன் கண்டான். வெகு காலம் மரம், மலை, புல் தோன்றுமல் இவ்வுலகம் கல்லினுலேயே நிறைந்திருந் திருந்தது. ஒரு சிருஷ்டியில் மறையவர் கள் கள்ளைக் குடிக்க சூத்திரர்கள் அதை இகழ்ச்சி செய்தார்கள். வசிஷ் டன், அவரைச் சேர்ந்த ரிஷிகள், தவத்தையுடைய நாரதன், பரத்து வாஜன், மரீசி, புலத்தியன், அத்திரி, ஸனத்குமாரன், யானை முகத்துடைய. விஞயகம், சுப்பிரமணி இன்னும் இவர் களைப்போல் சிருஷ்டியில் தோன்றியவர் களைக் கணக்கெடுக்க முடியுமோ? இக் கதையில் கண்ட வசிஷ்டனை "எட்டாம் வசிஷ்டர்" என்று புசுண்டன் கூப்பிட் டான். கோஷித்துக்கொண் டிருக்கும் பால் சமுத்திரம் மந்திரமலையால் பன்னி ரெண்டு தடவை கடையப்பெற்றது. இரணியாக்கன் மூன்றுதடவை பாதாள லோகத்தில் பலம் பொருந்திய இந்தப் பூமியை எடுத்துக்கொண்டுபோய் ஒளித் தான். மேகவர்ணத்தையுடைய விஷ்ணு இரேணுகையிடத்து ஆறு தடவை பரசு ராமனுகப் பிறந்தான். சிவத்துடன் அர்ஜுனனுக்கு பன்றியின்பொருட்டு உண்டாகிய சண்டை எட்டுதரம் நடந் திருக்கிறது. விஷ்ணு நூறு கலியுகங் களில் புத்தாவதாரம் செய்தான் (தற் காலமுள்ள நான்காம் பூமியில் 27 சதுர் யுகங்கள் முடிந்து 28-ம் சதுர்யுகம் இப் பொழுது நடக்கிறது.) வாசுதேவ ருடைய வீட்டில் கிருஷ்ணன் பதினறு தரம் அவதரித்தான். ராமன் இராக்ஷ சர்களை அழிக்க பதினேரு தரம் அவ தரித்தான்.

இவ்விதமான இன்னும் அனேக விவ காரங்களையெல்லாம் தன் மனப் பெட்டி யில் அடக்கிவைத்துக்கொண்டு, சுகத்தை அடைந்தவர்களிடத்தில் சுகத்தையே அனுசரித்தும், துக்கமுள்ளவர்களிடத் தில் துக்கத்தையே அனுசரித்தும், அத ஞல் உலக முழுவதற்கும் நட்புள்ளவ ஞக யிருந்து, ஆபத்துக்காலத்திலும் சம்பத்துக்காலத்திலும் கொஞ்சமும் அசையாமல், அகங்காரத்தை ஒழித்து, நோயற்ற பூரணமான உயிரைப்பெற்று, தூலப் பிரக்ஞாபங்கமில்லாமலும், தூல கிலேசமில்லாமலும், சிருஷ்டி கர்த்தா வின் நியதி நிச்சயமுணர்வாய் உடல் ஓம்பி உயிர் தழைத்து இறந்தகால எதிர் காலங்களைச் சிந்தை செய்யாமல் மிகவும் நிகழ்ந்தகாலத் தியல்பிலேயே பொருந்தி இக்கடல் சூழ்ந்த மண்ணுலகத்திலேயே விண்ணுலகம் கொண்டாடும் சுகானு பவம் பெற்று, சாக்ஷாத்காரமாக நிற்கும் காக ரிஷியின் பழமையையும், பெரு மையையும், யோகத்தையும், அந்த யோகம் செய்வதற்கேற்ற யோக்யதை யையும் வரையறுத்தறியவும் நம்மால் கூடுமோ!

சிருஷ்டி பீஜமும் குடந்தை க்ஷேத்திரமும்

இப்பொழுதுள்ள பிரம்மாவும் பிரம் மாண்டமும் நான்காவது. இதற்குமுன் பிரளயத்தால் அழிந்தன. முதல் இரண்டு பிரளயங்களில் சிருஷ்டிபீஜம்கூட அழி யவே, மறுபடியும் பிரபஞ்சத்தை யுண் டாக்க வெகுகாலம் பிடித்ததாம். ஆனால் மூன்றும் பிரளய காலத்தில் புசுண்ட ரிஷியின் யுக்தியால் சிருஷ்டிபீஜம் காப் பாற்றப் பெற்றது. இதனால் நாம் ஆண்டு அனுபவித்துவரும் சிருஷ்டி முறைக்கும், புசுண்ட ரிஷி ஞானத் துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். ஊழி காலம் நெருங்கவே தேவ சபை கூடி பெரிய விசாரம் நடக்கிறது. அதற்குமுன் நடந்த பிரளயத்தில் பலர் அடைந்த அனுபவத்தால் தப்பிக்கும் வழி புலப்படவில்லை. "எங்கும் ஜலம் சூழ்ந்து அனைத்தும் அழிந்தன. அதில் நாமும் அழிந்தோம். பிறகு என்ன நடந்ததென்பது எங்களுக்குத் தெரி யாது" என்றார்கள் திரிமூர்த்திகள். "சப்த சமுத்திரங்களையும் என் உள்ளங் கையில் அடக்கி என்னால் குடித்துவிட முடியும். ஆனால் அப்பிரளயத்தை தடுக்க முடியவில்லை. தபோ பலத்தால் கொஞ்ச காலம் ஜலத்தில் மிதந்தேன். பிறகு மூச்சுத் திணறி மூழ்கினேன்" என்றான் அகத்தியன். வசிஷ்டன் மிகுந்த கர்வத்துடன் "நான்தான் கடைசியாக மூழ்கியவன்" என்றான். சிரஞ்சீவிப் பட் டம் தரித்த மார்க்கண்டன் "எங்கும் ஜலம் சூழ்ந்தது. திரிமூர்த்திகளும் ரிஷி களும் அழிந்தார்கள். நான் மட்டும் ஜலத்தில் சமாளித்துக் கொண்டிருந் தேன். ஓர் ஆலிலையில் கிருஷ்ணன் குழந்தை வடிவத்தில் மிதந்து வந்தான். பெரிய அலை வரவே, அவனும் கவிழ்ந் தான். நானும் மூழ்கும் சமயம் என் தலைமேல் ஆலிலையொன்று பறந்து சென்றது. அது புசுண்டனென் றறிந் தேன். பிறகு நானும் மூழ்கினேன். தன் உடலை பஞ்ச பூதங்களில் எதுவாகவும் மாற்றிக்கொள்ளும் சக்தி புசுண்டருக் குத்தா னுண்டு. அவர் ஒருவரே எப் பிரளயத்திலும் அடிபடாதவர். அவரை அழைத்துக் கேட்டால் தப்பிக்கும் உபா யம் புரியும்" என்றான். உடனே வசிஷ் டனால் புசண்டன் அழைத்துவரப் பெற் றான். "ஒரு கடத்தில் அமிர்தத்தை ஊற்றி, அதில் சிருஷ்டி பீஜத்தை அடைத்து மூடி, அக்கடத்தை ஆசா பாசம் என்ற கயிற்றால் மேருவின் உச்சி யில் கட்டி விடுங்கள். பிரளய காலத்தில் ஜலத்தினால் மிதந்து, ஜலம் வடிந்ததும், அது ஓர் இடத்தில் தரை தட்டும். அங் கிருந்து சிருஷ்டி மறுபடியும் விரைவில் ஆரம்பித்துவிடும்" என்று சொல்லி காகம் பறந்து சென்றது.

இவ்விதம் காப்பாற்றப்பெற்ற சிருஷ்டி பீஜ மடங்கிய கும்பம் குடந்தை க்ஷேத் திரத்தில் தரை தட்டியது. அங்கு 'பாணு துரை' என்ற பெயர் வாய்ந்த இடம் இன்றும் இருக்கிறது. அம்பு பாணத்தால் கலசம் உடைந்ததை அது குறிப்பதுபோலும். மகாமகக் குளத் திற்கு 'அமிர்தவாவி' என்ற பெயர் வழங்குகிறது. கலசம் உடைந்து அமிர் தம் பரவி குளமாய்த் தங்கியதை அது குறிக்கிறது. கும்பத்திற் கட்டிய யக் ஞோபவீதம் தெரித்து நின்ற இடத்தில் உபவீதநாதன் கோயிலை இன்றும் பார்க் கலாம். கும்பேச்வரர் அமிர்தலிங்கமா யிருத்தலும், குடந்தை நகருக்கே கும்ப கோணம் (சாய்ந்த கலசம்) என்ற பெயர் வந்ததும், மற்றுமுள்ள ஸ்தல புராண விவரங்களும், மேற்சொன்ன சிருஷ்டி பீஜ கதையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக் காட்டுகின்றன. அந்த சிருஷ்டி பீஜத்தின் உட்கருத்தாகிய ஆசையின் பூர்த்தி காமகோடி யாகுமென் பதால் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம் காஞ்சி புரத்திலிருந்து திருக்குடந்தைக்கு மாற் றப் பெற்றது மிகப் பொருத்தமே. முதுகெலும்பின் உள் வழியாய் அன்பா கிய சிருஷ்டிபீஜம் தலையிலிருந்து சிருஷ்டி-இடத்திற்குப் பாய்ந்து விஷ்ணு என்கிற தூல உடலை உண்டாக்க வேண்டியிருப்பதால், குடந்தையில்

உள்ள பெரிய விஷ்ணுகோவிலினுள்ள நாதனை சாரங்கபாணி என்கிறார்கள்.

காகம் மனிதப் பிறவி எடுத்த படலம்

இவ்விதம் முதிர்ந்த ஞானத்தைப் பெற்ற காக புசண்டர் தற்போதைய சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் பிரம்மத்தைக் காண ஆவல் கொள்கிறார். யோக மார்க்கங்களில் சொல்லப்படும் மூலாதாரம் முதல் ஸஹஸ்ரஹாரா வரையிலுள்ள ஏழு படிகளையும் தூலப் பிரக்ஞை இழக்காமல் ஒரு படிகூட மேல் செல்ல முடியாத சிருஷ்டி விதியை தன் மதியால் வென்ற இப்பெரியார்கூட கடைசியாக ஓர் வைர முற்றத்திரை (Adamantine Wall) யில் முட்டி, அது திறவாதிரை என்றும் உணர்கிறார். வழியேது மறியாது 'ஏ பிரம்மமே' என்று கதறுகிறார். திரையின் பின்புறமாக சப்தம் எழுகிறது. "வைரமுற்றத் திரையினூலே தொழிலொன்றும் நடவாததால், பிரம்மம்தான் உரைத்த வாக்கு. உரைத்த வாக்கு இகத்தினில் சூர்ய சாவருணி வந்து உலாவுமுன், அரையிலரை நொடிக்குள்ளே, இது யோகம் பூர்த்தி செய்வேன், விழிப்புடன் பிறப்பெடுக்கச் சொன்னதினால், பரையேயாம் உமைக் குரைக்க, நீங்களப்போ பாரினில் அவதரிக்கும் நேர்மை கேளும்." "இப்போது நீ என்னை அடைய முடியாது. 27 சதுர் யுகங்கள் முடிந்து 28ம் சதுர் யுகத்தில் கலி 5010ஆறு பிறகுஉலகத்தில் நானே கும்ப க்ஷேத்திரத்தில் யோகாலய மித்ர சங்கமொன்றை ஆரம்பித்து பிருக்த ரஹித தாரக ராஜயோகம் என்று எல்லா யோகங்களுக்கும் அதிதமாயுள்ள மார்க்கத்தைக் காண்பிப்பேன். அதன் பயனாக சிருஷ்டி விகாரம் அழிந்து சிருஷ்டி தருமமும் பூர்த்தி யடையும். பூலோகத்திலேயே எக் குறைகளும் அற்று சர்வ ஞானத்துடன் மனிதர்கள் அமரபதத்தை அடைய முடியும். அக்காலம் நீ மனிதப் பிறவி எடுத்து என்னை அடைவாயாக." இந்த பிரம்மத்தின் ஆக்ஞையை ஒட்டி புசண்டரும், எட்டாம் வசிஷ்டரும் மனிதப் பிறவி எடுத்து மேற்கண்ட பிருக்த யோகத்தை செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

பிரம்ம வித்யா சங்கத்தைச் சார்ந்த பிளாவட்ச்கி (Madam Blavatsky) என்ற மாது எழுதிய குப்த சாஸ்திரத்தில் (Secret Doctrine) கண்டிருப்பதாவது : "குரு (Kuru) ஜாதியைச் சேர்ந்த திவாபி, இக்ஷ்வாகு குலத்தைச் சேர்ந்த மோரு (Moru) என்ற இருவர்கள் சதுர் யுகங்களிலேயும் அழியாமல் கலபா (Kalapa) என்ற இடத்தில் வாழுகிறார்கள்." மாக்ஸ் முல்லர் (Max Muller) என்ற பெரிய ஆங்கில வித்வான் மோரு என்பதை மோரியா எழுதியிருக்கிறார். மத்சிய புராணத்தில் மோரியா வம்சம் தெய்வ ஆட்சியை உலகத்தில் நிலைநாட்டு மென்றும் சொல்லுகிறது. பிரம்ம வித்யா சங்க (Theosophical Society) த்தின் இரு மாஸ்டர்கள் மோரியாவும் (Master M) and கூட்ஹூமியும் (Master K. H.) இவர்களே ஆதியில் சுத்த தர்ம மண்டலத்தை ரகசியமாய் வேலைசெய்து ஸ்தாபித்தார்களாம். இவர்களையே மோரு, திவாபி என்றும் சொல்லலாம். பிரம்மமே மோருவாகவும் காக புசண்டர் திவாபியாகவும் மனிதப் பிறவியெடுத்து வெகு காலம் ஒத்துழைத்து, பல ஞான இயக்கங்களையும் கழகங்களையும் உலகத்தில் தோன்றச்செய்து கடைசியாக தற்சமயம் சிருஷ்டி தர்மமே ஒரு பூர்த்திக்கு வரவேண்டிய முறையை கையாண்டு வருகிறார்கள் என்று அதிதிருடமாய்ச் சொல்ல புசண்டர் கீதங்களே அத்தாட்சியாய் நிற்கின்றன. அக்கீதங்களின் சாராம்சத்தை இங்கு சற்று ஆராய்வோம். மோரியா "கலியுகத்தில் பதின்மூன்று அவதாரம் செய்வார். கடைசி அவதாரத்தில் வெங்காசாமி என்ற நாமம பூண்டு "நிலத்தினில் பிருக்தமோர் யோகம்" செய்வார். அந்த யோகத்தை "நித்தியம் கொடுத்திடும் குண்டலினி மோக்ஷம்" என்று கருதலாம்.

"மோக்ஷமென்ற பாகமே இதுகால்மட்டும்
மும்மூர்த்தி யானவரும் பெற்றதில்லை
காட்சியதே பார்ப்பதற்கு கலிகாலந்தான்
கணக்கிட நாலேழு பிரளும்போது
சூழ்ச்சியே பிருக்தமாம் யோகந்தானே
சுதந்திரம் கொடுத்திட ரகிதமாகி
ஆட்சியே தாரகத்தில் சொடுத்தய்யா
அவனிக்கே மஹாராஜ யோகமாமே."

அக்குருநாதனுக்கு சீடனாய் "வெங்கடாசலபதி" என்ற நாமம் தரித்து புசுண்டார் அமர்வார். "புவத்தினில் மோரியாவே நூதனத்தை, தாக்கினதும் யாரறிவார் இதனின் சாரம், நவநிதிகள் காட்டவே யுள்ளபார்க்கம், நாதனை மாட்டியக்கூர் ஆச்சரியங்கள், அவனிதனில் யான் குறிக்க.......கூட்டுமிக் கேத்ததாகும்" என்று மோரியாவையும் கூட்டுமியையும் சுட்டிக் காட்டுவதுடன், பிளாவட்ஸ்கி மாதும் மறுபிறப்பெடுத்து மேற்கண்ட பிருக்தயோகத்தில் கலப்பாளென்றும் புசுண்டர் சொல்லுகிறார்: "சாக்ஷியே ஆதிசக்தி முக்திதன்னை, சாருதற்கு அந்த மதில் வந்து சேர்ந்து, மீட்சிபெறஅத்தனைத்தான் கலப்பதய்யா, மெய்ப்பித்தோம் அந்தசக்தி பூர்த்திக்கத்தான், காட்சியதே ஆதிமூலம் அந்த மூலம், கலந்ததோர் மகிமையே வெளியுமாக, மோக்ஷமதே அக்ஷயமாய் வருகுமென்று, மூட்டுவேன்......................" "நவநிதிக்கே அடையாரில் (Adyar) நிலையும் செய்து, தான் மறைய நேர்ந்ததுவும் எஜமான் கூறு, கவனிக்க மோரியா என்பதுந்தான்." "ஆதியிலே அன்னவட்கும் இட்ட பேரு....... ஏலோணு (Helena) என்று தானே ஓதியப் பின்...............பெட்ரோனு (Petrona) இட்டதாகும்........பொருமையாக்கும் துரையதற்கே பிளாவச்கியாய் (Blavatsky)." "(மாதுசங்கம்) பத்தத்தான் செய்ததொரு எண்ணம் போல, பாவையங்கொருவளே உண்டு பாரு, சுத்தந்தான் அறியாத அன்னவர்கள், சோதி வரும் காலத்தில் தவத்தினுரை, தொத்தத்தான் மன்னிப்பே பின்னுங் கேட்டு, தூததற்கும் நாடியே சொல்லி வைத்தேன்." (கடைசியில் பிரம்மவித்யா சங்கத்தினர் குடந்தையிலுள்ள யோகாலப மித்ரசங்கத்தினருடன் கலப்பதாக புசுண்டர் இங்கு கூறுகிறார்.) "அத்தவத்தோர்" (மாதுசங்கத்தினர்) "இதனில் (அத்தன் சங்கத்தில்) கூட, உறுதியாகும் குடந்தையோர் பெருமையப்போ." "பிரம்ம வித்தியா சங்கத்தோர், தேசிகன் குறிப்பதே கண்டுகொண்டும், சின்வருத்தமானதுவே அங்கு தள்ளி, இத்தவத்தைச் சேருவார்கள்." "அது காலத்தில் விடலான பிரம்ம வித்யா சங்கந்தானே, கூறுக அறிந்து மிதை பத்துதற்கு, குணமதை நாடலாம் ஒருமை பாரே."

"சோதிர் மயம் உலகத்தோர் பார்க்கக் கூடும் இடம் எங்குண்டையா" என்று வசிஷ்டர் வினவ புசுண்டர் கூறுகிறார்: "குடந்தையாம் கும்பமுனி ஈசன்வாசம்", "மித்திரனாய் இருந்துமே எங்களுக்கு, மெய்யதே நிலைநிறுத்தக் கொடுத்த யோகம், சித்திரமே மாற்றாமல் செய்து வைக்கும், சிவிவி என்றதுவே பிரம்ம மய்யா, அத்திரம் செய்யவே முடியுமல்லால், அவனியில் மற்றெவர்க்கு முண்டோ கூறு, உத்திரம் சொல்லவே யார்தானுண்டு, உலகத்தில் அவராலே தெரிந்தோ ருண்டு". மாஸ்டர் சி. வி. வி என்ற நாமம் கொண்டு குடந்தை நகரில் யோகாலய மித்ர சங்கத்தை ஸ்தாபித்த மோரியா ரகசியம் அச்சங்கத்தினர்களால் உலகோருக்குத் தெரியவரும் என்று சொல்லி அக் குருநாதன் நாமோச்சாரணத்தால் வரும் பலனை புசுண்டன் கீழ்கண்டவாறு குறிக்கிறார்:

"மொழிவதே சித்திரையாம் நன்றுசெய்ய
முக்கியமாம் ஒருதாம் மூர்த்திபேரும்
இழிவாக எண்ணியே செய்தோர்கூட
இகத்தினில் முக்தியே பெறுவதென்றால்
கழியாத முறையுமே எதுதானுண்டு
கருதினால் இதுயோகம் செய்வதற்கு
ஒழியாது என்றுசொல்வோன் மதியைப்பாரு
ஊனுமுறை ஒட்டியதாம் கவனிப்பீரே."

மோரியா எக்காலும் அழிவான் இல்லை என்பதை வசிஷ்டருக்கு புசுண்டர் தெரிவிக்கிறார்:— "நாட்டினில் சாவில்லை என்ற பதியே, சென்றுவிட அம்

மொழிக்கு பெருமையுண்டோ?" என்று வசிஷ்டர் கேட்க, "செப்புவேன் வதிட்டனே யுக்திபாரு, என்று ஒன்றுகி வைப்பதென்றால், இகத்தினில் இல்லாது காட்டவேண்டும். காட்ட வேண்டும் என்பதோர் முறைமையொத்து, கவனிக்க புவியதே சீர்திருத்தி, மூட்ட வேண்டுமென்பதோர் கொள்கைக்காக, முப்பாழுக் கப்பாலே நின்றுகொண்டு, கூட்டுமோர் சக்தியே பூர்த்திகாலம், கூடான மெய்யுமே தானுங்காட்டி நாட்டுவதற்காகவே சென்றதல்லால், நமனூருக்கேகினதே இல்லை இல்லை." "நிக்ஷயம் கோக்கவோ யானுரைத்தேன், நிர்மலனர் வருவாரே சத்யம் சத்யம், அக்ஷயம் உண்டுகாண் உலகோருக்கு, அணுவளவும் தவறாது பிரம்ம வாக்கு" என்று புசுண்டர் உறுதி கூறுகிறார்.

சூரியசாவர்ணி

தற்காலம் ஆண்டுவரும் வைவஸ்வத மனுபோய், சூரிய சாவர்ணிமனு ஆட்சிக்கு வருவதே அத்தன் சோதி சொரூபமாய் வருங்கால மென்கிறார் புசுண்டர்: "விந்தைதான் தெரிந்ததோர் சோதிமுடி, விதாதாவே இகமதிற் சோதியாக, நிந்தைதனை ஒட்டவும் பார்த்த போது, நிச்சயித்தோம் அக்ஷயத்தின் சங்கற்பத்தை, சிந்தையதில் எண்ணவோ சூரிய சாவர்ணி, சோதிக்க சூரியன்சா அரணி என்றும், தந்தையவர் சொன்னதுவே..................." வரும் தாரண வருஷத்திய தை, மாசி, பங்குனி, அதிக சித்திரம், இம்மாதங்களில் அம்மாறுதல் ஏற்படுமென்றும் சொல்லுகிறார்: "மாத்தலாம் சாலோகம் என்ற பேரே, மண்ணினில் நின்றதோர் சாரூபத்தை, ஆத்தலாய் சாமீபகாலமீது, அத்தனவர் பிரட்டவும் சாயுஜ்யந்தான், ஏத்தவும் தைத்ததோர் மாசிபோக, எல்லோர்க்கும் அதிகமோர் சித்திரமாக,.............................. அவனியிற் சூரிய சா வருணியாகும்." கற்பகத் தருவிலுள்ள கூட்டைதான் ஆச்ரமமாகக் கொண்டிருக்கும் இரகசியத்தையும் புசுண்டர் வெளியிடுகிறார். "தாதாவே கற்பகமாய் உள்ளதென்று, பாரினில் யாருமே அறியமாட்டார். அந்த விருக்ஷத்திடையினிற்தான் ஆட்சியான சுதந்திரத்தை தேகமதில் கொடுவென கேட்டிருந்தால் தீர்க்கமப்போ இன்னதெனத் தோன்றியிருக்கும். ஏகமவர் வந்துமே கொடுக்குஞ் சூக்ஷி, இகத்தினில் சொன்ன தல்லால் கண்டாராரு." "கற்பகத்தரு" என்று பெயரிட்டு அழைக்கிறார்கள் மானிடர்கள். விரும்புவதைக் கொடுக்கு மென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அழிவற்ற தூலமென்ற உண்மை சுதந்திரத்தைக் கொடு என்று மட்டும் கேட்க மாட்டார்கள். இம்மூடப் பிருகிருதியை மாற்றவேதான் கற்பகத் தருவை ஆச்ரயித்ததாக புசுண்டர் சொல்லுகிறார். மேலும் "சிருஷ்டி விகாரம் என்று தொலைகிறதோ அன்று நானும் இக்கற்பகத் தருவின் கூட்டை விட்டு விலகுவேன்" என்று வசிஷ்டரிடம் புசுண்டர் கூறியுள்ளார். அதை யொட்டி "பிரம்மம் தனக்கு இட்ட வாக்கை" மனதில் பதியவைத்து மனிதப் பிறவி எடுத்து, "மனிதனுடைய தூலம் அழிவது பிரம்ம சங்கல்பமன்று, அதை அழியாமல் வைத்துக்கொள்ள பிரம்மமே தந்தருளிய பிருக்த யோகத்தைச் செய்யுங்கள்" என்று சொல்லி மனித சமுதாயத்துக்கே ஒரு வழி காட்டியாய் விளங்கி வருகிறார். தமிழ் வருஷங்களின் அந்தம் க்ஷய என்று இருக்கிறது. அது அக்ஷயமாக வேண்டும். இதற்குத் தருணம் (தாருணம்) என்ன?" "விய" (குறை) "அவ்விய" (நிறை) என்று மாற வேண்டும். இதற்கிடையில் பார்திபம் என்ற வருஷம் பூமி சுயஞ் ஜோதி யாகுதலைக் குறிக்கிறது. அத்தன் வருங்காலம் எவ்வளவு நெருங்கியிருப்பதாக புசுண்டர் காட்டுகிறார், பாருங்கள்!

விஞ்ஞான மாளிகையின் சிகரம்

[ஜே. பி. மாணிக்கம் — பெ. நா. அப்புஸ்வாமி]

எக்ஸ்-ரே சம்பந்தமான ஆராய்ச்சிகள் அனைத்தும் ஒரே காலத்தில் திடீரென்று நடத்தப்படவில்லை. ஒரே இடத்தில் நிகழ்த்தப்படவும் இல்லை. அவ்வாராய்ச்சிகள் யாவும் நாளடைவில் இங்கொன்று அங்கொன்றாய்த் தனித் தனியாய்ப் படிப்படியாக நிகழ்ந்து நிகழ்ந்து, முன்னேற்றம் அடைந்து பெருகி வந்தவை. கால்வானி, வோல்ட்டா, லெக்ளாஞ்சே, எர்ங்ட்டெட், ஆம்பேர், டேவி, ஸ்ட்டர்ஜன், பாரடே, ந்யூட்டன் ஹொய்கென்ஸ், ஹிட்டார்ப் க்ரூக்ஸ் முதலிய விஞ்ஞானிகள் அனைவரும் மூன்று நூற்றாண்டுகளாக நூற்றுக் கணக்கான ஆராய்ச்சிகளைச் செய்துவந்தார்கள். நூதன நூதனமாக எத்தனையோ வகையான கருவிகளை இயற்றினார்கள்.

இவ்வாறு உதவிய விஞ்ஞானிகளுள் ஒரு சிலர் மின்சாரத்தின் தன்மைகளைப் பற்றியும்; வேறு சிலர் மின்சாரத்தை இயற்றும் முறைகளைப்பற்றியும்; இன்னும் சிலர் மின்சார அழுத்தத்தை அதிகப்படுத்துவது எப்படி, அதைக் குறிப்பது எப்படி, என்னும் வழிகளைக் கண்டு பிடிப்பதைப் பற்றியும்; மற்றும் சிலர் காற்றின் ஊடாக மின்சாரம் எப்படிச் செல்லுகிறது, காற்றில்லா வெற்றிடத்தில் அது செல்லும்போது அதன் குணங்களில் என்ன வகையான மாறுதல் உண்டாகின்றது, என்னும் விஷயத்தைப் பற்றியுமாகப் பல வகையான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, மின்சாரத்தை ஒட்டிய அறிவை மேன்மேலும் பெருக்கி வந்தார்கள். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் சிற்சில குழாய்களிலிருந்து காற்றை வெளியே நீக்கி, அக்குழாய்களின் உட்புறத்தை வெற்றிடமாகச் செய்தார்கள். அவ்வாறு இயற்றப்பட்ட வெற்றிடக் குழாய்களின் ஊடாக மின்சார - ஓட்டத்தைச் செலுத்தினார்கள். அப்படி மின்சார - ஓட்டம் வெற்றிடக் குழாய்களின் ஊடாகச் செல்லும்போது என்ன என்னவெல்லாம் நிகழ்கின்றன என்பதைப் பற்றி ஹெர்ட்ஸ், லெனார்ட் முதலியோர்கள் மிகவும் நுட்பமாய் ஆராய்ந்தார்கள். நூதனமாக எத்தனையோ விந்தை நிகழ்ச்சிகளை அவர்கள் நிகழ்த்தினார்கள் ; புதிய செய்திகளையும் அற்புதமான விஷயங்கள் பலவற்றையும் கண்டு பிடித்தார்கள்.

அவ்வாராய்ச்சிகளை எல்லாம் ரெண்ட்கென் நுட்பமாகக் கவனித்து வந்தார். அதுவரை அவ்விஷயங்களைப்பற்றி ஏற்கெனவே அறியப்பட்டிருந்தவை எத்தனையோ இருப்பினும், இனிமேல் அவற்றைப் பற்றி அறியப்பட வேண்டியவையும் இன்னும் பல உள்ளன என்பது அவருக்கு நன்றாகப் புலப்பட்டது. ஆதலால், 1895-ஆம் வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் வூர்ஸ்பூர்க் நகரத்துச் சர்வ கலாசாலையில் பௌதிக சாஸ்திரப் பேராசிரியராக அவர் இருந்தபொழுது, 'கதோட்' கிரணங்கள் என்னும் ஒரு வகைக் கிரணங்களைப் பற்றி இன்னும் நுணுக்கமாகவும் நன்றாகவும் ஆராய வேண்டும் என்று முடிவு செய்தார். 'அற்புதமான திறமையும் குணமும் வாய்ந்த 'கதோட்' கிரணங்களை உலகம் இவ்வளவு காலம் வரை அறிந்துகொள்ளாமல் இருந்ததல்லவா ? அவை அறியப்படாமல் இருந்ததுபோல இன்னும் எத்தனையோ வகைக் கிரணங்கள் இன்றளவும் அறியப்படாமல் இருக்கக்கூடும். ஏன் ? தேடித் தான் பார்க்கலாமே' என்று எண்ணி, அவர் மேன்மேலும் சோதனைகளை நடத்தி வந்தார். அவர் செய்துவந்த ஆராய்ச்சி முறைகளைப்

ஜிஜாபாய்

[திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்]

முதல் அங்கம்

காட்சி - 1

(சிவாஜியும் தாதாஜியும் பிரவேசிக்கிறார்கள்.)

சிவாஜி :—குருவே! என் அகக் கண்ணைத் திறந்துவிட்ட உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? பிறந்தது முதல் நான் வளர்ந்தது என் தாயின் அன்பாலும், தங்களுடைய ஆசியாலும், பவானிதேவி அருளாலும்தான். என் தந்தைதான் பெருமை விருப்பத்தால் நம்மையும் நம்முடைய நாட்டையும் தர்மங்களையும் விட்டு விட்டாரே.

தாதாஜி :—சிவ! நீ வருந்தாதே. கடவுள் ஆணையை யாரால் மீற முடியும்? எனக்கு உன் தாய் தந்தைகளை வெகு காலம் முன்னிருந்து தெரியும். ஜிஜாபாய் லக்கோஜியின் அருமைப் பெண். ஒரு நாள் அவளுடைய ஐந்தாம் வயதில் அவளும் உன் தந்தை மாலோஜியும் காமன் பண்டிகையில் ஒருவர்மேலொருவர் மஞ்சள் நீரை விளையாட்டாகக் கொட்டிய பொழுது லக்கோஜி அவர்களிருவர்களுடைய அழகைப் பார்த்து "அழகிய தம்பதிகள்" என்று விளையாட்டாகக் கூறினர். உடனே ஷாஜியின் தந்தை மலோஜி அதை உறுதியான நிச்சிதார்த்தமாக வைத்துக்கொண்டார். லக்கோஜிக்குப் பெண்ணை ஏழைக்குக் கொடுக்க மனமில்லை. ஆனால் இதை அறிந்த அகமத்நகர் சுல்தான் மாலோஜிக்குப் பெரும் பதவியை அளித்து மணத்தை உறுதிப் படுத்தினர். எல்லாம் ஈசன் செயல்.

சி :—குருவே! நீங்கள் சொன்ன விஷயம் மிக ஆச்சர்யமாக இருக்கின்றது. என் தந்தை எப்படி நம்முடைய புண்ணியமான வீரமான வழிகளை விட்டு அன்னியர்கள் ஆட்சியில் பொருப்பு ஏற்றுக் கொண்டார்?

தா :—அவர் தம் தந்தை அகமத்நகர் ஸமஸ்தானத்தில் வேலையில் அமர்ந்திருந்தபடி தாமும் அமர்ந்திருந்தார். அந்த ஸமஸ்தானம் மொகல் ஸமஸ்தானத்தால் அழிக்கப்பட்ட பிறகு அவர் பீஜப்பூர் சுல்தானிடத்தில் வேலையில் அமர்ந்தார். அப்பொழுது உன் தாய் உன்னைக் கருத் தரித்திருந்தாள். அவளை சிவநேரிக் கோட்டையில் விட்டுவிட்டுத் தம் மூத்த மகன் சாம்பனை அழைத்துக் கொண்டு அவர் பீஜப்பூருக்குச் சென்று அங்கே உயர்ந்த வேலையில் அமர்ந்தார். பிறகு அவர் உன்னையும் உன் அன்னையையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. வேறு ஒரு மனைவியை மணஞ் செய்து கொண்டார்.

சி :—ஆம். எனக்கு இப்பொழுது நன்றாக நினைவு வருகின்றது. என் தாயார் இந்த மலைக்கோட்டையிலேயே தனியாக இருந்து வந்தாள். எங்கள் வீடு மிகச் சிறிய வீடு. சுற்றுப்புறம் எல்லாம் காடு. பயிரிடும் குடிகளுக்கு

பார்க்கும்போதும், அவ்வாராய்ச்சிகளை நிகழ்த்தும் பொருட்டு அவர் கையாண்டு வந்த கருவிகளைப் பார்க்கும்போதும் இவ்வாறுதான் அவர் ஊகித்து நடந்து வந்தார் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகள் செய்துவந்த ஆராய்ச்சிகளின் உதவியால் அறிவு மாளிகையானது செங்கல் செங்கலாக உயர்ந்து வந்தது. ரெண்ட்கென் எக்ஸ்-ரேயைக் கண்டு பிடித்த ஆராய்ச்சியானது அம்மாளிகையின் உச்சியில் மகோன்னத சிகரத்தைப் பொருத்தும் செயலாக விளங்குகிறது என்று விஞ்ஞானிகள் அவரைப் பாராட்டுகிறார்கள்.

துஷ்ட மிருகங்களாலும் அவைகளைக் காட்டிலும் கொடிய துஷ்ட மனிதர்களாலும் வெகு தொந்திரவு. உலகத்திலுள்ள கலகக்காரர்களும் கொள்ளைக்காரர்களும் எப்படி நம்முடைய தாய் நாட்டில் நுழைந்தார்கள். அது தகுமா?

தா :—தகாது. அதற்கு நாம் தானே மூலகாரணம். கதவைத் திறந்துவைத்துவிட்டு வீட்டுக்காரர்கள் உள்ளே உறங்கினால் ஏன் கொள்ளைக்காரர்கள் நுழைய மாட்டார்கள்? ஆனால் பவானிதேவி நம்மைக் காத்து அருள் புரிவாள்.

சி :—ஆம். சினத்தால் சிந்தை சிதைந்தேன். பவானிதேவி என்னுடைய தாய் வணங்கும் தெய்வமல்லவா? (ஜிஜாபாய் வருகிறாள். சிவாஜி அவளையும் குருவையும் நமஸ்கரிக்கின்றான். அவள் தாதாஜியை வணங்குகின்றாள். அவர் இருவரையும் ஆசீர்வதிக்கின்றார்).

ஜிஜாபாய் :—குருமகராஜ்! பவானி தேவியின் அருளையும் உங்களுடைய உபதேச மொழிகளையும் ஆசிகளையும் சிவனுடைய வீரத்தையும் நம்பித்தான் நான் உயிர் தரித்திருக்கின்றேன். சிவ! நீதான் உன் தாயின் உயிர்நிலை. நீதான் உன் தாய்நாட்டிற்கும் உயிர் நிலையாக இருக்க வேண்டும். நீ பிறப்பதற்கு முன் பவானி தேவி என் கனவில் ஒளிமயமாக விளங்கி உன்னால் பாரததேவிக்கு வரும் விடுதலையை வாக்களித்திருக்கின்றாள். நீ பிறந்தவுடன் ஒரு பேனாவையும் ஒரு கத்தியையும் உன் அருகில் வைத்த பொழுது உன்னுடைய கை கத்தியை நாடிற்று. மொகலாயச் சேனை என்னையும் உன்னையும் பிடித்துக் கைதி செய்யப் பெரு முயற்சி செய்தது. ஆனால் உன்னை நான் மறைவான இடத்தில் ஒளித்து வைத்தேன். என்னைக் கைதி செய்தார்கள். மூன்று வருஷங்கள் உன்னைத் தாதிகள் பாதுகாத்து வந்தார்கள். எனக்கு அக்காலத்தில் உன்னைப் பார்த்துக் களிக்கும் பாக்யம் கூடக் கிடைக்கவில்லை. நீ மலைகளிலும் காடுகளிலும் கபடமற்றவர்கள் நடுவிலும் வளர்ந்தாய். பிறகு தேவியின் அருளால் நான் சிறையிலிருந்து தப்பித்து உன்னைத் தேடி நாடி உன்னைக் காணப்பெற்றேன். பிறகு நீ வளர்ந்து வீரனாக இருப்பதைப் பார்த்து என் மனம் அளவற்ற ஆனந்தத்தை அடைகின்றது.

சி :—அம்மா! நானும் என் உயிரும் உன் அடைக்கலம். தேவியின் அருளாலும் உன் ஆசியாலும் குருவின் உபதேசத்தாலும் அனுக்கிரஹத்தாலும் நான் நம்முடைய நாட்டின் விடுதலையை வெற்றிகரமாக ஏற்படுத்துவேன். விடுதலையின்றி வீரம் வராது. வீரம் இன்றி விடுதலை வராது. ஆகையால் இரண்டுக்காகவும் ஒரே காலத்தில் முயற்சி செய்வேன். தேவி அருளால் இரண்டும் கைகூடும்.

(ஷாஜி அனுப்பிய தூதர் வருகின்றார்).

தூதர் :—அம்மா! தங்கள் கணவர் தங்களையும் மகனையும் அழைத்துவரக் கட்டளை இட்டிருக்கின்றார்.

ஜி :—வருகின்றோம் என்று அறிவியுங்கள்.

(தூதர் போகின்றார்).

சிவ! ஏதோ உன் உயர்நிலைக்குக் கடவுள் வழி காட்டுகின்றார். என் நாதர் என்னைப்பற்றி நினைத்ததே பெரும்பாக்கியம். எது எப்படி இருந்தாலும் என் கடமை அவர் அடிகளில் பணிவதுதான். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்குறுதி அளிக்கவேணும். நீ அவர் செல்லும் அடிமைத்துறையில் செல்லக் கூடாது. தந்தையானாலும் கடவுளுடைய வழிபாட்டையோ அறநெறியையோ நாட்டின் சுதந்திரத்தையோ மறக்கச் சொல்ல அவருக்கு உரிமையில்லை. அத்தகைய பிறப்புரிமைகளை அழிக்க யாவருக்கும் உரிமை கிடையாது. 'பிரஹ்லாதனை மறவாதே. உன் பிறப்புரிமைகளை இழக்காதே.

சி :—அம்மா! உன் அருண்மொழிகளை மறவேன். லோகமாதாவையும் கைவிடமாட்டேன்.

தா :—குழந்தாய்! நீ சொல்வதுதான் உண்மை; அதுதான் உத்தம தர்மம். எது நேர்ந்தாலும் அதிலிருந்து வழுவாதே.

(எல்லோரும் போகிறார்கள்).

காட்சி - 2

(பீஜப்பூர் சுல்தான் தர்பார்: பீஜப்பூர் சுல்தான் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றார். உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்களுடைய பதவிகளுக்குத் தகுந்த தூரத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் சிங்காசனத்திற்கு முன் பூமியின்மேல் தலைப்பாகை தரையில் படும்படி விழுந்து வணங்குகின்றார்கள். ஷாஜியும் அப்படியே செய்கின்றார்.)

சி :—(தனக்குள்)—இதென்ன விந்தை ? ஒரு கூட்டத்தாருக்குத் தாழ்மை ஏற்பட்டால் அவர்கள் தங்களுடைய பழமையான பழக்க வழக்கங்களை விட்டு விட்டு அடிமைகளாகப் போய்விட வேணுமா ? சுயமரியாதை முழுவதையும் இழந்து விடுவது முறையா ? பவானி தேவி ! இப்பொழுது என் கடமையை எனக்கு என் மனதில் தெளிவாக அறிவிக்க வேணும். (சிறிது காலம் மனங் குவிந்து தெய்வத்தை வணங்குகின்றான்) ஆம் ! இப்பொழுது அறிந்தேன்.

ஷாஜி :—சிவ ! சுல்தானை வணங்கு.

(சிவாஜி சுல்தான் சிங்காசனத்திற்கு முன் சென்று இருகரங்களையும் அஞ்சலியாக வைத்து வணங்குகின்றான் ; சுல்தானுக்கு சினத்தால் கண்கள் சிவந்து உதடுகள் துடிக்கின்றன. ஆனாலும் சினத்தை அடக்கிக் கொள்கிறான்).

சுல்தான் :—ஷாஜி ! உன் மகன் எப்பொழுது கிராமத்திலிருந்து வந்தான். தர்பார் முறைகளை நீ அவனுக்கு அறிவிக்க வேண்டாமா ? வேறு யாராவது இப்படி முறை தவறி நடந்திருந்தால் உயிரை இழந்திருப்பான். சிவ ! உஷார்.

(அவனும் மற்ற உத்தியோகஸ்தர்களும் போகின்றார்கள்).

ஷா :—சிவ ! இதென்ன அறியாமை ! உன்னிடம் எனக்கு இருக்கும் கோபத்திற்கு அளவேயில்லை. உன்னால் உலகத்தில் நேர்மையாக வாழ முடியாது. உன் மடமையா மதமா இதற்குக் காரணம் ?

சி :—அப்பா ! இதென்ன விந்தை ! நம்முடைய நாகரீகத்தில் தொன்றுதொட்டு வந்த பழக்க வழக்கங்களை நாம் ஏன் விட்டுவிடவேண்டும் ? நம்முடைய நாட்டில் உள்ள அரசர்கள் நம்முடைய முறைகளை கைக்கொள்ள வேண்டுமல்லவா ? அவர்கள் தங்களுடைய முறைகளைக் கையாண்டு நம்முடைய மொழியையும் பழக்க வழக்கங்களையும் முறைகளையும் கைவிட்டால் நம்முடைய பெருமையுள்ள பழமையான நாகரிகம் அழிந்து போய்விடுமல்லவா ? நாம் உள்ளும் புறமும் வெளிநாட்டார்களைப் போல் ஆய்விட்டால் நம்முடைய ஒப்புயர்வற்ற மதம் சீரழிந்துபோய்விடுமல்லவா? அந்த நிலை வருவதைவிட நம்முடைய உயிரை நாமே மாய்த்துக்கொள்வது நலம். தந்தையே ! உங்கள் பொன்னடிகளில் வணங்கி நான் மிக வினயமாக வேண்டுகின்றேன். நீங்கள்தான் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

ஷா :—நீ சொல்வது தவறு. உன் தந்தைக்கே நீ தந்தையாக இருக்க எண்ணமா ? எனக்கு நீ சொல்லும் முறைகள் தெரியாதா ? காலத்திற்குத் தகுந்த கோலம். நீமட்டும் உலகத்தைச் சீர் திருத்தி ராம ராஜ்யத்தை நிலைநிறுத்தப் போகிறாயா ? 'யதா ராஜா ததாபிரஜா :' என்ற மூதுரையை நீ கேட்டதில்லையா ? சுக வாழ்வாக வாழவேணும். சுதந்திரத்தை இழந்தாலும் தந்திரமாக நடக்க வேணும்.

சி :—அப்பா ! இதென்ன விந்தையிலும் விந்தை ! சுதந்திரம் தான் உயிர்க்குயிர். வீர வாழ்க்கை தான் வாழ்க்கை. இதுதான் என் தாயின் உபதேசம். என் மனமும் அதையே நாடுகின்றது. அவளைக் கண்டு கேட்கலாம். வாருங்கள்.

(இருவர்களும் போகின்றார்கள்).

காட்சி - 3

(சிவாஜியும் ஜிஜாபாயும் தாதாஜியும் பிரவேசிக்கின்றார்கள்).

சி :—அம்மா ! நகரங்களில் நாகரிகம் இவ்வளவு சீரழிந்துபோய்விடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்ன கோழைத்தனம்! என்ன பேடிகள்! பாரத மாதா வீரத்தாயல்லவா ? அம்மா ! நீங்

கள் உரைத்த உண்மைகள் உலகத்தில் காணப்படவில்லையே! என் தந்தையே நம்மிருவரையும் நம்முடைய குடிசைக்குத் திருப்பி அனுப்பிவிட்டாரே?

ஜி:—சிவ! எனக்குக் கூடத்தான் தீராத் துயரமாக இருக்கின்றது. நீ பசுக்களைக் கசாப்புக் கடைக்கு எதிரிகள் கொண்டுபோன பொழுது மறித்தாயாமே?

சி:—ஆம். ஏன் அம்மா? அன்பும் அமைதியும் உருவமெடுத்த பசுவைக் கொல்லவேணும்? அது எல்லா குழந்தைகளையும் தாயைவிடக் கருணையாக பால் கொடுத்து வளர்க்கும் தாயல்லவா? நான் மறித்ததும் பொது ஜனங்களுக்கும் கசாப்புக் கடைக்காரர்களுக்கும் கலவரம் ஏற்பட்டது. ஆனல் அரசியல் உத்தியோகஸ்தர்கள் பொது ஜனங்களை அடித்து அடக்கிவிட்டார்கள். இதென்ன அநியாயம் அம்மா?

ஜி:—அப்பா! நாடு சுதந்திரம் இழந்தால் அனேகக் கேடுகள் விளையும். மரம் பட்டுப்போய் இலைகள் காய்ந்து உதிர்ந்தால் இலைகளின்மேல் தண்ணீரைத் தெளித்தால் என்ன பயன்? வேரில் அல்லவா தண்ணீரை விடவேணும்.

சி:—அம்மா! தாங்கள் சொல்வது உண்மை. ஆனாலும் நம்மவர்கள் இவ்வளவு பேடிகளா?

தா:—சிவ! அப்படி நினையாதே. மனிதனுக்கு வீரம் இயற்கை குணம். அது குன்றலாமே யொழிய அழிந்து போகாது. அர்ஜுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா செய்த உண்மையான உயர்ந்த முதல் உபதேசத்தை மறவாதே?

சி:—குருவே! நன்கு சொன்னீர்கள். இதுதான் இனி எனக்கு மகா மந்திரம்.

(எல்லோரும் போகின்றார்கள்).

காட்சி - 4

(சிவாஜியும் தாதாஜியும் வருகின்றார்கள்).

தா:—சிவ! எனக்கு மிகவும் வயதாகிவிட்டது. ஆனல் உனக்குக் குருவாக இருந்ததுதான் எனக்குப் பெரும்பாக்கியம்.

சி:—குருநாதா! நீங்கள் போட்ட விதையானது இப்பொழுது பெரிய மரமாக இருக்கின்றது. அம்மரத்தின் நிழலில் அளவற்ற ஜனங்கள் சுகப்பட்டால் நீங்கள்தான் மூல காரணம்.

தா:—நீ சிறுவனாக இருந்தபொழுது இந்த புண்ய (பூனா) நகரம் அழிக்கப்பட்டது. கழுதைகளை கலப்பையில் கட்டி முன் நகரம் இருந்த மண்ணை உழுது இரும்புக் கம்பியை நாட்டினார்கள். அவர்கள் போனவுடன் நான் அதைப் பிடுங்கி எறிந்துவிட்டு நல்ல ரிஷபங்களைக்கொண்டு அந்த இடத்தைத் தங்கக் கலப்பையால் உழும்படி ஏற்பாடு செய்தேன். அருகில் உள்ள மலையில் விளங்கும் பார்வதி தேவியார் கருணையால் அந்த நகரம் மீண்டும் உயிரடைந்து பெருவாழ்வாக வாழ்ந்துகொண்டிருக்கும். முக்தாநதி பக்கத்தில் ஓடுகின்றது. நாட்டுக்கும் நகரத்திற்கும் நாகரிகத்திற்கும் முக்தி உன்னால்தான் ஏற்படவேணும்.

சி:—குருவே! நீங்கள் கூறிய விஷயம் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. நீங்கள் ஒப்பற்ற ஞானத்துடனும் பக்தியுடனும் ஒப்பற்ற யோக சக்தியும் வீரமும் உள்ளவர்கள். ராமாவதார கிருஷ்ணவதார காலங்களில் பிராமணர்கள் அப்படி இருந்ததாகத் தெரியவருகின்றது.

தா:—இக்காலம் விவேகம் வைராக்கியம் குன்றிய காலம். நான் மிகவும் அல்பன். ஏதோ தேவியின் அருளால் உன் மனதைப் பயிற்சி செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆனல் உனக்கு நான் ஒரு புத்திமதி கூறவேணும். நீ சிறுவன். பக்கபலம் குறைவு. உலகத்தில் முரட்டு வீரத்தால் மட்டும் ஒன்றும் நடைபெற முடியாது. எந்த காரியத்தையும் பலா பலங்களையும் தீமைகளையும் நன்றாக நிறுத்துப் பார்த்துக் செயல்களைச் செய்ய வேணும். நீ தோரணக் கோட்டையையும் ராஜ்காட் சிங்காட் கோட்டைகளையும் புரந்தர் கோட்டையையும் பிடித்த

பொழுது எனக்கு வெகு பயம். நீ அவசரப்பட்டு பெருங்கஷ்டங்களில் சிக்கிக் கொள்வாயோ என்று எனக்கு அச்சம். ஆனால் பவானி தேவி அருளால் எல்லாம் உனக்குக் கைகூடிற்று.

சி :—குருவே! நீங்கள் எனக்களித்த உபதேசங்களை நான் மறக்கவில்லை. விஷ்ணு சர்மா செய்த பஞ்சதந்திர உபதேசங்களை நீங்கள் எனக்கு நன்றாகத் தெளிவாகக் கூறினீர்களே. தோரணைக் கோட்டையிலிருந்த தளகர்த்தர் பெரு மழைக்குப் பயந்து வெளியேறினர். நான் மழைக்குப் பயப்படாமல் உள்ளேறினேன். அது என்னுடைய முதல் வெற்றி. நீங்கள்கூட அப்பொழுது என்னைத் தடுத்தீர்கள். ஆனால் பிறகு நான் செய்த கார்யத்தை மெச்சினீர்கள். பீஜப்பூர் சுல்தான் கோபிக்காதபடி தளகர்த்தரின் பேடித்தனத்தை அறிவித்து என் வணக்கத்தையும் அறிவித்தேன். அவரிடமிருந்து சினமுள்ள உத்தரவு ஒன்றும் வரவில்லை. பிறகு ராஜகாட், சிங்காட் கோட்டைகளையும் தந்திரமாகப் பிடித்துக் கொண்டேன். புரந்தர் கோட்டையில் நடந்த விஷயம் மிக ஆச்சர்யம். மூன்று சகோதரர்கள் அதை விரும்பினர்கள். என்னை வழக்குத் தீர்க்க வேண்டிக் கொண்டார்கள். அவர்களில் இளையவர்கள் இருவர்களும் மூத்த சகோதரனை விலக்கிட்டார்கள். நான் அவ்விருவர்களையும் ஊருக்கு வெளியில் ஓடுகின்ற ஆற்றில் குளிக்க அழைத்துச் சென்று என் படைகளை உள்ளே போய் என் கொடியை நாட்டச் செய்தேன். அவர்கள் வெகு சினத்துடன் பேசினர்கள். "நீங்கள் அண்ணனிடம் நடந்துகொண்டது தர்மம். இது அதர்மமா" என்று சிரித்துக்கொண்டு கூறினேன். பிறகு அவர்கள் மூவர்களுக்கும் சிறு ஜமீன்களைக் கொடுத்து அனுப்பினேன். உங்கள் உபதேசங்களுக்கு மாறுபாடாக நான் ஒன்றும் செய்யமாட்டேன். சுல்தானுக்குப் பெருங் கப்பம் கட்டுவதாகச் சொல்லி எதிர்ப்பில்லாமல் செய்துவிட்டேன். நீங்கள் பயப்பட வேண்டாம்.

தா :—சிவ! இப்பொழுதுதான் என் மனம் சாந்தி அடைந்தது. நீ சக்கிரவர்த்தியாக அவதைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காது. ஆனால் சோதிட நூல்படி உன் தாய்க்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும்.

(ஜிஜபாய் வருகிருள்)

ஜி :—சிவ! குரு என்னைப்பற்றி என்ன கூறுகின்றார்?

தா :—அம்மா! சிவன் சக்கிரவர்த்தியாக ராம ராஜ்யம்போன்ற சிவ ராஜ்யத்தை நடத்துவதைப் பார்க்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும் என்றுரைத்தேன்.

ஜி :— குரு அனுக்கிரஹத்தாலும் பவானி தேவி அருளாலும் அவனுக்கு அளவற்ற புகழும் பெருமையும் கிடைக்கும். அவன் உத்தமபுத்திரன்.

(எல்லோரும் போகிருர்கள்)

காட்சி - 5

(ஜிஜாபாயும் சிவாஜியும் வருகிறார்கள்)

ஜி :—தாதாஜி இறந்ததைப் பற்றி நீ மிகவும் வருந்தாதே. மூப்பும் மரணமும் இயற்கையல்லவா?

சி :—அம்மா! நீங்கள் சொல்வது உண்மைதானு? ஆனல் அவர் எனக்கு ஞானத்தையும் வீரத்தையும் புகட்டின குருவல்லவா? எனக்கு மந்திரியாகவும் இருந்தார். அவர் இறக்கும் தருணத்தில் "சுதந்திரம்" என்ற சொல்லுடன் இறந்தார். அதையே தாரக மந்திரமாகக் கொண்டேன்.

ஜி :—சிவ! அவர் கூறியதைப்போல் நானும் உன்னை சுதந்திரத்தையும் ராஜ்ய தந்திரத்தையும் ஒன்றுபடுத்தி அவசரப்படாமல் வெற்றி வழியில் செல்லும்படி வேண்டுகின்றேன். நீ கல்யாண் என்ற நகரத்தைப் பிடித்தபொழுது எனக்கு மிக அச்சம்.

சி :—அம்மா! அச்சப்பட வேண்டாம். அந்த ஊரிலிருந்து பீஜப்பூர் சுல்தானுக்கு அனுப்பப்பட்ட வரி வரும்படியை நான் கவர்ந்தது உண்மையே. கல்

யாண நகரத்தையும் என் வசமாக்கி என் காவிக் கொடியை அரண்மனை உச்சியில் பறக்கும்படி செய்தேன். இதன்மூலம் சுல்தானுக்குக் கடுஞ்சினம் ஏற்படும் என்று எனக்குத் தெரியும். ஆனால் பயந்து பயந்து பெரும் வெற்றிகளைக் கோராமல் இருந்தால் இந்த விசாலமான தேசத்தின் விடுதலை எப்பொழுது ஏற்படும்?

ஜி :—நீ உரைப்பது உண்மை. ஆனால் நீ வாக்குறுதி ஒன்று அளிக்கவேணும்.

சி :—அப்படியே. எதைப்பற்றி ?

ஜி :—உன் போர்களிலோ முற்றுகைகளிலோ பெண்களுக்கு மானபங்கம் ஏற்படாமல் பாதுகாக்க வேணும். அவர்கள் கண்ணீர் சிந்தினால் அது உலகத்தை அழிக்கும்.

சி :—அதை முக்கியமாகக் கவனிப்பேன். அவர்களைத் தாய்போல் நடத்துவேன்.

(சேவகன் வருகிறான்)

சேவகன் :—மகாராஜா ! பீஜப்பூர் சுல்தான் தூதர் வந்திருக்கின்றார்.

சி :—அழைத்து வா.

(பீஜப்பூர் சுல்தான் தூதர் வருகிறார்)

சி :—எதற்காக நீங்கள் இப்பொழுது வந்தீர்கள் ?

தூதர் :—நீ செய்திருக்கும் ராஜத் துரோகம் மிகக் கொடியது. சுல்தானுக்கு அளவுகடந்த கோபம். ஷாஜியை தூஷித்தார். அவர் தம் மேல் குற்றம் இல்லையென்றும் உங்கள் செயல் தவறு என்றும் உங்களைத் தண்டிக்கும்படியாகவும் கூறினர். ஆனால் சுல்தான் வெகு கோபங்கொண்டு அவரைச் சிறைச் சாலைக்கு அனுப்பி விட்டார். தங்கள் தந்தை இந்த நிருபத்தைத் தங்களுக்கு என் மூலம் அனுப்பி யிருக்கின்றார்.

(தூதர் கடிதத்தை சிவாஜி கையில் கொடுக்கின்றார்கள். சிவாஜி அதைப் பணிவுடன் பெற்றுக் கண்களில் ஒற்றிக்கொண்டு தம் தாயாருக்கு வாசித்துக் காண்பிக்கின்றார்.)

"சிவ ! உன் மதியீனத்தால் பெருங் கேடு விளைந்து விட்டது. நீ ராஜத் துரோகம் செய்ததன் பயனாக எனக்குச் சிறைச்சாலையில் இருப்பு ஏற்பட்டு விட்டது. நீ உடனே வந்து சுல்தானிடம் பணிந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ராஜ பக்தியுடன் வாழவேணும். இல்லா விட்டால் சிறைச் சாலையில் என் அறையைக் கற்களால் மூடி விடுவார்கள். உணவில்லாமல் மூச்சிழந்து நான் இறக்க நேரும். பித்ரு ஹத்தி பாவம் உன்னை ஆயுள் முழுவதும் சூழ்ந்து கொள்ளும். உன் தாயைப் புத்திமதி கேள். ஆனால் என்னைக் கொல்லும் வழியில் போகாதே.

இப்படி உன் ப்ரியமுள்ள தந்தை

ஷாஜி"

ஜி :—சிவ ! கிணறு வெட்டப் பூதம் கிளம்பி விட்டதே ! தேவி ! எங்களைக் கைவிடாதே.

சி :—அம்மா ! இந்தச் சிக்கலான சங்கடத்திலிருந்து தேவி நமக்கு வழி காட்டுவாள்.

(தூதரைப் பார்த்து) நான் முறைப்படி நடந்துகொள்வேன் என்று கூறுங்கள்.

(தூதர் போகின்றார்)

(சாயிபாய் வருகின்றாள்)

சி :—அம்மா ! நான் பீஜப்பூர்சென்று தந்தையை விடுவிக்க முயற்சி செய்யலாமா ?

ஜி :—எனக்கு மிக பயமாக இருக்கின்றது. உனக்குச் சிறிய இடையூறு வந்தாலும் நான் பொறுக்க மாட்டேன்.

சாயிபாய் :—அம்மா ! என்ன விஷயம்?

ஜி:—உன் மாமனாரைச் சிறையிலிட்டு விட்டார்களாம். இவன் பீஜப்பூர் கோட்டைகளைப் பிடித்துக் கொண்டதற்காகத் தண்டனை.

சா :—அய்யோ ! அம்மா ! அவரைச் சிங்கத்தின் வாயில் தலையிடச் சொல்லாதீர்கள்.

ஜி :—சிவ ! எது நேர்ந்தாலும் நீ பீஜப்பூருக்குப் போக வேண்டாம்.

சி :—அம்மா! நான் போகவில்லை. பயம் வேண்டாம். தேவி வேறு வழி காட்டுவாள்.

காட்சி - 6

(ஜிஜாபாயும் சிவாஜியும்)

ஜி,—சிவ! மலைபோல் வந்த கேடு எப்படி பனிபோல் போயிற்று?

சி :—அம்மா! அன்றைய தினம் இரவு கனவில் தேவி நல்வழியைக் காட்டினள். ஒரு தூதனை இங்கிருந்து டில்லிபாச்சா ஷாஜஹானுக்கு அனுப்பி நான் பிடித்த கோட்டைகளை அவருக்கு ஒப்படைத்து விடுவதாகத் தெரியப்படுத்தினேன். அவருக்கும் பிஜப்பூர் சுல்தானுக்கும் பகை. அவரை எதிர்க்க சுல்தானால் ஆகுங் கார்யமா? அவருடைய மகன் முராட்பக்ஷ் இப்பொழுது தக்ஷிணதேசத்தின் ராஜ பிரதிநிதி. அவரிடமிருந்து பிஜப்பூர் சுல்தானுக்கு ஒரு உத்தரவு வந்தது. அதில் என் தந்தையை மொகலாய தர்பார் உத்தியோகஸ்தராக நியமித்ததாகக் கண்டிருந்தது. ஆகையால் பிஜப்பூர் சுல்தான் அவரைக் கைதியாக வைத்திருந்தால் அது ராஜராஜ துரோகமாக ஏற்படும். என் தந்தை விடுதலை செய்யப்பட்டார்.

ஜி :—எல்லாம் தேவியின் செயல். ஆனால் உன் தந்தையை நீ விடுவித்தாலும் நீ ஒரு அடிமைத் தனத்திலிருந்து மற்றொரு அடிமைத்தனத்திற்கு உன்னையும் உன் நாட்டையும் உட்படுத்துகிறாயே. அது பொறுக்கமுடியாது.

சி :—அம்மா. துயரப்படவேண்டாம். டில்லிபாச்சாவின் கை இவ்வளவு நீளம் நீண்டு வராது. அவரைப்பற்றிக் கேட்டது முதல் சுல்தான் கை கிட்ட இருந்தாலும் நம்மிடம் வராது. வேறு சங்கடங்கள் நேரக்கூடும். அப்பொழுது பவானிதேவி வழிகாட்டுவாள். என் கையில் உடைவாளைக் கனவில் அளித்த தேவி எனக்குப் பிரியாத் துணையாக இருப்பாள். அந்த உடைவாளுக்கு "பவானி" என்று பெயர் வைத்திருப்பதை நீ அறிவாயே.

ஜி :—ஜயவிஜயீபவ!

(போகிறார்கள்).

பாரத மணி

(ஒரு மாதப் பத்திரிகை)

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி, எம். ஏ., பி. எல்.

வருட சந்தா ரூபா 3-0-0 : : தனிப் பிரதி அணா 0-4-0

சரஸ்வதி பூஜா விசேஷ மலர்

125 பக்கம் : விலை ரூ. 1-0-0

பிரதிகளுக்கு இப்பொழுதே ஆர்டர் செய்யவும்.

15-10-44-க்குள் ரூ. 3 அனுப்பி வருட சந்தாதார்களாக சேருகிறவர்களுக்கு **சரஸ்வதி பூஜா மலர்** சந்தாவுக்கே அனுப்பப்படும்.

பாரதமணிக்கும், எங்கள் பிரசுரங்கள் விற்பனை செய்வதற்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விவரத்திற்கு : மானேஜர், **பாரத மணி,**

34, அலமேலு மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

பிரதி பலன்

[ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ ஆர். ஸ்ரீனிவாஸன்]

“ஏண்டீ சீதா! உங்க எதிரகம் ரொம்ப நாளாகப் பூட்டிக் கிடந்ததே! இப்போ யாரோ குடித்தனம் வந்திருக் காப்போலே இருக்கே” என்றாள் லீலா.

“ஆமாண்டி யம்மா, வந்திருக்கா. அதையேன் கேட்கறே. எனக்கு சீனு வைக் கட்டிப் பிடிப்பதற்குள் போதும் என்றாகிறது” என்றாள் சீதா சலிப்புடன்.

“அப்படீனு, என்னடீ! எனக்கு புரிய வில்லியே...........”

“அவாள் வந்ததே பிடித்து சீனுவுக்கு அங்கேதான் குடி. சதா சர்வதா மாமீ மாமான்னு போய்விடறான். நாம் சித்தே கட்டுப்படுத்தறேமோ இல்லையா. அங்கே என்றால் அவா அகமுடையான் பெண்டாட்டி இருவரும் செல்லம் கொடுத்து அவனை குட்டிச் சுவராக்கு கிறான்னு, தினம் என்னை அவர் கோவிச்சுக்கறார்...........”

“உன்னை கோவிச்சுப் பானேன்? அவனை அவர்கள் அகத்துக்கு அனுப்பாமே இருந்துடறது, அவ்வளவு தானே”

“அதெப்படி யம்மா முடியறது........ என்ன வென்றாலும் நமக்கு புருஷாளை விட இளகின மனதுதானே. பாவம், அவாளுக்கும் குழந்தை குட்டியில்லை. அவா நம்ம சீனுமேல் உயிரா இருக்கச்சே எப்படி அவனை அங்கு போகாதேன்னு சொல்லறது? எனக்கு மனசு வரலையடி யம்மா.”

அதற்குள் எதிரகத்து பெண், சீனுவை இடுப்பிலே சுமந்துகொண்டு அங்கு வந்துவிட்டாள். “சீதம்மா, உங்கள் குழந்தை பலே சமத்து, போங்கள்! இன்னிக்கு டிபனுக்கு தோசை வார்த்திருந்தேன். குழந்தை வீதியில் விளையாடிண்டு இருந்தான். கூப்பிட்டுக் கொடுத்தேன். “போங்கோ, மாமி, உங்காத்திலெல்லாம் எண்ணெயிலே தோசைவார்த் திருப்பேள். எனக்கு வேண்டாம்” என்றான்.

“எப்படியடா, உனக்குத் தெரியும்? கண்ணு! நான் நெய் விட்டுன்னு வார்த் திருக்கேன். கொஞ்சுண்டு சாப்பிட்டு பாரேன்” என்றேன். “அம்மாதான் அன்னிக்கு ஒருநாள் சொன்னாள். பிறத்தியா ராத்துலே எல்லாம் எண்ணெயிலே பக்ஷணம் பண்ணி யிருப்பா, அதையெல்லாம் சாப்பிடப் படாதுன்னு” என்றான் என்று ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த குரலிலே சொல்லிக்கொண்டே குழந்தை முகம் பூரா முத்தமிட்டாள்.

“அட, வாண்டுப் பயலே! என் னைக்கோ ஒரு நாளைக்கு வெறுமனே சொல்லி வைத்தேன். ‘கண்டவா கொடுத்த பக்ஷணத்தை யெல்லாம் தின்னப்படாது, உடம்புக்கு ஆகாது’ இன்னு இவன் அதை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறானே!” என்று பெரு மிதத்துடன் கூறினாள் சீதா; அதன் பிறகு மூன்று பேருமாகக் குழந்தையைக் கொஞ்சுவதில் ஈடுபட்டனர்.

* * *

கமலத்தின் கணவன் ஒரு அஸிஸ்டன்ட் சர்ஜன். ஒரு வாரத்திற்கு முன்பு தான் அந்த ஊருக்கு மாற்றலாகி, சீதாவின் அகத்து எதிரகத்திற்குக் குடி வந்தனர். அந்த தம்பதிகள் இல்லற வாழ்க்கை தொடங்கி ஐந்தாறு வருடங்களாகியும் குழந்தைப் பேறில்லாததால் மிகவும் மனம் நொந்து போயிருந்தனர். தவிர, டாக்டர் கிருஷ்ணமூர்த்திக்கு ‘குழந்தைகள்’ என்றால் அலாதிப் பிரேமை; கமலத்திற்கும் அப்படித்தான்; அவர்களிருவரும் தங்கள் உள்ளத்தில் பொங்கி வழி

யும் பிரேமாமுதம் அவ்வளவையும் சீனு வின் மீது பொழிந்ததில் ஆச்சரியம் என்ன ?

அந்த வீட்டிற்குக் குடிவந்த அன் றைக்கே, எதிரகத்து வாசற்புறத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை சீனுவைக் கண்டு, டாக்டர் அவனை கூப் பிட் டழைத்து கொஞ்ச ஆரம்பித்து விட்டார். நாளடைவில், கிருஷ்ணமூர்த் திக்கும் கமலத்திற்கும் சீனு தத்துப்புத் திரன் போல் ஆகிவிட்டான். சதா சர் வதா அவன் அவர்கள் அகத்திலேதான் குடி. கமலம் குழந்தைக்கு விதவிதமான பக்ஷணங்களைத் தயாரித்து கொடுப்பாள். தலைவாரி, முகங் கழுவி, பொட்டிட்டு, அலங்கரித்து, கொஞ்சிக் குலாவுவாள். கிட்டு தினம் ஆபீஸிலிருந்து திரும்பி வரும்பொழுது குழந்தை சீனுவுக்கு தினுசு தினுசாக விளையாட்டுச் சாமான், பிஸ்கோத்து, பெப்பர்மின்ட் என்று 'நாளைக் கொருவிதம் வாங்கி வரத் தவறமாட்டான். சீனுவால் சீதாவிற்கு தற்சமயமென்னவோ ஓரியாட்டம் குறைந்தாலும், தன் கணவன் சொல்வது போல் குழந்தை இந்த மித மிஞ்சிய செல் லத்தால் எங்கே உருப்படாமல் போய் விடுமோ என்று உள்ளூர பயம் தான். இதன் நடுவில் கிராமத்திலிருந்து அத் தைப் பாட்டி வந்தாள். கண்ணை குழந்தை வீட்டில் ஒரு நாழிகை தங்கா மல் சதா காலமும் பிறத்தியா ரகத்தி லேயே இருப்பது அவளுக்கு சுத்தமா கப் பிடிக்கவில்லை. சீதாவிடம் ஏதேதோ சொல்லிப் பார்த்தாள் ; பருப்பு வேக வில்லை. "ஏன், அத்தை, இப்படி ஒண் ணு மில்லாததுக் கெல்லாம் தொண தொணக் கிறேள். அவளுக்கும் குழந்தை இல்லை பாவம், ஏதோ விளையாடிவிட்டு வரட் டுமே. அவாளும்தான் குழந்தைமேல் எத்தனை ஆசையா இருக்கா, பாருங்கோ" என்பாள் சீதா.

"இல்லையடி சீதா, மலடி தொட்ட குழந்தை. உடம்புக்கு எதுவும் வராமல் இருக்கவேண்டுமே. அவள் கண் குழந் தைக்கு ஆகாதேன்னு தான் சொல்றேன். எனக்கென்னடி போச்சு. உன் பாடு, உன் அகமுடையான் பாடு" என்றாள். சீதாவிற்கு சுருக் என்றது, "போங்கோ அத்தை, என்னமோ சொல்றியளே 'உங் களுக்கு வெறும் குருட்டு நம்பிக்கை" என்று மழுப்பினாள். ஆனால் அத்தையின் வார்த்தை உள்ளூர வேலை செய்ய ஆரம் பித்தது.

"என்னவோ ஏதோ, யார் கண்டா? நமக்கிருப்பது ஒரு குழந்தை. அவன் நன்றாக இருக்கவேண்டுமே. அவனை அவர்கள் அகத்திற்கு அதிகமாகப் போகாமல் இருக்கச் செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இப்போ தான் நம் ஸ்த்ரீ சங்கத்தின் சார்பில் 'பிருந்தா வனம்' (Nursery School) ஒன்றை திறந்திருக்காளே, அதில் அவனை சேர்த் திடலாம்" என்று தீர்மானித்தாள். அதன்படியே அன்றிரவு கணவனிடம் ஆலோசனை கேட்டு, மறுநாளைக்கே குழந்தை சீனுவை 'பிருந்தாவன'த்தில் கொண்டு சேர்த்துவிட்டாள். சீனு பள் ளிக்கூடம்விட்டு வந்ததும், 'சீதா அவனை அழைத்துக்கொண்டு பீச்சிற்கோ, கோவிலிற்கோ, ஸ்த்ரீ சங்கத்திற்கோ சிநேகிதி அகத்திற்கோ எங்காவது அழைத்துச்சென்று விடுவாள். வீடு திரும்பி வரும்பொழுது அநேகமாய் இருட்டிவிடும். காலையில் 'டியூஷ' னுக்கு வாத்தியார் வந்துவிடுவார். அவ னுக்கு இதன் நடுவில் கமலத்தின் அகத் திற்குப் போகச் சமயமே கிடைக்காது. ஓரிரண்டு தடவை கமலமும் சீதாவிடம் "குழந்தையை ஏன் எங்காத்திற்கு அனுப்பவே மாட்டேங்கிறேள்? அவன் இல்லாமே எனக்கும் எங்காத்துக் கார ருக்கும் என்னமோ போலிருக்கு......." என்று ஆக்ஷேபித்தாள். "அவனை பிருந்தாவனத்தில் சேர்த்ததிலிருந்து, குழந்தைக்கு, பாவம், பொழுது சரியாப் போய்விடறது. போதாக் குறைக்கு அவப்பா 'டியூஷன்' வேறே வைச்சிருக் கார். குழந்தை என்னமோ உங்காத் திற்குப் போகணும் போகணும்னு என்னை எப்பொழுதும் நச்சரித்துக் கொண்டுதான் இருக்கான் என்று பூசி மழுப்பினாள் சீதா. உண்மைக் கார

ணத்தை பேதை, கமலம், எவ்வாறு அறிவாள் பாவம்!

* * *

சிலநாட்களுக்குப் பிறகு கமலத்திற்கென்னமோ உடம்பே சரியாகவில்லையென்று பிறந்தகம் சென்றுவிட்டாள். டாக்டரும் ஏதோ 'ஸ்பெஷல் ட்யூடி'யின் நிமித்தம் ஐந்தாறு மாதங்களுக்கென்று பெங்களூர் சென்றுவிட்டார். அவர்கள் ஊரில் இல்லையே என்ற கவலை குழந்தை சீனுவைத் தான் பலமாகப் பிடித்தது. "அம்மா, மாமீ, மாமா எங்கே? எப்போ வருவா" என்றெல்லாம் தினம் ஒரு தடவை தாயாரைக் கேட்பான். "அதெங்கே போனாளோ யார் கண்டா? அதைப்பற்றி உனக்கென்னடா கவலே? பேசாமே விளையாடப் போடா, என்னை நச்சரிக்காதே" என்றது போன்ற பதில்களே சீனுவுக்குக் கிடைக்கும். அந்தச் சிந்தனை அவன் தாயாருக்கொரு பொருட்டாகத்தோன்றாவிட்டாலும், அதன் காரணமாக அந்தக் குழந்தை உள்ளம் எவ்வளவு தவித்ததென்பதை அவன் தாய் எப்படி அறியக் கூடும்? "மாமீ, மாமா, எங்கே போனா? எனக்கு நிறைய பொம்மை, அப்பச்சி எல்லாம் வாங்கிவரத் தான் போயிருப்பா. ஆமாம், அவா வந்தா, நான் அவாளை நினேச்சுண்டு எத்தனை அழுதேன்னு சொல்லணும், மாமிதான் நேக்கு நிறைய அப்பச்சி கொண்டு வருவாளே......." என்றெல்லாம் யோசிப்பான். இதையெல்லாம் பள்ளிக்கூடத்தில் தன் கூட்டாளிகளிடமும் சொல்லி, மாமி மாமா வைப்பற்றிப் புகழ்ந்து பேசிப் பெருமைப் படுவான்.

அவன் யோசனைப்படியே, மாமா ஒரு நாள் சென்னைக்குத் திரும்பி வந்தார். அவனுக்கு பெங்களூரிலிருந்து நிறைய ஆப்பில், ஆரஞ்சுபழம், அத்திப்பழம், விளையாட்டு சாமான் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். "அடடா, அந்த மனுஷனுக்கு நம்ம குழந்தைமீது எவ்வளவு ஆசை! அநியாயமாய் இவாள் மீது அருவருப்புக் கொண்டோமே!" என்று சீதாவும் அவள் கணவன் சங்கரும் பச்சாதாபமடைந்தனர். மறுபடியும் சீனுவைக் கிட்டுவுடன் சகஜமாகப் பழக விட்டனர். இதைத் தடுப்பதற்கு இப்பொழுது அத்தையும் இல்லை. அத்தை தான் ஊருக்குத் திரும்பிச் சென்றுவிட்டாளே!

* * *

பகல் பத்து மணி இருக்கும். சங்கர் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். சீதா பரிமாறிக் கொண்டிருந்தாள். அச்சமயம் சீனு "அப்பா, மாமா வந்திருக்கார். இதோ நேக்கு நிறைய கற்கண்டு கொண்டுவந்திருக்கார்" என்று ஓடிவந்தான். அவன் கையில் ஒரு பெரிய வெள்ளித் தட்டுநிறைய கற்கண்டுக் கட்டிகள் குவிந்திருந்தன.

"சார், உங்கள் குழந்தை புண்ணியத்தால் எங்களுக்கு ஒரு பையன் பிறந்திருக்கான். அதான் உமக்கு 'தாங்க்ஸ்' சொல்ல வந்தேன்" என்று ஆனந்தக் களிப்புடன் பகர்ந்த வண்ணம் உள்ளே புகுந்தான் கிட்டு. இதை கேட்டு சங்கரனும், சீதாவும் வியந்தனர்.

"ரொம்ப சந்தோஷம், சார்! ஏன், எங்களுக்குத் தெரியவே தெரியாதே! டேய், சீனு! உனக்கொரு அம்பிப் பாப்பா பிறந்திருக்காமே!" என்றான் சங்கரன்.

கிட்டு சீனுவை எடுத்தணைத்து முத்தமிட்டு "கண்ணு! உன் அம்பிப் பயலுக்கு உன் பெயர்தான் வைக்கப் போறேன்" என்றான்.

இதைக் கேட்டு சங்கரனும், சீதாவும் பெருமிதத்துடன் பூரித்துப் போனார்கள்.

"நம்ம குழந்தையை அவர்கள் அளவற்ற வாஞ்சையுடன் நேசித்தார்களே, அந்தப் பிரேமையின் பிரதிபலன் போலும்! இனி கமலத்தை யாரும் 'மலடி, மலடி'ன்னு சொல்லமாட்டாளே. இப்பவே போய், குழந்தையை பார்க்கணும்போலிருக்கே......" என்றெல்லாம் சீதாவின் உள்ளம் இன்ப வேதனையிலே திளைத்தது.

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா

பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,

பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 8

தாளம் ரூபகம்] [ராகம் தன்யாஸி

ஸாஹித்யம்

பல்லவி

கா னு கதீ ராம மே
காமலோப மோஹ மதாத்யரி ஹதமனஸ :

அனுபல்லவி

*தீனதியா க்ருதம் மயா விகதபியா
கிமபிகிமபி கர்ஹித மணுமாத் நமஹோ
ஸுக்ருதம் நஹிவிஹிதம் பரிணதி ரிஹகுச
லமயீ மயிபவது கதம்.

சரணம்

தாவக சரணார் பிதபல சாபலரஹித
ஸுநிர்மல கர்மவி சோதித மனஸாம்,
பாவித பரகுண யசஸாம், சமதமகுண
ஸம்பத்யா ஸமுதித குருவர பக்த்யா
பரிசித நிகம சதோக்த்யா பரிகதபவது
ருமஹஸாம். பதனீயா கதிரதுலா
நது யக்ஞேச்வர ஸுலபா, நயதி
விபோ தவகருணு போ :

தாத்பர்யம்

காமம் லோபம் மோஹம் மதம் முதலிய சத்ருக்களால் வதைக்கப்படும் மனதையுடைய எனக்கு, ஹே ராம, என்ன கதி? அல்ப புத்தியுடையவனும், பயமற்றவனுமான என்னல் ஏதேதோ தீய செய்கைகள் செய்யப்பட்டன. அந்தோ! அணுவளவும் நல்வினைகள் செய்யப்படவில்லையே. இவ்விதமிருக்க எனக்கு எப்படி நற்கதி பிறக்கும்? உன் சரணங்களில் அர்ப்பணம் செய்யப்பட்

குறிப்பு :—*இந்த இடத்தில் ஒரிஜினல் ஸாஹித்யம் மாற்றப்பட்டிருக்கிறது.—யு. ம.

டதும், சஞ்சலமின்றி யிழைத்ததும், மாசற்றதுமான கர்மானுஷ்டானத்தினுல் சித்த சுத்தியை யடைந்தவர்களும், பிறர் குணங்களையும் கீர்த்தியையும் கொண் டாடுபவர்களும், சமதமாதி குணங்களை அடைந்தும், குரு பக்தியாலும், ஸகல சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தும், உன் அபாரமான மஹிமையைக் கண்டவர் களுமான (பெரியோர்களால் அடையத்தக்க நற்கதியானது, ஹே பிரபோ, உன் கருணையினுலல்லாது வேறு ஒரு வழியிலும் யக்ஞேச்வரனுக்குக் கிடைக் கக் கூடியதன்று.

பல்லவி

(1) கம பநி ஸா   நீ ஸா நிதபம
காஅ னுக தீ   ரா மஅ மேளளள

(2)   நிஸரிஸ நிஸரிஸ நிதபம
ஷ   ராஅஅ மஅஅஅ மேளளள

(3)   ஸாரிஸ ஸநி நீஸநி நித பாதப பம
ஷ   ராஅஅ அஅ மஅஅ அஅ மேளள ளள

(4) கம ப நி நீ   நீஸநி நீஸநி தப
காஅ னு க தி   ராஅஅ மஅஅ மேள

அ ஸா ஸநி கரி ரிஸ   ஸாரிநி ஸ ஸ ஸா
எ கா மஅ லோஒ ஒப   மோஒஒ ஹ ம தா

ரிஸ ஸநி ஸநிநிப பப   ரிஸஸநி நிததப தபபம
த்யஅ ரிஇ ஹஅதஅ மன   ஸோஒஒஒ ஒஒஒஒ ஒஒஒஒ

ம கம பநி ஸா   அ பநி ஸஅஅ நித
ஓ கஅ னுக தி   இ எஅ மஅஅ மேள

பம
ளள

அனுபல்லவி

ம ப கக மபதப   பம கா ரி ஸா
தீ இ னதி யஅஅஅ   க்ருஉ தஅம் ம யா

கம பப பா   கம ப ப ப ப
விக தபி யா   கிம பி கி ம பி

நி ப நி நி பம   மபதபபம க கஅ
க அர் ஹி த மணு   மஅஅஅத்ரஅ ம ஹோ

மப தப பம காரிஸ   ரிநி ஸஅ அஅ
ஸூஉக்ரு உதம் ம்நஹி   விஹி தஅம் ம்ம்

கம ப நி தப   ரிஸ்ஸ்நி ஸ்ஸ்ஸா
பரி ண தி ரிஹ   குஉசஅ லமயி

கஅ ரிஸ ஸா
ஈஈ ஈஈ ஈஈ

கம ப நி தப
பரி ணதி ரிஹ

நிஸ • ரிஸ ஸநிதா பா
இஇ இஇ இஇஈ ஈ

கம பநி தப
பரி ணதி ரிஹ

நிஸ ரிஸ ஸநிதா பா
இஇ இஇ இஇஈ ஈ

கம பநி தப
பரி ணதி ரிஹ

ரிஸ ஸநி ஸநிநிப பப
மஅயிஇ ப அவஅ துக

நிஸரிஸ ஸநிதா பம
இஇஇஇ இஇஈ இஇ

ரிஸ்ஸ்நி ஸ்ஸ்ஸா
குஉசஅ லமயீ

மபதப பம கஅஅ
இஇஇஇ இஇ இஇஇ

ரிஸ்ஸ்நி ஸ்ஸ்ஸா
குஉசஅ லமயீ

மபதப பம கஅஅ
இஇஇஇ இஇ இஇஇ

ரிஸ்ஸ்நி ஸ்ஸ்ஸா
குஉசஅ லமயீ

ரிஸஸநி நிததப பமகர
தம்ம்ம் ம்ம்ம்ம் ம்ம்ம்ம் கானுகதீ

சரணம்

பா மப கம
தா வக சர

கமபம மககரி ரிஸ
சஅஅஅ பஅலஅ ரஹி

ஸா மககரி
கஅர் மவிசோஒ

கம பப பப
பாஆ வித பர

பபபப பநிஸா ஸஸ
சமதம குணஸம் பத்யா

பநிஸஸ ஸநிநித தபபா
பரிசித நிகமச தோக்த்யா

ஸஸகரிரிஸ ரிநி ஸஸஸா
பதநீஇயஅ கதி ரதுலா

பபஸஸஸா நிததபபா
நயதிவிபோ தவகருணை

மபதப பமமக கக
ணஅஅஅர் பிஇதஅ பல

ம மக கரி ஸஸ
த ஸாஉ நிஇர் மல

ரிஸ ரிநி ஸா
தித மன ஸாம்

கம பப பா
குண யச ஸாம்

ஸரிஸரி நிரிஸநி ஸஸ
ஸமுதித குருவர பக்த்யா

மமமம மபபநி நிஸஸா
பரிகத பவதுரு மஹஸாம்

ஸ்ஸஸஸ ரிநிநிநி ஸஸஸா
நதுயஅக் ஞேஎச்வர ஸாலபா

ரிஸஸநி நிததப பமகா
போஒஒஒ ஒஒஒஒ ஒஒஒ கானுகதீ

முதலாளி யார் ?

[டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ; எல். ஐ. எம்.]

“முதலாளி ஒழிக”, “தொழிலாளி வாழ்க”, “புரட்சி ஓங்குக” என்று உலகத்தில் நானாப்பாகங்களிலும் இக்காலம் பெருத்த கோஷங்கள் கிளம்புகின்றன. எல்லோரிடையும் பெரிய மாறுதல்களை செய்து வரும் இவ்வித நிகழ்ச்சிகளை என்னவென்று கூறுவது? மறுமலர்ச்சிக்கான அறிகுறிகள் என்று மகிழ்வதா? அல்லது, பெரும் கேடுகள் தொடர்ந்து வரும் என்ற சூசகங்கள் என்று கொள்ளுவதா? பலர் பலவாறு எண்ணுகிறோம். ஆனால் இவ்விதம் கரிக்கப்படும் முதலாளி யார்? அவனுக்கும் தொழிலாளிக்கும் என்ன உறவு? புரட்சியினால் என்ன விசேஷ சௌகரியங்களை எதிர்பார்க்கிறார்கள்? என்றெல்லாம் தீர யோசிக்காமல் ஆக்கல் வேலையிலோ அழித்தல் வேலையிலோ ஈடுபடுவது பெருத்த மதியீனம் என்று பொறுமையுள்ள விவேகிகள் ஒப்புக்கொள்ளுவார்கள்.

அடியைப் பிடித்து துவக்குவோம். தொழிலாளிகள் என்பவர்கள் தங்கள் தேகத்திலுள்ள உழைப்புச் சக்தியினாலும் புத்தியின் உதவியாலும் பல வேறு தொழில்களைச் செய்ய சக்தி படைத்தவர்கள். ஆனால் இத்தொழில்களைச் செய்வதற்கு இன்றியமையாத சாதனங்களாகிய பொருள்கள் இவர்களிடம் இல்லை. இதை வைத்திருப்பவர்கள் முதலாளிகள். ஜீவனோபாயத்திற்கே தொழில் செய்து தான் ஊதியம் பெற வேண்டுமென்கிற நிலையிலிருக்கும் இத்தொழிலாளிகள் இம் முதலாளிகளின் உதவியை நாடியே யாகவேண்டும். இம் முதலாளிகளும் இவ்வுழைப்பாளிகளின் மூலம் தங்கள் வசமிருக்கும் முதலை பெருக்கலாம் என்று சபலப்படுகிறார்கள். தொழிலாளிகளை ஒன்றுகூட்டி கூலி கொடுத்து உற்பத்தியில் ஈடுபடுத்துகிறார்கள்.

முதல் எவ்வாறு பெருகும் என்பதை ஆராய்வோம். தொழிலாளிகளைக் கொண்டு செய்வித்த பொருள்களை உலகத்தினருக்கு விற்க முற்படுகிறான் முதலாளி. உலகத்தினர் இப்பொருள்களுக்கு என்ன மதிப்புக் கொடுக்கிறார்களோ அதுவே, “உற்பத்தி மதிப்பு” என்று வைத்துக் கொள்ளுகிறோம். இவ்வுற்பத்தி மதிப்பை தொழிலாளியின் கூலி, உற்பத்தியில் உபயோகிக்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்ததென்றே உலகத்தினர் கருதினார்கள். முதலாளி முதலைக் கொடுத்ததற்குப் பிறகு பண்டங்கள் மதிப்பிட்டு விலையாகும் வரையிலும் ஒரு வேலையிலும் ஈடுபடுவதில்லை. இப்பொழுது இந்த விலை கிடைத்தவுடன் ஒப்பிட்டுப் பார்த்தான். தான் செலவு செய்த திரவியத்தைவிட அதிகமாக உலகம் கொடுத்ததை யறிந்தான். இவ்வதிகப்படி கிடைத்த பொருளை “மிகைப்பட்ட மதிப்பு” என்றே கொண்டு தனக்கு லாபம் கிடைத்ததாக எண்ணினான். ஆகவே, இந்த லாபம் பெருகப் பெருக இதை முதலாக மாற்ற உடன்பட்டான். இப்படித்தான் முதல் பெருகும், வேறு வழியில் தானாகவே பெருகும் சக்தியோ சுருங்கும் சக்தியோ படைத்ததில்லை. இம்முதல் உலகத்தினர் கொடுத்த உற்பத்தி மதிப்பை பெற்று இயங்கும் வரையில் லாபத்தை எவ்வாறு அதிகப்படுத்துவதென்று யோசனைச் செய்தான். உழைப்பாளிகளின் கூலியைக் குறைத்தால் சிறிது லாபம் ஏறும் என்பதைக் கண்டான். உழைப்பாளிகளுக்கு வேறு வகையில்லாத நிலையில் இவனுடன் அதிகப் பேரம் செய்ய முடியவில்லை. குறைந்த கூலியை பெற்று வேலையைச் செய்தார்கள்.

இப்படி ருசி கண்ட முதலாளி உலகத்தினருக்கு இன்றியமையாத பொருள்களைக் கொடுக்கையில் ஏன் அவர்களிடமும் பேரம் செய்யக்கூடாதென்று சபலப்பட்டான். பேரம் செய்தான். பெருத்த உலகமும் பல சந்தர்ப்பங்களிலும் "உற்பத்தி மதிப்பை" முதலாளி இஷ்டப் பிரகாரம் மிகைப்படுத்தியே கொடுக்கும்படியாக ஏற்பட்டது.

இப்படி உலகத்தினிடமிருந்தும் அதிக லாபம் கிடைத்தபொழுது முதலாளி சிறிது சஞ்சலப்பட்டான். தன் குற்றம் வெளிப்படாதிருக்க உற்பத்தியிலீடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு கூலிக்கு மேல் சன்மானம் என்ற பெயரில், சிறிது தன் லாபத்தைப் பகிர்ந்து கொடுத்தான். இப்படி லஞ்சம் பெற்று தொழிலாளிகள் சிறுகச் சிறுக உலகத்தைச் சுரண்டும் முதலாளிக்கு உடந்தையானார்கள்.

ஆனால் தொழிலாளிகளிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சலசலப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில் தங்கள் கூலியையும் குறைக்கத் தயங்காத முதலாளி சன்மானமும் கொடுக்க முன்வந்ததெவ்வாறு என்று எண்ணமிடத் தொடங்கினார்கள். உண்மை மனதிற்கு பளிச்சென்று விளங்கியது. " உலகத்தை ஏமாற்றி கிடைத்த லாபத்தில் பங்கு ! உலகத்தினர் இதை யறியாமலிருக்கவே நம் வாயை யடைக்கிறான் ! சரி, இனி உலகத்தினரிடம் பகிரங்கப்படுத்துவோம் என்றால் நாம் இழுக்கும் வழிக்கு வருவான் " என்று தேறி இவர்களும் பேரத்தைத் துவக்கினார்கள். பல சந்தர்ப்பங்களில் உலகத்தினர்களை மத்தியஸ்தத்திற்கும் அழைத்தார்கள். இப்படித்தான் முதலாளித் தொழிலாளிச் சச்சரவுகள் துவங்கின.

இப்பொழுது உலகத்தினர், முதலாளி, தொழிலாளி என்று மூவர்களும் ஈடுபட்டு முறையிடுவதும் சமாதானம் செய்வதும் மறுபடியும் சச்சரவுகள் பெருகுவதும் சர்வசாதாரண சம்பவங்களாகி விட்டன.

நிஷ்பக்ஷபாதமாக தீர்ப்பளிக்கவோ கார்யங்களைச் செய்து முடிக்கவோ சுயநலம் எவ்வகையிலும் குறுக்கிடாமலிருக்க வேண்டும். கடமை என்று காரியாதிகளைச் செய்யும் நிஷ்காம்ய கர்மயோகிக்களைத் தவிர மற்றவர்கள் சுயநலத்தினின்றும் விடுபட்டவர்களில்லை. ஆகவே, உற்பத்தியான பொருள்களை எப்பொழுதும் வாங்கவேண்டிய நிலையிலிருக்கும் உலகத்தினர் "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்று வ்யவகாரங்களைக் கவனித்து வந்தார்கள். எந்த ஒரு கக்ஷியினர் வேலை நிறுத்தம் செய்தாலும், இக்கூட்டுறவிலிருந்து விலகிக்கொண்டாலும், உற்பத்தியே தடைப்படும் என்பது வெட்டவெளிச்சமாக இருக்கையில், இப்பெருங் கூட்டம் ஒன்றும் வழி காண இயலாத சுழலிலே சிக்கியது.

இந்தச் சுழலை யறிந்துகொண்ட முதலாளி உறிக்கு உறி தாண்ட துவங்கினான். லாபத்துடன் திருப்தி படையாது வட்டிக்கும் அடிகோலினான். தன்னிடம் இல்லாத முதலை தன் சகாவிடமிருந்து பெற்றுக்கொண்டு வட்டி கொடுக்க இசைந்தான். இந்த வட்டியையும் லாபத்தில் சேர்த்து வசூலித்து விடலாம் என்ற தைர்யம் பிறந்தது. சமுத்திரம் போன்ற உலகத்தினருக்கு இது ஒரு பொருட்டா என்றே எண்ணமிட்டு இவ்வக்கிரமத்திற்குத் துணிந்தான். கையாலாகாத உலகம் தன் சபலத்தை யடக்கி முதலாளிக்கு புத்திபுகட்டமுடியாத காரணத்தினால் இந்த சுமையையும் சிவனே என்று ஏற்கவேண்டியதாயிற்று. இம்முதலாளியிடம் பேரம் செய்யப்போக இவர்களின் பலஹீனத்தை யறிந்த முதலாளி "ஒட்டகூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்"என்று லாபத்திற்குமேல் வட்டியையும் உலகத்தினர் தலையிலே சுமத்தினான்.

இவ்விதமே பல நூற்றாண்டுகள் ஓடுகின்றன. தொழிலாளி ஏதும் செய்ய வகையறியாது ஏன் ஈசுவரன் இந்த நிலையில் முதலாளிக்கு அடிமையாக உழலும்படி தன்னைப் படைத்தான் என்றே துக்கித்து வந்தான். தபஸைப்போல் இடைவிடாது துக்கித்து வந்ததின் பலன் மின்னலைப்போல் ஓர் அறிவைக் கொடுத்தது. உடனே ஓர் உணர்ச்சி பொங்க எழுங்

உங்கள் தொழிலாளிகளுக்கு நீங்கள் செய்யும் நன்மைகள்

எவ்வளவோ உண்டு. அதில் முக்கியமானவைகளில் ஒன்று அவர்களை இன்ஷ்யூர் செய்வதுதான். அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து தாங்களாகவே இன்ஷ்யூர் செய்துகொள்வதை எதிர்பார்க்கமுடியாது. ஆனால் முதலாளிகளாகிய நீங்கள் அவர்கள் பேரில் ஒருமிக்க பாலிஸிகள் எடுத்து, சிறு தொகைகளில் ப்ரீமியம் கட்டி அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் சந்தோஷமாக இருக்கச் செய்யலாம். அதனால் உங்களிடம் அவர்களுக்கு உள்ள மரியாதையும் அபிமானமும் நீடித்து வரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குத் தகுந்தபடி நாங்கள் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். விவரங்களுக்கு எங்களுக்கு எழுதவும்.

யுனைடெட் இந்தியா

பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்.

திருந்தான். மற்றைத் தொழிலாளிகளைக் கூப்பிட்டான். அவர்களுக்குப் போதனை செய்தான். “இம்முதலாளிக்கு நாம் உழைத்தாலொழிய உற்பத்தி காரியம் நடக்காது. இவ்வுலகத்திற்கும் நாம் உழைத்தாலொழிய அவசியப்பொருள் கிடைக்காது. நம் தலை எழுத்தோ நம் ஜீவனோபாயத்திற்கான பொருள்களை நம்மைப்போலுழைக்கும் மற்றைத் தொழிலாளிகளிடம் இருந்து பெறுகிறோமென்றாலும், இந்த முதலாளி மூலமாகவே அதை நடத்தவேண்டி இருக்கிறது. ஆனால் இந்த முதலாளி ஒரு காரியமும் செய்யாமல் முதலை வைத்துக்கொண்டு ஏனையோர்களைச் சுரண்டுகிறான். இப் பயங்கொள்ளி உலகம் அவனை அடக்க வழியில்லாது விழிக்கின்றது. நாம் விடுதலையடைய வேண்டுமானால் “நம் கையே நமக்குதவி” என்று உழைக்க முற்படுவோம். நமக்குத் தேவை முதலேயொழிய முதலாளி இல்லை. ஆகவே எந்தெந்த வழியிலே சாத்தியமோ அப்படி எல்லாம் இந்த அரிய உண்மையைத் தொழிலாளிகள் அறியும்படிச் செய்யுங்கள். ஒவ்வொரு தொழிலாளியும் இந்த மனப்பான்மையை பெற்றால் ஏற்படும் சுயநம்பிக்கையே ஒரு பெரும் புரட்சி. கூடவே, உலகத்தினரிடையேயும் இவ்விஷயங்களை விவரித்து தினசரி வியவகாரங்களுக்கு முதலாளி தேவையில்லை என்றும் நம்முடனே நேரிட வ்யவகாரங்கள் நடத்தலாமென்றும் தைரியம் கூறுவோம். அப்பொழுது தான் உலகத்தினரின் வெறுப்புக்கு பாத்திரனாகிய முதலாளியை அடித்து விரட்டி முதலைக் கைப்பற்றலாம். இதுதான் புரட்சி. “புரட்சி ஓங்குக” “முதலாளிகள் ஒழிக” தொழிலாளிகள் வாழ்க” என்று கோஷிப்போம்.

இப்படி எல்லாம் பேரமும் சினேகமும் செய்யப்படும் உலகமென்பது வேறு வர்க்கமோ! இல்லை. ஒவ்வொரு முதலாளிக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஏனைய முதலாளிகளும் தொழிலாளிகளும் உலகமென்ற பெயரில் காட்சியளிக்கின்றார்கள். அதனாலே தான் உலகத்தினரில் முதலாளியை யாதரிப்பவர்கள் தொழிலாளியை யாதரிப்பவர்கள் என்று கக்ஷிகள் ஏற்படுகின்றன. இனம் இனத்தோடே சேர்கிறது. பெரிய இயக்கங்கள் என்கிறோம் இவ்வித ஆயத்தங்களை. இவ்விதம் உலகம் முதலாளி இவர்களின் மத்தியிலேயே மற்றைத் தொழிலாளிகளுக்கென்று அளிக்கப்படும் உபதேசங்களும் செய்யப்படுகின்றன. இந்தப் புரட்சித் தத்துவம் சிறுகச் சிறுக இம்முதலாளிகளின் மூளையிலும் பதிகின்றது. ஆனால் பழகிய சுகவாசத்தைவிட மனமில்லாமல் தொழிலாளர்களின் இபக்கத்தை கூடுமானவரையில் நசுக்கவே முயலுகிறார்கள்.

இப்படி வளரும் த்வேஷத்தைக் கண்டு முதலாளிகள் அஞ்சுகிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் பொருள்கள் எல்லாம் உழைப்பாளியாலேயே தயாராக்கப்படுகின்றவை. இவைகளை யனுபவிக்க அவர்களைப்போல் தாங்களும் உழைக்காமலேயே இதுகாறும் சமாளித்து வந்துவிட்டார்கள். இப்பொழுது பூரா வ்யவகாரங்களையும் இத்தொழிலாளிகளிடம் ஒப்புவித்து விட்டால் தங்கள் சுகவாசத்திற்கு வழியற்றுவிடுமே என்று பயப்படுகிறார்கள். வேறு தொழில்கள் அற்று தொழிலாளியாக மாறுவதற்கு இனி முடியுமா என்றும் தயக்கம். தொழிலாளிகளோ இவர்கள் நிலையைக்கண்டு சிறிதும் இரங்குவதாக இல்லை. அவன் மடிந்துபோகட்டுமே என்று எண்ணுகிறார்கள். ஆகவே தற்காப்பை யுத்தேசித்தே தொழிலாளிகளை முதலாளிகள் நசுக்கவும் பராக்குக்காட்டி ஏமாற்றவும் முற்படுகிறார்கள்.

கொஞ்சம் யோசனையுள்ள முதலாளி தன் லாபத்திலே சிறிது பாகத்தை இனாமாகத் தொழிலாளிக்குக் கொடுப்பதை விடுத்து அவர்களைப் பாகஸ்தர்களாகவே தன் தொழிலில் ஏற்படுத்திக்கொள்ள இணங்குகிறான். ஏற்கெனவே இருந்த நிலைக்கும் இதற்கும் பன்மடங்கு வித்தியாசமென்பதை யறிந்த தொழிலாளிகளும் இச்சீர்திருத்தத்தை ஏற்கிறார்கள். இதன் விளைவே தொழிலாளியும் முத

லாளியும் கூட்டாளிகளாகத் திகழும் பரஸ்பர உபகார சங்கங்களாகிய தொழில் நிலயங்கள். இதைத் தான் "ம்யூட்யுவல் அஸ்ஸோசியேஷன்" என்று கூறுகிறார்கள். இவைகளில் நேரிட அதிக லாபத்தைப்பெற அதிகப் பங்குகளைப் போடுகிறான் முதலாளி. இதை யறிந்த தொழிலாளிகள் தாங்களும் பங்குகளை யதிகரிக்க சந்தர்ப்பங்கள் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து ஜயம் பெறுகிறார்கள். இப்படி பங்குகள் தொழிலாளிகளுக்கு அதிகமாகிவிட்டால் முதலாளி புதியதொரு சுரண்டல் தத்துவத்தைக் கடைபிடித்து இவைகளை நடத்தும் பெருத்த தொழிலாளி, காரியதரிசி அல்லது நிர்வாக அங்கத்தினன் என்றெல்லாம் பெயர் வைத்துக்கொண்டு லாபத்தில் மிகப் பெரும் பாகத்தைத் தான் அடையவே பார்க்கிறான். லாபம் என்பதே சுரண்டல். ஆகவே இதைச் சுரண்டுவதற்கு, தேர்ச்சிபெற்ற முதலாளியை இவ்வழியில் தயாராகாத தொழிலாளியினலே தோற்கடிக்க முடியுமா? ஆகவே மறுபடியும் படை திரட்டுகிறார்கள். நயம், பயம் முதலிய பலவிதங்களில் புரட்சியை யுண்டாக்கி முதலாளியை அடியுடன் தங்கள் சங்கத்தினின்றும் விரட்டிவிட்டு தங்கள் முதலை வைத்துக்கொண்டு தாங்களே தொழிலை நடத்துகிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து, விரட்டப்பட்ட முதலாளி அனுசரித்துக் காட்டிய சுவட்டிலேயே உலகினரைச் சுரண்டி மகிழ்கிறார்கள்! இந்தப் புது லாபம்பெறும் மயக்கத்தில் உலகிலுள்ள மற்றவர்களிடம் இப்புரட்சி யோங்குக என்று பிரசாரம் செய்து தொழிலாளிகளின் இயக்கங்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள். பல்லக்குச் சுமக்கும் போகிகளைப் பார்த்து பல்லக்கிலிருக்கிறவன் சொல்லுகிறான், "பல்லக்கில் போகிறது எவ்வளவு சுகமாக இருக்கிறது! நீங்கள் ஏன் இப்படி சுமந்து கஷ்டப்படுகிறீர்கள்; பல்லக்கில் ஏறப் பிரயத்தனம் செய்யுங்கள். இந்த அடிமைத்தனையினின்றும் விடுதலைப் பெறுங்கள்". ஆனல் சுமக்கிறவர்களில் ஒருவன் பல்லக்கில் ஏறும்போது பதிலுக்கு தான் இறங்கி பல்லக்கைச் சுமக்கவேண்டும் என்பதை மறக்கிறான். இந்நிலையையே யோக்கும் விடுதலையடைந்த தொழிலாளி மற்றவர்களுக்குப் போதிப்பது. லாபத்தையே ஒழித்தாலொழிய மற்றைத் தொழிலாளிகள் விடுதலைபெற முடியாதென்பதை இவன் மறக்கிறான்.

இந்தத் தொழிலாளிகள் இயக்கம் உலகம் பூராவும் பரவி, புரட்சியை யுண்டாக்கி; முடிவில் ஜயம் பெற்றதென்று வைத்துக்கொள்ளுவோம். இப்பொழுது சுதந்திரமடைந்த தொழிலாளிகள் எல்லாம் ஒன்றுகூடுகிறார்கள். எல்லாவிதப் பொருள்களையும் ஒருவரே ஒரே இடத்திலேயே செய்ய முடியாது என்று அறிந்து தங்களுக்குள் பரஸ்பர உபகாரம் செய்துகொள்ளுவதென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். தொழில்களைப் பாகித்துக் கொள்ளுகிறார்கள். வெவ்வேறு தொழிற் சங்கங்களை வெவ்வேறு பாகங்களில் நிறுவுகிறார்கள். பிறகு ஒருவருடனொருவர் எல்லோரும் சேர்ந்தாற்போல் கேட்டும் கண்டும் வ்யவகாரங்களை நடத்த முடியாது என்ற காரணத்தினல் இதற்கென்று தங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுக்கிறார்கள். இப்பிரதிநிதிகள் மற்றைத் தொழிலாளிகளைப் போல் உழைக்கத் தேவையில்லை என்றும் இவர்களுக்கும் இவர்கள் குடும்பத்தினருக்கும் கவலை இல்லாது வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்படுமென்றும் அறிவித்து தங்களெல்லோருக்கும் பொதுவில்பண்டபரிவர்த்தனையை நடத்திக் கொடுக்கும் கைங்கர்யத்தில் ஈடுபடும்படிக்கு வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

இப்பிரதிநிதிகள் ஒன்று கூடுவார்கள். தங்கள் தங்கள் வர்க்கத்தினரின் தேவைகளை மற்றவர்களுக்கு விளக்குவார்கள். பிறகு தங்கள் வர்க்கத்தார் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்பதையும் கூறுவார்கள். பிறகு ஒவ்வொரு உற்பத்தியும் தேவைக்குத் தகுந்த அளவு அமைகிறதா என்று யோசிப்பார்கள். தேவைக்குமேல் அதிகமாகவோ சம

மாகவோ கிடைத்தால், சிரமம் இல்லை. ஆனால் குறைந்துவிட்டால் எவ்வாறு உற்பத்தியை யதிகப்படுத்துவதென்று கலந்தாலோசிப்பார்கள். உற்பத்தியை யதிகரிப்பது சாத்தியம் இல்லை என்றேற்பட்டால் எவ்வாறு தேவையைக் குறைப்பதென்றும் யோசனை செய்வார்கள். இந்தத் தொல்லைகளே இவர்களின் முழுக் கவனத்தையும் கவரும். பிறகு கூடுமான வரையில் சமாளித்துப் பார்ப்போம் என்று கலைவார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலை தீவிரமாக நடக்கும். மற்றவர்களின் தேவைக்காகத் தீவிரமாக இத் தொழிலாளிகள் உழைப்பார்கள். ஒரு முதலாளியின் தேவைக்கு உழைத்ததுபோக பலஆயிரக் கணக்கான முதலாளிகளுக்கென்று சொல்லுவோமா!

தேவைக்குத் தகுந்த உற்பத்தி சாத்தியமாகாத நிலையில் தேவையைக் குறைத்துக் கொள்ள ஓர் நியதி வேண்டுமே! இதை யார் எவ்வாறு அமுலுக்குக் கொண்டு வருகிறது? உனக்கு இந்த பொருள் வேண்டாம் என்று எவ்வாறு கூறுவது? இப்படி எல்லாம் ப்ரச்னைகள் எழும். இந்த பொறுப்பை எந்தத் தனி மனிதன் ஏற்றுக்கொண்டாலும் பாரபக்ஷம் செய்கிறானென்றே கூக்குரல் கிளம்பும். இவனே முதலாளி என்றும் கூறத் தொடங்குவார்கள்.

ஆகவே தேவையைக் குறைத்துக் கொள்ளுவதே ஒரு பெருமை என்றெண்ணும் வகையில் பிரசாரம் துவங்கும். "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று மீண்டும் உலகத்தினர் உணர்வார்கள். இப்படி போதுமென்று சொல்லக் காரணம் தேடுவார்கள். சிற்சில நன்மைகளை யடையவும் சிற்சில சக்திகளைப் பெறவும் ஆகாரத்திலும் வ்யவகாரங்களிலும் சில நியமங்கள் அவசியம் என்று உணர்ந்து அதை யனுஷ்டிக்க ஆரம்பிப்பார்கள். இவ்விதம் நியமானுஷ்டானம் பெருகிய பிறகு ஏற்படும் சந்ததிகளுக்கும் மூதாதையர் சுவட்டிலே கலைகளை பயிலுவதே சௌகரியமாக ஏற்படும். வேறு வகையில் போக எத்தனித்தால், மறுபடியும் குழப்பம் சமூகம் பூராவிலும் ஏற்பட்டுவிடும். இவ்வாறு ஒவ்வொரு தொழில் வளர்ச்சியும் ஒவ்வொரு வகுப்பினர்பால் தங்கும். இதே யனுபவத்தில், பயன் தரக் கூடியது என்ற விவேகம் பூரண விடுதலைக்குப் பிறகு இயங்க, பெருந் தொழிலாளர்கள் அனுபவத்தில் தேர்ந்தறியும் உண்மையாகத் துலங்கும் என்பதை இப்பொழுதே எத்தனை பேர்கள் அறிய முற்படுவார்கள்!

இவ்விதம் புத்துணர்ச்சி கொண்டு தொழில்கள் பல நாட்கள் தங்கு தடையில்லாமல் நடந்து வருகின்றன. மனித வர்க்கத்தை சோம்பல் என்கிற அரக்கன் அணுகி உழைப்பில் ஒரு வருத்தத்தைக் காணும்படி செய்கிற வரையில் வேலையின் மத்தியில் ஒருவரும் ஓய்வைத் தேடுவதில்லை. இச்சோம்பலுக்காளான தனி மனிதன் ஆதியில் ஒருவரும் பிறகு பலரும் என்று கொள்ளவேண்டும்.

சபலசித்தம் காரணமாக ஓய்வை வலுவில் தேடி வேலையில் சிறிது தவக்கஞ் செய்த அந்த மனிதன் எவ்வளவு பேர்கள் தீவிரமாக உழைக்கிறார்களென்று கவனித்தான். போதுமான உற்பத்திக்கு இவர்கள் உழைப்பே போதுமென்று சமாதானம் செய்துகொண்டு தன் உழைப்பைக் குறைத்துக் கொண்டான். மற்றவர்கள் சத்திய சந்தர்களாக ஒரே ஊக்கத்துடன் வேலை செய்வதைப் பார்த்து, அவர்கள் மத்தியில் புகுந்து, "இப்படி செய், அப்படி செய், சபாஷ்." என்றெல்லாம் பலவாறு கூறப் புறப்பட்டான். இப் புது மனிதனை இவர்கள் பொருட்படுத்தாது தங்கள் காரியத்திலேயே ஊக்கமாக இருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தை யுபயோகித்துக் கொண்டே இச் சோம்பல் மனிதன் தொழிற்சாலையின் தலைவனைப் போல் நடித்து பிரதிநிதியையும் தன் வலையில் சிக்க வைத்தான்.

தேவைக்கும் உற்பத்திக்கும் ஈடுகட்டுவதெவ்வாறு என்று பலவிதத்தில் குழம்பிக் கொண்டிருக்கும் இப் பிரதிநிதிக்குசமயசஞ்சீவியாக இச்சோம்பேறி

மனிதன் ஏற்படுகிறான். அப்போதைக் கப்போது உற்பத்தியின் நிலையை எடுத் தறிவிக்கவும் தேவைக்கு வெளிப் பொருள்களை வினியோகிக்கும் பொருப் பையும் ப்ரதிநிதி இவனுக்கே விட்டு விடு கிறான்.

சிறுகச் சிறுக தொழிற்சாலையில் மாறு தல்கள் தோன்றுகின்றன. தொழிலாளி வலையில் சிக்கிக்கொண்டு தனித்தியங்க வகை யறியாது விழிக்கிறான். இது காறும் தேவையானவைக ளெல்லாம் கிடைத்து வந்தது போக தங்கள் தங்கள் உற்பத்தியினளவிற்கே வெளிப் பொருள் களும் பகிர்ந்து கொடுக்கப்படுவதை யுணர்கிறார்கள். ஏனென்றால் வெளிப் பொருள்களுக் கீடாக உற்பத்தி சரிவரப் பெருக இது ப்ரதிநிதியே ஒப்புக் கொண்ட திட்டம் என்ற பதில் வரும். ப்ரதிநிதிக்கும் இத்திட்டத்தின் அவசியம் அறிவுறுத்தப்படும்.

குழந்தைகளுக்கும் முதியோர்களுக் கும் மற்றை அபலைகளுக்கும் தேவைக ளைத் தேடித் தர உழைக்கும் பொருப் பில் பெரும் பாகம் தனதே என்று குடும் பத் தலைவன் ஏற்று நிற்கும் சமூகத்தில் இந்த உற்பத்திக்கேற்ற வெளிப் பொருள் பங்கீடு மிக்க சிரமத்தைக் கொடுக்கிறது. தேவைக்குத் தகுந்த பொருள் கிடைக்க வில்லை. ஆகவே அதிகம் உற்பத்தி செய்ய அதிகம் வேலை செய்கிறான்: மற் றும் ஒரு சாரனுக்கு அதிகக் குடும்ப பாரம் இல்லாத வகையில் பொருள் தேவைக்கு மிஞ்சியே கிடைத்து விடு கிறது. உடனே தன் உற்பத்தியை குறைத்துக்கொண்டு ஒய்வு தேடுகிறான்.

இதைக் கவனித்து வந்த தலைமைச் சோம்பேறி ஒரு புதுச் சுரண்டல் வழி யைக் காண்கிறான். வெளிப் பொருள் வினியோகத்தை உழைக்கும் நேரத்து டன் பிணைத்தால் லாபம் அதிகம் என்று தேறி, நேரத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறான்.

மேலும் தன்னைப்போல் ஒய்வு எடுத் துக்கொள்ள முயலும் மற்றொரு தொழி லாளி தன் பதவிக்குப் போட்டியிடுபவன் என்று காண்கிறான். ஆகவே வலுவில் அவனை அழைத்து பொருள்களை சேக ரித்து வெளியே கொடுக்கவும் வெளிப் பொருள்களை தொழிலாளர்களுக்கு வினி யோகிக்கவும் முயலும்படி ஏவுகிறான். இப் படி பல தொழில்ளிகள் வியாபாரியாக மாறவே, தொழிலாளியின் தலையில் சுமை ஏறுகிறது. உற்பத்தி குறைகிறது. ஆகவே பலவாறு தேவையைக் குறைத் துக்கொள்ளும்படி அனுஷ்டான நியமங் கள் பிறக்கின்றன.

இதன் மத்தியில், சில தொழிலாளிகள் நேர ஒப்பந்தத்தில் ஒரு நன்மையைக் காண்கிறார்கள். கூலி பெற்றாலும் மேற் பார்வைக்கு ஆள் இல்லாதபொழுதெல் லாம் ஒய்வு எடுத்துக் கொள்ளலாம் என்றே தேறுகிறார்கள். இதைக் கண்ட தலைமையாள் மேற் பார்வைக்கென்று மற்றும் பலரைத் தொழிலினின்றும் விடு வித்து இத் தொழிலாளிகளின்மீது கண் காணிப்பு வைக்கிறான்.

இந்நிலையில் எஞ்சிய தொழிலாளி கள் வேலையின் கஷ்டத்தைத் தாங்காது மலைக்கிறார்கள், மேலே நோக்குகிறார்கள். அனேகம் பெயர்வழிகள் வேலை செய் யாமலேயே தங்கள் வேலையைக் கண் காணிப்பதும் சிலாகிப்பதுமாக இருப் பதைப் பார்க்கிறார்கள். இவ்வளவு பெயர் வழிகளையும் ஆட்டிவைக்கும் முதல் சோம்பேறியையும் காண்கிறார்கள். ஆத் திரம் கொண்டு "முதலாளி ஒழிக" என்றே மறுபடியும் கூச்சலிடுகிறார்கள்.

இவ்விதமே சக்கரம் சுழன்று சுழன்று வருகிறது. முதலாளிகளை எல்லாம் அழித்துவிட்டு தொழிலாளிகளே யாரம் பித்த வ்யவகாரங்களின் முடிவில் மறு படியும் முதலாளி முளைக்கிறான்! இப் படியே முதலாளிகளே யாரம்பிக்கும் சமுதாயத்தில் தொழிலாளிகள் எப்படித் தோன்றினார்கள் என்பது பல பொருளா தார தத்துவசாஸ்திரிகள் சரித்திர வாயி லாக விளக்கி இருக்கிறதை மீண்டும் இங்கு கூறாமல் விடுகிறோம்.

இப்பொழுது அமைதியாக ஆலோ சனை செய்யுங்கள். இச் சுழலிலிருந்து விடுபட முடியுமா? உலகப் பெரியோர்க ளெல்லாம் வழி காட்டியுள்ளார்கள்.

ஆனால் நமக்கு முன் இருந்தவர்களென்று நாம் அதை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்தால் அதற்கு அவர்களா பொருப்பு ?

அவர்கள் கூறியதின் சாராம்சம் அனுபவசாரமே. நாம் மேலே விவரித்த தொழிலாளி சமுதாயத்தில் நடந்தவைகளை பழமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். வெளிவ்யவகாரங்களை கண்காணித்தவர்கள் ஒரு சாரார். இவர்கள் புஜபலத்தாலும் தைரியமாக காரியாதிகளை செய்ய உலகத்தில் ஈடுபட்டு உத்ஸாகத்துடன்உழைத்த காரணத்தினாலும்“க்ஷத்திரியர்கள்” என்று வழங்கப்பட்டார்கள். இவ்வாறு உழைக்கும் தொழிலாளிகளின் பொருள்களை வாங்கி பரஸ்பர வினியோகத்திற்கு உதவியவர்களை எல்லாம் “வைச்யர்கள்” என்ற வியாபாரிக் கூட்டத்தில் சேர்த்தார்கள். யாதொன்றையும் கவனியாது சேவையே தன் கடமை என்று எல்லோருக்குமாக அல்லும் பகலும் கலங்காதுழைத்த அந்த மகா புருஷர்களை “சூத்திரர்கள்” என்று அழைத்தார்கள். இப்படி பலவாறு பாகுபாடு படுத்தவும், பிறகு அப்பாகுபாடுகளை நிலை நிறுத்தவேண்டிய ஆவச்யகத்தையும் வழியையும் அரசனைப் போன்றுள்ள பிரதிநிதிக்கு எடுத்து போதித்தும், எல்லாவர்க்கத்தார்களுக்கும் சமயோசிதமாக வழிகாட்டியும் வந்த அந்த ஆரம்ப சோம்பேறியை “பிராம்மணன்” என்று அழைத்தார்கள். இவர்களுக்குள் பொறாமை ஏற்படாதிருக்கும் பொருட்டு எந்த நிலையிலும் பூர்ணமான உழைப்பை கொடுக்கும்படியான கடமைகளை அவரவர்களுக்கென்றே விதித்தார்கள். எல்லோரிடையிலும் திருப்தியும் சாந்தியும் பெருகும்படியான தர்மங்களைப் போதித்தார்கள். இப்படி எல்லாம் ஆரம்பத்தில் சுரண்டல் மனப்பான்மையுடனே விதமாகத் தோன்றிய ஜனங்களின் அசுரகுணங்களை யடக்கி அவர்களைக் கொண்டே சாசுவதமான தெய்விக குணங்களை எல்லோருக்கும் புலப்படும் வகையில் வகுத்துக் கொடுத்த பழமையைக் கண்டு தலை நிமிர்ந்து கொண்டாடுவோமென்று கூற இன்னும் தயக்கமேன்?

சூரஸம்ஹாரத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். சூரனின் அசுரக்குணம் நீங்கியதே யொழிய சூரன் அழியவில்லை. அவனையும் உபயோகப்படும் விதத்தில் மயில்வாகனமாகவும் கோழிக்கொடியாகவும் கொண்ட சுப்பிரமண்யக் கடவுள் காட்டிய வழியையே பின்பற்றவேண்டும்.

இவ்விதம் சாந்தமாக பேதங்களை யழிக்க முடியாதென்று தெளிந்து ஒன்றுக்கொன்று உதவும் வகையில் திருத்தியமைக்கப்பட்ட சமூகத்தில், முதலாளி யார் ?

விவாஹம்

பிராமணர்கள், இதர ஹிந்துக்கள், மற்றவர்கள், விவாக ஸம்பந்தமான எல்லா சமாசாரங்களையும் நேரிலோ, எழுத்து மூலமோ தெரிவித்துக் கொள்ளலாம், கேட்டும் கொள்ளலாம். விவாஹமே மனிதர்களுக்கு முக்கிய ஸம்ஸ்காரம், அது காலத்தில் செய்யப்பட வேண்டியது இன்னும் விசேஷம்.

பிராமண விவாஹ ஸபா,

289, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

நான் படித்த முதற் கதைகள்

[கி. சாவித்திரி அம்மாள்]

இளம் பருவத்தில் நாம் படிப்பது சில சமயம் நம் மனதில் எவ்வளவு அழுத்தமாய்ப் பதிந்துவிடுகிறது! அவ்வாறு பதிந்ததனுலுண்டான மனோபாவம் அப்படியே பிற்பாடு மாறுமலும் இருக்கிறது. வயதான பிறகு நாம் படித்து ஆனந்திப்பதுகூட அத்தகைய ஆழ்ந்த உணர்ச்சியை நம் உள்ளத்தில் எப்போதும் உண்டாக்குவதில்லை. இது ஆச்சரியமல்லவா? 'சிறு பிராயத்தில் குறைகுணங்களை ஆராய்ந்து பார்க்கும் திறமை ஏது? வயதான பிறகுதானே இத்திறமை வருகிறது' என்று கேட்டால், அதற்குக் காரணம் ஒருவிதமான நம் உள்ளறிவு என்றுதான் கூறவேண்டும். அதுவே நாம் படித்ததன் குணவிசேஷத்தையறிந்து நம்மை அனுபவிக்கும்படி செய்கிறது என்று சொல்லலாம்.

எனக்கு ஏழெட்டு வயதிருக்கும். அந்த வயதிலேயே கதைப் புத்தகங்கள் படிப்பதில் எனக்குச் சுவை ஏற்பட்டிருந்தது. முதன்முதல் என் கையில் கிடைத்த கதை, காலஞ்சென்ற பண்டித - நடேச சாஸ்திரியார் இயற்றிய "திக்கற்ற இரு குழந்தைகள்" என்னும் கதையேயாகும். இதன் பிரதி இப்போது ஒன்றுகூடக் கிடைப்பது அரிது; இதைப் பதிப்பிப்பதுகூட அனேக வருஷங்களுக்கு முன்னமேயே நின்றுபோய் விட்டது.

நன்றாய்ப் படிக்கக்கூடத் தெரியாத வயதில், நமக்கு எவ்வளவு ஆசையாயிருந்தாலும், ஒரு புத்தகம் எளிதிலே நம் கையில் கிடைத்துவிடுமா? வயதில் பெரியவர்களா யுள்ளவர்கள், "ஆமாம், உனக்கென்ன விளங்கப் போகிறது?" என்று அலட்சியமாய்க் கூறிவிட்டு அதைத் தாங்கள் படிப்பதற்கு எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள் அல்லவா? அப்படியேதான் என் விஷயத்திலும் நேர்ந்தது. வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் படித்துமுடித்த பிறகே புத்தகம் என் கைக்கு வந்தது. அப்போதும் அது உருப்படியாக முழுப்புத்தகமாய் இல்லை. ஆரம்பத்திலும் முடிவிலும் அநேக பக்கங்கள் காணுமலிருந்தன. இருந்தாலும், என் சந்தோஷத்திற்கு அளவில்லை. புத்தகத்தை அது இருந்தபடியே படிக்கத் தொடங்கினேன். அது எவ்வாறு என் இளம் உள்ளத்தைக் கவர்ந்தது என்பது எனக்கு இப்பொழுதும் தெளிவாய் ஞாபகம் இருக்கிறது. கதை முற்றிலும் சரியாய்ப் புரிந்ததோ என்னவோ, நான் அதைக் கீழே வைக்க மனமில்லாமல் வெகுநாள் படித்தேன் என்பது மட்டும் என் நினைவில் இருக்கிறது. "திக்கற்ற இரு குழந்தைகள்" ஒரு சாதாரணக் கட்டுக் கதை. அதாவது முழுக் கற்பனைக் கதை என்றுதான் சொல்லவேண்டும். ஆசிரியர் அதை ஏதாவது ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியிருக்கலாம் என்றும் சந்தேகிக்க இடமிருக்கிறது. 'கமலாம்பாள் சரித்திரம்', 'பிரதாப முதலியார் சரித்திரம்' இவைகளைப்போல், உண்மையான நிகழ்ச்சிகளை ஒட்டி எழுதிய நாவல் என்ற வகையைச் சேர்ந்ததல்ல. ஆயினும், அது படிப்போர் உள்ளத்தில் உண்மையான உணர்ச்சியை எழுப்புவதில் நிகரற்றது என்று உறுதியாய்ச் சொல்லலாம். கதை சொல்லும் ரீதியும் நடையும் மிகவும் எளிமை வாய்ந்தவை. திறமையைக் காட்டிலும் அதில் அமைந்துள்ள உருக்கமேதான் நமக்குச் சிறப்பாகத் தோன்றக் கூடியது.

திக்கற்ற குழந்தைகளான ராதையும் அலமுவும் கதையில் வரும் வெறும் கற்பனைக் குழந்தைகளாயிராமல் உயிருள்ளவர்களாகவே நம்முன் தோன்றி தங்களுடைய சுகதுக்கங்களில் நம்மை முற்றிலும் ஈடுபடும்படி செய்துவிடுகிறுர்கள்.

இது பெரிய விஷயமல்லவா? இவ்வளவு தூரம் ஒரு ஆசிரியருக்குத் திறமை வந்துவிட்டால் அப்புறம் அவருக்கு வேறு என்ன பெருமைவேண்டும்? ஆனல், எழு வயதில் நான் அந்தக் கதையைப் படித்தபோது, எனக்கு இதெல்லாம் தோன்றவில்லை. ராதையும் அலமுவும் கறுப்பண்ணன் என்ற தோட்டக்காரனுடன் வழி நடந்து கஷ்டப்பட்டதும் பிறகு அந்தக் கறுப்பண்ணனது துணையும் இழந்து, இருவரும் தனியே பல துன்பங்களுக் குள்ளானதும் தான் என் மனதிற் பெரிதாய்ப் பட்டது.. நானும் அவர்களுடன் சேர்ந்து அக் கஷ்டங்களை யெல்லாம் என் மன உலகில் அனுபவித்தேன் என்று சொன்னல் மிகையாகாது.

ராதையின் தைரியம், செருக்கு, அவளது விரிந்த மனப்பான்மை எல்லாம் என் உள்ளத்திலும் அத்தகைய உணர்ச்சிகளையே எழுப்பக் கூடியனவா யிருந்தன. பச்சையப்ப முதலியார் தோட்டத்தில் வழி தெரியாமல் ராதை பயந்து தவிக்கும்பொழுது நானும் பயந்து தவித்திருக்கிறேன். தர்மப் பள்ளிக்கூடத்தில் கனகவல்லி சீமாட்டி ராதையை மட்டும் தன்னுடன் வந்து விடும்படி ஆசை காட்டிக் கூப்பிடுகிருள்; அப்போது, அவள் அதற்கு ஒப்பாமல், அலமுவை ஒரு கையால் பற்றிக்கொண்டு, "என் அலமுதான் என் அழகிய பொம்மை. என் செல்வம் எல்லாம்" என்று கம்பீரமாய்க் கூறுகிருள்; அச்சமயம் நானும் அக்காட்சியைக் கற்பனை செய்து பார்த்து அளவிலா ஆனந்தமும் நிம்மதியும் அடைந்திருக்கிறேன். பிறகு இரு குழந்தைகளும் ஒருவாறு கஷ்டங்களினின்றும் விடுபட்டு, படிப்படியாய் நல்ல நிலைமையை யடைவதைப் படித்து நான் கொண்ட மகிழ்ச்சி இவ்வளவு என்று சொல்ல முடியாது.

இலக்கியப் பயிற்சி இல்லாத - குண தோஷங்களைப் பிரித்து அறியத் திறமை இல்லாத - குழந்தைப் பருவத்தில் உதிக்கும் தூய்மையான உணர்ச்சிகளே ஒரு நூலின் சிறப்புக்குத் தக்க சான்று அல்லவா? வயதான பிறகு நம் குறைகளை ஆராய்ந்து அறியும் தேர்ச்சி பெற்று படிக்கும்போதுகூட அத்தகைய மனப்பூர்வமான உணர்ச்சி எழுவது சாத்தியமல்ல என்றுதான் தோன்றுகிறது. 'திக்கற்ற இரு குழந்தைகள்' சொந்தச் சரக்காயில்லாம லிருக்கலாம். உலகில் நடப்பதை அப்படியே சித்திரித்துக் காட்டாமல் கேவலம் கற்பனைக் கதையாகவு மிருக்கலாம். ஆயினும், இலக்கியக் கருத்தோடு நுட்பமாய்க் கவனித்துப் பார்ப்பவர்கள்கூடப் படித்து இன்புறச் செய்யும் சக்தி வாய்ந்தது என்றே நான் நிச்சயமாய் நினைக்கிறேன். இவ்வாசிரியர் இயற்றிய 'மதிகெட்ட மனைவி' 'கோமளம் குமரியானது', 'மாமி கொலுவிருக்கை' முதலிய கதைகளையும் நான் பிறகு வெகுவாய் அனுபவித்துப் படித்திருக்கிறேன். அவைகளுள் இன்றும் எனக்கு மிகவும் பிரியமானது, 'ஸ்ரீமாமி கொலு விருக்கை' என்ற ஒரு அபூர்வமான குடும்பக் கதையே யாகும்.

'திக்கற்ற இரு குழந்தைக'ளுக்குப் பிறகு நான் படித்து அனுபவித்த புத்தகம், காலம் சென்ற அ. மாதவையா அவர்கள் இயற்றிய 'பத்மாவதி சரித்திரம்'. இதைப் படித்தபோது எனக்கு முன்போல் அவ்வளவு சிறு வயசு இல்லை. பத்மாவதி சரித்திரம்போன்ற இலக்கியச் சிறப்பு வாய்ந்த நூலை ரசிப்பதற்கு ஏற்ற அறிவு சிறிது ஏற்பட்டிருந்தது. இது 'திக்கற்ற இரு குழந்தைக'ளைப் போல் ஒரு கட்டுக் கதை அல்ல. உயிரோடு நம்மிடையே வாழ்ந்து வரும் மனிதர்களின் உண்மை வரலாற்றைச் சொல்வதுபோல் எழுதப்பட்ட கதை. ஆகவே, இப்படிப்பட்ட கதையில் வரும் ஆண் பெண்களுடைய சுக துக்கங்களோ, அவர்கள் மனதில் தோன்றும் எண்ணங்களோ எல்லாம் இயல்பிற்கு ஒட்டியவாறே அமைந்ததாக வேண்டும் அல்லவா? இந்த நியதியின்படி பார்த்தால் 'பத்மாவதி சரித்திரம்'மிக்க உயர்தரமான வகையைச் சேர்ந்தது என்பதிற் சந்தேகமில்லை. ஆசிரியர் ஆங்கில இலக்கியத்தை நன்கு படித்து மிகவும் ஆழ்ந்து ரசித்த

வர் என்பது, புத்தகத்தைக் கையில் எடுக்கும்போதே நமக்குப் புலப்பட்டுவிடும். 'பத்மாவதி'யின் நடை 'திக்கற்ற இரு குழந்தை'களின் நடைபோல அவ்வளவு எளிய நடை அல்ல என்றாலும், பெரும்பாலும் சாதாரணப் பிராமணக் குடும்பங்களில் வழங்கக்கூடிய பேச்சு நடை என்றே சொல்லலாம்; மிகவும் சுத்தமானது; இயற்கை யோட்டம் நிரம்பியது. ஆங்கிலத்திலுள்ள உயர்ந்த நாவல்களுக்குச் சமமாக மதிப்பிடக் கூடியது. கதா பாத்திரங்கள் அனைவருடைய மனப்பான்மைகளையும் நன்கு உணர்ந்து இயற்கைக்கு விரோதமில்லாமல் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இந்த உண்மை படிக்கும்பொழுதே நமக்குத் தெளிவாய் விளங்குகிறது.

கதாநாயகி பத்மாவதி, அவள் கணவன் நாராயணன் இவ்விருவரையும் உண்மையான மனிதர்களென்றும் திருவல்லிக்கேணியில் உண்மையாகவே வசித்து வருபவர்களென்றும் நம்பி அவர்களை நேரில் பார்க்க வேண்டுமென்று நான் எவ்வளவோ தடவை ஆவல்கொண்டதுண்டு. அவர்களை அவ்வாறு வாஸ்தவமான மனிதர்களாகத் தோன்றும்படி செய்ததற்கு ஆசிரியருடைய திறமைதான் காரணமல்லவா? ஆயினும் கதையில் குற்றம் குறைகளே இல்லை என்று சொல்ல முடியாது. சம்பவங்கள் முழுவதும் வாழ்க்கையில் நடக்கக் கூடியனவாகவே அமையவில்லை என்பதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். (ஆனால் இது எனக்குப் பிற்பாடு ஏற்பட்ட அபிப்பிராயமே தவிர, முதன் முதல் கதையைப் படித்தபொழுது உண்டானதல்ல).

மனைவியின் நடத்தையைப் பற்றி வெகு காலமாகச் சந்தேகம்கொண்டிருந்த நாராயணன் ஒருநாள் பிற்பகல் திடீரென்று வீட்டுக்குத் திரும்புகிறான். வாயிற் கதவு வழக்கம்போல் தாளிடப்பட்டிருக்க உள்ளே மனைவி தனியே வருந்தும் குரலைக் கேட்டதும் ஒரே க்ஷணத்தில் அவன் கொண்டிருந்த சந்தேகம் எல்லாம் தீர்ந்துவிடுகிறது. ஆனால் அவனுக்கு ஏற்பட்ட நம்பிக்கை கதையைப் படிப்போருக்கும் ஏற்படுமோ என்பதுதான் சம்சயமாயிருக்கிறது.

“கற்பனையைக் காட்டிலும் உண்மைச் சம்பவங்களே சில சமயம் விசித்திரமானவை” என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. அம்மாதிரி எவ்வளவோ நடப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆயினும் உலக வாழ்க்கையை ஒட்டி எழுதப்படும் கதை என்றால், சம்பவங்களின் பொருத்தமே நமக்கு மிகவும் முக்கியமாகத் தோன்றிவிடுகின்றது அல்லவா?

'பத்மாவதி'யில் சாவித்திரி ஓர் உயர்ந்த சிருஷ்டி. பெண்மைக்கே எடுத்துக் காட்டாக, பொறுமையும் சாந்தமுமே வடிவெடுத்து வந்தவளென ஆசிரியர் அவளை வர்ணித்திருக்கிறார். அவள் அழகும் நற்குணமும், இளமையிலேயே கைம்பெண்ணாக நேர்ந்த அவள் துர்ப்பாக்கியமும் நமக்கு மிகவும் பரிதாபத்தை உண்டுபண்ணுகின்றன. அவள் அடர்ந்த கூந்தலைக் களைந்து அவகோலம் செய்த பிறகு ஒருநாள் தன் தோற்றத்தைக் காண விரும்பித் தனியே அவள் கண்ணாடியில் பார்த்துக்கொண்ட பொழுது சகிக்காமல் தன் நினைவற்றுக் கீழே விழுந்துவிட்டாள் என்று படிக்கும்போது, யார் உள்ளம்தான் உருகாமலிருக்க முடியும்? எப்படிப்பட்ட கஷ்டத்தையும் பொறுமையோடு சகிக்கும் ஒரு உத்தமப் பிராமணப் பெண்ணின் நிலைமையைத்தான் நாம் சாவித்திரியின் வரலாற்றில் காண்கிறோம். இன்னும், ஐம்பது வயதுக்கு மேல் சேஷ அய்யர் இரண்டாம் தாரமாகவோ மூன்றாம் தாரமாகவோ மணந்து கொள்வது, அதனால் விளையும் விபரீதங்கள் எல்லாம் வாழ்வில் நடப்பதையே சித்தரித்துக் காட்டுவதாயிருக்கின்றன. இவ்விஷயங்கள் பிராமண ஜாதியிலுள்ள கொடுமையான வழக்கங்களை நீக்கும் உத்தேசத்துடன் எழுதியதுதானே என்றாலும், அவை படிப்போரின் உள்ளத்தில் சென்று தைத்து, அவர்களை மனமிளகுமாறு செய்வது லகுவான காரியம் என்று

சொல்லமுடியுமா? இது கைதேர்ந்த ஆசிரியரால் அன்றி வேறு யாரால் சாத்தியமாகும்?

சுமார் 35 வருஷங்களுக்குமுன் திருநெல்வேலிப் பக்கத்திலே நடுத்தரமான அந்தஸ்துள்ள பிராம்மண குடும்பத்தின் வாழ்க்கை எவ்விதமானது என்று அறிய விரும்பினால் பத்மாவதி சரித்திரத்தைப் படித்து ஒருவாறு அறிந்துகொள்ளலாம். ஆனால் நான் படித்தபொழுது இவ்விசேஷங்களையெல்லாம் சரியாய்த் தெரிந்துகொண்டிருக்க முடியாது; என்றாலும் எனக்கிருந்த மதிப்பானது வாழ்க்கையின் இயல்பைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் எழுதும் முறையில் 'கமலாம்பாள் சரித்திர'த்தைக்காட்டிலும் 'பத்மாவதியே' மேம்பட்டது என்று வாதிக்கும்படி செய்ததுண்டு.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இப்பொழுது ஆர்வம்மிகுந்திருக்கிறது. அதன் பொருட்டு நவீன முறையில் மனப்பூர்வமான ஆர்வத்துடன் பாடுபடப் பலர் முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் முயற்சியும் நல்ல பயனுடையதாயிருக்கிறது என்றே கூறவேண்டும். ஆயினும், முதன்முதல் தோன்றிய மேற்படி நவீனங்களை இன்றும் தமிழ் இலக்கியத்தின் செல்வமாக விளங்குகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

BOOKS *By* K. S. VENKATARAMANI

		Rs.	A.
1. **Jatadharan & other Stories** : (A Collection of Short Stories)	...	1	8
2. **Kandan, The Patriot** : (A Novel of New India in the Making) 2nd Edition.	...	2	0
3. **Renascent India** : (A study of Indian Problems) 3rd Edition.	...	1	0
4. **A Day with Sambhu** : (Talks to a Boy) 2nd Edition.	...	0	8
5. **The Next Rung** : (A Constructive Study of Modern Civilisation) 2nd Edition.	...	1	0
6. **Murugan, the Tiller** : (A Novel of Indian Rural Life) 3rd Edition.	...	2	0
7. **On the Sand-Dunes** : (Musings of Life in free Verse) 2nd Edition.	...	1	0
8. **Paper Boats** : (Sketches of Indian Village Life) 5th Edition.	...	1	4
9. **The Indian Village** : (A Ten-Year Plan) (2nd Edition)	...	0	12
10. **High Ways of Astrology** : By Kumbha. (2nd Edition)	...	1	8
In Tamil :			
1. **Kandan The Patriot** : (By the Author himself)	...	2	0
2. **Murugan The Tiller** (By Krishna Kumri)	...	1	8
3. **Jatadharan**	...	1	12

SVETARANYA ASHRAMA,

34, Alamelu Mangapuram, Mylapore, Madras

நாட்டில் துணி பஞ்சமிருப்பதேன்?

[எம். ஏ.]

இந்த யுத்தத்தின் காரணமாக, சுமார் இரண்டு ஆண்டுகளாக, உணவுப் பொருள் மாத்திரமல்ல, மற்றும் அநேகச் சாமான்கள் கூட கிடைப்பது மிகவும் துர்லபமாய் இருக்கிறது. அப்படி கிடைத்தாலும் விலையோ சொல்லவேண்டியதில்லை ; ஒன்றுக்கு நாலாக விற்கிறது. தனவந்தர்களும், இந்த யுத்தத்தினால் உண்டான புதுப்பணக்காரர்களும் அதிக விலைவாசியின் சிரமங்களை நன்கு அறியமாட்டார்கள். ஆனால் ஏழை ஜனங்களும், கிராமங்களில் வசிக்கும் வறுமைக் குடியானவர்களுக்கும் இவ்வபரிமித விலைவாசியானது அதிக கஷ்டத்தைக் கொடுத்து வருகின்றது என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

மனிதனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், வசிப்பதற்கு வீடும் அவசியமானவைகள். உணவு விஷயமாக எல்லா நகரங்களிலும் அரிசி, கோதுமை, பங்கீடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் ஜனங்களுக்கு கொடுத்துவரும் உணவுப் பொருள்கள், அவர்கள் சாப்பிட தகுந்ததாய் இல்லை. சரியான சாப்பாட்டுப் பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. உணவுப் பொருள் கிடைப்பது எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறதோ, அதே மாதிரிதான் துணி கிடைப்பதும் சிரமமாக இருக்கிறது.

இந்த யுத்தத்தில் துணி விலைகள் உயர்ந்தாப்போல் சென்ற 1914-18வது மஹா யுத்தத்தில் கூட உயரவில்லை. உதாரணமாக பழுப்புகாடா leopard cloth 1943 மே மாதத்தில் ஒரு பவுண்டு எடை ரூ. 3-14-0 விற்றது. சென்ற மஹா யுத்தத்தில் இதே துணி ஒரு பவுண்டு மூன்று ரூபாயுக்குமேல் விற்கப்படவில்லை. 1939-ம் ஆண்டில் இதன் விலை 8 அணுதான். இப்பொழுது இது ரூ. 1-14-0 வீதம் விற்கிறது.

துணி விலை இவ்விதம் அதிகமாக நமது தேசத்தில் விற்பதைப்பற்றி ஜனங்களுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருக்கும். நம் தேசத்தில் ஏராளமாக பருத்தி விளைகின்றது. பருத்தியைக் கொண்டு நூல், நூற்று வஸ்திரம் நெய்து கட்டிக் கொள்ளலாம். இப்பொழுது நம் தேசத்தில் சுமார் 400 பஞ்சு ஆலைகள் உள்ளன. பிரதி வருஷமும் சுமார் 480 கோடி கஜம் துணி, இந்த ஆலைகளிலிருந்து வெளிவருகின்றன. சுமார் 2,00,000 தறிகளும், 100 லக்ஷம் நூல் நூற்கும் கருவிகளும் (spindles) இந்த 400 ஆலைகளிலும் உள்ளன. இதைத் தவிர ஏராளமான கைத்தறிகள் எல்லா மாகாணங்களிலும் இருக்கின்றன. இவைகள் சுமார் வருஷந்தோறும் 175 கோடி கஜம் துணியை நெய்கின்றன. சண்டைக்கு முன்பு நமது தேசத்தில் ஜப்பானிடமிருந்தும் இங்கிலாந்திடமிருந்தும் சுமார் 50 அல்லது 60 கோடி கஜம் துணிகள் இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. ஆகவே சராசரி வருடந்தோறும் நமது தேச மக்களுக்கு சுமார் 650 கோடி கஜம் துணி உபயோகத்திற்காக சண்டைக்கு முன்பு வேண்டியிருந்தது.

இந்தச் சண்டை யாரம்பத்ததிலிருந்து நமது தேசத்தில் துணி உற்பத்தி மிகவும் அபிவிருத்தி அடையவில்லை. 1938-வது ஆண்டில் நமது தேச பஞ்சாலைகள் சுமார் 400 கோடி கஜம் துணிதான் உற்பத்தி செய்தன. இப்பொழுது 80 கோடி கஜம் துணிதான் அதிகமாக இருக்கின்றன. இவ்வளவு துணிகளும் நம் தேச ஜனங்களுக்கே உபயோகத்திற்காக இருந்தால் துணிப் பஞ்சம் ஏற்பட்டிராது. ஆனால் இந்திய பஞ்சாலை

கள் ஐக்ய தேச துருப்புகளுக்கு 100 கோடி கஜம் துணிகளும் ஆஸ்த்ரேலியா, தென் ஆப்ரிக்கா இன்னும் இதர வெளி நாடுகளுக்கும் 100 கோடி கஜம் துணிகளும் வழங்கும்படி நேரிட்டது. 1942-வது ஆண்டில் இந்திய அரசாங்கத்தார், மஹாத்மா காந்தியையும் இன்னும் இதர பிரபல காங்கிரஸ்காரர்களையும் கைது செய்ததனுல், தேசம் பூராவும் கலவரங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக அநேக பஞ்சாலைகள் மூடப்பட்டன. துணி உற்பத்தி தடைப்பட்டது. துணிப் பஞ்சம் மேலிட்டது. நூல் விலை அதிகமாயிற்று.

இந்த சமயத்தில்தான், அதாவது 1943-வது ஆண்டு மே மாதத்தில் பழுப்பு காடா ஒரு பவுண்டு ரூ 3-14-0 விற்றது. இந்த விலை தாங்க முடியாமல் ஏழை ஜனங்கள் மிகவும் தத்தளித்தனர். சில பொது ஜன சங்கங்களும் பெரிய மனிதர்களும் அபரிமித விலையால் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தைக் குறித்து அரசாங்கத்தாரிடம் முறையிட்டார்கள். அதிக விலைகளை குறைக்க ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி கூறினுர்கள். அதே சமயத்தில் துணி விலை மாத்திரமல்ல; மற்றும் தங்கம், வெள்ளி, பருத்தி, மணிலாக்கொட்டை, இன்னும் அநேக சாமான்களின் விலை மிகவும் அதிகமாக இருந்தது. இந்திய அரசாங்கத்தாரும் அப்பொழுது இந்த அதிக விலைவாசிகளை குறைக்க வேண்டுமென்று பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக 1943-ம் ஆண்டு ஜூன் மாதம் கவர்மெண்டார் துணி விலைகளை குறைக்கப் போவதாக அறிக்கையிட்டார்கள். அதன் காரணமாக பம்பாய் மார்க்கட்டில் துணி விலை கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்தது. 1943-வது வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் கவர்மெண்டார் முக்கியமான 12 துணி ரகங்களுக்கு விலையை அமர்த்தினுர்கள். இத்துடன் வியாபாரிகளை அவரவர் சரக்குகளை சீக்கிரமாக ஜனங்களுக்கு விற்கும்படி வற்புறுத்தினுர்கள். மேற்படி நடவடிக்கைகளினுல் அபரிமித லாபக்காரர்கள் (Speculators) தங்கள் சரக்குகளை கொஞ்சம் விற்கும்படி நேரிட்டது. மேற்படி விஷயங்களை பார்வையிட துணிக் கட்டுபாடு போர்டு ஒன்று நியமித்தார்கள்.

துணிக் கட்டுபாடு போர்டு துணி விலைகளை கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க ஏற்பாடு செய்தது. சில்லறை வியாபாரிகள் துணிகளை மில் விலையிலிருந்து (எக்ஸ்மில்) நூற்றுக்கு இருபது சதவிகிதத்திற்குமேல் விற்க கூடாது என விதித்தது. எல்லா துணிகளிலும் மொத்த விலைகளையும் சில்லறை விலைகளையும் அச்சிட ஏற்பாடு செய்தது. 1943-வது ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்த ஏற்பாடுகள் முதன் முதலாக அமுலுக்கு வந்தன. அப்பொழுது இரண்டாவது தடவையாக துணி விலைகளை ரூ 1-க்கு $1\frac{1}{2}$ அணு வீதம் குறைத்தார்கள். பிறகு இந்த வருஷம் மார்ச் மாதத்திலும் ஜூன் மாதத்திலும், செப்டெம்பர் மாதத்திலும் முறையே துணிக் கட்டுபாடு போர்டு துணி விலைகளை குறைத்துக்கொண்டே வந்திருக்கிறது. இதன் காரணமாக பழுப்பு காடா ரூ 2-10-0 இருந்து இப்பொழுது 1-14-0க்கு சில்லறை விலை இறங்கி வந்திருக்கின்றது. இதேமாதிரி எல்லா துணிகளும் விலை குறைந்து இருக்கின்றன.

துணி விலைகளை இம்மாதிரி குறைத்ததற்காக நாம் துணிக்கட்டுபாடு போர்டை ஒருவாறு பாராட்ட வேண்டும். கட்டுபாடு போர்டு அமுலுக்கு வந்ததிலிருந்து விலைகள் நூற்றுக்கு 30-வீதம் குறைந்து இருக்கின்றன. இது ஒருபுறம் இருக்க, தேசத்திலோ துணிப்பஞ்சம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஆனுல் சர்க்கார் பெரிய உத்தியோகஸ்தர்களோ இதை மறுக்கிருர்கள். ஆனுல் பம்பாய் போன்ற பெரிய மார்க்கட்டுகளில் நமது இஷ்டம்போல் துணிகள் சர்க்கார் விலைக்கு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மல்கள், வாயில்கள், டோரியா, கேம்பிரிக்ஸ் முதலிய துணி ரகங்கள் கள்ள மார்க்கட்டிலேதான் வாங்கலாம். கள்ள மார்க்கட்டில் இதன் விலைகள் சர்க்

பதினாயிரம் பேர்

[ஏ. டி. கிருஷ்ணமாச்சாரியார் பி. ஏ., பி. எல்.]

பதினாயிரம் பேர் என்று சொன்னால் எத்தனை பெரிய கூட்டம் என்பது மனதில் பதிகிறதா? என்னமோ ஒரு பெரிய தேர், திருவிழாவுக்கு வருகிற அத்தனை பெரிய கும்பல் என்றுதான் உங்களுக்கெல்லாம் தோன்றும். அதை விடச் சிறந்த ஒரு வழியில் கற்பனை செய்து பாருங்கள். இந்தப் பதினாயிரம் பேரும் ஒருவர்பின் ஒருவராக நின்றுகொண்டு ரயில் வண்டி விளையாட்டு விளையாடினால் அடையாற்றிலிருந்து இராயபுரம் வரைக்கும் சென்னை நகரக் கடற்கரை நெடுக ஒரு சாரியா யிருக்கும்.

அத்தனை பேரும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு ஒரே பெரிய வட்டமாக நின்றார்களானால் புழலேரியை மாத்திர மல்ல, செம்பரம்பாக்கம் ஏரியையும் பூண்டி நீர் தேக்கத்தைக்கூட சுற்றி

கார் விலைகளைவிட 100க்கு 20க்கு மேல் 40 வரையில் அதிகமாக இருக்கிறதாக, நாம் கேள்விபடுகின்றோம். சில தினங்களுக்குமுன்பு ஸ்ரீவெல்லோடி, துணி லாகா கமிஷனர், கள்ள மார்க்கட்டுகள் கல்கத்தா பக்கம் மிகவும் அதிகம் இருக்கிறதென்று ஒப்புக்கொண் டிருக்கிறார்; இந்த திருட்டு மார்க்கட்டுகளை ஒழிக்க இன்னும் கட்டுப்பாடு போர்டு பிரயத்தனப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

கள்ள மார்க்கட்டுகள் எப்பொழுது ஒழியும் என்றால், எப்பொழுது துணி பட்டுவாடா அதிகமாக ஆகிறதோ அப்பொழுதுதான் இந்த கள்ள மார்க்கட்டுகள் ஒழியும். நிலக்கரிக் கஷ்டத்தால் சில பஞ்சாலைகளினுடைய வேலைகள் நிறுத்தும்படி ஏற்படுகிறது. உயர்ந்த துணி ரகங்கள் உற்பத்தி இப்பொழுது குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தத் துணிமேல்தான் ஜனங்களுக்கு மோஹம் அதிகமாக இருக்கிறது. தவிர, இன்னும் நமது தேசத்திலிருந்து அயல்நாட்டினருக்கு சுமார் 60 கோடி துணிகளும், ராணுவ இலாகாவுக்கு 60 கோடி துணிகளும் இப்பொழுது பட்டுவாடா செய்யவேண்டி இருக்கிறது. நூல் பஞ்சத்தால் இப்பொழுது கைத்தறிகளிலிருந்து சுமார் 120 கோடி கஜத்திற்குமேல் உற்பத்தி செய்ய முடியாது.

பஞ்சாலைகளிலிருந்து சுமார் 450 கோடி கஜம்தான் வருஷத்திற்கு வெளி வருகின்றன. சண்டைக்கு முன்பு நம் தேச ஜனங்களுக்கு சுமார் 600 கோடி கஜத்திலிருந்து 700 கோடி கஜம் துணி கட்டிக்கொள்ள வேண்டி யிருந்தது. இப்பொழுது 450 கோடி கஜம் துணியைக் கொண்டு நாம் திருப்தி அடையவேண்டியிருக்கிறது. நாட்டில் செலாவணிப் பெருக்கால், நமக்கு துணிப் பஞ்சம் மேலாகக் காண்பிக்கிறது. நம் நாட்டில் செலாவணி கையாடல் சண்டைக்கு முந்தி ரூ. 172 கோடியாக இருந்தது. இப்பொழுது ரூ.950 கோடியாக இருக்கிறது. இதனால் துணி உற்பத்தி அதிகமானால் ஒழிய, விலை மிகவும் குறையாது. கள்ள மார்க்கட்டுகள் ஏறக்குறைய இருந்துகொண்டுதான் இருக்கும். இதே மாதிரிதான் சண்டை முடியும்வரையில் இருக்கும் என்று தோன்றுகிறது.

இப்பொழுது ஏன் துணி உற்பத்தியை அதிகமாகசெய்ய முடியவில்லை; துணிப் பட்டுவாடா விஷயத்தில் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன, நம் தேசத்தில் பஞ்சாலைகள் எங்கு எங்கு அதிகமாக இருக்கின்றன, அதன் பலாபலன்கள், அபிவிருத்தி, அதன் லாபங்கள், முதலியவற்றை நான் அடுத்த இதழில் எழுதுகிறேன்.

வளையக் கட்டிவிடலாம். இவர்களுள் ஒவ்வொருத்தருக்கும் ஐ ந் து பேர் கொண்ட ஒரு குடும்பம் இருக்கிற தென்று வைத்துக்கொள்ளுவோம். அத்தனை பேரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஒரே வரிசையாய் நின்றால் எழும்பூரிலிருந்து விழுப்புரம் வரையிலும் சென்னையிலிருந்து வேலூர் வரையிலும், சென்னையிலிருந்து நெல்லூர் வரையிலும் நிற்கும் அந்த ஆள் வரிசை. இப்போது ஒருவாறு தெரிகிறதா எத்தனை பெரிய ஜனத்திரள் என்று?

இதை ஏன் சொல்ல வந்தேன் என்றால் இப்படி ஒரு பதினாயிரம் பேர் ஒன்றாய்க் கூடி நம் தமிழ் நாட்டில் நம் சென்னையில் ஒரு பெரிய ஸ்தாபனத்தை நடத்துகிறார்கள். அதுவும் நாற்பது வருஷமாய் நடந்து வருகிறது என்றால் நீங்கள் நம்புவீர்களா இலேசிலே! உண்மையாகவே சிறுகத் தோன்றி, முளைத்துக் கிளைத்து தழைத்து ஓங்கி வளர்ந்த ஸ்தாபனங்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குவதால்தான் இந்த ஸ்தாபனத்துக்கு ஆல மரத்தை அடையாளமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதுவும் ஆலம் விதையைப்போல் வெகுச் சிறிய அளவில் தோன்றின போதிலும் இன்று பல விழுதுகள் விட்டுத் தழைத்திருப்பதால், அரசாங்கத்துக்கும் படைகளுக்கும் கூட ஆதரவு அளிக்கும் நிலைமையிலிருக்கிறது.

ஆமாம். திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு பண்டகசாலைகளைத்தான் சொல்லுகிறேன். இதை 1904ம் வருஷம் ஏப்ரல் மீ 9உ திருவல்லிக்கேணியில் மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரவர்களும் அவர் சகாக்கள் பதின்மூவரும் சேர்ந்து தொடங்கினார்கள். நகரத்தில் வாழும் ஏழைக் குடிகள் நாணயமான சாக்குகளை நயமான விலைக்கு வாங்கி நம்பிக்கையுடன் உபயோகப்படுத்துவதற்கு இந்தக் கூட்டுறவு பண்டகசாலை முறையே சிறந்தது என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

1903ம் வருஷம் கலாசாலைகள் திறந்தபோது திருவல்லிக்கேணியிலும் அதைச் சுற்றியுள்ள பேட்டைகளிலும் வசித்துவந்த மாணவருள் சிலர் ஒன்று கூடி வாரா வாரம் ஓர் இடத்தில் சேர்ந்து பொருளாதார விஷயங்களைப்பற்றி விவாதித்து வந்தார்கள். நாள் ஆக ஆக வெறும் விவாதத்தில் ஆசை குறைவதைப் பார்த்து வாரம் ஒருவர் வீட்டில் கூடி அவர் அளிக்கும் பலகாரத்தையும் தேநீரையும் அருந்திவிட்டு பிறகு பேசுவது என்று ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த லட்டுப் பலகாரத்துக்குக்கூட மசியாமல் டிசம்பர்மாதத்துக்குள்ளேயே பல அங்கத்தினர்கள் சோர்ந்து நின்றுவிட்டார்கள். ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் அவர் உபாத்தியாயர் டி. கே. ஹனுமந்தராவும் மாத்திரம் சளைக்கவில்லை.

1903, டிசம்பர்மீ அகில இந்திய காங்கிரஸ் மகா சபை சென்னை மாநகரில் கூடிற்று. அதற்குப் பல மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் வருவார்களல்லவா? வங்காளத்திலிருந்து அம்பிகா சரண உக்கீல் என்பவர் வந்திருந்தார். அவர் அப்போதுதான் புதிதாக இந்நாட்டில் பரவத் தொடங்கின கூட்டுறவு இயக்கத்தில் அளவில்லாத பற்றுக்கொண்டவர்; கல்கத்தா கூட்டுறவு யூனியன் காரியதரிசி. அவர் திருவல்லிக்கேணி இளைஞர்களைக் கண்டு பேசினார். சாஸ்திரியார் அவருக்கு விருந்து வைத்து தம்முடைய சங்க நண்பர்களை எல்லாம் அழைத்திருந்தார். உக்கீல் இளைஞர்களுடைய ஊக்கத்தை மெச்சி, அவர்களுக்கு கூட்டுறவு தத்துவத்தைப் போதித்து, கல்கத்தா கூட்டுறவு யூனியனில் சேரும்படி அழைத்தார்.

உக்கீல் திரும்பிப் போன பிறகு, இளைஞர்கள் ஒன்றுகூடி ஆயிரம் ரூபாய் முதல் சேர்ந்தவுடனே ஒரு (மளிகைக் கடை) ஸ்டோர் வைக்கிறதென்று நிச்சயித்தார்கள். பேராசிரியர் டி. கே. ஹனுமந்தராவு தளராத ஊக்கத்துடனும் ஓயாத முயற்சியுடனும் கண்டவருக்கெல்லாம் கூட்டுறவு தத்துவத்தைப்பற்றி நீண்ட பிரசங்கம் செய்து அவர்கள் மனதை திருப்ப பிரயாசைப்பட்டு வந்தார். மூன்று மாசம் ஓயாமல் செய்த பிரசா

ரத்தின் பலனாக பதினாறு அங்கத்தினர் களையும் முன்னூறு ரூபாய் மூலதனமும் சேர்க்க முடிந்தது.

அதற்குமேல் தாமதம் பண்ணாமல் உள்ளத்தைக்கொண்டே ஊராள வேண்டும் என்ற பழமொழியைக் கடைப் பிடித்து ஏப்ரல்மீ 9௳ காலை $7\frac{1}{2}$ மணிக்கு கடையை திறந்தார்கள். பண்டித எஸ். எம். நடேச சாஸ்திரிகள் முதல் 'போணி' பண்ணி மஞ்சள் குங்குமம் கற்கண்டு வாங்கினார். அன்று முழுவதும் விற்ற வரவு அரைக்கால் குறைய நூறு ரூபாய்! இதைக் கண்டு, முன்னே ஏளனம் செய்துகொண்டிருந்த பேர்வழிகள் எல்லாம் மனம் மாறி இப்புது இயக்கத்துக்குப் பக்தர்களானார்கள். அந்த முதல் பதினாறுபேரில் பிற்காலத்தில் 'தாக்ஷிணாத்ய கலாநிதி', 'மகா மகோபாத்யாயா', 'டாக்டர்' முதலிய விருதுகளை வாங்கித் தமிழுக்கு அளித்த தமிழ் தாத்தாவாகிய உத்தமதானபுரம் சாமிநாதையரும் ஒருவராவார்.

கடை வைக்கிறபோது கணக்குப் பிள்ளையும் ஒரு செட்டியாரும்தான் சிப்பந்திகள். ஆளுக்கு இரண்டு வராகன் சம்பளம்! கணக்குப் பிள்ளைக்கு வியாபாரம் என்றாலே இன்னது என்று தெரியாது. செட்டியாரோ, அதற்கு முந்தி மளிகைக் கடையில் இருந்தவர். அவருடைய சாய்காலால் ஒரு தராசும் படிக்கட்டுகளும், அளவு படிகளும் இரவலாய்க் கிடைத்தன. இந்தச் செட்டிக் குடித்தனத்துக்கு ஏற்றாற்போல பண்டகசாலை அங்கத்தினர்களும் சாமான் கட்டிக் கொடுக்கிற பொட்டணங்களின் தாள்களையும் சரகுகளையும் பத்திரமாகச் சேர்த்துவைத்து மறுபடி சாமான் வாங்க வரும்போது திரும்பிக் கொண்டுவந்து ஸ்டோரிலேயே கொடுப்பார்கள். அப்படியிருந்தது அவர்களுடைய சிக்கனம்!

இந்த விதமாக இரண்டு சிப்பந்திகளைக் கொண்ட கடையில் ஆறு மாசம் ஆனதும் வந்த லாபத்தை அங்கத்தினர்கள் அவரவர் வாங்கின கொள்முதல்படி ஈவாகப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ரூபாய்க்குக் காலணா வந்தது! சிப்பந்திகளிரண்டு பேருக்கும் சோமன் ஜோடு வாங்கிக் கொடுத்தார்கள். இந்த நல்ல வழக்கம் இன்னும் அமுலில் இருந்து வருகிறது. இந்தக் கடையின் நன்மைகளைப் பார்த்து மயிலாப்பூர் வாசிகள் தங்களுக்கும் இம்மாதிரி ஒரு கடையிருந்தால் நன்றாயிருக்கும் என்று எண்ணி தங்கள் பேட்டையில் ஒரு கிளை வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் விருப்பப்படி மறு வருஷம் கடை வைக்கப்பட்டது. பிற்பாடு வருஷா வருஷம் ஒரு புதுக் கிளை ஏற்படுவது வழக்கமாய்விட்டது. 1942ம் வருஷம் யுத்த பீதியால் ஊர் காலி ஆகிறதைப் பார்த்து அரசாங்கத்தார், இப்படி வர்த்தகர்கள் 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை' போல் ஓடிப் போய்விட்டால் இருந்து காப்பாற்றுவோர் யார் என்று யோசித்து திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு பண்டகசாலைதான் ஓடாமல் நிற்கும் என்று தெளிந்து அவர்களுக்குப் பொருளுதவியும் செய்து இன்னும் பல கிளைக் கடைகளை திறக்கச் சொன்னார்கள்.

நாற்பது வருஷத்தில் எத்தனை மாறுதல்கள், எத்தனை அபிவிருத்தி, எத்தனை சோதனைகள், எத்தனை வெற்றிகள்! இப்போது சராசரி வியாபாரம் ஒரு கோடி ரூபாய்க்கு நடக்கிறது. இந்தச் சென்னை நகரத்திலும் இதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் குறுக்கும் நெடுக்குமாக இந்த டி. யு. ஸி. எஸ். கடைகள் விரவிக் கிடக்கின்றன. யாரும் தங்கள் வீட்டை விட்டுக் கிளம்பினால் இருநூறு கஜ தூரம் போவதற்குள் இந்தக் கடை ஒன்றைப் (ஆல மரக் குறி போட்டிருப்பதை) பாராமல் தப்ப முடியாது. இப் பண்டக சாலையில் இன்று உள்ள அங்கத்தினர் தொகை பதினாயிரம்.

ஒவ்வொரு கடையும் ஒரு தனி பஞ்சாயத்துச் சபையின் நிர்வாகத்தில் இருக்கிறது. அக்கடையின் சிப்பந்திகளை வைக்கவும் எடுக்கவும் அவர்களை வேலை வாங்கவும், அக்கடையையே இடம் விட்டு இடம் மாற்றவும், கடைக்கு விடுமுறை விடவும், அங்கத்தினர்களைச்

ஆண்டு நிறைவு

[பி. என். தியாகராஜன்]

நாளைப் பொழுதுவிடிந்தால் ஆண்டு நிறைவு விழா. ஸ்ரீமான் ரணகண்டமய்யர் வாசலில் போடப்பட்ட விசாலமான பந்தலில் நின்றுகொண்டு ஆட்களை வேலை ஏவிக்கொண்டும், குமாஸ்தாக்களுக்கு உத்திரவு பிறப்பித்துக்கொண்டும் கடுமையாக மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தார். பந்தலில் ஒரு ஓரத்தில் கை கட்டிக்கொண்டு எப்பொழுது எஜமான் கவனிப்பார் என்று ஆவலோடு எதிர் பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தான் பண்ணையாள் கந்தன். ரணகண்டமய்யர் திரும்பினார். கந்தன் நிற்பதைக் கண்டார். கோபத்தை வரவழைத்துக் கொண்டு, "ஏண்டா, ரயிலடிக்கு வண்டியனுப்பச் சொன்னேனே. எவ்வளவு வண்டிகள் அனுப்பியிருக்கிறாய்? உலக்கை மாதிரி வந்து நின்றுகொண்டிருக்கிறாயே! நீயும் ரயிலடிக்குப் போனால் என்ன?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார்.

கந்தன் முதலில் சற்று பயந்தான். இருந்தாலும் இது அவனுக்கு சகஜமாய் போய்விட்டது. மனதை திடப்படுத்திக் கொண்டு, "பத்து மாட்டு வண்டியும் ரெண்டு மோட்டார் வண்டியும் அனுப்பிருக்குங்க" என்று தணிவாக பதில் சொன்னான்.

"உனக்கு வேலையில்லையா? ஏன் இங்கு வந்து நிற்கிறாய்" என்று அய்யர் கர்ஜித்தார். "என் பொண்சாதி பிரசவ வேதனைப் படுதுங்க. கொஞ்சம் ராவைக்கு மட்டும் ரசா கொடுத்தால் தேவலை. கருக்கல்லே அடிமை வந்துபோடறேன்" என்று தழுதழுத்த குரலில் கூறினான் கந்தன். இதைக்கேட்டதும் அய்யர் ருத்திர மூர்த்தியின் அவதாரமெடுத்தார். புருவங்கள் மேல் நெற்றிக்கு ஏறின. விழிகள் வெளிவந்தன. கந்தன் நடுங்கிவிட்டான். "கழுதை, ரஜா கேட்பதற்கு இதுதான் சமயம் பார்த்தாயோ? நீதான் போய் உன் பெண்டாட்டிக்கு மருத்துவம் பார்க்கப்போகிறாயோ? உன் ஆத்தா எல்லாம் கவனித்துக்கொள்வாள். போடா போ, உன் வேலையைப் போய்ப் பார்" என்று படபடவென்று பேசினார் அய்யர். "ஆத்தாவுக்கு வயசு ரொம்ப ஆயிடுச்சுங்க. அதோடுகூட இரண்டு நாளாய் காயலா. குளந்தைகள் வேறு யமனாய்ப் படுத்துதுங்க. ராவைக்குமட்டும் போய்ட்டு காலையிலே ஓடியாந்துடறேன் சாமி" என்று கெஞ்சினான். "முடியாது! இரவு எல்லா வேலையும் செய்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்று அய்யர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். கந்தனுடைய பரிதாபகரமான

சேர்க்கவும், இப் பஞ்சாயத்துக்கே அதிகாரம் உண்டு. இப் பஞ்சாயத்தார் சுமார் முன்னூறு பேர் ஆறு மாசத்துக்கொரு விசை திருவல்லிக்கேணியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் கூடி வரவு செலவு திட்டங்களையும் நிர்வாகிகள் அறிக்கையையும் விவாதித்து நிறைவேற்றுகிறார்கள். இந் நடவடிக்கைகள் சட்ட சபையைப்போல சிரிய அறிவையும் ஆழ்ந்த அநுபவத்தையுங்கொண்ட சொற்பொழிவுகள் நிறைந்திருக்கும். இந்தப் பண்டகசாலையே ஜனநாயகத் தத்துவத்துக்கு ஒரு கல்விச்சாலை என்னலாம் போலிருக்கிறது.

இக்கடைகளைக் குறித்து ஒரு கவி எழுதுகிறார்.

"விற்ப தொரே விலை மிக்க நலம் இக்கடையில்
அற்பத் தனங்கள் அணுகாவாம்—கற்புடைய
மங்கையர்கள் வந்தாலும் மைந்தர்களே வந்தாலும்
சங்கையற வாங்கத் தகும்."

என்று பதினாயிரம் பேர் சேர்ந்து செய்கிற இப்பெரு முயற்சியைப் பின்பற்றுங்கள்.

தோற்றங்கூட அய்யருடைய கல் மனதைக் கரைக்க முடியவில்லை. பாபம், கந்தன் கையைப் பிசைந்தவண்ணம் நின்றுகொண்டிருந்தான். இன்னும் கொஞ்சம் தன் வீட்டின் நிலைமையை அய்யருக்கு விளக்கிக் கூறலாம் என்று நினைத்தான் கந்தன். ஆனால் "ஏன் இங்கேயே நின்றுகொண்டிருக்கிறாய்! ஊம்! போ, போய் வேலையைப் பார்" என்ற அய்யரின் கர்ஜனை அவனை நாவெழவிடாமல் அடித்துவிட்டது. கந்தன் குனிந்த தலையுடன் பந்தலை விட்டகன்றான்.

மனக்காடு கிராமத்தில் ரணகண்டமய்யர் ஒரு பெரிய மிராசுதார்; அந்த வட்டாரத்திற்கே அவர் ஒரு பெரிய புள்ளி. ரணகண்டமய்யர் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் சிரிக்கும் குழந்தையும் அழ ஆரம்பிக்கும். அவ்வளவு பொல்லாத மனுஷ்யர். முன் கோபக்காரரும்கூட. வயது 56 ஆகிறது. இன்னும் நாலு வருடத்தில் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாட வேண்டுமென்று, அதற்கு இப்பொழுதே திட்டம் போட்டுக்கொண்டிருந்தார். ஆனால் ஆளைப் பார்த்தால் 56 வயது மதிப்பிட முடியாது. நல்ல சிவந்த பருத்த உடல், உடலுக்கேற்ற உயரம். எப்பொழுதும் புகையிலையும் வெற்றிலையும் வாயில் அடைத்துக்கொண்டு கடுவம் பூனை போன்று "உம்" என்றே யிருப்பார். நஞ்சை புஞ்சை மொத்தம் இருநூறு வேலிக்குச் சொந்தக்காரர். கையில் கொஞ்சம் ரொக்கமும் உண்டு. அதில் கொஞ்சம் லேவாதேவியும்கூட. ரணகண்டமய்யருக்கு ஒரே ஒரு மைந்தன். அந்த மைந்தனுக்கு நீண்டநாள் கழித்து ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு தான் நாளைக்குப் பொழுதுவிடிந்தால் ஆண்டு நிறைவு.

கந்தன் ரொம்ப நாளாக அவர் வீட்டுப் பண்ணையாள். கந்தனுக்கு சுமார் 40 வயது இருக்கும். அவன் உடல் உழைப்பின் காரணமாக மெலிந்திருந்தது. அவன் நெற்றியிலுள்ள சுருக்கங்களிலிருந்து அவன் வாழ்க்கையில் காலதேவனின் நீண்ட சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறான் என்பது புலப்படும். கந்தன் பெரிய சம்சாரி. அவன் குடும்பத்தைக் காப்பாற்ற போதிய அளவு அவன் சம்பாதித்தான். பாழுங் குடி முதலிய கெட்ட பழக்கங்கள் அவனிடம் கிடையாது. கணவன் கொடுத்ததை வைத்துக்கொண்டு சிக்கனமாக குடும்பச் செலவு செய்யும் ஆற்றல் படைத்த 'அன்ன'த்தை அவன் மனைவியாக அடைந்தது அவன் அதிர்ஷ்டமே.

ஐந்து நாட்களாக கந்தன் அவன் வீட்டிற்கே செல்லவில்லை. அவன் சாப்பாட்டிற்கே நேரமில்லை யென்றால் வீட்டிற்குப் போக எங்கு நேரமிருக்கப் போகிறது. வாயில் ஈ புகுந்தது தெரியாமல் ஓடி உழைக்கின்றான். அன்று காலை அவன் மனைவிக்கு உடம்பு சரியில்லையென்று அவன் மூத்த பிள்ளை எட்டு வயது நிரம்பிய மாரி வந்து சொன்னான். தன் மகனிடம் தான் அந்திக்கு அய்யாவிடம் உத்திரவு கேட்டுக்கொண்டு கொஞ்சம் பணமும் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி யனுப்பிவிட்டான். இந்த இருபது வருட அனுபவத்தில் ரணகண்டமய்யரைப் பற்றி கந்தன் அதிகம் தெரிந்துகொண்டிருந்தான். இந்த வேளையிலேதானா மனைவிக்கு உடம்புக்கு வரவேண்டுமென்று நொந்துகொண்டான். ரணகண்டமய்யர் உத்திரவு கொடுக்கமாட்டார் என்று கந்தன் நன்கு அறிந்திருந்தான். இருந்தாலும் சபலம். அன்று மாலை ஆறு மணிக்கு வேறு, உடம்பு அதிகம் என்று வீட்டிலிருந்து சேதி சொல்லியனுப்பி யிருந்தார்கள்.

கந்தனின் உடல் மட்டும்தான் கலியாண வீட்டில் நடமாடிக்கொண்டிருந்ததே யொழிய, அவன் நினைவெல்லாம் வீட்டில்தான். பெண்சாதிக்கு உடம்பு எப்படி யிருக்கிறதோ – பிரசவித்துவிட்டாளோ என்னமோ என்ற ஒரே கவலை. இந்த கவலையில் யாருக்குத்தான் வேலை ஓடும். அவனும் ஒரு மனிதப் பிறவிதானே; ஏதோ இயந்திரம் போன்று வேலை செய்துகொண்டிருந்தான் கந்தன். கந்தனின் பொறுமையைச் சோதிக்க

வெண்ணியோ என்னமோ பொழுதும் வளர்ந்துகொண்டே யிருந்தது.

இரவு ஒரு மணி. கந்தன் தன் வேலை யெல்லாம் முடித்தான். அப்பாடா! என்று ஒரு பெருமூச்சு விட்டான். எங் கும் நிசப்தம். கலியாண சந்தடி கொஞ்சம் ஓய்ந்திருந்தது. பந்தல் முழு வதும் 'கேஸ்' விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. பந்தலில் ஒரு ஓரத் தில் ஐந்தாறு பேர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். கந்தன் பந்தலுக்கு வந்தான். எஜமானைப் போய் பார்த்துப் பணம் கேட்கலாமா என்று ஒரு கணம் நினைத்தான். ஆனல் அடுத்த கணம் அந்த யோசனையை கைவிட்டான். பணம் கேட்கச் சென்றால் ஒருகால் இன்னும் ஏதேனும் ஒரு வேலையை அவன் தலை யில் சுமத்தி செய்துவிட்டுத்தான் போக வேண்டுமென்று சொன்னல்? இதை நினைக்கும்பொழுதே கந்தன் உடல் பதறி யது. ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் மேல்த் துண்டை தலையில் வரிந்துகட்டிக் கொண்டு வயல்ப் பாதையின் மேல் வீட்டை நோக்கி நடந்தான். வழி யெல் லாம் அவன் மனம் படாதபாடு பட்டது. அவன் வேண்டிக்கொண்ட தெய்வங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவனை அறியாமல் அவன் கால்கள் அவனைக் குடிசைக்கு இழுத்துச்சென்றன. குடிசையில் சிறிய அகல் விளக்கு எறிந்துகொண்டிருந்தது. எங்கும் நிசப்தம். அந்த நிசப்தத்தை கிழித்துக்கொண்டு ஒரு இளங் குழந்தை யின் "கூவா கூவா" என்ற அலறல். கந்தன் வீட்டில் நுழைந்தான். குழந்தை யின் குரல் அவன் மனதிற்கு ஒரு புதிய தைரியத்தை யளித்தது. "என்ன பிள்ளை? அன்னம் சௌக்கியமா?" என்று ஆவ லோடும் பதட்டத்துடனும் கேட்டான் கந்தன். "ஆம்புள பிள்ளை" என்று பதில் வந்தது. அன்னத்திற்கு பிரக்ஞை யில்லை என்று தெரியவந்ததும் கந்தன் மரம்போல் ஆனன். சற்று நேரம் கழித் துப் பிரக்ஞை வரும் என்று அங்கு வந் திருந்த அயல் வீட்டார்கள் கூறினர்கள். வைத்தியரை அழைத்து வரும்படி பக் கத்து வீட்டு மாரி கூறினள். உடனே கந்தன் வைத்தியன் வீட்டிற்கு ஓடிப் போய் வைத்தியனை அழைத்து வந்தான். வைத்தியர் பரிசோதனை செய்து பார்த் தார். கந்தன் அவர் முகத்தை பார்த்துக் கொண்டே நின்றான். "சாமி, ஆண்ட வனே! என் அன்னத்திற்கு உசிரைக் கொடு" என்று அவனை யறியாமலே அவன் வாய் கூறியது. அவன் மனம் பக் பக் என்று அடித்துக்கொண்டது. வைத்தியரிடமிருந்து நல்ல பதிலாக வர வேண்டுமே என்று வைத்தியரின் முகத் தையே பார்த்துக்கொண் டிருந்தான். "உயிர்போய் முக்கால் மணி யாகிறது" என்றார் வைத்தியர். "ஓ" வென் றலறி விட்டான் கந்தன். ஊரில் வெகு தூரத் தில் நாய்கள் அழும் சப்தமும் கந்தன் அலறலும் ஒன்று கலந்தன.

கிழக்கே வெள்ளி முளைத்தது. இன் னும் கந்தன் கதறியவண்ணம் இருக் கிறன். குழந்தைகள் அழுகின்றன. அவன் ஆத்தா, கிழவி, கல்லாய்ச் சமைந்து விட்டாள். இரா முழுவதும் கண்ணீர் விட்டுவிட்டு அவள் கண்கள் வரண்டு விட்டன. பிறந்த வுடனே தாயை விழுங்கிவிட்டு அலறும் குழந்தையைப் பார்த்த வண்ணம் பித்துப் பிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள்.

காலையில் மேள வாத்தியம் முழங்கு கிறது. ரணகண்டமய்யர் வீட்டில் ஆண்டு நிறைவு; ஏக களேபரம். ஜனங்கள் வந்தவண்ணமாய் இருக்கின்ற னர். அந்த மேளச் சத்தத்தில் கந்தனின் அலறல் யாருக்கு கேட்கப்போகிறது?

ச்ருதி மண்டலம்—(8)

கச்சேரி பிளான்

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ., பி. எல்.]

ஜீர்ணச்ருதி :—என்ன திட்டம் ? உங்கள் மனதில் படுவதைச் சொல்லி வைத்தால் நடந்தால் நடக்கிறது; இல்லாத போனால் வேண்டாம். நம் அபிப்பிராயங்களை அனுஸரிக்கும்படி யாரையும் நாம் - பணமும் பதவியுமில்லாத நாம் - வற்புறுத்த முடியாது. ஆனால் சொல்லிவைத்தால் அந்தப் பணமும் பதவியுமுள்ளவர்களே சிலர் நம் நோக்கங்களில் சிலவற்றையாவது அங்கீகரித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர நினைக்கலாம். இல்லையேனும், ஸங்கீத வித்வான்களில் தலைமையில் உள்ளவர்கள் இந்நோக்கங்களின் தூய்மையைக் கண்டு அவைகளை அனுஷ்டிக்க முன் வரலாம். எவ்விதத்திலும் நாம் சொல்வதைச் சொல்லி வைக்கலாம் என்பது என் அபிப்பிராயம். அது பயன்படுவது நம் பொருப்பிலில்லை.

பஹுச்ருதி :—என் முக்யமான திட்டம் ராகஆலாபனைக்கு அது இழந்த ஸ்தானத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பதே. கச்சேரி $3\frac{1}{2}$ மணி என்று வைத்துக்கொள்வோம். குறைந்தது $1\frac{1}{4}$ மணி ராகம் பல்லவிக்கு பிரத்யேகமாய் ஸமர்ப்பணம் செய்துவிட வேண்டும். $\frac{3}{4}$ மணி ராகஆலாபனையும் $\frac{1}{2}$ மணி பல்லவியும் என்றவாறு விதித்துக் கொள்ளலாம். ராகம் பாடிப் பக்க வாத்தியத்திற்கு இரண்டு மூன்று திருப்பம் இடம் கொடுத்துத் தகனமும் பாடுவதற்கு $\frac{3}{4}$ மணி என்பது அதிகமான திட்டமல்ல. மூன்று காலம் பல்லவிக்கும் அதேமாதிரிப் பக்கவாத்யம், மிருதங்க ஆவர்த்தம் உள்பட நடத்துவதற்கு $\frac{1}{2}$ மணி அவகாசம் வீச்சான திட்டமல்ல. தற்கால திட்டம் இதிலும் படிக்குப் பாதிகூடத் தேறுவதில்லை என்றால் கச்சேரிகள் எவ்விதம் பெருமையை அடைந்து வருகின்றன வென்று நாம் சொல்லாமலே விளங்கும். வித்வான்களின் லக்ஷ்யபலமும், ஸாதக பலமும் வெளிப்பட ராகம் பல்லவியே இடமளிக்கும். மேலும் பிடில் மிருதங்கக்காரர்களுக்கு உத்ஸாகப் போட்டியும், ஒருவரையொருவர் மேல் கரிக்கும் அவாவினால் அதிகம் அதிகம் ஸுகபாவங்களையும் வித்வத் பாகங்களையும் ஜனங்கள் அனுபவிக்குமாறு அள்ளிவிடும் மனோபாவமும் அங்கே பொங்குகிறது. ஆகையால் இதுவே என் முதல் கோரிக்கை.

ஜீ :—கீர்த்தனைகளுக்கு இப்போது சுமார் $2\frac{1}{2}$ மணி அவகாசம் வைத்துக் கொண்டு 12-க்குக் குறையாமல் இருபது வரையில் உருப்படிகள் பாடுகிறார்களே. உங்கள் திட்டத்தில் அதற்கு எப்படி விதிக்கப்போகிறீர்கள் ?

ப :—கீர்த்தனைகள் 6 முதல் 8 வரை பாடினால் போதும். $1\frac{1}{2}$ மணிக்குமேல் அவைகளுக்கு இடம் கொடுப்பது அவசியமில்லை. மேலும், ஒவ்வொரு கீர்த்தனத்திற்கும் முதலில் ராகம் பாட வேண்டும். அதிலும் தோடிகாம்போதி கீர்த்தனைகளுக்கு ராகம் முதலில் பாடினாலும் பாடாவிட்டாலும் அபூர்வ ராக கீர்த்தனைகளுக்குக் கண்டிப்பாய் முதலில் ராகம் பாடவேண்டும். நாலு ஆவர்த்தம் ஸ்வரமும் பாடத்தான் வேண்டும். நாயகி சுத்தபங்காளா முதலிய ராகங்களை மஹாவைத்தினாதய்யரும் நவரஸகண்டை ஸ்ரீரஞ்ஜனி முதலியவைகளை கோனேரி ராஜபுரம் வைத்தினாதய்யரும், ஆபேரி, ஸ்ரீரஞ்ஜினீ, சத்தஸாவேரி, தேவகாந்தாரி, குந்தளவராளி முதலிய ராகங்களை புஷ்பவனமும் பைரவிகாம்போதிபோல் விரிவான மனோதர்மங்களுடன் பாடி நாம் கேட்டிருக்கிறோம். இந்த திட்டப்படி ஐந்து ஆறு கீர்த்தனைகள் பாடினா

லும் கேட்போர்களுக்கு ஸம்பூர்ணமான திருப்தி ஏற்பட்டு விடும். இதற்கும் டெஜன்கணக்காய் கீர்த்தனை பாடுவதற்கும் என்ன வித்யாசம் என்றால், என் திட்டம் ஸமாராதனை சாப்பாடு திட்டம். பிட்ளே, மோர்க்குழம்பு, கறி,பச்சடிகள், ரஸவாங்கி, அப்பளாம் வருவல் சித்திரான்னங்கள், போளி, வடை, பாயஸம், ஊறுகாய்களுடன் ஸம்பிரமமான சாப்பாடு. இப்போது அநுஷ்டானத்திலிருப்பது கொருகு தீனி. மிக்சர், பக்கவடா, வடை, ஹல்வா, ரவாஇட்லி, ஐஸ்க்ரீம், பாஸந்தி, இல்லையா—மண்ணுங்கட்டி, தெருப்புழுதி, தோடி மண்—இந்தத் தீனியினால் வயிறு நிறையாது, உடம்புக்கும் சௌக்கியமில்லை. திருப்தியும் கிடையாது. நாக்கு சபலத்தைத் தீர்த்துக் கொள்வது தான் இதனால் கண்ட பலன். காசைக் கணக்குப் பார்த்தால் பகீரென்னும். தின்றது நெஞ்சைக் கரித்துக்கொண்டே யிருக்கும். ராத்திரி அஜீர்ணம், மறுநாள் சுரமும் வாந்தியும்.

ஸர்வச்ருதி :—அந்த ஸமாராதனை திட்டம் தான் புஷ்பவனத்தின் கச்சேரி பிளான். அது காது நிறைந்ததுபோல் இந்தக் காலத்து கொருகுதீனி ஸங்கீதம் நிரம்பி இருக்கவில்லை. செய்வினை திருந்தச் செய் என்றபடி நான்கு கீர்த்தனைகள் பாடினாலும் ஒப்பற்ற பாணியில் பாடவேண்டும். இதுவே 30 வருஷங்களுக்கு முந்திய கச்சேரி பிளான். வைத்தினதய்யர் நான்கு கீர்த்தனைகள் மட்டும் பாடிய கச்சேரிகள் நான் கேட்டிருக்கிறேன்.

ஜீ :—நல்லது கடைசி ¾ மணியில் துக்கடாக்கள் பாடவேண்டியதோ ?

ப :—ராகமாலிகையும் துக்கடாக்களும், காபி, யதுகுலகாம்போதி, பியாகடை, மோஹனம், பிலஹரி, தேசிய தோடி, செஞ்சுருட்டி, அடாணா, சாமா, கமாஸ், பியாக், ஹுஸேனி, கானடா, முகாரி, நீலாம்பரி, சகானா, கேதார கௌளம், ஆனந்த பைரவி, புன்னாகவராளி, குரஞ்சி, குந்தராவராளி, நாதநாமக்ரியா முதலிய ரக்தி பிரதானமான ஜன்ய ராகங்களில் ஐந்தாறு ராகங்களைப் பாட வேண்டும். பின்பு சில்லறை உருப்படிகளைப் பாடி மங்களம் பாடவேண்டும்.

ஸ :—கச்சேரி ஆரம்பத்திற்கும் ஏதாவது விதிகள் வேண்டாமா !

ப :—கிரந்தாரம்பத்திற்கு "ஆசீர் நமஸ்க்ரியா வஸ்து நிர்தேசம்" என்று மூன்று விதம் மங்களம் ஏற்பட்டிருப்பதுபோல் ஸங்கீதக் கச்சேரிக்கும் மூன்று விதம் ஆரம்பம் உண்டு. முதலில் ஒரு வர்ணம் பாடுவது ஒரு சம்பிரதாயம். பைரவி, ஆபோகி, பியாகடை, தோடி, தர்பார் முதலிய வர்ணங்களைப் பாடுவதுண்டு. கணபதி நமஸ்காரத்திற்காக 'வாதாபிகணபதிம்' பாடுவதுதான் வெகுவாக அனுஷ்டானத்திலிருந்தது. எடுத்ததும் எதை வேண்டுமானாலும் பாடுவது மூன்றாவது வழி. தற்கால சுயேச்சை மனோபாவத்திற்கு ஏற்றது இது. சிவன்வாள், கோனேரி ராஜபுரம் வைத்தினதய்யர் முதலிய பெரியோர்கள் இரண்டாவது குறிப்பிடப்பட்ட வழியை ஆதரித்தவர்கள். பின் வந்தவர்கள் இந்த சம்பிரதாயத்தைப் பின்பற்றிய தோரணையில் ஒரு ஹாஸ்யக் குறிப்பிற்கு இடமிருக்கிறது. கொஞ்ச காலத்தில் இதில் முக்யமானது கணபதி வந்தனமா அல்லது ஹம்ஸத்வனி ராகமா என்று ஸந்தேகம் வந்துவிட்டது. சிலர் ராகம் பிரதானமென்று எண்ணி ஹம்ஸத்வனியில் "மனஸுகரக" "ரகுநாயக" "ஸ்ரீ ரகு குல" முதலிய கீர்த்தனைகளை ஆரம்பத்தில் பாடி வந்தார்கள். மற்றும் சிலர் "ஆதௌ விக்னேச்வர பூஜா" என்றபடி எந்த ராகமா யிருந்தாலும் கணபதியைப் பற்றிய கீர்த்தனையே பாடப்பட வேண்டும் என்று நினைத்து "ஸ்ரீ கணபதினி" என்ற ஸௌராஷ்டிர கீர்த்தனையைப் பாடவாரம்பித்தார்கள். சிலர் "வினயகுனி" என்ற மத்யமாவதி கீர்த்தனையைப் பாடுகிறார்கள். இங்கு கவனிக்க வேண்டிய விஷய மிருக்கிறது. "நின்னு மருப முலகு" என்ற மங்களம் ஸௌராஷ்டிரத்தில் உள்ளது. அதையே முடிவில் எல்லோரும் அவசியம் பாடுகிறார்கள். ஆரம்பத்திலும் ஸௌராஷ்டிரமா? முடிவில்தான் பாட வேண்டியது ஸௌ

Grams : **Vanguard**. Phone : **3468**.

The Vanguard Insurance Company Ltd.

H. O. 308/309, Linghi Chetty Street, G. T. Madras

This is the first composite office started in the Province of Madras. It commenced business in Motor Insurance and its progress since last seven years has been phenomenal. The Company has a deposit of Rs. 3,00,300 with the Reserve Bank of India and the total investment in Government Securities is Rs. 4,00,000. Life Insurance business was started in 1918. The Company has declared and paid a total dividend of 48% on the Preference Shares and 45% on the Ordinary Shares in the short space of seven years since its incorporation in 1937 out of the Motor Insurance Profits. The first Acturial Valuation of the Life Business was conducted as at 31st December 1941 and in spite of the stringent basis of 3½% adopted for the valuation, the valuation has disclosed a surplus of Rs. 1,625.

The Life Fund created by the Company is more than the total renewal premiums collected during the period—a future which is highly commended by the Actuary.

H. D. RAJAH,
General Manager.

ராஷ்டிரம். அதுதான் மங்களத்திற்கு உற்ற ராகம் என்பதற்கு "ஸௌராஷ்டிரம்" என்ற பெயரே அத்தாக்ஷி. இந்தப் பதத்திற்கு "தேசத்தின் ஸுபிக்ஷம்" என்பது பொருள். இது "லோகாஸ்ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" என்ற வாழ்த்துக்கு ஸமானமான அர்த்தமுடையதா யிருப்பதால் முடிவில் ஸௌராஷ்டிரத்தில் மங்களம் பாடுவது தான் முறை என்று சொல்லலாம். இப்படியே பல தலைமுறைகளாக அனுஷ்டானமும் இருந்து வருகிறது. அவ்விதமே மத்யமாவதி பாடி நிறுத்துவது சம்பிரதாயம். அந்த ராகம் எல்லா விதமான அபஸ்வர தோஷங்களுக்கும் பரிஹாரமாக நிறுத்தும்போது பாட வேண்டியதென்று விதிக்கப்பட் டிருக்கிறது. ஸௌராஷ்டிரம் போலவே மத்யமாவதியும் ஆரம்பத்தில் பாடப் பொருத்தமில்லாததே. அதிலும் "விநாயகுனிவாலனு" என்ற கீர்த்தனை ஸ்ரீ காமாக்ஷியைப் பற்றிய கீர்த்தனையே ஒழிய விநாயகரைப் பற்றினதல்ல என்பது கவனிக்க வேண்டும். ஆனால் பொருத்தமான ராகத்தில் மங்களம் பாடியதுபோல் தியாகைய்யர் ஆரம்பத்திற்குப் பொருத்தமான ஹம்ஸத்வனியில் கணபதி கீர்த்தனம் செய்திருப்பதாய்த் தெரியவில்லை. "வாதாபி கணபதிம்" என்ற தீக்ஷிதர்வாள் கீர்த்தனையோ கணபதியைப் பற்றியதா யிருப்பதுடன் ஹம்ஸத்வனியிலும் இருப்பதால் பெரியோர்கள் இதையே ஆரம்பத்தில் பாடிவந்தார்கள். ஆகையால் வர்ணம் பாடாவிட்டால் "வாதாபி கணபதிம்" தான் முதலில் பாடவேண்டியது. அல்லது ஹம்ஸத்வனியிலேயே வேறு கீர்த்தனமும் பாடலாம் என்பது ஸித்தாந்தம். ஆனாலும் இந்த விதிக்கும் வேண்டுமானால் சில மாறுபாடுகளுக்கு இடமளிக்கலாம். அது யெப்படியெனில் கேதாரத்தில் "ராம நீ ஸதனகு" "பஜனஸேயவே ஓ மனஸா" முதலிய கீர்த்தனைகளை ஆரம்பத்தில் பாடலாம். அனுபவசாலிகளுக்கு ஆரம்பத்திற்கு ஹம்ஸத்வனிபோல் கேதாரமும் உசிதமானது என்பது நன்கு விளங்கும். அவ்விதமே உதயரவி சந்திரிகையும் நாடையும் ஆரம்பத்தில் பாடினால் பொருத்தமா யிருக்கக் கூடியவைதான். இதன் மர்மமென்னவென்றால் "பகிலா" என்ற பிடி (விசேஷமாய் காகலி நிஷாதத்துடன்) பளிச்சென்று மனதை ஆகர்ஷித்து ஸபைக்கு உத்ஸாஹமூட்டிக் களைக்கட்டச் செய்கிறது என்பதுதான். இதனால் ஆரம்பத்தில் ஜகன்மோஹினி முதலிய சில ராகங்களுக்கும் இடம் கொடுக்க நியாயமிருக்கிறது. "சோபில்லு" என்ற ஐயர்வாள் கீர்த்தனம் ராகத்திலும் உள் கருத்திலும் முதலில் பாட மிகவும் பொருத்தமானது. ஆனால் இவ்விதமே அதிகம் விரிவாக்கிக்கொண்டு போகக் கூடாது.

ஸ:—இப்போது பாடுகிறவர்களில் சிலர் கச்சேரியில்ஒரு 'அரேஞ்ஜ்மெண்டு' வேண்டுமென்பதையே உணருவதில்லை. ஒருவர் அஸாவேரியில் முதலில் பாடுகிறார். அடுத்தது ஸாவேரி பாடுகிறார். மூன்றாவது நாதநாமக்ரியா, நான்காவது பந்துவராளி, ஐந்தாவது ஜகன்மோஹினி, ஆறாவது கமலா மனோஹரி, ஏழாவது கௌளை, எட்டாவது புன்னாகவராளி, ஒன்பதாவது ஆஹிரி, பத்தாவது வஸந்தா, அடுத்தது ஸௌராஷ்டிரம், மேலே தன்யாஸி, பின் பூரிகல்யாணி, அப்புறம் பூபாளம் இந்த மாதிரியே பாடிக்கொண்டு போகிறார்கள். சதுச் ச்ருதி ரிஷபம் எப்போது காதில் விழப்போகிறது என்று ரஸிகர்கள் பரிதபிக்கும்படி அடித்து விடுகிறார்கள். அந்த "அரேஞ்ஜ்மெண்டு புத்தி" இல்லாதவனுக்கு என்ன சாரீரம் இருந்தென்ன? என்ன ஸ்வர ஞானம் இருந்தென்ன? எல்லாம் வீணே. ஒருவர் காதிலும் அவன் பாட்டு ஏறாது. நாரத்தங்காய்ப் பச்சடியையே பரிமாறிக் கொண்டிருந்தால் இலையில் உட்கார்ந்தவர்கள் எப்படிச் சாப்பிடுவார்கள்?

ப:—மேள கர்த்தாக்களை மாற்றி மாற்றிப் பாட வேண்டும். ஒரு சக்கிரத்திலேயே - தேனில் விழுந்த ஈயைப் போல் சுழண்டு கொண்டிருக்கக்கூடாது; அல்லது செக்கு மாட்டைப்போல் இரண்டு சுத்த ரிஷபம் அடுத்தடுத்து

வரக் கூடாது. சங்கராபரணம், கரஹரப்ரியா, மாயாமாளவகௌளை, ஹரிகாம்போதி, கல்யாணி, தோடி என்றவாறு மேளங்கள் மாறி மாறி வரவேண்டும். மேலும் முதல் கால கீர்த்தனையும் மத்யமகால கீர்த்தனையும் கலந்து வர வேண்டும். அதிகம் அடிபட்ட கீர்த்தனை இரண்டு பாடினல் அதிகம் பிரசாரத்தியில்லாத கீர்த்தனை ஒன்றுசேர வேண்டும். முழுதும் அடிப்படதாயுமாவது முழுதும் அபூர்வமாகவாவது இருக்கக்கூடாது. அப்படியே பிரஸித்த ராக கீர்த்தனைகளும் அபூர்வ ராக கீர்த்தனைகளும் மாறி மாறி வரவேண்டும். நாலு ஐயர்வாள் கீர்த்தனைக்கு ஒரு தீக்ஷிதர்வாள் கீர்த்தனையாவது பாட வேண்டும். மற்றவர் க்ருதிகளையும் கலந்துகொள்ளலாம். இந்த "அரேஞ்மெண்டு" எல்லாம் தன் புத்தியால் தேச காலங்களையும், ஸபையையும், தன் தேக ஸ்திதியையும் அனுஸரித்துச் செய்துகொள்ள வேண்டும். புத்திமான்களுக்கு இதைச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. சமத்தில்லாத, பாடம் கற்ற கிளிப் பிள்ளைகளுக்குச் சொல்லியும் பிரயோஜனமில்லை. ஆனலும் வெகு நாளாய்ப் பாடிக் கொண்டிருப்பவர்கள் சிலர் தாங்கள் அதிகம் பிரபலமாகாத தற்கு என்ன காரணம் என்று யோசித்துக் கொண்டிருக்கலாம். அவர்கள் இவ் விதிகளை கவனித்தால் நலம் பெறலாம்.

ஜீ:—யாருக்கு இவ் வுபதேசங்கள் பயன்பட்டாலும் பயன்படா விட்டாலும் என் விச்சுவுக்கு இவை பயன்படுமாறு நான் சிரத்தை கொள்வதென்று தீர்மானித்துவிட்டேன். எனக்கு உங்கள் திட்டப்படி இரண்டு மூன்று கச்சேரிகளுக்கு உருப்படிகளை வரிசை கட்டி அமைத்துத் தர வேண்டும். அதாவது, ஒரு கச்சேரிக்கு ஆறு கீர்த்தனைகள் வீதம் முதலில் மூன்று கச்சேரிகளுக்கு பிளான் பண்ணி கொடுத்தால் போதும். சிரமத்தைப் பார்க்கக்கூடாது.

ஸ:—6 கீர்த்தனை திட்டம் பெரிய பாடகர்களுக்கேயொழிய விச்சுவிக்கு பிரயோசனப்படாது. ஏனெனில் 6 × 5 = 30 நிமிஷத்தில் அவைகளைச் சீனு வெடிகளைப்போல் சுட்டெறிந்துவிட்டுச் சபையில் மிகுந்த நேரத்திற்கு என்ன செய்வது. முதல் ராகம் பாடி, பின் ஸ்வரம் பாடி, நடுவில் நிரவல்கள் செய்து ஒவ்வொரு கீர்த்தனையையும் உயிர் தந்து, போஷித்துப் பெரிதாய் பிரகாசிக்கச் செய்து, கம்பீரமான பாவங்களை எடுத்துக் காட்டி இந்திர ஜாலம்போல் களிப்பூட்டும் பற்பல விந்தைகளைத் தோன்றச் செய்ய வல்லவர்களான ஸங்கீத யோகிகளுக் கல்லவா ஆறு கீர்த்தனை திட்டம். சீனு வெடியும் மத்தாப்பூவும் சுடும் விச்சு போன்றவர்களுக்கு 12 உருப்படி திட்டமே மிக்கக் குறைந்த திட்டமாச் சுதே. "க்ரோஸ்" கணக்காய் வர்ணங்கள் வாங்கி வைத்திருந்தால்தானே தீபாவளியின் நள்ளிருளில் மழை பொசியும் கடைசி ஜாமத்தில் சிறிது நேரமாவது சிறுவர்களுக்கு ஆனந்தமளிக்கும்; சடபடசத்தமும் கலர் வெளிச்சமும், நெருப்புப் பூச் சொரிதலும், வெடிப் புகையும் தோன்றும்படி செய்யலாம்.

ஜீ:—நீங்கள் 12 உருப்படிகளை வீதமே மூன்று தொகுதிகள் அமைத்துக் கொடுங்கள். உங்கள் ஆறு உருப்படி திட்டம் நடைபெருத காரியம். பெரிய பாடகர்கள்கூட இதைக் காதில் போட்டுக் கொள்ளமாட்டார்கள்.

ப:—போட்டுக்கொள்ளா விட்டால் பெரிய பாடகனுக்கும் சிறிய பாடகனுக்கும் வித்யாசம் எப்படித் தெரியும்? முன் காலத்தில் ஏதோ நாலு பேர் இரண்டு பேர் பெரிய பாடகர்கள் என்று பெயரெடுத்தார்கள். இப்போது தடுக்கி விழுந்த இடங்களெல்லாம் ஸங்கீத வித்வான்கள். அவர்களில் பலர் நாடக மேடையிலிருந்து கீழே குதித்தவர்கள் அல்ல; திரை நிழலிலிருந்து உருவாகி வந்தவர்கள். உண்மை யாகவே தற்காலத்திய பெரிய பாடகர்கள் இரண்டு மூன்று பெயர்கள் இருக்கிறுர்களே அவர்களையும் விட இவர்களே அதிகம் "பீஸ்" வாங்குகிறுர்கள். எங்கு பார்த்தாலும் இவர்கள் கச்சேரியாகவே யிருக்கிறது. எங்கும் இவர்கள் பேச்சே,

பத்திரிகைகளும் இவர்கள் கீர்த்தியையே பல திக்குகளிலும் தாங்கள் பரக்கும் வேகத்தோடு பரப்புகின்றன. ஆயிரக் கணக்கான ஜனக்கூட்டமும் இவர்களுக்கே. இந்த ஸங்கீத மஹா பிரளயத்தில் பெரிய பாடகர்கள் முழுகி முழுகி எழுந்திருக்கிறார்கள். ஒரு சமயம் அவர்களின் கௌரவம் தெரிந்தவர்கள் அவர்களுக்குப் பணத்தை இஷ்டம்போல் கொடுத்தாலும் கூட்டம் மிதமாகவே அவர்களை நாடுகிறது. விவர மறியாத ஜனங்களுக்கு எல்லாம் "கச்சேரி"தான். கோடிக் கரை மணலில் சிவலிங்கம் பிடித்து வைத்தவன் கதைதான். கச்சேரி பிளானை மாற்ற இதுவே தக்க தருணம். வித்வத் கச்சேரிக்கும் லீலையாக உள்ள கச்சேரிக்கும் வரைமுறை ஏற்பட வேண்டும். நாம் விவரித்துக் கொண்டிருந்த கச்சேரி பிளான் அனுஷ்டானத்திற்கு வருவதானால் உண்மையில் பெரியவர்கள் தான் பெயர் சொல்ல முடியும்.

ஜீ:—உங்கள் பிளான்படி பாடினால் இப்போது யார் கேட்டுக்கொண்டிருப்பார்கள்? பல்லவி பாட ஆரம்பித்தால் பாடகனுக்கு 144 உத்திரவு போட்டுவிடுவார்கள். காலத்தின் போக்கை யாரால் வெல்ல முடியும்? முன் காலத்தில் 8 கலை சவுக்கப் பல்லவியை ஞானஸ்தர்கள் சேர்ந்து உட்கார்ந்து கேட்டு ரஸித்து வந்தார்கள். மற்றவர்கள் தங்களுக்கு விஷயம் புரியாவிட்டாலும் தங்களுக்கு எட்டாததென்றே கௌரவ புத்தியுடன் ஆமோதித்து வந்தார்கள். அவர்களுக்கு புத்தி பரிபாகத்தினால் ஸங்கீத அனுபவத்திற்குரிய ஆனந்தத்திற்கே குறைவில்லை. பல்லவி சோமு பாகவதர், குளக்குடி கிருஷ்ணையர் முதலியவர்கள் இருந்தார்கள். வைத்தினாதய்யர் காலத்திலேயே மெட்ராஸ் ஸபைகளில் அதிகம் பல்லவியில் காலம் போக்குவது ஆமோதிக்கப்படவில்லை. ஒரு சமயம் மாமுண்டியா பிள்ளையும் அவரும் பிடில் கிருஷ்ணையரை மடக்குவதற்காக அதிக நீளமான ஒரு பல்லவியைத் தயார் செய்து கொண்டு கச்சேரிக்கு வந்தார்கள். அந்தப் பல்லவியில் "குஹ, சரவணபவ, ஸுப்ரமண்ய, முருக" என்றவாறு ஷண்முகக் கடவுளின் பெயர்கள் தோர்வடம் போல் தொடுக்கப்பட்டிருந்தன. ஒரு ஆவர்த்தனம் முடிவதற்கு ஐந்து நிமிஷம் போதாதுபோல் இருந்தது. எடுக்கும் இடம் மறைவாக வைத்துப் பாடப்பட்டது. கிருஷ்ணையருக்குக் கோபம் வந்துவிட்டது. பிடிலைக் கீழே வைத்தார். மாமுண்டியா பிள்ளையை விழித்துப் பார்த்தார். "ஏ, மாமுண்டி, உன் பேர் இதில் ஏன் வரவில்லை? அதையும் சேர்த்திருக்கலாமே. இந்தப் பல்லவிக்கு 6 மாதம் சிரமப்பட்டிருப்பாய் போலிருக்கிறதே" என்று கேட்டார். இதற்குள் ஜனங்கள் அதிருப்தி அடைந்து, "எங்களுக்கு இந்தப் பரீக்ஷைப் பல்லவிகள் வேண்டாம். நாங்கள் கேட்டு அனுபவிக்கும்படியான விதமாகப் பாடவேண்டும்" என்று இரைச்சல் போட வாரம்பித்தார்கள். பின்பு வைத்தினாதய்யர் அதே பல்லவியை துரிதகாலப்படுத்திப் பாட வாரம்பித்தார். கிருஷ்ணையரும் அலக்ஷ்யமாய்ப் பின்தொடர்ந்து வாசித்து எல்லோருக்கும் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அளித்தார்.—என்று கதை கேட்டிருக்கிறேன். ஆகையால் உங்கள் திட்டம் அனுஷ்டிப்பது கடினமாகும். அது பழைய காலத்திலேயே செல்லுபடியாகவில்லை.

ஸ:—நீங்கள் உதாஹரணம் கொடுத்தது சரியல்ல. 8, 16, 32 கலைச்சவுக்கங்களில் பல்லவி பாடும்படி நம் திட்டத்தில் சொல்லவில்லையே. நாலு கலைச்சவுக்கப் பல்லவி பாடவேண்டுமென்பதே நம் கருத்து. அதையே திரிகாலபடுத்த வேண்டும். இம்முறையே பலகாலம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. நீர் உதாஹரித்த கதை ஒரு அபூர்வமான ஸம்பவத்தைப் பற்றியது. அப்படித் திக்குமுக்காட வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. பல்லவி என்ற சொல் அவிந்து போகாமல் காப்பாற்றினால் போதும். கத்திமுனையில் நர்த்தனம் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

ஜீ:—நல்லது. உங்கள் திட்டத்தில் மற்றொரு விதி அனுஷ்டிப்பது கடினம்

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு : : மதராஸ்

*

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி	மவுண்டு ரோடு
மயிலாப்பூர்	தியாகராய நகர்	புரசவாக்கம்

*

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-44-ல்)	ரூ.	33,32,951
ரிஸர்வ் நிதி	ரூ.	32,00,000
டிபாஸிட்டுகள் (30-6-44-ல்)	ரூ.	9,48,49,465

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

N. P. B.

என்று எனக்குப் படுகிறது. எந்தக் கீர்த்தனைக்கும் முதலில் ராகம் பாட வேண்டுமென்கிறீர்கள். இது ஸாத்யமாகுமா ? ஸாரமதி, நளினகாந்தி, கோகிலத்வனி, ரவிசந்திரிகை, பகுதாரி, மாளவி, ஜயமனோஹரி, ஜனரஞ்ஜனி, மயூரத்வனி, பூர்ணஷட்ஜம், கைகவசி, நாகஸ்வராவளி, கலாநிதி மணிரங்கு, ஜயந்தஸேனா, உமாபரணம், பிரதாபவராளி, கபிநாராயனி, தேசாக்ஷி, மார்க்கஹிந்தோளம் முதலிய ராகங்களில் கீர்த்தனைகள் பிரஸித்தமாயும் லகுவாய்ப் பாடக்கூடியவைகளாயுமிருக்கின்றன. ஆனால் இந்தக் கீர்த்தனைகளுக்கு ராகம் எப்படிப் பாடுகிறது? யார் பாடியிருக்கிறார்கள் ? யார் கேட்டிருக்கிறார்கள் ? ஆரோகண அவரோஹணங்களை வைத்துக்கொண்டு ஹார்மோனியம் வாசிப்பது போல ஸ்வரங்களை கூட்டிப் பிரித்து அடுக்கி விசிறிவிட்டால் அது ராகமாகிவிடுமா ? பழக்கத்திலிருந்தால் தானே ராகமூர்ச்சனைகளைக் கண்டு கொள்ளலாம். ராகஸ்வரூபம் பாடிக் கேட்டிருந்தாலல்லவா மனதில் பதியும். இந்த மாதிரியாக நூற்றுக்கணக்கான ராகங்கள் மறைந்துபோய்விட்டன. அவைகளுக்கு இந்தக் கீர்த்தனைகளைத் தவிர—அநேகமாய் தியாகையர் கீர்த்தனைகள் தான்—வேறு அத்தாக்ஷியே கிடையாது. இந்த நிலைமையில் யார் பாடப் போகிறார்கள் இந்த ராகங்களை ?

ப :—இந்த ஆக்ஷேபத்தை நான் நன்றாக மனதில் வாங்கிக்கொண்டேன். இது ஒரு பக்கமிருக்கட்டும். நான் ஒன்று கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லும்.

ஜீ :—என்ன ?

ப :—கீர்த்தனம் இயற்றிய தியாகையர் இந்த ராகங்களைத் தங்குதடையில்லாமல் பூராமனோதர்மத்துடன் ராகஸ்வரூபப் பிரத்யக்ஷத்துடன் பாடிப் பாடிப் பின்பே கீர்த்தனம் இயற்றியிருக்கவேண்டுமே ஒழிய வேறு விதமாய், ராகலக்ஷணங்களை ஏட்டுச்சுவடியில் பார்த்துவிட்டு "தகுதகத்தமாய்" கீர்த்தனம் போட்டுவிட்டார் என்று சொல்லமுடியுமா ?

ஜீ :—அதெப்படிச் சொல்ல முடியும்? ஒரு ராகத்தைப் பாடாமல் அதில் கீர்த்தனை எப்படிப் போடமுடியும்? அவர் இவ்வளவு ராகங்களையும் ஸூலபமாய்ப் பாடி அவைகளின் ஸூககலைகளை அநுபவித்துக் கண்டு கொண்டு தான், பின்பு, அவைகளில் கீர்த்தனைகளை அமைத்திருக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவர் பாடினால் நாமும் பாடிவிட முடியுமா ?

ப :—முடியும். லக்ஷணம் புஸ்தகத்திலிருக்கிறது. உதாஹரணம் கீர்த்தனையில் இருக்கிறது. உனக்கு ராகம் பாடத் தெரியாதென்று சொல்ல வெட்கமாயில்லையா? இதெல்லாம் சோம்பேறிகளின் பேச்சு, கேள்வி கேட்கிறவன் இல்லாததால் உலகம் கண்மூடித்தனமாய் போய்க்கொண்டிருக்கிறது. கீர்த்தனமாய் போய்க்கொண்டிருக்கிறது. கீர்த்தனைகளில் விசேஷ ஸஞ்சாரங்களும் மூர்ச்சனைகளும் நன்கு அமைக்கப் பெற்றிருக்கின்றன. பெரிய வித்வான்கள் மெனக்கெட்டு அவைகளைப் பரிசீலனை செய்தால் அவர்களுக்கு அந்த ராகஸ்வரூபங்களைக் கண்டுகொள்வது கடினமல்ல. இப்படி ஒவ்வொரு வித்வானும் சிற்சில ராகங்களைச் செப்பனிட்டு அழகுபடுத்தி ஸபைக்குக் கொண்டுவருவார்களேயானால், இந்த அபூர்வ ராகங்களே கொஞ்ச காலத்தில் ஸர்வ ஸாதாரண ராகங்களாகிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. வித்வான்கள் ஸங்கீதத்திற்குச் செய்யவேண்டிய தொண்டுகளில் இது ஒன்று. பட்டணம் ஸூப்ரமண்ய அய்யர், மஹா வைத்தியநாதய்யர், பூச்சி சீனிவாஸ அய்யங்கார் இவர்களைப்போல் தற்காலத்திய வித்வான்கள் தாங்களாகக் கீர்த்தனைகள் இயற்ற இயலாதவர்களானாலும், பல காலம் வழங்கப்படாமல் மறைவடையும் ராகங்களையும் கீர்த்தனைகளையும் ஜீர்ணோத்தாரண கைங்கர்யம் செய்வதுபோல் புதுப்பித்து வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து ஸங்கீத வித்தையின் விரிவுக்கும் முற்போக்குக்கும் உதவக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்பவர்கள் பெரியவர்கள் என்பதற்குச் சந்தேக

முண்டா? அத்தகைய அவர்களின் கைங்கரியம் விரைவில் ஆதரிக்கப்பட்டு மிகவும் போற்றப்படும் என்பதற்கும் ஐயமுண்டா?

ஸ:—மஹாவைத்தியநாதய்யர் காலத்தில் சக்ரவாகம் அபூர்வராகமென்று கருதப்பட்டதாயும் அவரே அதை விரித்துப்பாடி பிரஸித்திக்குக் கொண்டுவந்ததாயும் கேள்விப்படுகிறோம். பட்டணம் ஸுப்ரமணிய அய்யர் லதாங்கி, ஷண்முகப்ரியா, ராமப்ரியா, முதலிய ராகங்களை - இவைகளில் தியாகையர் கீர்த்தனைகள் கிடைக்காததால் சுப்பிரஸித்தமானவைகளை - தான் இயற்றிய கீர்த்தனைகள் மூலம் பிரஸித்தியடையச் செய்தார். இந்த ராகங்களும் இன்னும் பல ராகங்களும் அவர் காலத்திலும் பின்பு கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் காலத்திலும், களைநிரம்பிப் புஷ்டியுடன், பாவங்களுடன், வீர்யத்துடன் யௌவனமடைந்தவைகள்போல் உலகத்தில் தங்கள் வசீகரணத்தை வீசிக்கொண்டு உலாவத்தொடங்கின. பின்வந்தவர்களும் சிற்சில ராகங்களை தங்கள் ஸ்வீகாரப் பிள்ளைகளாக எடுத்து வளர்த்துத் தங்கள் முதிர்ந்த ஸங்கீத ஸம்பத்தைத் தந்து உலகத்தவர் புகழத்தக்க பெருமைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். புஷ்பவனத்தினால் ஆபேரி, சுத்தஸாவேரி, குந்தளவராளி, முதலிய ராகங்கள் சோபையை அடைந்தன. செம்மங்குடி சீனிவாஸய்யர் சாமா ராகத்தை உருப்படுத்தி அலங்கரித்து ஸபை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். அவருடைய ஸிம்மேந்திர மத்தியமம் வெண்ணிலவுபோல் கேட்போர் மனதைப் பொங்கச் செய்கிறது. அரபி அவர் கண்டத்தின்மூலம் தன் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஆவிர்ப்பவிக்கச் செய்வதில் தான் அடைந்த ஆனந்தத்தினாலே போல் பகீரதனைப்பின் தொடர்ந்த கங்கையென அலைபுரளப் பெருகிவருகிறது. மதுரை மணி சாருகேசியை உலாவவிட்டு அதன் அழகில் ரஸிகர்கள் மனத்தை ஈடுபடச் செய்துவருகிறார். ஐயங்கார் அவர்களின் பூரிகல்யாணி இணை

வாழ்க்கையிலே முக்கியமான வாலிபப் பருவத்தினராக இன்று நீங்கள் இருக்கிறீர்கள். நாள் முழுதும் வேலை செய்தாலும் குதூகலமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறீர்கள். இது நீங்கள் இந்த வாழ்க்கையை விரும்புவதால் தான்.

ஆனால் எதிர்கால, அதாவது 25 வருஷங்களுக்குப் பிறகு, நீங்கள் வாழ்க்கையை எப்படி விரும்புவீர்களென யோஜித்ததுண்டோ?

நீண்ட மும்முரமான வாழ்க்கைக்குபின், பாசமற்ற, நிம்மதியான வாழ்வை அமைதியாக ஓரிடத்தில் கழிக்க விரும்புவீர்கள்.

இதற்கு நாங்கள் யோசனை கூறுகிறோம்

விவரங்களுக்கு:

நேஷனல்

இன்ஷூரன்ஸ் கோ., லிட்

* * *

நெருப்பு, விபத்து, மோட்டார், மற்றும் சகல விதமான இன்ஷூரன்ஸ்களுக்கு

நேஷனல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கோ., லிட்.

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு — கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:

'நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்'

362, சைனா பஜார் ரோட்—எஸ்ப்ளனேட்

சப் - ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை

யற்ற வனப்புள்ளது. மகாராஜபுரம் எந்த ராகத்தையும் அழகுபடுத்துபவரானாலும் ஹரிகாம்போதியைச் செல்லப் பிள்ளையாக வளர்த்து வருகிறார். இவ்விதமே பன்மடங்கு அதிகமாக ஸங்கீதத் துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்-பேச்சில் அல்ல ; செய்கையில்.

ப:—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷீதர் கூறுகிறார். “ அந்தாஸ்தே கவயோ யேஷாம், பந்தா: க்ஷுண்ண: பரைர்பவேத், பரேஷாம்து யதாக்ராந்த: பந்தாஸ்தே கவி குஞ்ஜரா: ”. “ எந்தக் கவியின் வழியின்வழி பி ற ரா ல் ஏற்படுத்தப்பட்ட வழியோ, அக்கவிகள் குருடர்கள். எந்தக் கவிகள் புதிதாய் ஏற்படுத்திய வழியைப் பிறர் பின்பற்றுகின்றனரோ அக் கவிகள் கவிகுஞ்ஜரங்கள் ” (=யானைகள்—அதாவது, யானைகள் தாங்கள் போக நினைத்த விடமெல்லாம் செல்லுகின்றன. மரம்செடி கொடிகள் இடையூறுகளாக விருந்தால், பிடுங்கி எறிந்து விட்டு சுயேச்சையாக வழியை ஏற்படுத்திக் கொள்கின்றன. யானைகள் போன வழியில் மற்ற சிறிய பிராணிகள் தாராளமாய் சஞ்சரிக்கலாம்), அது போலவே காயககுஞ்ஜரங்கள் பட்டணம் ஸுப்ரமணிய அய்யர், கோனேரிராஜபுரம் வைத்தினாதய்யர் போன்றவர்கள். கர்ணாடக ஸங்கீதத்தில் பாதைபோட்ட மஹான்கள் அவர்கள் பாடிய ராகங்களையோ கீர்த்தனைகளையோ பிறர் பாடுவது, அவர் பாடியதை ஞாபகப்படுத்தும் சின்னங்களாக மட்டும் ஆகின்றனவேயொழிய ஸ்வயம் பாட்டாக ஆகிறதில்லை. குஞ்ஜரங்கள் பூமண்டலத்தைத் தாங்குகின்றன ; பொம்மைகள் கோபுரத்தைத் தாங்குவதாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றுகிறது.

—————



அவனும் அவளும்

["ஜெமன்"]

அவன் இன்பக் கனவு கண்டுகொண்டிருந்த காரிகையல்ல அவள். வாலிபர்கள் வழக்கமாக என்னென்ன இன்ப உணர்ச்சிகளைக் கொண்டிருப்பார்களோ, அவைகளெல்லாம் அவனுக்கும் இருந்து வந்தன. ரம்பை, ஊர்வசிபோன்ற அழகையும், நவீன கல்வியையும், அறிவையும் படைத்த ஆரணங்கை மனைவியாகப் பெற வேண்டுமென்பதே அவனுடைய இள மனதின் பேரவா.

ஆனால் மனிதன் எண்ணுவதெல்லாம் இவ்வுலகில் கிட்டுகிறதா? அவன் தகப்பனார், பையனின் எதிர்கால க்ஷேமத்தில் நாட்டங்கொண்டவர். குலம், கோத்திரம், ஜாதகம், சகுனம் முதலியவைகளை யெல்லாம் சாஸ்திரோக்தமாகப் பார்த்துத் தன்னகத்துக்கு ஒரு நாட்டுப் பெண்ணை அழைக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம்.

"பஞ்சு" என்று கூப்பிட்டார் ஒரு நாள் அவர். ரசாயன மாற்றங்களைக் காகிதத்தில் பரிசோதனை செய்துகொண்டிருந்த பஞ்சு அடக்க ஒடுக்கமாக அப்பா முன்பாக வந்து நின்றான்.

"பஞ்சு, இன்று மாம்பலம் போய்ப் பெண்ணைப் பார்க்க வேண்டும். சீக்கிரமே காலேஜ் விட்டதும் நேராக வீட்டுக்கு வந்து சேர்" என்று தகப்பனார் உத்திரவிட்டார்.

தகப்பனார் தன் கலியாண விஷயத்தைத் தவிர வேறு எதிலும் தலையிடுவதை அவன் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் கலியாணம் என்பது அவனுடைய சொந்த விஷயம். அதில் தகப்பனார் தலையிடுவது தப்பென்பதே அவனுடைய அபிப்பிராயம். இருந்தாலும் தகப்பனாரை எதிர்த்துப் பேசுவதற்கு அவனுக்குத் தைர்யமில்லை. ஆதலால் அவன் சமையலுள்ளிலே சென்று தன் தாயாரைத் தாக்கஆரம்பித்தான். அய்யர்கண்டிப்பான பேர்வழி யென்பது அம்மாவுக்குத் தெரியும். இருந்தாலும் சாப்பிடும் சமயத்தில் பிள்ளையினுடைய ஆட்சேபத்தை அவரிடம் தெரிவித்தாள். இதைக் கேட்டதும் அவருக்குக் கோபம் வரத் தான் செய்தது. "சரி, சரி, இங்கே வந்து அப்பீல் செய்துவிட்டானா? ஏதோ நல்ல இடம், பணமும் வருகிறது. பிறகு சொத்தும் கிடைக்கும்போல இருக்கிறது. அடுத்த வருஷம் என்னமாக இருக்குமோ? இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவதா என்று பார்த்தேன். எனக்கென்ன இப்போ. ஆச்சுன்னா அதிர்ஷ்டம், ஆகாட்டா துரதிருஷ்டம்," என்று படபடவென்று பேச ஆரம்பித்தார்.

பஞ்சு ஜாதகத்தில் குரு பலத்த வீட்டில் சஞ்சரித்தான். பெண் வீட்டுக்காராளும் அடிக்கடி தொந்திரவு செய்தனர். இதனால் தாயாருக்கும் சிறிது சபலந் தட்டியது. பெற்றோர்களின் சூழ்ச்சி சில நாட்களாகப் பஞ்சநதத்துக்குத் தெரியாது. ஆனால் அன்று அப்பா "இன்று பெண்ணைப் பார்க்க மாம்பலம் போகவேண்டும், சீக்கிரம் வந்து சேர்" என்று உத்திரவிட்ட பொழுதுதான் விஷயம் மிகவும் அபிவிருத்தியடைந்திருப்பதை அவன் அறிந்துகொண்டான்.

கலியாணமும் வெகு அமர்க்களமாக நடந்தது. ருக்மணியும் புக்ககம் வந்து சேர்ந்தாள். ஒருநாள் ருக்மணி ஸ்வாமிக் கெதிரில் குத்து விளக்கை எற்றிவைத்து நமஸ்கரித்து எழுந்தாள். அப்பொழுது பஞ்சநதம் ஒரு தோளில் கோட்டை மாட்டிக்கொண்டு உள்ளே பிரவேசித்தான். அப்பாவோ அல்லது அம்மாவோ யாரும் கீழே இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அவன் மெது

வாக அடிமேல் அடிவைத்து ருக்மணி பின்னல் போய் நின்றான். அவள் நமஸ் கரித்து எழுந்ததும் பஞ்சநதம் திடீ ரென்று அவளுடைய இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "என்ன ருக்கு, நான் எழுதின கடிதங்களுக்கெல்லாம் நீ ஏன் பதிலே போடவில்லை" என்று கேட் டான். கணவன் கையைப் பிடித்ததும் வெட்கத்தால் சிவந்த அவளுடைய முகத் தில், இச்சொற்களைக் கேட்டவுடன் வியர்வை அரும்பியது. அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. பஞ்சநதம் மீண்டும் கொஞ்சும் பாவனையில், "என்மேல் உனக்கென்ன கோபமா? ஏன் இப்படி கேட்ட கேள்விகளுக் கெல்லாம் பதிலே சொல்லாமல் இருக்கிறாய்," என்றான். அதற்கும் அவள் ஒன்றும் பதில் கூற வில்லை. ஆனால் அவள் கண்களிலிருந்து மட்டும் கண்ணீர்த் துளிகள் பொலபொல வென்று உதிர்ந்தன. அவனுடைய மன தில் பலவித விபரீத எண்ணங்களெல் லாம் தோன்றின. 'அவள் செவிடா அல்லது ஊமையா அல்லது எழுதப் படிக்கத் தெரியாத மூடமா?' என்ற சந்தேகங்களே அவனை வாட்டின. அவள் கைகளைத் தன் பிடியிலிருந்து தளரவிட்டு அவன் விர்ரென்று மாடிக் குச் சென்றுவிட்டான்.

அவனுடைய மனதில் அர்த்தமற்ற ஒரு கோரப்போராட்டம் நடந்துகொண் டிருந்தது. கலியாணம் ஆவதற்கு முன்பு பஞ்சநதம் என்ன வெல்லாமோ பிளான் போட்டிருந்தான். நன்றாகப் படித்த நாக ரிக மங்கையை மணக்க வேண்டுமென் றும், அவளை சினிமா, டிராமா, சங்கீதக் கச்சேரிகள் முதலியவைகளுக் கெல்லாம் அழைத்துப் போக வேண்டுமென்றும், அவள் எல்லோருடனும் 'சோஷலா'கப் பழக வேண்டுமென்றும், மற்றும் அந்த இலக்ஷியப் பெண்ணுடன் உலகத்தைப் பாதித்து வரும்படியான யுத்தம், நாணய பொருளாதாரப் பிரச்னை, இந்திய அரசியல் முட்டுக்கட்டை, அட்லாண் டிக் சாஸனம், காந்தி - ஜின்னு சந்திப்பு இவ்வித பிரச்னைகளைப் பற்றிக் குதூகலமாகச் சம்பாஷிக்க வேண்டுமென்றும், இருவரும் சேர்ந்து நவீனங்களும், சிறு கதைகளும், கட்டுரை களும் எழுதிப் போர் போராகக் குவித் துத் தள்ளவேண்டுமென்றும் அவன் ஆசை கொண்டிருந்தான். ஆனால் அவ் வாசை இப்பொழுது, சிறுவர் கையிலகப் பட்ட ரப்பர் பலூன் போல, சுக்கு நூறாக வெடித்து அவன் முன்பாகச் சிதறிக் கிடந்தது.

இளந்தம்பதிகளும் காதலர்களும் உல் லாஸமாக உலாவும் கடற்கரையில் பஞ்ச நதம் கட்டிய இனிய கோட்டைகளெல் லாம் உப்புத் தண்ணீரில் கரைந்து கைப்பு அடித்தது. அவன் கட்டிலில் சாய்ந்த படியே ஒரு பெருமூச்சுவிட்டான். கீழே நடுவுள்ளிலே யிருந்து விம்மல் சப்தம் விட்டுவிட்டு வெளிவந்து கொண்டிருந் தது.

பஞ்சநதம் ஆபீஸ் சென்றதும் ருக் மணி அவன் அறைக்குள் சென்று அங் கிருக்கும் புஸ்தகங்களைப் புரட்டிப்பார்த் துக்கொண்டே மௌனக்கண்ணீர் விடு வாள். வாளை விடக் கூர்மையாகப் பேசும் எழுத்துக்களின் கோடுகளையும் கோணல்களையும் அவளுடைய சோகக் கண்கள் பார்த்துப் பார்த்து ஏங்கும். சில சமயம், அவளுடைய வாழ்வையே குட்டிச்சுவராய் அடிக்க அவைகள் ஒன்றுகூடிச் சூழ்ச்சி செய்கின்றனவோ என்று கூட அவளுக்குத் தோன்றும். அவைகளைச் சித்திரவதை செய்யவேண்டு மென்ற எண்ணமோ என்னமோ, அவள் ஒவ்வொரு எழுத்தாக மேஜையின்மீது கிடக்கும் காகிதங்களில் அச்சடித்தாற் போல எழுதி, மறுபடியும் அதன் மீது கிறுக்கி உருக்குலைத்துச் சின்னபின்ன மாகக் கிழித்து எறிவாள்.

வாழ்க்கையில் அடைந்த பெரியஏமாற் றம் பஞ்சநதத்தின் மனதைப் பெரிதும் பாதித்துவிட்டது. அவன் அடைந்த அதிர்ச்சி, எம்மருந்தினாலும் ஆறாத ஒரு பச்சை வடுவை உண்டாக்கிவிட்டது.

ஆனால் அந்தக் குசப்பயல் சும்மா இருக்கவில்லை. அவன் தன் வேலையை அன்றாடம் செய்துகொண்டே தான் இருந்தான். காலக்கிரமத்தில் ருக்மணிக்கு

ஒரு பெண் குழந்தை பிறந்தது. கணவனுக்கும் தனக்குமிடையே இருந்த பாரந்த வெட்டவெளியை இக்குழந்தையாவது பூர்த்தி செய்து விடும் என்று ருக்மணி நம்பியதெல்லாம், அவள் ஆத்மாவை ஏமாற்ற எடுத்துக் கொண்ட முயற்சியாகவே முடிந்தது. பர்த்தா குழந்தையைப் பார்த்தாவது மனம் மாறமாட்டாரா வென்று அவள் நினைத்து, குழந்தையை அவனிருக்கும் அறைக்கு வெளியேயும், அவன் செல்லும் வழியிலும் விட்டு வைப்பாள். ஆனால் அதை அவன் ஏறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அதோடு நில்லாமல் அவன் சிற்சில சமயங்களில் எரிந்து விழவும் ஆரம்பித்தான். கருங்கல்லும் சில சமயம் கரையுமென்பார்கள்; ஆனால் பஞ்சநதக்கல்லோ எந்த திராவகத்துக்கும் கரைவதாகத் தோன்றவில்லை.

குடும்ப யோகக்ஷேமங்கள் எப்படியோ இரண்டு முனைக்கும் நேர்த்தொடர்பில்லாமல் நடந்து கொண்டே வந்தது. பஞ்சநதமோ அல்லது ருக்மணியோ ஏதாவது ஒருவரையொருவர் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அடுத்தாத்து அம்பியைத் தூதனுப்புவார்கள்.

இப்படியாகப் பொழுது விடிவதும் பொழுது போவதுமாக நான்கு வருஷங்கள் ஓடிச் சென்றுவிட்டன. சரஸு ஒரு அழுக்குப் பாவாடையையும், சட்டையையும் போட்டுக்கொண்டு அங்குமிங்கும் குறுகுறு வென்று ஓடிக்கொண்டிருப்பாள். சில சமயம் அவள் பஞ்சநதம் இருக்கும் அறைக்கு வெளியே சிறிது தூரத்திற்கப்பால் நின்று கொண்டு, கூண்டுக்குள்ளே யிருக்கும் சிங்கத்தைப் பார்ப்பதே போல அவனை

எமது உயர்ந்த ரேடியோ செட்டுகளையும்
&
நீடித்துழைப்பதும் சிக்கனமானதுமான சர்வீஸையும்
உங்களுக்கு அளிக்கிறோம்
எமது சர்வீஸ் திட்டத்தில் சேருங்கள்
ஆஸ்டின் அண்டு கோ., லிமிடெட்.,
31, மௌண்ட் ரோடு, சென்னை
டெலிபோன் நெ. 86195

ஆச்சர்யத்துடனும், பயத்துடனும் பார்த்துக்கொண்டேயிருப்பாள். பஞ்சநதத்திற்குச் சில சமயம், அதை எடுத்து அப்படியே தழுவவேண்டுமென்ற ஆவல் கட்டுக்கடங்காமல் வெளியே தலை நீட்டும். ஆனால் மறுகணமே அவனுடைய சுயமரியாதை அதைத் தலையில் அடித்து உள்ளே பிடித்துத் தள்ளிவிடும்.

ஒரு நாள் இரவு ருக்மணி வெளி வராந்தாவில் படுத்துக்கொண்டு தன் வாழ்க்கையின் நிச்சயமில்லாத எதிர்காலத்தைப் பற்றி நிர்ணயித்துக் கொண்டிருந்தாள். குழந்தை சரஸ்வுக்குத் தூக்கம் வரவில்லை. "அம்மா, ஒரு கதை சொல்லேன்," என்று இராவானத்தைப் பார்த்துக் கொண்டு, முடிவையே காணமுடியாத ஒரு பிரச்னையைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் ருக்மணியின் முகத்தைத் திருப்பினாள். ருக்மணி, தனது குறைகளையெல்லாம் யாராவது ஒருவரிடம் கொட்டியளந்து மனதிலுள்ள ஒரு பெரிய சுமையை இறக்கிவிட வேண்டுமென்ற அவா வெகுநாட்களாகவே இருந்துவந்தது. இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. ஏன் குழந்தையிடம் கூறினால் என்ன? பெரியவர்களிடம் சொன்னால் ஆயிரம் குற்றங் குறைகள் கண்டுபிடிப்பார்கள். 'அது உனது துரதிருஷ்டமென்று' அடுத்தாத்துக் காமுவின் அதிர்ஷ்டத்தை ஓர் உதாரணமாகக் காட்டி இடித்துக் கூறுவார்கள். அப்படியில்லாமல், உலகக் குட்டையில் இன்னும் கால்வைக்காத ஒரு குழந்தையிடம் கூறினால், அந்த இளமனதாவது சிறிது இரக்கங் கொள்ளும் என்பது அவளுடைய திட நம்பிக்கை.

"ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு பெண் இருந்தாள்" என்று ருக்மணி கதை சொல்ல ஆரம்பித்தாள். "அந்தப் பெண்ணுக்குக் கலியாணம் நடந்தது. மாப்பிள்ளை நன்றாகப் படித்தவர்; அழகுள்ளவர். கால் சட்டை கைச் சட்டை யெல்லாம் போட்டுக்கொண்டிருப்பார், ஆனால் பெண்ணோ வெகுக் கறுப்பு. அதோடு அதுக்குப் படிப்பும் கிடையாது. இருந்தாலும் பெண் தங்கமானவள். ஆம்படையானை உயிர்போல நேசித்து வந்தாள்....உம்..." என்று சொல்லிவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டாள். கவனமாகக் கேட்டு வந்த சரஸுக்குத் திடீரென்று கதையை நிறுத்தியது பிடிக்கவில்லை. 'உம்னு' சொல்லாததால்தான் தாயார் கதையை நடுவிலேயே நிறுத்திவிட்டாள் என்று நினைத்து அவள் 'உம், அப்பறம்' என்று சொல்லி வைத்தாள். தாயார் தன் கதையை மேலும் கூறலானாள்.

"அப்பறம் என்ன, அவர் அவளைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. அவளுடைய காற்றுகூட அவர்மேல் அடிக்கக் கூடாதாம். அவருடைய அன்பைப் பெற வேண்டுமென்று அவள் என்னவெல்லாமோ செய்துபார்த்தாள். தன் மனதையே அவரிடம் பறிகொடுத்தாள். ஆனால் அவர், அவர், அவர்...." என்று ருக்மணி, குழந்தைக்குக் கதை சொல்லுகிறோமே யென்று கவனியாமல் வெறிகொண்டவளைபோல் சொற்களை அடுக்கிக் கொண்டே போனாள். அவளுடைய விழிக் கோணங்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

கதையில் அப்படியே லயித்திருந்த குழந்தை, தாயார் கதையைத் திடீரென்று நிறுத்தியதால் திரும்பிப் பார்த்தாள். தாய் கண்களிலிருந்து கண்ணீர்ப் பிரவாகம், உடைப்பெடுத்துக்கொண்டு ஓடிவருவதைப் போல வழிந்தோடுவதைக் கண்ட குழந்தை "ஏன் அம்மா, அழறே?" என்று கேட்டாள். குழந்தை வார்த்தை கேட்டதும் ருக்மணி திடுக்கிட்டு பின் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு "அந்தப் பெண் இருந்த நிலைமையை நினைத்துக் கொண்டதும் எனக்கே அழுகை வந்துவிட்டது" என்றாள்.

பக்கத்து அறையில் படுத்துக்கொண்டிருந்த பஞ்சநதம் இக்கதையை ஆதி முதல் அந்தம்வரையில் கேட்டுக்கொண்

டிருந்தான். அவனை அறியாமலேயே அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. ஒரு பெண்ணின் இளமனதை ஒடித்து விட்டோமே என்ற துக்கம் அவனுடைய இருதய ஆழத்தினின்றும் சோகத் தொனியுடன் கிளம்பியது. அப்பொழுதே ருக்மணியிடம் இருந்த தோஷங்களெல்லாம் ஓடி ஒளிந்துகொண்டன. தான் கனவுகண்ட வனிதைகளுக்கப்பால் சிறந்து விளங்கினாள் ருக்மணி. அவ்வளவுதான்; அவன் உடனே வராந்தாவுக்கு ஓடிவந்து ருக்மணியைத் தனது இரு கைகளாலும் எடுத்து ஏந்தி, “அன்பே, இன்றுதான் உன்னைக் கண்டேன்” என்று அவள் இரு கன்னங்களையும் மாறி மாறி முத்தமிட்டான். இவ்விதமான சம்பவங்களை ருக்மணி கனவிலேதான் கண்டிருந்தாளாதலால், இதுவும் கனவாகவே இருக்குமோவென்று அவள் பயந்தாள். ஆனால் பஞ்சநதத்தினுடைய பிடியினால் உண்டான இன்பக்கனல், ஆழ அமுங்கித் தூங்கிக் கிடந்த ஜீவனைத் தட்டி யெழுப்பிக் குளிர்காயச் செய்தது என்றே கூறலாம்.

சரஸுவோ வாயில் விரலை வைத்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் ஆச்சர்யத்துடன் திகைத்து நின்றாள்!

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்.

மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்

இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்

1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின்
புதிய பாலிசிகள் ரூ. 5 கோடிக்கதிகம்

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ....ரூ. 5,39,00,000
அமுலிலுள்ள மொத்த வியாபாரம் ....ரூ. 24,82,00,000

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்
107, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்.

ஒலி பெருக்கலும் பரப்பலும்

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணமலை நகர்]

தற்காலம் எல்லா நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒன்று கூடி சங்கீதத்தையும், பிரசங்கங்களையும் கேட்க வசதிகள் மலிந்துள்ளன. இக்கூட்டங்களில் உள்ள ஒவ்வொருவரும் நன்ருக கேட்குமாறு ஒலி பெரிதாக்கப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் காரணமாயுள்ள விஞ்ஞானக் கருவிகளைப்பற்றி இக் கட்டுரையில் கவனிப்போம்.

முதலில் "மைக்" என்று சொல்லப் படும் கருவியை எடுத்துக் கொள்வோம். இதன்முன் ஒருவர் பேசும்பொழுது காற்றில் ஒலி அலைகள் உண்டாகின்றன. அவர் வாய்க்கு அருகிலுள்ள காற்றுப் படலத்தில் அடர்த்தி, தளர்த்திகள் (Condensations and rarefactions) ஏற்படுகின்றன. இவை முன்னேறிச் சென்று "மைக்"கிலுள்ள விதானம் (Diaphragm)என்னும் பாகத்தை தாக்குகின்றன. விதானம் என்பது ஒரு மெல்லிய தகடாகும். அதன்மீது விழும் ஒலி அலைகளுக்குத் தகுந்தாற்போல் விதானம் துடிக்கின்றது. இதனல் "மைக்"கினுள்ளே சில மாறுதல்கள் ஏற்பட்டு இவ்வொலித் துடிப்புகள் மின் துடிப்புகளாக மாற்றப்படுகின்றன. இது எவ்வாறு ஏற்படுகிறது என்பதை சற்று விளக்குவோம். கரிமைக்ரோபோன் (Carbon microphone) என்னும் ஒருவித "மைக்"கை முதலில் எடுத்துக் கொள்வோம். இதில் இரண்டு மெல்லிய தகடுகளுக்கிடையே கரித்துணுக்குகள் (Carbon granules) நிரம்பி இருக்கின்றன. தகடுகளின் மூலமாக ஒரு மின்னருவி ஓடுமாறு செய்யப்படும். தகடுகளில் ஒன்று மைக்கின் விதானமாக அமைக்கப்பட்டிருக்கும். ஒலி அலைகள் விதானத்தைத் தாக்கும்போது கரித் துணுக்கள் அதற்குத் தகுந்தாற்போல் நசுக்கப்படுகின்றன. இதனல் கரித் துணுக்குகளின் மின்தகைவு (electrical resistance) மாறுபடுகிறது. எனவே வழியாக ஓடும் மின்னருவியும் மிகுந்தோ குறைந்தோ போகிறது. இதனல்தான் ஒலித்துடிப்புகள் மின்துடிப்புகளாக மாறுகின்றன. "கண்டென்ஸர் மைக்ரோபோன்" (Condenser microphone) என்று மற்ருெரு வகை "மைக்" உண்டு. இதில் இரண்டு உலோக தகடுகளிடையே பெரியதொரு மின் மட்ட வேற்றுமை (Potential difference) ஏற்படுத்தப்பட்டிருக்கும். உலோகத் தகடுகளில் ஒன்று துடிக்கும் விதானமாக அமைக்கப்பட்டிருக்கும். விதானத்தின்மீது ஒலி அலைகள் மோதும் போது இரண்டு தகடுகளின் இடைத் தூரம் மாறுபடுகிறது. இதனல் கருவியின் கொள்திறன் (Capacity) வேறுபட்டு, ஒலித்துடிப்புகளுக்கு ஏற்றவாறு மின்மட்ட வேற்றுமையும் மாறி, மின்னருவி குறைந்தோ மிகுந்தோ ஓடுகிறது. எனவே இங்கும் ஒலி மின்சாரமாக மாறுவதை உணரலாம். "இயங்கு சுருள் மைக்ரோபோன்" (Moving coil microphone)என்று மூன்ருவது வகை மைக்கில் நிகழும் மாறுதல்களைச் சற்று கூறுவோம். மற்ற வகை மைக்குகளைக் காட்டிலும் அதிகமாக கையாளப் படுவது இதுவேயாகும். இதில் துடிக்கும் விதானத்துடன் பல சுற்றுகள் கொண்டதொரு மெல்லிய கம்பிச்சுருள் இணைக்கப்பட்டிருக்கும். இச்சுருள் ஒரு காந்தத்தின் துருவங்களினிடையே உள்ள சந்தில் இயங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கும். கம்பிச்சுருளின் இரண்டு முனைகளும் இரண்டு பிடிப்புத் திருகுகளில் முடிவடையும். இக்கருவியின் முன்னல் ஒருவர் பேசும்போது அதன் விதானம் துடித்தியங்கும். இத

ஸன்லைட் சோப் கர்ய்ச்சும் ஒருவன் சொல்லுகிருன் . . .

“ஸன்லைட் சோப்பின் நுரையானது ஆடைகளிலிருந்து அழுக்கை உங்களுக்குச் சிரமமில்லாமல் போக்கிவிடுகிறது. அழுக்கு வஸ்திரங்களிலிருந்து தானுகவே அழுக்கைப் போக்கும் சக்தி வாய்ந்திருப்பதால் அதைச் சுயமாக வெளுக்கும் நுரை என்று சோப் தயாரிக்கும் ரசாயன சாஸ்திரிகள் கூறுகிருர்கள். சுய சக்தி வாய்ந்த சோப்பானது அழுக்கைத் தொட்டவுடன் அதைப் பிடித்துக்கொள்ளுகிறது. நுரை ஆடை முழுதும் பரவி இருக்கிறதா என்றுப் பார்த்துக் கொண்டால் போதும். பிறகு தண்ணீரில் அலசினவுடன் அழுக்கு போய்விடுகிறது.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

இப்பொழுது மெழுகுத் தாளினுல் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 65-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

னால் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கம்பிச்சுருளும் இயங்கும். காந்தபுலத்தில் இக்கம்பிச்சுருள் இயங்குவதால் அதில் ஊட்டமின் அருவி (Induced current) ஒன்று ஏற்படும். இவ்வருவியின் பலமும் திசையும் சுருளின் இயக்கத்திற்கு தகுந்தவாறு இருக்கும். எனவே ஒலித்துடிப்புகள் இங்கும் மின் துடிப்புகளாக மாற்றப்படுவதை உணரலாம். இம்மூன்று வகை மைக்ரோபோன்களில் ஏற்படும் மின்னருவியின் வலிமை மிகக் குறைவாக இருப்பதினால், அதை பன்மடங்கு பெருக்கிய பின்னரே மறுபடியும் ஒலித்துடிப்புகளாக மாற்ற வேண்டியிருக்கிறது. பெருக்குவதற்குண்டான கருவியைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இதற்கு 'தெர்மயானிக் வால்வ்' அல்லது மின்னுருக்குழாய் என்று பெயர். இது அமைப்பில் மின்சார விளக்கைப் போலிருக்கும். இதனுள் பிலமெண்டு (Filament) என்று சொல்லப்படும் மெல்லிய கம்பி ஒன்று இருக்கும். இது பெரும்பாலும் "டங்ஸ்டன்" என்ற உலோகத்தினால் ஆனது. இதில் ஒரு மின்னருவியைச் செலுத்தியவுடன் அது நன்றாகச் சூடேறி அதன் விளைவாக மின்னுருக்கள் (Electrons) அதனின்று எல்லா திசைகளிலும் வெளிப்படுவதைக் கண்டார்கள். இதனுள் மற்றொரு உலோகத் தகட்டைப் புகுத்தி இதற்கும், பிலமெண்டுக்கு மிடையே ஒரு மின் பட்ட வேற்றுமையை ஏற்படுத்திப் ப்ளிமிங் (Fleming) என்ற விஞ்ஞானி குமிழினுள் ஒரு பக்கமாக மின்சார ஓட்டம் ஏற்படுவதைக் கண்டார். இதை உணர்ந்து ரேடியோ அலைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு இக்கருவி சிறந்த சாதனம் என்று காட்டினர். சில வருஷங்கள் சென்ற பின்னர் டி பாரஸ்ட் (De Forest) என்ற விஞ்ஞானி இவ்வாறு காற்றகற்றப்பட்ட கண்ணாடிக் குமிழில் பிலமெண்டுக்கும் தகட்டுக்குமிடையே கண்சல்லடைத் துண்டு (Grid) ஒன்றை வைத்துப் பார்த்தார். அதன் மீது நிற்கும் மின்சாரத்துக்கு தகுந்தவாறு குமிழினுள் மின்சார வட்டத்தின் பலமும் வேகமும் அமைவதைக் கண்டார். இதன் விளைவாக ரேடியோ அலைகளை கிரகிப்பதில் உள்ள இக்கருவியின் உணர்ச்சிநுட்பமானது ஆயிரம் மடங்கு அதிகப்படுவதைக் கண்டார். எனவே சிறியதொரு மின்னருவியை இதைக் கொண்டு பெரிய மின்னருவியாக மாற்றமுடிந்தது. இதன் உதவியைக்கொண்டு வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள ஒலியையும் பக்கத்திலிருந்து வரும் ஒலியைப் போலவே மிகவும் தெளிவாக கேட்கும்படிச் செய்யமுடிந்தது.எவ்வளவு மெல்லிய சிறிய ஒலியையும் வேண்டுகிற அளவு உரத்த பேரொலியாக மாற்ற முடிந்தது. ஒருவனது ஹிருதயத் துடிப்பின் ஒலியை ஒரு பெரும் சபையில் கூடியிருக்கும் ஜனங்கள் எல்லோரும் ஒருங்கே கேட்கும்படி செய்யலாம். மேலும் இதன் விசேஷ குணம் என்னவென்றால், எவ்விதஒலியையும் சிறிதும் குண மாறுபாடின்றி பெருக்க முடிவதே ஆகும். மின்னுருக் குழாய்களைத் தக்கவாறு அமைத்துக் கொண்டு மைக்ரோபோனிலிருந்துவரும் அருவியை இவற்றுள் செலுத்த வேண்டுகிற அளவுக்கு அருவியின் பலத்தை மாற்றிக்கொண்டு (Loud Speaker) அல்லது ஒலி பெருக்கி எனப்படும் கருவியின் உதவியினால் திரும்ப ஒலியைப் பெறுகிறார்கள். 'ஒலிபெருக்கி'யின் அமைப்பைச் சிறிது கவனிப்போம்.

இதுவும் "மைக்ரோ போன்" களைப் போல் பல ரகங்களில் செய்யப்படுகின்றன. இவற்றுள் இயங்கு சுருள் ஒலி பெருக்கியே பெரும்பாலும் கையாளப்படுகிறது. இயங்கு சுருள் மைக்கில் உள்ளதுபோல் இங்கும் துடிக்கும் விதானத்துடன் ஒரு சுருள் இணைக்கப்பட்டிருக்கும். இவ்விதானம் வாய் அகன்ற கூருளை வடிவங்கொண்ட கெட்டிக் காகிதத்தினால் செய்யப்படும். கம்பிச் சுருள் வலிமை மிகுந்த காந்த துருவங்களினிடையே உள்ள சந்தில் இயங்குமாறு வைக்கப்பட்டிருக்கும். முன்பு பார்த்த மைக்ரோபோனில் சுருளின் அசைவி

எப்பொழுதும்
அவளை
கவனித்துக்
கொண்டிருக்க
முடியாது
—ஆனால் அவளை 'அழுக்கு
அபாய'த்திலிருந்து காப்பாற்றலாம்
உங்கள் கண் எதிராக விளையாடின பருவம் கடந்து விட்டது. அவள் இப்பொழுது தானாகவே விளையாடவோ, தின்பண்டம் வாங்கவோ அல்லது இதர குழந்தைகளுடன் விளையாடவோ விரும்புகிறாள். ஆனால் வீடு திரும்பும் பொழுது அழுக்கு படிந்து, வியர்த்து வருகிறான். அவனுக்கு லைப்பாய் பழக்கத்தை (அதாவது தவறாமல் லைப்பாய் ஸோப்பால் சுத்தம் செய்து கொள்ளும் முறையை)க் கற்பித்தால் அவளை அழுக்கு ஒன்றும் செய்யாது. இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அழுக்கில் நோயை விளைவிக்கக் கூடிய கிருமிகள் இருக்கின்றன லைப்பாய் ஒருவித கிருமி நாசன சோப். ஆரோக்கியத்தை ரக்ஷிக்கவல்ல அபூர்வ தன்மை வாய்ந்த சோப் இந்தியாவிலேயே அது ஒன்று தான். அதுதான் அதன் உலகப் பிரசித்திக்குக் காரணம்.
LIFEBUOY
SOAP
லைப்பாய் நல்ல ஸோப்பைக்
காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்
L. 52-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

ஞல் மின்னருவி ஓடுவதால் சுருள் இயங்குகிறது. இதனல் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற காகித விதானமும் இயங்குகிறது. இவ்வியக்கத்தில் காற்றில் ஒலித் துடிப்புகள் உண்டாகி ஒலி அலைகள் பரவுகின்றன. இவ்வொலி அலைகள் மைக்கின் முன்னுல் பேசியவரின் ஒலி அலைகளைப் போலிருக்கும். எனவே அவரது ஒலியை திரும்பக் கேட்க முடியும். இயங்கு சுருள் ஒலி பெருக்கிகளில் முக்கியமானவை (Cabinet Loud Speaker, Projector Loud Speaker, Baffle Loud Speaker) என்பவையாகும். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு அவை ஒவ்வொன்றும் பயன்படும். காபினெட் ஒலி பெருக்கியில் ஒலி பெருக்கி ஒரு பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும். அப்பெட்டியின் நான்கு பக்கங்களிலிருந்தும் ஒலி வெளியே பரவுமாறு பெட்டி அமைக்கப்பட்டிருக்கும். பாபிள் ஒலி பெருக்கியில், பரப்பு அதிகமுள்ள மெல்லியதொரு பலகையின் பின்னுல் பல ஒலி பெருக்கிகள் வைக்கப்பட்டு இவை எல்லாம் பலகையுடன் சேர்க்கப்பட்டிருக்கும். பலகையின் பரப்பு முழுவதும் துடித்து ஒலி அலைகள் காற்றில் உண்டாகும். பரப்பு அதிகமாயிருப்பதால் ஒலி பெரு முழக்கத்துடன் வெளிவரும். ப்ரொஜெக்டர் ஒலிபெருக்கியில் ஒரு நீண்ட புனலின் அடிப்பாகத்தில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருக்கும்; புனல் வாயிலிருந்து ஒலி கிளம்பி பரவும். எனவே புனல் வாய்க்கு நேர் எதிரே உள்ள இடங்களில் ஒலி பெரு முழக்கத்துடன் கேட்கும். நாலு திசைகளிலும் நன்ருகக் கேட்பதற்கு நான்கு புனல் ஒலி பெருக்கிகள் நான்கு திசைகளையும் நோக்கி இருக்குமாறு அமைத்துக்கொள்வது வழக்கம். திறந்த வெளியில் நிகழும் கூட்டங்களுக்கு மற்ற வகை ஒலி பெருக்கிகளைக் காட்டிலும் இதுவே சிறந்தது. ஓர் மண்டபத்தில் ஒலியைப் பெருக்குவதற்கு ஒலி பெருக்கிகளை தகுந்த இடங்களில் வைத்தாலன்றி ஒலி நன்ருகக் கேட்காது. மேலும் மண்டபத்திற்குத் தகுந்தாற் போல் மைக்ரோபோன்களையும், ஒலி பெருக்கிகளையும் அமைக்கவேண்டிவரும். பாட்டுக்கு ஒருவிதமாகவும், பேச்சுக்கு வேருெருவிதமாகவும், நடனக் கச்சேரிக்கு மற்ருெருவிதமாகவும், வாத்திய கோஷ்டிகளுக்கு இன்னெருவிதமாகவும் இவற்றை அமைப்பது வழக்கம். கூட்டத்தில் முதல் வரிசைகளில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு நேராக விழும் ஒலி நன்ருக கேட்கும். அவர்களுக்கு ஒலி பெருக்கியிலிருந்து ஒலி வருமாறு செய்தால் குழப்பம் அதிகமாகி அவர்கள் கேட்க முடியாமல் போய்விடும். எனவே தூரத்தில் உள்ளவர்களுக்குத்தான் ஒலி பெருக்கிகளிலிருந்து ஒலியை அனுப்ப வேண்டும். வெவ்வேறு திசைகளுக்காக ஒலி பெருக்கிகளை அமைக்கும்போது அவை ஒன்றுக்கொன்று முரணுகாதவாறு அமைக்கப்படவேண்டும். மண்டபத்தின் பருமன், சுவர்களின் தன்மை முதலியவற்றுக்குத் தகுந்தவாறு ஓரளவுக்குமேல் ஒலியை பெருக்கமுடியாது.

பெரிய ஹோட்டல்களில் சாப்பிடுபவர்கள் சிற்றுண்டியுடன் சங்கீதத்தையும் அனுப்விப்பதற்கு உண்டான வசதிகளை அனைவரும் கவனித்திருக்கலாம். இசைத் தட்டு ஒன்றைவைத்து அனைவரும் கேட்கும்படி செய்வார்கள். எவ்வாறு இசைத் தட்டின் ஒலி பெருக்கப்படுகின்றது என்று சிறிது கவனிப்போம். இதை செய்யும் சாதனத்திற்கு Pick-up என்று பெயர். இதில் காந்த பிக் - அப் என்றும், படிக மிக் - அப் என்றும் இரண்டுவகை உண்டு. இசைத் தட்டை கிராமபோனில் வைத்து பாடவைக்கும் போது நிகழுவதைக் கவனித்திருக்கலாம். இசைத் தட்டிலுள்ள கோட்டின் மீது ஊசி செல்லுமாறு அமைக்கப்பட்டிருக்கின்றது. ஊசியுடன் இணைக்கப்பட்ட இசைக்கூடு (Sound box) என்ற அமைப்பைக் கவனித்தால் அதிலுள்ள துடிக்கும் விதானம் நன்கு புலப்படும். ஊசி இசைத் தட்டிலுள்ள கோட்டின் போக்கிற்குத் தகுந்தவாறு துடித்து விதானமும் அத்துடன் இயங்கி அருகி

னுள்ள காற்றில் ஒலி துடிப்புகளை உண்டாக்குகிறது. அவ்வொலி இசைக் குழாய் வழியாகச் சென்று புனல் வாய் வழியாகப் பெருகி வெளிப்படுவதைப் பார்க்கலாம். பெரிய கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் இவ்வொலியைக் கேட்க முடிவதில்லை. இதை நிவர்த்தி செய்வதற்காக பிக் - அப் என்ற சாதனம் பயன்படுகிறது. இச்சாதனத்தில் ஒரு குளம்புகாந்தம் இருக்கும். இதன் துருவங்களிடையே ஒரு கம்பிச் சுருள் வைக்கப்பட்டிருக்கும். அதற்குள் அடை (Armature) என்ற அமைப்பு ஒன்று இருக்கும். இத்துடன் கிராமபோன் ஊசி இணைக்கப்படும். இவ்வூசி இசைத் தட்டின் மீதுள்ள கோட்டில் செல்லும் போது ஊசி முனை துடிக்கும். அதனால் அத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற அடையும் இயங்கும். இவ்வியக்கத்தினால் துருவங்களினிடையே வைக்கப்பட்டிருக்கிற கம்பிச் சுருளில் ஒரு ஊட்டமின்னருவி உண்டாகும். இதன் திசையும் பலமும் ஊசி முனையின் துடிப்புக்கு தகுந்தவாறு இருக்கும். எனவே, தட்டில் பதிவு செய்யப்பட்ட ஒலித்துடிப்புகள் மின் துடிப்புகளாக மாற்றப்படுகின்றன. இம்மின் துடிப்புகளை மின்னுருக் குழாயின் உதவியைக் கொண்டு பன்மடங்கு பெருக்கி பின்னர் அம்மின்னருவியை ஒலி பெருக்கியின் மூலமாகச்செலுத்தி இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்ட பாட்டைக் கேட்கலாம். இப்பொழுது ஒலி பெருமுழக்கத்துடன் வெளிவரும். படிகமிக் - அப் என்ற கருவியிலும் ஊசியின் துடிப்புகள் மின் துடிப்புகளாக மாற்றப்படுகின்றன. இதன் தத்துவம் காந்தமிக் - அப் கருவியிலிருந்து சற்று வேறானது.

கடைசியாக, ஒலி பரப்புதலைப் பற்றி சிறிது கூறுவோம். இம்முறைக்கு "பிராட் காஸ்டிங்" (Broad casting) என்று பெயர். ஓரிடத்திலிருந்து பேசுவோரையும் பாடுவோரையும் உலகத்திலே பல்வேறு பகுதிகளிலே வாழ்கின்ற மாந்தர் அனைவரும் கேட்க இம்முறை பயன்படுகிறது. ஓர் ஊரில் உள்ள ரேடியோ நிலையத்தில் ஒருவர் பேசுவதாகக் கொள்வோம். மைக்கின் முன்னால் இவர் பேசும்போது ஏற்படும் ஒலி அலைகள் மைக்கின் விதானத்தைத் தாக்கி மின் துடிப்புகளாக மாறுகின்றன. நிலையத்தின் வேறொரு பாகத்தில் மின்னுருக் குழாய்களின் உதவியைக் கொண்டு உயர்ந்த அடுக்க (High frequency) முள்ள மின்காந்த அலைகள் உண்டாக்கப் படுகின்றன. இவற்றுடன் மைக்கிலிருந்து வரும் ஒலி அலைகள் பதிவு செய்யப்படுகின்றன. அதாவது உயர்ந்த அடுக்கமும் நிறைந்த ஆற்றலுங்கொண்ட ஒலி அலைகள் கட்டுப் படுத்தவேண்டியிருக்கிறது. இதற்கு ஒலி அலைகளின் ஆற்றல் பல்லாயிரம் மடங்கு பெருக்கப் படவேண்டும். மின்னுருக் குழாய்களின் உதவியைக்கொண்டு இது செய்யப்படுகிறது. இவ்வாறு திருத்தப்பட்ட அலைகள் நிலையத்தின் வானி (Aerial)யைச் சென்றடைந்து நாலா பக்கங்களிலும் பரவுகின்றன. வானி பலவகைப்படும். ஒரு வகையில் நீண்ட கம்பிகள் செங்குத்தாக நிறுத்தப்படும். படுக்கை வாக்கிலேயே கட்டப்படுவதுண்டு. வானியிலிருந்து அலைகள் நான்கு திசைகளிலும் பரவிச்சென்று ஒலி வாங்கும் நிலையத்திலே யுள்ள (Receiving station) வானியின்மீது மோதும். ஒலி வாங்குமிடத்தில் வானியுடன் உடனியக்கி (Tuner) என்ற சாதனம் இணைக்கப்பட்டிருக்கும். இது மின்னுருக் குழாய்களின் சேர்க்கையே யாகும். இவ்வுடனியக்கி வானியின்மீது மோதும் அலைகளின் அடுக்கத்தோடு ஒன்றுபடும்படி செய்யப்படுவதால், வானி இந்த அலைகளை எளிதாக ஏற்றுக் கொள்ளுகிறது. உடனியக்கியுடன் ஒலியகம் (Detector) என்ற மற்றொரு சாதனம் சேர்க்கப்பட்டிருக்கும். இதுவும் மின்னுருக் குழாய்களின் சேர்க்கையே யாகும். இது அலைகளிலுள்ள ஒலிப்பதிவை மட்டும் ஏற்றுக்

பைத்தியம் யார்?

[தஞ்சை - டி. எஸ். சுந்தரேச சர்மா]

குப்புசாமி அய்யர் தபால் இலாகாவில் நல்ல உத்தியோகத்திலிருந்து பென்ஷன் பெற்று சுகவாசியாய் காலங் கழித்து வந்தார். அன்று அவர் ஆபீஸ் ரூமில் வந்து உட்கார்ந்ததும், தபால்காரன் பயபக்தியுடன் அவருக்கு வந்த தபால்களைக் கொண்டுவந்து கொடுத்தான். மிக்க கவலையுடன் அவர் எதிர்பார்த்திருந்த கடிதமும் வந்திருந்தது. அவசர அவசரமாய் அதைப் பிரிக்கும்போதே குறுக்கே விழுந்துவிட்டதானாலும் மிக ஜாக்கிரதையாய்ப் படித்தார். படித்ததுமே அவமானம் ஒரு பக்கமும், கோபம் ஒரு பக்கமும் பொத்துக்கொண்டு வந்தது. அடுத்த வீட்டு ராமய்யரை அவசரமாய் அழைத்து வரச் சொன்னார்.

அன்று வந்த கடிதம் அவர் திருக்குமாரன் கலியாணராமனிடமிருந்து வந்ததுதான். அவன் பி. ஏ. பாஸ்செய்துவிட்டு சர்க்கார் உத்தியோக வேட்டையில் ஈடுபட்டிருந்தான். கடந்த ஆனி மாதத்தில் ஒரு கிராமத்துப் பெண் அவன் வாழ்க்கை துணைவியாய் ஆனாள். அவள் அழகு வாய்ந்தவள்தான். காலேஜ் படிப்பு இல்லையென்றாலும், குடும்ப பெண்ணுக்கு வேண்டியவளவு படிப்பு இருந்தது. அவள் தந்தையை 'பெரிய பண்ணையார்' என்று அழைப்பார்கள். பரம்பரையாய் பெரிய தனவந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

என்ன இருந்தாலும் கிராமாந்தர பெண்ணை கட்டிக்கொண்டதில் கல்யாணராமனுக்கு அடங்காத வருத்தம். என்ன செய்வது ? தன் சொற்படி கேட்காவிட்டால், தந்தை பாங்கியில் உள்ள பணங்களை யாருக்காவது தானம் செய்துவிடுவாரோ என்ற பயத்தில் சம்மதிக்க நேர்ந்தது. ஆனால் அவர் பேரிலும் குற்றமில்லை. இது பக்கத்து வீட்டு ராமய்யர் செய்த வேலை. ராமய்யரிடம் தந்தைக்கு அபாரமான மரியாதை. அவர் ரொம்ப நாளாய் தெரிந்த குடும்பம் என்றும் மிக நல்லவர்கள் என்றும் தந்தை காதைக் கடித்து முடிபோட்டுவிட்டார். ராமய்யரை காணும்போதெல்லாம் அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது ஆச்சரியமில்லை; கலியாணத்தை கிராமத்தில் நடத்தினால் பட்டணம் சம்பந்திகளுக்கு சரிப்படாதென நினைத்து சமீபத்தில் உள்ள நகரத்திலேயே சிறப்பாய் நடத்தினார்கள். ஆடிக்கு தன் கிராமத்திற்கு வரும்படி அழைக்கவே, மாப்பிள்ளையை மட்டும் அனுப்பியிருந்தார் குப்புசாமியய்யர். சௌகரியமாய் போய்ச் சேர்ந்த சமாசாரம் வராததால், கவலையுடன் இருந்தவர் அவன் கடிதம் கிடைத்ததும் அவசரமாய்ப் பிரித்து பார்த்தபோதுதான் அவருக்குக் கோபம் பிறந்தது.

'ஏன் கூப்பிட்டீர்கள்?' என்று கேட்டுக்கொண்டே பக்கத்து நாற்காலியில் வந்தமர்ந்தார் ராமய்யர். 'கலியாணம் மாமனாரின் புத்தி சாதுரியத்தை எழுதியிருக்கிறான். நீரே வாசித்துப் பாரும்' என்று

கொள்ளுகிறது. இதனால் ஒரு அருவி உண்டாகி ஒலியகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒலி பெருக்கியில் செல்லுகிறது. ஒலி பெருக்கி மின் துடிப்புகளை ஒலித் துடிப்புகளாக மாற்ற, திரும்ப ஒலியை அடைகிறோம். இதுவே ரேடியோ மூலம் ஒலிப்பரப்பு செய்யும் முறையாகும்.

இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஆபீஸ்	சென்ட்ரல் ஆபீஸ்
மாயவரம்	**சென்னை**

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25, 00, 000
வழங்கி, வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21, 25, 000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18, 75, 000
ரிஸர்வுகள்	ரூ. 3, 25, 000
மொத்த மூலதனம்	ரூ. $2\frac{1}{2}$ கோடிக்கு அதிகம்

❋

சென்னை ஆபீஸ்கள் :

ஜியார்ஜ் டவுன் மாம்பலம் மயிலாப்பூர் பெரியமேட்
திருவல்லிக்கேணி

❋

கிளை ஆபீஸ்கள் :

அம்தால வல்ஸா	மதுரை	தாடே பள்ளிக்கூடம்
அனகபள்ளி	மாருடேர்	தஞ்சாவூர்
சிதம்பரம்	மாயவரம்	திருநெல்வேலி டவுன்
சித்தூர் கொச்சின் ஸ்டேட்	பாலக்காடு	திருநெல்வேலி ஜங்ஷன்
காஞ்சிவரம்	பார்வதீபுரம்	திருச்சி
ஈரோடு	புதுக்கோட்டை	வேலூர்
காரைக்குடி	சாலூர்	விஜயபுரம்
கும்பகோணம்	சீயாழி	விருதுநகர்
		விஜயநகரம்.

❋

டைரக்டர்கள்:

ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரி, ஸி.ஐ.இ. (சேர்மென்)
ஸ்ரீ வி. வேங்கடராம அய்யர், எம்.ஏ., பி.எல்.
ஸ்ரீ ஆர். எஸ். ஏ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், பி.ஏ., பி.எல்.
ஸ்ரீ கே. சிவஸ்வாமி அய்யர்
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், (மானேஜிங் டைரக்டர்)

பிக்ஸட் டிபாசிட்டுகள் : ஒரு வருஷ தவணைக்கு வட்டி $2\frac{3}{4}$%, 2 வருஷத்துக்கு வட்டி 3%.

சேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்டுகள் : ரூ. 5,000 வரை வருஷத்திற்கு வட்டி $2\frac{1}{2}$%. வாரம் ரூ. 250 வரை எடுத்துக் கொள்ளலாம்.

கரண்ட் அகௌண்ட் : வருஷத்திற்கு $\frac{1}{2}$% வட்டி அனுமதிக்கப்படும்.

அட்வான்சுகள் : தங்கம், சர்க்கார் புரோ நோட்டுகள், அங்கிகாரம்பெற்ற பங்குகள், செக்யூரிடிகள், வர்த்தகப் பங்குகள் இவைகள்பேரில் கடன் கொடுக்கப்படும்.

அந்தக் கடிதத்தை நீட்டினார். ராமய்யர் வாசித்தார். கடிதம் பின் வருமாறு :—

"தந்தை அவர்களுக்கு, இக்கடிதம் எழுதுவதினாலேயே நான் இவ்வழகிய கிராமத்திற்கு வந்து சேர்ந்துவிட்டேன் என்பது புலனாகும். தங்கள் ஆப்த நண்பர் ராமய்யர் சொன்னபடி கிராமம் என்பது சுவர்க்கமல்ல. பார்த்ததில்லையென்றாலும் நான் கேள்விப்பட்டபடி நரகம் போல்தான் தோன்றுகிறது. மனித நாட்டத்தையே காணோம். ஏதோ அங்கொருவர் இங்கொருவர் இருப்பது தெரிகிறது. ஐயோ இந்த நிச்சப்தம்! ஒரு பகலுக்கு நமது பட்டணங்களில் 12 மணிதானே. இங்கு 50 மணி நேரம் இருக்கும்போல் இருக்கிறது. சூரியன் அசைவதாகவே தோன்றவில்லை. இரு குளங்கள். ஒரு பக்கத்தில் பெரிய ஏரி. எல்லாம் பார்க்க பயங்கரமா யிருக்கிறது. கோவிலாம் கோவில், ஒரு சந்தடியைக் காணோம். நேற்று ஒருநாள் தொலைந்தது. இன்னும் இரண்டுநாள் இங்கு இருந்துவிட்டு போக வேண்டுமாமே.

"ஒரு முக்கிய சமாசாரத்தை எழுத மறந்து விட்டேனே. நேற்று சாயந்திரம் தங்கள் சம்பந்தி கிருஷ்ணய்யர்வாள் என்னை வயல் வெளிக்கு போய் வரலாமா வென்று கேட்டார். அந்த அழகையும் பார்த்துவிட வேண்டுமென்று புறப்பட்டேன். அங்கே நான் பார்த்த காட்சி உடல் நடுங்குகிறது.

பயித்தியங்களின் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டுவிட்டோம் என்று நடுங்கினேன். வயல் முழுதும் ஒரே சேறு. சேறு என்றால் ஒரே ஆபாசம். தங்கமான நெல்லை கூடை கூடையாய் அதில் கொட்டுகிறார்கள். நம் பட்டணங்களில் ரேஷன் கடைகளில் கார்டும் கையுமாய் ஒருநாள் முழுதும் காத்துக் கிடக்க, இப்படி பைத்தியங்கள் கையில் இருப்பதையும் பாழ்பண்ணுவதைப் பார்த்தபோது எனக்கு கண்ணீர் பெருகிவிட்டது. இனியும் என்னென்ன செய்வார்களோ என்ற பயம் ஒரு பக்கம் ; இந்த காட்சியைப் பார்க்க ராமய்யர்வாள் இல்லையே என்று ஒரு பக்கம் துக்கம்.

இந்த பயித்தியக் கூட்டத்தில் இருக்க பயமா யிருக்கிறது. உடனே வர அனுமதித்து தந்தி யடிக்கவும். தப்பு, தப்பு; இங்குதான் தந்தி கிந்தி கிடையாதே. நானே புறப்பட்டு வந்துவிடுகிறேன்." ராமய்யர் இதைப் படித்து முடித்ததும் " அட பைத்தியமே " என்றார்.

உயர்ந்த ரகத்தின்
உண்மையான அடையாளம்



உழைப்பிற்கும்
சாயத்திற்கும்
உறுதியானது
சிறந்த மாதிரிகள்
நிறைந்தது.
எங்கள்
சங்கு
மார்க்கு
கயிலி, ஷர்ட்டிங்
கைக்குட்டைகள்

மதராஸ் பளயகாட் கம்பெனி லிமிடெட்
"சங்கு நிலயம்"
31. அரண்மனைக்காரத் தெரு, சென்னை.
2/8. கீழ மாரட் வீதி, மதுரை.

சிலோன் பிராஞ்சுகள்:- கொழும்பு, கண்டி.

காணிக்கை

(100-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே தண்ணி. காபி எப்படித்தான் இருந்ததோ ?"

"அவன் வீட்டுக்குப் போனேன். வீடு சாத்தி இருந்தது. அரவத்தையே காணோம்."

"ராத்திரி மூணு மணிக்கு அரவம் கேட்குமாக்கும் !"

"உள்ளே விளக்கு மாத்திரம் எரிந்து கொண்டிருந்தது. மறந்து விட்டேன். நீ போட்ட காபி அப்படி ஒன்றும் மோசமா இல்லையே."

"நல்ல வேளை."

"மாத்யூஸ் ! என்று இரண்டுதரம் கூப்பிட்டேன்."

"உங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. நமக்குக் கலியாணம் எல்லாம் பழசாகப் போச்சு. அவர்களுக்கும் அப்படித்தான் என்று நினைக்கலாமா ? போன வருஷம் தானே கலியாணமாச்சு. அந்தப் பெண் குடித்தனம் நடத்த வந்து ஆறு மாதம் கூட ஆகவில்லை. சிறுசுகள் குடித்தனம் பண்ணுகிறார்கள். பாதி ராத்திரியில் கதவைத் தட்டிக் கூப்பிட்டால் எப்படி இருக்கும் !"

"திருடன், தேள் என்றால்தான் சிறுசுகள் எழுந்திருக்க வேண்டுமாக்கும் ! கேள். மாத்யூஸ் கதவைத் திறந்தான்."

"இப்பொழுது கிளம்பி ரஸ்தாவுக்குப் போனால்தான் மோட்டார் பஸ் வருவதற்குச் சரியாக இருக்கும். கிளம்பு" என்றேன்.

"போவோம், இரு, ஒரு நிமிஷம்" என்று சொல்லி, ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டுக் கிணற்றங் கரைப் பக்கம் போனான்.

நான் உட்கார்ந்திருந்த இடத்தில் விளக்கு இல்லை. அதற்குப் பக்கத்தில் இருந்த அறையில் பள்ளியறை விளக்குச் சிறிதாக எரிந்துகொண்டிருந்தது. சுடர் அடங்கியிருந்த போதிலும் அந்த அறையிலுள்ள பொருள்கள் அவ்வளவும் தெரிந்தன. ஒரு ஓரத்திலே மேஜை நாற்காலிகள். மேஜைமேல் எரிந்து தீர்ந்துபோன ஊதுவத்திக் கட்டைகள் நிறைந்த ஊதுவத்திக் தாங்கி. வெற்றிலைத் தட்டு. சில சிதறிக்கிடந்த ரோஜா இதழ்கள். அறை நடுவில் கொசுவலை யிடப்பட்ட ஒரே கட்டில். அவன் மனைவி உள்ளே தூங்கிக்கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் ஆனதும் அவன் திரும்பி வந்து கொசு வலையைத் தள்ளினான்.

"அற்புதம் !" என்று முதலில் மெதுவாகக் கூப்பிட்டுக்கொண்டே தொட்டெழுப்பினான்.

குளிர் காலத்தில் மூலையில் சுருண்டு கிடக்கும் நாயை எழுப்பிவிட்டதுபோல் புரண்டு படுத்துக்கொண்டாள்.

"அற்புதம் !" என்று மறுபடியும் கொஞ்சம் அழுத்தமான குரலில் கூப்பிட்டான்.

அவள் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

"என் ?"

"ஊருக்குப் போய் வாரேன். இப்பொழுது போனால் தான் பஸ் கிடைக்கும்."

"எந்த ஊருக்கு?"

"ராத்ரி உன்னிடம் சொன்னேனே."

"ஆனால் இப்பொழுது ராத்ரி இல்லையா ?"

"மாசத்தில் ஒரு தரம் இரண்டு தரம் அந்த சிநேகிதனைப் பார்த்துவிட்டு வந்தால் தான் நல்லது. சிநேகிதத்திற்கும் சரி, உத்யோகத்திற்கும் சரி."

உட்கார்ந்திருந்தவள், வேர்க்கறையான் வெட்டிய மலர்ச்செடி போல், துவண்டு மெத்தையிலே சாய்ந்தாள்.

"தனியே என்னை விட்டுப் போவது இன்னும் நல்லது."

இதைக் கேட்ட மாத்யூஸ் என் பக்கமாக முகத்தைத் திருப்பினான்.

"உஸ் ! கத்தாதே. அவன் காதில் விழப்போகிறது."

"யார் காதில் விழுந்தால் எனக்கென்ன? மாதா கோவிலில், பொன் மலர் கொத்துப்போல் எரியும் மெழுகு வத்திகளின் முன்பு பாதிரியார் சொன்னதென்ன? இருவரையும் சாவு பிரிக்கும் வரையில் ஒன்று என்று நீங்களும் உறுதி கூறினதென்ன? கோட்டான் குமுறும் வேளையில் நான் ஒண்டியாக இருக்கிறேன்."

"பாதிரி இதையா சொன்னார். ஜல தாங்கக் கிண்ணியில் விரல் இருக்கக் கூடாது என்றார். கிண்ணியை நகர்த்தக் கூடாது என்று சொல்லவில்லையே.... நாளை சாயங்காலத்திற்குள் வந்து விடுவேன். இது கூட."

"ஆகட்டும்" என்று கையைத் தலைக்கு மேலாகத் தலையணையில் எறிந்தாள், உடம்பைத் திருப்பிக்கொண்டாள்.

"எங்க ஐயாவைக் கண்டால் பிடிக்கவில்லை. காலையில் வருவதாக எழுதியிருக்கவில்லையா? அவர் வருகிறபோது நீங்கள் இருக்கவேண்டாமா?"

"அவர் ஒரு மாச லீவில் வருகிறாரே. நாளை சாயங்காலம் பார்த்தால் கோபித்துக்கொள்ளமாட்டார். முழுகிப் போகிறது போல, உனக்குத்தான் கோபம் வருகிறது."

"முழுகிப் போகிறதா? இஷ்டப்படி செய்யுங்க" என்று போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். உள்ளிருந்து விம்மும் ஓசை கேட்டது.

அவன் என்ன நினைத்துக் கொண்டானோ என்னிடம் வந்தான்.

"நீங்க வேணுமானால் இருங்கள். நான் மட்டும் போய் வாரேன்" என்று முந்திக் கொண்டேன்.

மாத்யூஸின் முகம் அவிந்த நெருப்பைப் போல் ஆகிவிட்டது. அவ்வளவுதான்.''

மேலே ஒன்றும் சொல்லாமல் ராமேசம் மௌனமானான்.

"அதனால் இந்த மாதிரி எழுதுவானேன்?'' என்றாள் ருக்மணி.

"இதை எல்லாம் பார்த்த பிறகு தான் ஒரு உண்மையைக் கண்டுபிடித்தேன். தினம் தினம் பத்து வருஷமாக நீ வீட்டில் இருக்கிறாயே, ஒரு நாளாவது உன் இஷ்டப்படி நடந்தேனா என்ற நினைப்பு வந்தது. யோசித்து யோசித்துப் பார்த்தேன். புசல் காற்று தன் போக்கிலேயே அட்டகாசத்துடன் போகிறதல்லவா? ஒடிஞ்சு விழுந்த மரங்களை திரும்பியேனும் பார்க்கிறதா? அதேமாதிரி இருந்திருக்கிறேன் என்று விளங்கிற்று. நான் வீட்டில் பழகும் மாதிரி உன்னை ஒடிந்த மரம் மாதிரி எவ்வளவு தடவை செய்திருக்கும்! "இப்பொழுதென்ன அதைப் பற்றி.''

"இல்லை. சும்மா சொல்லு.''

"ஆரம்பத்தில் இரண்டொரு சமயம் அப்படி நினைத்திருப்பேன்.''

"அவ்வளவு பெரிய புண்ணை வைத்துக்கொண்டு ஊமையாய் இருந்திருக்கிறாயே. இந்தப் பெண்ணை பார்த்ததும் மனிதன் புயலைப்போல் நடக்கக்கூடாது'' என்று தீர்மானித்தேன்.

"ஆனால் இப்பொழுது அந்த மாதிரி நினைப்பே வருகிறதில்லை.''

"அது இன்னும் மோசமல்லவா? உன்னையே அழித்துவிட்டேன். அம்மி மிதிக்கிறதென்றால் இதுவா அர்த்தம்? அம்மியில் பொளிவு தேய்ந்து போனால் அறைப்பதில் என்ன லாபம்? அதனாலே தான் வீட்டுக்கு வந்தால் ஏதோ 'மில்'லில் வேலை செய்வது போல் ரஸப்படாமல் இருந்திருக்கிறது. பட்டுப்போன அந்த செடியைத் துளிர்க்க வைத்தால்தான் இனி நல்லது.''

"துளிர்க்க வைக்கவா கடுதாசு?''

"அப்படி நினைத்துத்தான் எழுதியிருக்கிறேன்.''

"அதெல்லாம் இருக்கட்டும். பூமி மேலே கோடி கோடி வருஷமாய் நடந்து போனாலும், பூமி ஏன் என்று கேட்கிறதா? செடி ஒன்றும் பட்டுப் போகவில்லை. பசுமையாய் பூ குலுங்கிக்கொண்டுதான் இருக்கிறது. இதோ—''

சின்னக் குழந்தை வாழைக்காய் பஜ்ஜியைக் கவ்விக்கொண்டு சமையலறையில் நுழைந்தது.

"உங்களுக்கு ஏனோ புத்தி மயங்கி இருக்கிறது. இந்தாருங்கள் கடுதாசு, இந்தாருங்கள்.''

தயங்கும் கைகளுடன் கடிதத்தை வாங்கிக்கொண்டு அவள் முகத்தைப் பார்த்தான். தேய்த்து ஏற்றி வைக்கப்பட்ட குத்து விளக்கு எழிலுடன் சுடர்விட்டெரிவதுபோல் அவள் முகம் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

"பூவையும் கொடுத்து விடுவாயோ?''

"பூவென்ன, இந்த கடுதாசி மாதிரியா? ஆனால் எதுக்கு?''

"அதுவா - பூமாதேவியைப் பூஜை செய்ய.''

ருக்மணி வெட்கிப் புன்சிரிப்புக் கொண்டாள்.

"உங்களுக்கு என்னவோ பைத்யம் வலுத்துவிட்டது. எனக்கு விளையாட இப்பொழுது போது இல்லை'' என்று அடுப்பண்டை சென்று ஊது குழலை எடுத்துக்கொண்டாள்.

ஸத்ஸங்கம்

[கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி.எல்]

உலகம் இன்று உருத்தெரியாமல் புரண்டு கிடக்கின்றது. எங்கு பார்க்கினும் எவ்வளவோ வித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் எவ்வகையில் மாறப்போகிறோமோ என்பதையே நினைத்து வியக்கும் தறுவாயில் தான், உலக மக்களும் காலம் கடத்துகிறார்கள். புதுமையின் மோகம் அறிவாளியையும் பிரமிக்கச் செய்து வருகிறது. தற்காலத்தில் உண்டான காரணமே சில விஷயங்கள் முன்னேற்றத்தின் சின்னங்களைப் பெற்றுள்ளனவாக சிலருக்குத் தோன்றுகின்றன. எங்கோ ஒரு இடத்தில் யாராவது ஒரு சிறந்த ஞானி மட்டும் கேவலம் காலத்தை மட்டும் அளவுகோலாகக் கொண்டு முன்னேற்றத்தை ருஜுப்படுத்துவது சரியன்று; வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள உண்மை அம்சம் பெற்று இருப்பது தான் என்பது போதிக்கின்றார். மற்ற மாந்தர்கள் தங்கள் அலுவல்களில் சிக்கிக்கொண்டும், தீராத நோய்களுக்கு இரையாகியும், வேற்றுமைப் பிணிகளை விலைக்கு வாங்கியும் தவிக்கின்றனர். ஆனால் மொத்தத்தில் யாரைக் கேட்டாலும் வரவர எல்லாத் துறைகளிலும் விருத்தியின் அறிகுறிகளே தென்படுவதாக உரைப்பார்கள்.

கவனித்தால் நிச்சயம் ஒன்று தெளிவுபடும். உலகம் மாறிவருகிறது பொய்யன்று. ஆனால் முன்னேற்றம் அடைந்து வருகிறதா என்றால் உடனே அபிப்பிராய பேதங்கள் தோன்றத் தொடங்கிவிடும். ஒரு சாரார் பண்டைக்காலம் தொட்டு சிற்றின்ப சுகங்களைப் பெருக்கும் முயற்சியை முன்னேற்றத்தின் சிறந்த விளைவாக நினைக்க மறுப்பார்கள். மற்றொரு இனத்தவர் இயற்கையின் தர்மமே வளர்ச்சியை நாடுவதாம் என்று விஞ்ஞான அறிவு முதலியவைகளைக் கொண்டுக் காட்ட முற்படுவார்கள். ஒரு புறம், கல்வியைப் பொருள் சேகரிக்கும் உபயோகத்திற்கே அர்ப்பணம் செய்வதை வாழ்க்கையின் இன்றியமையாத நெறியென்று கொண்டாடும் மனிதர்களையும் பார்க்கிறோம். மற்றொரு புறம் மனிதன் அடையும் கல்வித்திறனெல்லாம் இவ்வாழ்க்கையின் சிக்கல்களினின்றும் தன்னை கடத்தேற வைக்கவே பயன்படவேண்டும் என்று ஓதுவாரும் உண்டு.

அதிலும்,மற்ற நாடுகளைக் காட்டிலும் புராதனப் பண்பாடுடைய பாரத பூமியே மேலே குறித்த இரண்டாம் வகை லக்ஷ்யத்தை வற்புறுத்தியுள்ளது. உயர்ந்த அறிவு யாதெனில், இவ்வுலகை விட்டு அகலுவது ஒன்றே என்பது சான்றோர் அநுபவித்து நமக்கு உரைத்த உபதேசம். இப்பெரிய மரபில் தோன்றிய பலர், பல துறைப்பட்ட ஞானம் தம்மிடம் செழித்திருப்பினும், அறிவுக்கும் அறிவான அழிவற்ற தத்துவத்துடன் ஒன்றிய நிலையைப் பெரிதும் புகழ்ந்து பாடினர். புதிய உலக ஞானங்கள் ஏற்பட்ட பின்னரும், நம்மில் சிறந்தவர்கள் இப்பழைய அநுபவத்தின் நோக்கத்தையே வழிபட்டு, பற்பல உயர்ந்த செயல்களில் ஈடுபட்டும் பற்றற்ற நிலையை மனத்தடத்தே எழுப்பிப் பிறப்பையும் தம்பால் கவருவதைக் காண்கின்றோம்.

ஆனால், மேல்நாட்டு நவநாகரிக வெள்ளம் கரைபுரண்டோடுகையில், கற்பாறை இங்கொன்றும் அங்கொன்றுமாய் பிரவாகத்தை வழி மறித்துப் பிரயோசனமென்ன? சுவாமி விவேகாநந்தரைப் போலவும், மகாகவி ரவீந்திரநாதரைப் போலவும், மகாத்மா காந்தி அடிகளைப் போலவும் அழியாத தத்துவ ஞானிகளின் பரம்பரையை இந்நாடு பெற்றும்,

தடைபட்ட நீர்வீழ்ச்சி முன்னிலும் வேகத்துடன் கீழ்நோக்கி ஓடுவதை ஒப்ப, இவர்கள் மறையவுமே இவர்களுடைய உபதேசங்களை யெல்லாம் புறக்கணித்துவிட்டு இந்திரிய சுகங்களுக்கு மிகவும்உதவியான நவ நாகரிகம் இந்நாட்டிலும் பெருகத் தொடங்குவதையே காண்கின்றோம். விவேகாநந்தர் இறந்து வருஷங்கள் ஐம்பதாவதற்குள் அவருடைய நன்மொழிகளின் ஞாபகமே அற்றவர்களாய் நாம் ஆகிவிட்டோம். கவி ரவீந்திரர் நேற்று வரை தம் மத்தியில் கவிதை வடிவில் அத்வைத சுகத்தை பொழிந்திருந்த போதிலும், 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று கூறுவதை விட்டு, சதா வேற்றுமைப் பேயைத் தழுவி இன்பக் கனவு காண்கின்றோம். காந்தி மஹாத்மா இன்னும் உயிருடன் இருக்கிறார். நம் மத்தியில் இடைவிடாமல் தியாகத்தின் தீவிர வாதத்தை ஆசரித்துக் காட்டுகிறார். ஆனால் இப்பெரும் பாக்கியம் கிடைப்பதற்காக தவம் செய்வது போக, கிடைத்த பொருளையும் கைநழுவ விட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவ்வித இன்னல்களுக்கு மருந்து வேண்டுமே என்று ஏங்குபவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் இருளில் ஒளியின் கிரணத்தைத் தேடுபவர்கள் தாம். கவனித்தால் ஒளி ஒன்று உளதாயின், அது காரிருளிலும் கண்ணுக்குப் புலனாகும். சாவின் மத்தியில்தான் இறவாமையும் செழிக்கும். நிஜமற்ற வாழ்க்கையின் நடுவில் தான் சத்தியமும் தலைகாக்கும்.

'சொல்லில் அழகாய் மட்டும் இருந்தால் போதுமா? சொந்த அநுபவமாக வேண்டாமா?' என்று யாரும் கேட்க முன்வருவார்கள். ஆம், எதையும் ஊன்றி அறிய ஆசைப்படுகின்றவனே முழுவதையும் உணரத்தக்கவனாக ஆகிறான். 'நாம் ஒன்றை அடைய நம் இருதயத்தை அதற்கு அர்ப்பணம் செய்தோமானால், தானாகவே அவ்வஸ்துவும் தன் இதயத்தை நமக்குத் திறந்து காட்டும்' என்பார் கவி டாகுர். இதில் எவ்வளவோ அருமையான கருத்து குடிகொண்டுள்ளது. நல்வழியைத் தேடப் பாடுபட்டால் ஒரு நாள் அழிவற்ற நிலையை அடையவே வழி பிறக்கும். அதற்கு முதலில் நல்லாருடன் இணங்க வேண்டும். இதனையே ஸத்ஸங்கம் என்பார் நம் நாட்டில்.

ஸத்துக்கள் என்றால் பகுத்தறிவு படைத்தவர்கள், ரஸிகர்கள், உதார சிலர்கள் என்றெல்லாம் பொருள். காளிதாஸர் தம் யோக்கியதையைப் பரீக்ஷிக்க சத்துக்களையே வேண்டினார். அவர்களே தம்முடைய நாடகமும் காவியமும் சிறந்த இலக்கியமெனக் கொள்ளவேண்டுமென்று அவர் விரும்பினார். இன்றுள்ளது போல், பத்திரிகையில் வெளியாகும் விமர்சனக்காரர்களின் மதிப்பில் அல்ல, உயர்ந்த கவிஞர் தமக்குக் கிடைக்க வேண்டிய பாராட்டை எதிர்பார்த்தார். விளம்பரங்களால் மட்டுமே உலகத்தை வியாபிக்கும் நம் புதிய நாகரிக சாதனங்கள் எங்கே? கேவலம் ஆத்மசக்தியின் கிரணங்களால் மட்டுமே வெளிச்சமே உணராத பாதாள குகைகளையும் ஞாயிறு போல் ஊடுருவிப் பாயும் ஒளி யெங்கே? மேலை நாட்டில் பிறந்து, பல ஆண்டுகள் வளர்ந்து, இந்தியப் பண்பாட்டின் திவலையைக் கூட ருசிக்காத ஜெர்மானியரான 'கேடே' போன்ற சிறந்த அறிவாளிகள் காளிதாஸன் இயற்றிய சாகுந்தல நாடகத்தை அநுபவித்தார்கள் என்றால், இந்திய நாட்டுக் கவிதையின் வலிவு எவ்வளவு மேம்பட்டது என்று கூறிவிடலாம். ஆயிர ஆண்டுகள் பிரிந்திருந்த ஸத்துக்கள் ஒரே சமயத்தில் ஒன்று கூடி வாழ்வதை மெய்ப்பிக்க உதாரணம் போலுள்ளது தான், கடல் கடந்த தேசங்களில் பிறந்தவர்களும் ஒன்றுபட்ட உள்ளங்களுடன் கற்பனை உலகில் சஞ்சரித்த பெருமை. கவி டாகுரும் கேடேயின் 'பாஸ்ட்' என்ற அரிய நூலை நுகருவதற்காகவே ஜெர்மானிய பாஷையைக் கற்ற வரலாறு மேலே குறித்த ஸத்ஸங்கத்தையே ருசுப்படுத்தும்.

அபாயகரமான பிரயாணம், ஜாக்கிரதை!

இந்த அறிக்கையை புறக்கணிப்பதால் உங்கள் உயிரையே இழக்கவும் கூடும். இன்று ரயில் வண்டிகளில் ஜன நெருக்கடி அதிகமாக இருப்பதால், சில சமயங்களில் வண்டிக்குள் புகவே முடியாமலிருக்கலாம். ஆனால் ஏறும் படிமீது நின்று வண்டிக்கு வெளியே தொங்கிக்கொண்டு பிரயாணம் செய்யாதீர்கள். அது சட்டவிரோதமானது மட்டுமல்ல, நீங்கள் கீழே விழுந்து காயமடையவும் நேரிடலாம், உயிரை இழப்பதற்கும் ஏதுவாகும். ரயில் வண்டித் தொடருக்கும், ரயில் கணவாய் சுவர்கள் அல்லது கைகாட்டி மரக் கம்புங்களுக்கு மிடையேயுள்ள இடம் மிகக் குறுகியது. ரயில் வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருக்கையில் உங்கள் உடல் அவற்றிலொன்றின் மீது மோதினால், அப்பிரயாணமே உங்களது கடைசி பிரயாணமாகிவிடும்! புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். வண்டியில் இடமில்லாவிடில் ஸ்டேஷனிலேயே தங்கிவிடுங்கள். வீணாக உயிருக்குக் கேடு தேடாதீர்கள். பிரயாணமே செய்ய முடியாவிட்டாலும்கூட, நாடு முழுவதுக்கும் உணவுப் பொருள்கள், துணிமணிகள், விறகு முதலியவை ஏற்றிச் செல்வதே ரயில்வேக்களின் முக்கிய வேலை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

பிரயாணத்தை குறையுங்கள்.

அபாயகரமாக பிரயாணம் செய்யாதீர்கள்.

AAA 683—TM.

'கலைக்கு உதவாத விஷயங்களாகவே சொல்லி என்ன லாபம்? இன்று ஸத் ஸங்கம் ஏற்பட வழியைக் காட்ட வேண்டாமா?' என்போர்க்கு பதிலும் தவக்கமின்றித் தரலாம். அகங்காரத் தைத் தள்ளி அன்பு பூணும் ஆற்றலே சிறந்த ஸத் ஸங்கத்திற்கு ஒருவரைப் பாத்திரமாக்குகிறது. தம்மைப் பிறர் பாராட்ட வேண்டும் என்னும் அவா கிளம்புவதற்கு முன், தன்னை மறந்து பிறர் செய்யும் அரிய செயல்களை மன தாரப் புகழும் பழக்கமும் நாளடைவில் சிறந்தவர்களைத் தம்பால் அணுக வைக் கும். சிந்தனையைக் கிளப்பி, அதன் வாயிலாக உண்மைகளை ஆராய்வதற்கு உதவி செய்வது ஸத்துக்களின் பரிச்சய மும் பழக்கமுமே.

இன்று வெளி வேஷமாகப் புன் சிரிப்பைக் காட்டி, சற்றும் உள்ளே வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ளாத இயல்பை சமூக வாழ்க்கையின் சமரஸத் திற்கு இன்றியமையாத தர்மமாக நினைக் கத் தலைப்பட்டுள்ளோம்! உள்ளக் கிளர்ச்சியையே நம்பி உவகையுடன் பிறர் சிந்தனையைக்கவரும் குணசாலிகளன்றோ என்றுமே நிலைகொள்ளக்கூடிய ஆன்மாக் கள்?

பூமியைச் செம்மையாகப் பண்படுத் தும் உழவுத் தொழிலைப் போலுள்ளது ஸத்ஸங்கத்தின் உபயோகம். மண்ணை யும் மலர வைக்கக்கூடியது வேறு எக் கருவியும் அல்ல. அவரவர் யோக்கி யதைக்கு உவந்த உத்தம செயல்களைச் செய்ய எவ்வகைத் திறனும் பிறரிடமிரு ந்து வேண்டுவதில்லை. ஆனால் ஸத்ஸங்க மொன்றுமட்டும், புவியின்கண் சதா ஊற்றுப் பெருக்கெடுக்கும் வளமையின் உயிரோட்டம் போல், அணுகியவரை யெல்லாம் மனம் செழிக்கச் செய்யும்.

மனிதன் ஒருவனுக்கே உலக வாழ்க் கையில் தன் சொந்தச் செயலின் பலத்தி னல் பிறவாமையையும் அடைய சக்தி இருக்கிறது. மற்ற ஜீவராசிகள் ஈசுவர னுடைய படைப்பில் மனிதனைவிடக் கூட சுலபமாய் இன்பம் பெறக்கூடிய அம்சங்களைப் பெற்றிருப்பினும், அவ னவ்வளவு சொந்த யோக்கியதையினுல் பேரின்ப சுகத்துக்கு வழி செய்து கொள்ள முடியாமல் இருக்கின்றன. இவ்வித உயர்ந்த சிந்தனைக் கருவியைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருப்பவ னுக்கு ஸத்ஸங்கமும் ஏற்பட்டால் அவன் செய்தற்கரிய விஷயமும் உண்டோ!

கவனிப்போம், டாகுர் சொல்லும் ஒரு பாட்டை. ஈசனைப் பார்த்து ஒரு பக்தன் சொல்லுவதாகவே கருத்து அமைந் துள்ளது. மிகவும் கவர்ச்சியுடன் உரு வாகி இருக்கிறது உள்ளடங்கிய விஷ யம்.

"புள்ளினங்களுக்கு இனிய கீதங் களைச் செய்து கொடுத்திருக்கிறாய்; அவைகளும் பதிலுக்கு இன்னிசைகளைத் தருகின்றன.

எனக்கு நீ அருளியது குரல் ஒன்று மட்டுமே. ஆயினும், நீ என்னிடம் வேண்டுவது அதைவிட அதிகமே. ஆகையால் பாட்டுப் பாடத் தொடங்கு கிறேன்.

வாயுவை லேசாகச் செய்த பெருமை உனக்கே உரியது. அக்காரணம்பற்றி அதுவும் பணி செய்வதில் மிகவும் உற் சாகமும் வேகமும் கொண்டிருக்கிறது.

ஆனால், என் கைகளை சுமை தாங்கவே செய்திருக்கிறாய். நானாக என் கைகளை அமுத்தும் கனத்தைக் குறைத்துக் கொண்டு, உன் திருப்பணியில் ஈடுபட வேண்டியே என்னை ஏவுகிறாய்.

இவ்வுலகனைத்தையும் சிருஷ்டித்து, நிழல்களின் இடையேயும் தொடர்ந்து ஒளியை ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கச் செய்துள்ளாய்.

அவ்வளவுடன் நிறுத்திக் கொண்டாய். என்னை மட்டும் என்றுமே வறுமையில் வாட வைத்து, உனக்கு வசிக்கத் தகுதி யான விண்ணையும் மண்ணில் சிருஷ்டிக் கவே என்னை உத்தரவு செய்கிறாய்.

மற்ற ஜீவராசிகளுக்கெல்லாம் வேண்டி யதை அள்ளி வழங்குவாய். என்னிட மிருந்துமட்டும் சதா எதையாவது விரும்புகிறாய்.

தாஸி அபரஞ்சி

சென்னை

ஸாகர், கிரௌன்

இரு தியேட்டர்களிலும்..

மற்றும்

மதுரை......... நியூஸினிமா
பெங்களூர்........... ஸூப்பர்
திருச்சி........... வெலிங்டன்
சேலம்........... நியூ ஸினிமா
திருநெல்வேலி.......... பாலஸ்
தஞ்சாவூர்............... டவர்
புதுச்சேரி..... .....கமர்ஷியல்

ஆகிய இடங்களில்
வெற்றியுடன் நடைபெறுகிறது.

ஜெமினி

...தயாரிப்பு.......

டைரக்ஷன்
பி.என்.ராவ்

என் வாழ்க்கையின் அறுவடைக்காலம் நெருங்குகையில், என்னிடம் விதைத் தற்குமேல் என்னை அதிகமே அறுவடை செய்யக் கேட்பாய், ஏ செம்பொன் மணியே!"

இது அருமையான பாட்டு என்பதை டாகுரை குறை கூறுகிறவர்களும் ஒப்புக் கொள்வார்கள். முதலில், பறவைகளின் பாட்டை அவர் ஈசனுடைய சொந்த சாகித்தியமாகக் கருதுவதை அநுபவிக் கிறோம். அடுத்ததாக மனிதன் வரையில், அவனுடைய சொந்த யோக்கியதையைக் கொண்டே இயற்கையாய் நல்ல சாரீரம் பெற்றும் சங்கீதத்தை உருவாக்க வேண்டிய நிலைமையில் அவன் இருப்பதை உணர்த்துகிறார்.

சற்று மேலே போகிறது பாட்டின் அடுத்த அடியின் தாத்பரியம். அதாவது, காற்றை லேசாகப் படைத்த காரணமே அது உபயோகமான பணியைச் செய்கிறது என்கிறார். மனிதனும் தியாகத்தை மேற்கொண்டு தன் கைகளில் சுமைபோல் உள்ள பொருளையெல்லாம் பிறருக்குக் கொடுத்துதவினால், செய்தற்கரிய தொண்டுகளை யெல்லாம் ஆற்றலாம் என்பது அபிப்பிராயம்.

மூன்றாவது அடி இன்னும் மேலே தூக்குகிறது நம்மை. உலகை ஈசன் சந்தோஷமும் துக்கமும் உள்ள தாய்ப் படைத்திருக்கிறான். ஆனால் மனிதனை மட்டும் தாம் வந்து நிலைக்கத் தகுந்த ஒரு சொர்க்கத்தை இம் மண்ணில் எழுப்பச் செய்கிறாராம். அவ்வித சொர்க்கம் யாது என்றால், பற்றற்ற நிலை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மற்ற எவ்வித பந்தமும் மனத்தை நிம்மதி பெற வைக்காது. சாந்தி நிலை ஒன்றே யாவரும் தேடக்கூடிய அழியாச் சுகம்.

கடைசி அடியில், நம் நாட்டின் பெரும் பண்பாட்டை ஞாபகப்படுத்தும் கருத்தையே வைக்கிறார். அதாவது, பிறவியை ஈசன் தருகிறான் நமக்கு. ஆனால் பிறவாமை என்னும் உயர்நிலையை மனிதன் தன் சொந்த முயற்சியினாலேயே அடையக்கூடும். அதையே மெய்ப்பிக்கும் மொழிகள்தாம், விதைத்தற்கும் அதிகமாகவே அறுவடைக் காலத்தில் எதிர் பார்க்கிறார் நம்மிடம் ஈசன் என்றதன் பொருள் என்று கொள்ளலாம்.

இவ்வித முக்தியை அளிக்கும் மூலஸ்தானம் ஸத்ஸங்கமென்றால்கூட மிகை ஆகாது. ஏனெனில், மனிதன் ஒருவனால் மட்டுமே ஸத்ஸங்கம் செய்ய முடியும். ஸத்ஸங்கமே ஆத்ம ஞானமென்னும் விளையும் பயிருக்கு உரிய பண்பட்ட நிலமாகிறது. அதுவே, உணவுப் பொருளாகவும், உயிர் நிலையாகவும், இதய வளர்ச்சி மலராகவும், முதிர்ந்த ஞானக் கனியாகவும் நாளடைவிலே தோன்றுகின்றது. இதனையே நாமும் இன்று தேடித் திரிவோமாக!

ஆர்ய தர்மம்

சென்ற 29 ஆண்டுகளாக நமது பாரத புண்ய நாட்டின் தர்மத்துக் கென்றுத் தொண்டு புரியும் ஓர் உயர்தரத் தமிழ்

வாரப் பத்திரிகை

ஸநாதனிகளுக்கு அரசியலின் பாதக ஸாதகங்களை அறிவிப்பது, ஸ்ம்ருதி வசனங்கள், புண்ய புருஷர்கள் சரித்திரம், ஞான வாஸிஷ்டம், அரிய சிறிய கட்டுரைகள், தார்மிகச் செய்திகள் முதலியவை அடங்கிய பத்திரிகை இது ஒன்றே! வருஷ சந்தா ரூபா 3-8-0.

விவரத்திற்கு:—மானேஜர், **ஆர்யதர்மம் ஆபீஸ்,**
திப்பிராஜபுரம், கும்பகோணம் தாலுகா.

மணக்குடி பிச்சு

[தி. கோ. ஆராவமுதன் எம். ஏ., பி. எல்.]

'நல்லதிலே நாலும் பொல்லாததிலே பத்தும் சேர்ந்ததுதானே பூலோகம், என்ன ஐயா ?' என்று என் நண்பர் 'இரண்டு வசனம்' இராமலிங்கம் பிள்ளை கேட்டுக்கொண்டே வந்து உட்கார்ந்தார். அவருக்குப் பட்டம் வாங்கிக் கொடுத்த வசனங்கள் இரண்டில் இது ஒன்று.

அவர் மனதில் சிறிது நேரமாக ஓடிக் கொண்டிருந்த எண்ணம் ஒன்று அவர் நாக்கில் இவ்விதம் ஓட ஆரம்பித்தது என்று கண்டுகொள்வது எளிது. ஆகவே, 'எந்தப் பொல்லாததைப்பற்றி வருத்தப் படுகிறீர்?' என்று கேட்டேன்.

'பொல்லாதது என்று எண்ணுவானேன். நல்லது என்று தான் வைத்துக் கொள்ளலாமே', என்றார் பிள்ளை.

'உமக்கு அட்டி ஒன்றும் இருக்காது. நல்லதானால் நாலில் ஒன்றாய் எண்ணிச் சொல்வீர். இல்லையானால், பத்தில் ஒன்றாய் வைத்துச் சொல்வீர். இதுதான் உமது வழி ஆச்சே,' என்றேன் நான்.

'நாலு என்ன ? பத்து என்ன ? பதினாலுதான். எப்படிப் பிரித்தாலும், சேர்த்ததும் பதினாலு', என்றார் பிள்ளை.

'நாலும் பத்தும் என்று பிரிப்பது : பதினாலு என்று சேர்ப்பது : இதுவே, உமது மனம் முன்னும் பின்னும் போகிற போக்கு,' என்று அழுத்துக்கொண்டேன்.

'ஆம் ஐயா, என்ன செய்கிறது ? நீலத்தில் நாலு வகையும் பச்சையில் பத்து வகையும் சேர்ந்து கலந்தால் வகை எத்தனை சொல், பார்ப்போம். நீலத்தில் பச்சை பாய்ந்தும், பச்சையில் நீலம் ஏறியும், வர்ணங்கள் கலப்படி ஆகி, எண்ணிக்கைக்கு மீறிப்போவது இல்லையா ? எது முழுப் பச்சை ? எது முழு நீலம் ? ஒவ்வொன்றிலும் நீலம் எவ்வளவு, பச்சை எவ்வளவு? எல்லாம் சேர்ந்து ஒரே ஜோதியாய் மயக்கும்பொழுது வர்ணம் ஒன்றே அல்லவா ?' என்றார் பிள்ளை.

'நல்லதையும் பொல்லாததையும் கலப்பானேன் ? நலம் போலம் தெரியாமல் தயங்குவானேன்?' என்று எதிர் எடுப்பு எடுத்தேன்.

'தயக்கம் இல்லாமலா, ஐயா ? பூலோகம் ஒன்றுதான். அதில், பதினாலும் தான். வேற்றுமைதான், ஒற்றுமைதான்', என்று நிறுத்தி நிறுத்திச் சொன்னார். பின்பும், நிதானித்து, புன் நகையுடன், அவர், 'பதினாலுந்தான் இருக்கும் பூலோகம்', என்று சொல்லி நிறுத்தினார்.

'இரண்டு வசனத்தா'ரின் இரண்டாவது வசனம் இது. வெகு வருஷமாய் அவருடன் பழகி வரும் எனக்கு அவர் மனப் போக்குத்தான் தெரியுமே. அவர் பேச்சில் முதல் வசனத்திற்கும் இரண்டாவதிற்கும் இடையே இரண்டு நிமிஷத்திற்கு மேல் கால நீடிப்பு இருப்பது இல்லை. இந்த இரண்டு நிமிஷத்திற்குள் தான் இந்த விதத்தில் பூலோகத்தின் தத்துவத்தை விசாரணை செய்வது வழக்கம். அதற்குமேல் விசாரம் நீளாதபடி, 'இரண்டு வசனத்தா'ரே பார்த்துக்கொள்வார். தர்க்க முறையில் நான் கேள்வி மேல் கேள்வி போட்டுக் குடைந்து என்ன ? 'பதினாலும் தான் பூலோகம்' என்ற வசனத்திற்கு முன்பு எந்தத் தர்க்கம் செல்லும் ?

தர்க்கம் தடைபட்டால் என்ன ? என் நண்பரின் வழி தெரியாதவன் நான் அல்லனே. அவர் புன் நகையையும் தயக்கத்தையும் கண்டதும், இரண்டாவது வசனத்தைக் கேட்டதும், அந்தப் பதினான்கு வகைகளில் ஒன்றை விளக்கும் வரலாறு ஒன்று வெளிவரக் காத்திருக்கிறது என்று எனக்குத் தெரியுமே !

கதைக்கும் வசனத்திற்கும் தொடர்பு சற்றுக் குறைந்துதான் இருக்கும். கதை

கூட தர்க்கத்திற்குக் கட்டுப்படுமா என்ன? கட்டுப்பட்டால் அது கதை ஆகுமா என்ன? கதையிலும் தான் இருக்கும் அந்தப் பதினுலும்.

'நம்ம அடுத்த வீட்டு பிச்சுமணியை நாலு நாளாய்க் காணேம். பேச்சு வார்த்தைக்கு அகப்படவில்லே. பெரிய கதை ஆகிவிட்டதாம்' என்று ஆரம்பித்தார்.

'சொல்லுங்கள்' என்று தூண்டினேன்.

'ஸினிமா ராணிகளில் பெரிய ராணியாகப் பெயர் வாங்கிவந்தாளே கானசுந்தரி மயிலீசர், அந்த ராணியின் கதையில் இது உள் கதையாம். வளருமே?' என்ருர்.

'பூலோகம் பதினுலும் கூடியதுதானே' என்றேன்.

'அப்படி ஒத்துக் கொள்ளும், ஐயா', என்று சொல்லி, சந்தோஷத்தில் என் தொடையில் ஒரு தட்டுத் தட்டிஞர் 'இரண்டு வசனத்தார்'. 'களாக்காடு குப்புசாமியைத் தெரியுமோ இல்லேயோ? மணக்குடி பிச்சுமணியிடம் காமிக் பார்ட்டுக்கு சில காலமாக சிஷ்யனுக இருந்து வந்தானே அவன்தான். பிச்சுமணியை நாலு நாளாய்க் காணுமையால், இவனுக்கு சாப்பாட்டுக்குக் கூட இப்பொழுது கஷ்டம். அதைக் கண்டு, சற்று இரக்கத்துடன் நாலு வார்த்தை பேசினேன். பிச்சுமணி கதையைக் கொஞ்சம்கொஞ்சமாய் வாய்விட்டான். அது உள் கதை. அத்தோடு பெருங் கதையும் கலந்து வருகிறது,' என்ருர் பிள்ளே.

'இந்தக் கதைகளுக்குக் கால் உண்டு', என்றேன் நான்.

'மூக்கும் நாக்கும் நாம் தேடிவைக்க வேண்டியது இல்லே. இயற்கையிலேயே அவை வந்து அமைந்துவிடுகின்றன', என்ருர் பிள்ளே. 'தஞ்சாவூர் நாட்டிலே ஒரு சிறு கிராமத்தில் மேளக்காரர் வகுப்பில் ஒரு மகளாம்', என்று கதையைத் தொடங்கினுர் பிள்ளே. 'சாரீரமும் பயிற்சியும் நன்ருய் ஏற்பட்டிருந்தபடியால் அதிர்ஷ்டமும் ஒட்டிக்கொள்ள முடிந்தது. 'சுந்தி என்றுதான் அவளேப் பதினெட்டு வயது வரையில் கூப்பிடுவதாம். அடுத்த ஊர் பெரிய மனுஷ்யர் ஒருவருக்கும் இவளுக்கும் பழக்கம் ஏற்பட்டதும், சுந்தரி என்று அவளே அழைப்பதாம். பாட்டுக் கச்சேரிகளுக்குப் போவது ஏற்பட, சுந்தரிபாய் என்று விலாசம் நீண்டதாம்' என்று சொல்லிக் கொண்டே, சின்னஞ்சிறு சிரிப்பு ஒன்று சிரித்தார் பிள்ளே. 'களாக்காடு குப்புசாமி கேட்டான் ஐயா, அதுதான் சிரிப்பு. "ஏன் ஐயா, இந்த அம்மா தமிழ்ப் பாட்டும் தெலுங்குப் பாட்டும் தானே பாடுகிருர்கள். சுந்தரி அம்மா என்று பெயர் இருந்தால் போதாதா? மராட்டியிலேயோ ஹிந்துஸ்தானியிலேயோ பாட்டுகள் இந்த அம்மா பாடுவது இல்லேயே: இவர்களுக்கு 'பாய்' பட்டம் எதற்கு?" என்று கேட்கிறுன். அவன் என்னத்தைக் கண்டான் ரஸிகர் உள்ளப் போக்கை? அந்த 'பாய்' பட்டம் இல்லாவிட்டால், அந்தப் பாட்டில் என்ன இன்பம் காணமுடியும்? இப்படி, சுந்தரி பாய் திருநெல்வேலியில் ஒரு நாள், மேட்டுப்பாளேயத்தில் ஒரு நாள், ராயவேலூரில் ஒரு நாள், மயிலாப்பூரில் ஒரு நாள், என்று கச்சேரிகளுக்கு ஊர் ஊராய்ப் போவது வலுக்கவே, பக்க வாத்யக்காரருடன் போட்டி போட்டுப் பாடகருடன் ஊருக்கு ஊர் போய்வரும் சங்கீத அபிமானிகளும் ஏற்பட்டனராம். இவர்களில் எல்லாம் ஊக்கத்தில் பெரியவர் மதுரைச் சீமையில் பல சினிமாக் கொட்டகைகளுக்கு முதலாளியான சிவகுமாரமுதலியாராம். திண்டிவனத்தில் நடந்த கச்சேரி ஒன்றில், முதலியாரும் இளைஞர் பலரும் சூழ்ந்திருக்கையில், சுந்தரி பாயின் பாடல் இன்பம் அவர்கள் தலேக்கு ஏறியதாம். உடன் முதலியார் கச்சேரியில் எழுந்து நின்று, கூடியிருக்கும் பொது ஜனங்களேப் பார்த்து, "இப்படி, இணே ஈடு எதுவும் இல்லாமல் பாடும் நமது பாடகிக்கு 'கானசுந்தரி தேவி' என்று பெயர் அமைவது பொருத்தம்" என்று விண்ணப்பம் செய்தாராம். அங்கிருந்த இளைஞர் எல்லாரும் உடனே ஒரே குரலில், "கானசுந்தரி தேவியே, ஊரை மயக்கி வாழ்கவே", என்று ஆர

வாரம் செய்தார்களாம். முதலியாரும், தமக்கு சொந்தமான சினிமாக் கொட்டகைகளுக்கு எல்லாம் "கானசுந்தரிதேவி விலாஸ வட்டம்" என்று பெயர் சூட்டுவதாகவும் தெரிவித்தாராம். அந்தரங்கமானவர்களிடம் கானசுந்தரியைத் தமது மனைவி என்றும் சொல்லி வந்தாராம்', என்று சொல்லிக்கொண்டே போனார் பிள்ளை.

'என்ன ஐயா, இன்னம் மணக்குடி பிச்சுவின் கதை ஆரம்பம் ஆகவில்லையே' என்றேன்.

'பொறும் ஐயா, களாக்காடு குப்புசாமியிடம் அது விவரம் எளிதில் வாங்க முடிந்ததா? சினிமா ராணி விவரத்தை முழுவதும் சொன்னதற்கு அப்புறம் தானே, மற்றைய விஷயம் சொன்னான்', என்று சொல்லி, பிள்ளை மேலே சொல்ல ஆரம்பித்தார். 'கானசுந்தரி தேவிக்குத் தன் பெயருடன் தன் புருஷனது பெயரையும் இணைத்து வழங்கவேண்டும் என்று தோன்றியதாம். கச்சேரி அறிக்கைகளில் தன் பெயர் "கானசுந்தரி சிவகுமாரர்" என்று வெளிவரவேண்டும் என்று முதலியாரின் சலுகையின் பேரில் வற்புறுத்தினளாம். பாடகியின் பெயர் ஆண்பாலின் பெயர் போல் இருந்தால் பாடகர் ஆண்பாலோ என்ற மருட்சி ஏற்படும் என்றும் பாட்டுக் கச்சேரிகளில் வசூல் குறையும் என்றும் சிலர் சொன்னதைக் கேட்கவே இல்லையாம். வேறு சிலர், நயமாக, பாடகிக்கு "சிவகுமார கானசுந்தரி" என்றாவது, "கானசுந்தரி சிவகுமாரி" என்றாவது, "கானசுந்தரி சிவகுமார தேவி" என்றாவது பெயர் கொடுத்தால் வசூல் அவ்வளவு குறைபடாது என்று சொல்லிப் பார்த்தார்களாம். தன் புருஷன் பெயரை மாற்றாமலே உபயோகித்துக் கொள்ளப் போவதாயும், அதுவே

Lovers of Good Food

Always Get this

ASAFOETIDA

எல். ஜி.தான் சிறந்த மிஸ்கி பெருங்காயம்

ஆகையால்

எல். ஜி. மார்க்கையே

எப்பொழுதும் கவனித்து வாங்கி உபயோகியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

நவீன முறைக்கு ஒத்தது என்றும் சொல்லிவிட்டாளாம். முதலியாரிடம் சிலர் சென்று, ‘தங்கள் பெயர் இப்படி இணைபட்டு அடிபடுவது நலமோ?’ என்று கேட்க, ‘இங்கிலீஷ் முறை அப்படித்தானே இருக்கிறது. அந்த முறையில் என்ன கெடுதி?’ என்று கேட்டு விடைகொடுத்து அனுப்பிவிட்டாராம். அதன்மேல் அவருக்கு மொட்டைக் கடிதங்கள் பல வந்தனவாம். “இது வரை, தங்களை கானசுந்தரி சிவகுமார முதலியார் என்று பேசி வந்தோம். இனி, சிவகுமார கானசுந்தரி முதலியார் என அழைக்க வேண்டும் போலும்’, என ஏசி இருந்ததாம். தம்பதிகள் இருவரும் ஒத்து, நவீன முறை பழுதுபடாமல், “கானசுந்தரி சிவகுமாரர்” என்றே பாடகியை அழைப்பது என்று முடிவு கட்டி, அதன்படியே விளம்பரங்களும் வெளியாக்கி வந்தார்களாம். இப்படி நடந்து வருகையில், முதலியாருக்குப் புது ஆசை ஒன்று ஏற்பட்டதாம். தமது ஒவ்வொரு கொட்டகையிலும் ஒவ்வொரு நாளும் கானசுந்தரி பிரசன்னம் ஆக வேண்டும் என்ற ஆசையாம். “கானசுந்தரி தேவி விலாச வட்டம்” என்ற பெரிய கொட்டகை வட்டம் தன் ஆளுகையில் இருக்க, “கானசுந்தரி கலைமாலை” என்று பெயர்கொண்ட சினிமாப் படவரிசை ஒன்று ஏற்பட்டால், பெயரும் வசூலும் ஒன்றுக்கு ஒன்று நிகர் ஆகும் என்று எண்ணி, “கலைமாலை”யின் முதற் படத்தையும எடுக்க ஆரம்பித்தாராம். இப்போதாவது கவனியும் ஐயா—மணக்குடி பிச்சு வருகிறார்—படத்தில் வருகிறார்—காமிக்கில் வருகிறார்—அதுவும், தம்பதி சமேதராய் வந்துவிட்டார்” என்று சொன்னார் பிள்ளை, உற்சாகமாக.

“நான் முழிச்சுக்கொண்டு இருக்கிறேனா என்று பார்க்கிறீரா, என்ன? பிச்சுவுக்குக் கல்யாணம் ஆக இல்லை என்று சொல்லியது இல்லையா?” என்று குறுக்கிட்டேன் நான்.

‘உண்மைதான். ஆனாலும், அவருக்குத் தனியாகக் காமிக் கிடையாதாம். அதற்காக, அவருக்கு ஜதையாக அச்சுதம்மா என்ற ஒரு காமிக் ஸ்திரீ பார்ட்டும் ஏற்பாடாம். ஜோடியில்தான் அவர்கள் காமிக்காம். தாலி கட்டினால்தான் தம்பதியா? அவருக்கு தாம்பத்ய கால பலன் நெருங்கிவிட்டது. நல்ல நெருக்கந் தானாம். பிச்சுமணிக்கும் அச்சுதம்மாவுக்கும் திரையில் பிரிவே கிடையாதாம். களாக்காடு குப்புசாமி என்ன கேட்கிறான் தெரியுமோ? “ஏன் ஐயா, ஜாலர் கட்டை இரண்டையும் சேர்த்துத் தட்டினால்தானே தாளம். அதுபோலத்தான் காமிக்கும் இருக்குமோ?” என்கிறான். இப்படி எல்லாம் வைபவமாய்ப் படம் பிடித்து வரும்பொழுது, கானசுந்தரி மனம் மாறிக்கொண்டு வந்ததாம். படம் பிடிக்கும் கொட்டகையின் முதலாளி மயிலீசன் செட்டியார் பெரிய பணக்காரராம். வியாபாரத்தில் கைதேர்ந்தவராம்; இளம் வயதாம்; ஆடல் பாடல் கேளிக்கைகளில் அதிகப் பற்று உடையவராம். தமது கொட்டகையில் பிடிக்கும் படங்கள் எங்கும் பரவித் தமக்குப் புகழ் கொண்டுவர வேண்டும் என்று எண்ணி, தாம் எடுக்கும் படங்களை முப்பது நாற்பது சினிமாக்கொட்டகைகளில் காட்டும்படி ஒப்பந்தமும் செய்திருக்கிறாராம்’ என்று சொல்லிவந்தார் பிள்ளை.

‘தீயும் காற்றும் ஒன்று சேர்கின்றனவோ, படத்தில்?” என்று கேட்டேன்.

‘படம் எடுக்கும்போது எல்லாம் மயிலீசன் செட்டியாரும் கானசுந்தரியும் கொட்டகையில் நெருங்கிப் பழகவேண்டி இருந்ததாம்,’ என்று சொல்லிக்கொண்டே போனார் பிள்ளை. ‘ஒருவருக்கு ஒருவர் நட்பு ஏற்பட்டதாம். நாளடைவில், சிவகுமார முதலியார் அறியாமலே, இவர்களுக்குள் பழக்கம் முற்றிவர, படம் முடிந்து, வெளியில் வழங்கத் தயாராகி வரும்பொழுது, ஒரு நாள், கானசுந்தரியும் மயிலீசன் செட்டியாரும் எவருக்கும் தெரியாமல் திருவொற்றியூர் போய், அந்தக் கோயில் மரத்தடியில் மோதிரம் மாற்றிக்

நாங்கள்
விளம்பரம்
செய்யாவிடில்
எங்கள்
கடமையில்
தவறுவோம்

"லிவர்க்யூர்", 35 வருஷங்களாக கியாதி பெற்றதும், டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யா அவர்களால் கண்டுபிடித்து, நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டதுமானது. பல நல் உயிர்களைக் காப்பாற்றியுள்ளது.

பல பிரபல வைத்திய நிபுணர்கள் இம்மருந்தை ஜயத்துடன் உபயோகித் துள்ளார்கள்.

★

முற்றிபோன ஈரல் கட்டி நிலைமையில் ஜெயத்துடன் குணமாக்கப்பட்ட அநேக கேஸ்களில் இது ஒன்று.

ஒருவர் கூறுகிறார் :—" அநேக வருஷங்களாக குழந்தை கட்டிக்கு வைத்தியம் செய்வது மிகவும் கவலைக்கிடமாக இருந்து வந்தது. ஆனால் விஜயநகரம் டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யா தன்னுடைய ஈரல் குலைகட்டி மருந்தை ஒரு தெய்வீக வரப்பிரசாதம்போல உலகிற்கு அளித்த பிறகு தான் அப்பிரச்சனை தீர்ந்தது. இந்த கொடும் வியாதியால் பிடிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஒரு பெரிய நன்கொடை யென்றே கருதவேண்டும். எனது அனுபவத்தில், இதைப் போன்ற மற்ற மருந்துகளை காட்டிலும் இம் மருந்துகளே கண்டிப்பாய் குணம் செய்கின்றன என்று கண்டுள்ளேன்."

ஆரம்ப நிலை, முதிர்ந்த நிலை, வயிற்று கட்டிகளுக்கு மருந்துகள் கிடைக்கும்.

தந்தி : லிவர்க்யூர்
மதராஸ்

Jammi Venkataramanayya & Sons

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,
8, சாலை தெருவு, மைலாபூர், மதராஸ்
தபால்பெட்டி : 608 போன் : 8139.

T.M.J.I.

கக்குவாய் இருமலுக்கு 'வூக்கோ'
உபயோகியுங்கள்

கொண்டு, சேர்ந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்களாம். சிவகுமார முதலியார் சும்மா இருப்பாரா? நயபயங்கள் சொல்லிப் பார்த்தும் பயன் இல்லையாம். இதுவும் அன்றி, பட விளம்பரங்களில் கதாநாயகியின் பெயர் "கானசுந்தரி சிவகுமாரர்" என்று இருந்ததை மாற்றி, "கானசுந்தரி மயிலீசர்" என்று மாற்றி விட்டார்களாம். இது தாங்குமா முதலியார் அவர்களுக்கு? படத்துக்கு முதலாளியாகிய நமக்கும் படம் எடுக்கும் கொட்டகை முதலாளியாகிய மயிலீசன் செட்டியாருக்கும் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாய் படம் எடுபட்டிருப்பதாயும், படத்தை செட்டியார் வெளியிடக்கூடாது என்றும், அப்படி வெளிவந்தாலும் கதாநாயகியின் பெயர் "கானசுந்தரி சிவகுமாரர்" என்றுதான் இருக்கவேண்டும் என்றும் கட்சிசொல்லி, விவகாரத்திற்குப் போகவே, கோர்ட்டில் முதல் எடுப்பிலேயே ஜயமாயும் அபஜயமாயும் சில்லறை உத்திரவுகள் ஏற்படக் கொண்டு, முன்னுப் பின்னும் போகமுடியாமல் திகைத்துக்கொண்டிருக்க, விவகாரம் விசாரணைக்கு வந்து, புதுப் பெயரான "கானசுந்தரி மயிலீசர்" என்றுதான் கதாநாயகியின் பெயர் இருக்க வேண்டும் என்றும், ஆனல் முதலியாரின் கொட்டகை வட்டத்தில் ஒருவாரம் படம் ஓடின பிறகுதான் மற்றைக் கொட்டகைகளில் ஓடலாம் என்றும் தீர்மானம் ஏற்பட்டதாம்,' என்றார் பிள்ளை.

'என்ன ஐயா, இருபத்து நாலாயிரம் அடி போதாதுபோல் இருக்கிறதே இந்தப் படத்துக்கு,' என்றேன் நான்.

'முதல் அங்கம் தொடங்கி ஐந்தாம் அங்கம்வரை நீளாத கதையும் கதையில் சேருமா? இருக்கட்டும். முடிவு வந்து விட்டது,' என்று சொல்லி, தொடங்கினர் பிள்ளை. 'மயிலீசருக்கு கானசுந்தரி பூராவும் அநுகூலம், தீர்ப்பும் முக்காலே மூன்று வீசமும் அநுகூலம். என்றாலும், சிவகுமார முதலியாருக்கு மாத்திரம் தாம் எப்படியாவது ஒரு வகையில் ஜயித்துப் பழிதீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற ஆவல் இருந்ததாம். இருக்காதா? 'பொருள் நஷ்டம் பெரிது அன்று, பழிதீர்த்துக் கொள்வதே பெரிது' என்று முடிவுகட்டிக் கொண்டாராம். படம் ஓட ஆரம்பிக்க ஒருவாரம் இருக்கையில், விளம்பரத்திற்காக சுவர்களில் ஒட்டிய நோட்டிஸ்களில் கதாநாயகியின் பெயரை "கானசுந்தரி மயிலீசர்" என்று அச்சு அடித்திருந்ததாம். இது கண்ட முதலியார் இரவோடு இரவாய் "கானசுந்தரி சிவகுமாரர்" என்று துண்டுகள் அச்சடித்து, நோட்டிஸ்களில் மறு பெயர் வந்திருக்கும் இடம் எல்லாம் ஒட்டிவிடச் சொல்லியபடி அவர் ஆள்களும் ஒட்டிவிட்டார்களாம். இதுவே போட்டா போட்டி ஆட்டமாக வாரம் முழுவதும் நடந்ததாம். இதனலேயே இந்தப் படத்தில் ஜனங்களுக்கு ஒரு ஆவல் பிறந்ததால் படம் ஓட ஆரம்பித்த தினம் ஒவ்வொரு கொட்டகையிலும் கூட்டம் பொறுக்க முடியவில்லையாம். அந்தக் கொட்டகைகள் எல்லாம் முதலியாரது வட்டத்தைச் சேர்ந்தவை அல்லவா? இவ்வளவு கூட்டத்தினல் வரும் வரும்படி எல்லாம் முதலியாரைச் சேர்கிறதே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்களாம் செட்டியாரும் கானசுந்தரியும். முதலியாரோ தன் வீட்டில் டெலிபோன் அடியிலேயே உட்கார்ந்தவராய், ஒவ்வொரு கொட்டகையிலும் நடவடிக்கைகள் எப்படி என்று அங்கு அங்கு உள்ள டெலிபோன் மூலம் விசாரித்த வண்ணமாய் இருந்தாராம். படமும் ஓட ஆரம்பித்ததாம். கதை போகும் போக்கில் முதல் கால்மணி வரையில் கதாநாயகி வாய்திறவாமல் திரையில் அப்படியும் இப்படியும் வந்து போகவேண்டி இருந்ததாம். அந்தக் கால் மணியில் கானசுந்தரி திரையில் தோன்றியபோது எல்லாம் கொட்டகையில் உள்ளோர் சொக்கிப்போய் விட்டார்களாம். அவளது அங்க வைபவங்களையும் முகமலர்ச்சியையும் கண் வீச்சையும் கண்டவர் செய்த கரகோஷத்திற்கு எல்லை இல்லையாம். பிறகு கானசுந்தரி பாடவேண்டி வந்ததாம். அனுவசியமாக என்னமோ குரல் வலுத்து இருந்த

தாம். கடினம் மிகக்கலந்து இருந்ததாம். இனிமையே இல்லையாம். கானசுந்தரியின் பாட்டு என்று சொல்வதற்கே இல்லையாம், அவள் குரலையும் சாரீரத்தையும் ஒட்டிப் பாடி ஏசுவதுபோல் இருந்ததாம்,' என்று சொல்லிக் கொண்டே போனார் பிள்ளை.

'உமக்குப் பாட்டில் அன்பு விழுந்து விட்டாற்போல் இருக்கிறதே' என்றேன்.

'எல்லாம் சொல்லக் கேள்விதானே, ஐயா. கொட்டகையில் இருந்த எல்லாரும் தயங்கினார்களாம். "பாடுகிறது கானசுந்தரி தானோ?" என்று கேட்டார்களாம். "ஏன் இப்படிக் கத்தவேண்டும்" என்றாராம் சிலர். "குரல் ஏன் இப்படிக் கெட்டுப்போயிற்று" என்றாராம் வேறு சிலர். "பாடுகிறாளா? கதறுகிறாளா?" என்று ஒருவரை ஒருவர் கேட்க ஆரம்பித்தார்களாம். "முதலியார் குரலும் செட்டியார் ராகமுமாய் இருக்கிறதே" என்று ஒருவன் உரக்கக் கத்தினனும். இதைக் கேட்டவர்கள் கொட்டின கை வலிக்கக்கூட ஆரம்பித்ததாம். இதற்குள் பாட்டு முடியவே, மணக்குடி பிச்சுவும் அச்சுதம்மாவும் தோன்றினார்களாம். பிச்சு மணியின் நடிப்பு நன்றாகத்தான் இருந்ததாம். அச்சுதம்மாவின் குரல் கணீர் என்று இருந்தாலும், அவளுக்கு முகவெட்டு இல்லையாம்; வார்த்தையில் வெடுக்கும் இல்லை, எடும்பும் இல்லையாம். ஆகவே, காமிக் சிறக்கவில்லையாம். கொட்டகையின் நடுவிலிருந்து திடீர் என ஒருவன், எளிய குரலில், "என்ன ஆட்டம் அம்மா, அச்சு?" என்றானும். மற்றொருவன் கண்டிப்பாக, "தாங்கவில்லையே அப்பா,

---

பொருளாதார பாதுகாப்புக்கு இன்ஷ்யூரன்ஸ் ஒரு வழி

ஜுபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, (லிமிடெட்)

(1919-ல் இந்தியாவில் ஸ்தாபிதம் செய்யப்பட்டது)

ஆயுள், நெருப்பு, கப்பல், விபத்துக்கள் மற்றும் முன்னேற்றகரமான முறைகளில் இன்ஷ்யூரன்ஸ்கள் நடத்துகிறது.

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 2,00,00,000
வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	...	ரூ. 1,50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 23,74,000
மொத்த ஐவேஜுகள் மேற்பட்டன.	....	ரூ. 1,29,35,000

பொது மக்களிடம் கம்பெனியார் அனுபவிக்கும் செல்வாக்குக்கும் நம்பிக்கைக்கும் மேற்கண்ட தொகைகளே சிறந்த அத்தாக்ஷி

தலைமை ஆபீஸ் : : போர்ட், பம்பாய்

சென்னைக் கிளை: "ஜுபிடர் ஹவுஸ்",

167, பிராட்வே - தபால் பெட்டி நெ. 136 - சென்னை.

பிச்சு" என்று கத்தினனும். "சரிதான், இது அசல் அச்சுப் பிச்சு ஆட்டம்தான்" என்றானும் வேறு ஒருவன், உரத்த குரலில். கலகல என்று கை கொட்டினராம் கொட்டகையில் எல்லோரும். மறுபடியும் கானசுந்தரி திரையில் தோன்றி பாட நேரிட்டதாம். முன்போலவே, பாட்டு கெட்டுத் தான் இருந்ததாம். சத்தம் அதிகம், சாரீரம் மட்டு, குரல் வெகு கடினம். "என்ன இப்படிக் கெட்டிருக்கிறதே குரலும் பாடலும்?" என்றார்களாம் கேட்பவர் எல்லாம். "கானசுந்தரிக்கும் மயிலீசருக்கும் பொருத்தம் போதாதோ" என்று உரக்கக் கூவினனும் ஒருவன். "இது என்ன ஆடல் பாடல்?" என்று வேறு ஒருவன் கூவினனும். "இது கான - மயில் ஆட்ட பாட்டம்" என்று கணீர் என்று கேட்கும்படியாய் ஒருவன் சொன்னனும். "கான - மயில் தான், கானமயில் தான்" என்று பலரும் கூவ, ஓயாது கைதட்டினராம் எல்லோரும். கொட்டகையில் அல்லோல கல்லோலம் ஆயிற்றும். திடீர் என்று கொட்டகையில் உள்ள விளக்குகள் எல்லாம் எரிய ஆரம்பித்தனவாம். "ஆட்டம் போதும், கொடுத்த காசை அறைந்து வாங்கலாம் வாருங்கள்" என்று கொட்டகையை விட்டு வெளியேறினராம் பலர். கொட்டகையைவிட்டு வெளியே போகும் வழியில் கொட்டகை மானேஜர் நின்றுகொண்டு, "ஐயா, இந்தப் படத்தை நாங்கள் காட்டினது தவறு தான், மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே, ஆளுக்கு அரை அரை ரூபாய் வீதம் வாபீஸ் செய்து வந்தாராம். "கான மயிலையும் அச்சு பிச்சுவையும் பார்த்ததற்கு அரை ரூபாய் தக்ஷிணை" என்று சிரித்துக்கொண்டே எல்லோரும் வீடுபோய்ச் சேர்ந்தார்களாம்" என்றார் பிள்ளை.

'இந்த நிகழ்ச்சிகள் பொறுக்காமல் தான் பிச்சுமணி தலைமறைவாக இருக்கிறரோ?' என்று வியந்தேன் நான்.

'கானசுந்தரியும் மயிலீசன் செட்டியாருமே போன இடம் தெரிய இல்லையாமே. பிச்சுமணி என்ன செய்வான்?' என்றார் பிள்ளை.

'இது என்ன துரதிர்ஷ்டம் இவர்களுக்கு?' என்றேன் நான்.

'துரதிர்ஷ்டமாவது? நான் நம்ப இல்லை. ஊரில் என்ன என்னமோ சொல்கிறார்கள். ஒரு கொட்டகையில் நடந்தது போலவே மற்றைக் கொட்டகைகளிலும் நடந்ததாம். சொல்லி வைத்தாற்போல் ஒரே மாதிரியாகவா எல்லாக் கொட்டகைகளிலும் நடக்கும்? நாலணை டிக்கெட் வாங்கினவர்களுக்குக் கூட எட்டு அணு வாபீஸ் செய்யப்பட்டதாமே. இது துரதிர்ஷ்டமா, வஞ்சகமா? முதலியார் கொட்டகைகளில் பாடல் பிலிமின் ஓடுவதைக் கண்காணிப்பவன் ஒருவன் வெகு கெட்டிக்காரனும். எங்கேயோ ஒரு திருகை முடுக்குவானும். உடன் பாட்டும் பேச்சும் அவன் இஷ்டப்படி கெட்டு மாறுதல் அடையுமாம். அப்படி ஏதோ ஒரு 'திருகு தாள'த்தால் கானசுந்தரியின் குரலைக் கேவலமாய் மாற்றிவிட்டானும், கொட்டகைகளில் எல்லாம். ஆடல் பாடல்களுக்குக் குற்றம் சொல்லி ஆரவாரித்தவர்களும் முதலியாரின் ஆசாமிகளாம்; என்ன என்னமோ இப்படி எல்லாம் ஒரே பேச்சாம்' என்றார் பிள்ளை.

'கானசுந்தரியின் தலைவிதி பிச்சுமணியின் மேலுமா பாயவேணும்?' என்று இரங்கினேன் நான்.

'பதினலும் தான், ஐயா, பூலோகம்' என்று முடித்தார் பிள்ளை.

தியாகராஜ பாகவதர்
ராஜகுமாரி
வஸந்தகோகிலம்
கிருஷ்ணன்·மதுரம்
நடிக்கும்
ராயல் டாக்கீஸ்
ஹரிதாஸ்
டைரக்ஷன் சுந்தர் ராவ் நட்கர்னி
புரொட்யூசர்ஸ் ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ்
மதுரை
பெஜவாடா
ஸ்டுடியோ சென்ட்ரல் ஸ்டூடியோஸ்
கோயமுத்தூர்
ROYAL TALKIE DISTRIBUTORS
P.S.M.Co.
W.A.மேனன்

ஸமாதானம்

[பண்டிட் எம். வி. எஸ். ராம், பி. ஏ., பி. எல்.]

ஆரோக்கியமுள்ள சரீரத்தில் பிரகாசிக்கிற மனஸின் உல்லாஸத்திற்கு ஸமாதானமென்று பெரியோர்கள் சொல்கிறார்கள்.

அநேக நற்பழக்கங்களின் பலனே இந்த சித்தசாந்தம் அல்லது ஸமாதானம் என்று கூறப்படுகிறது.

மேலான நடக்கைகளைத் தேடவும், அடையவும், பிறப்பின் பாக்யமும், உயர்ந்த குருவும், சிறந்ததோர் புத்தகமும் முக்கிய காரணங்களாகின்றன.

சரீரத்திற்குக் களைப்பாறுதலாலும், மனதிற்கு நல்ல சேர்க்கையைப் பெறுவதாலும், ஸமாதானம் இருவகையில் பிராணிகளுக்கு ஏற்படுகிறது.

மனதின் சாந்தியை அடையவே கடவுளால் மனிதன் உண்டாக்கப் பட்டவன். மனிதன் என்ற வார்த்தைக்கே யோசிக்கக்கூடியவன் என்றேதான் பொருள். ஆங்கில வார்த்தை "மான்" (Man) என்பதும் இந்திய பாஷையிலிருந்து ஸ்வீகாரணம் செய்யப்பட்டதே யாகும்.

முடிவாக, இந்திரியங்களின் வெளிவேட்டைகளை அடக்கியும், பிறர் கஷ்டங்களை விருத்தி செய்யாமலும், தேவைகளைக் குறைத்துக்கொண்டும் தணிவாக வசிப்பதே வாஸனைகளின் சமனத்தைச் சுலபமாக நிலைநிறுத்தக் கூடியது.

இந்த மனதின் பரிபூர்ண அமைதியைத்தான், ஆனந்தம் என்றும், மோக்ஷம் என்றும், ஸாம்ராஜ்யம் என்றும், பல பதங்களின் மூலம் உலக ஞானிகளும் அறிவு ஆராய்ச்சி நூல்களும் வெகு காலமாகச் சொல்லி வருகின்றனர்.

பாருங்கள்! இந்நிலை எவ்வளவு உயர்ந்தது! எத்தனை காலமாக இப்பாரத நாட்டில் தங்கியும் ஓங்கியும் ஜ்வலித்து வருகிறது! இதை மறுபடி அடைவதும், பிரசாரம் செய்வதும் இந்தியர்களுக்குக் கஷ்டமா? யார் தான் இதைத் தேடவும், கேட்கவும், அடையவும் விரும்ப மாட்டார்கள்?

ஐந்து நிமிஷம்கூட ஸமாதானமடைய முடியாத தற்கால மனிதன், 'மணிக்கணக்கில் த்யான அமைதியை அடைய வேண்டியே இவ்வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

நன்மைக்கும் தீமைக்கும் நம் மனமே காரணமாகும். இனியாவது, நன்மையையே கடைப்பிடித்து, நாம் நமக்கும், மற்றெல்லா தேசத்தும் பலவாறுள்ள மக்களுக்கும் அமைதியையும், நேசத்தையும், க்ஷேமத்தையும் படைப்போமாகுக!

அவலை நினைத்து உரலை இடிக்கிற இருளை விலக்கி, ஸமூக க்ஷேமத்திற்குத் தகுந்த காரியங்களையே தாமும் செய்து பிறரும் செய்யும்படி முயற்சிகள் உடனே பரவுமாறு ஆதி சக்தி அருள்புரிவாராக.

பாகிஸ்தான்
பாக்யஸ்தானா, படுகுழியா?

[த. கிருஷ்ணமூர்த்தி]

"இந்தியா இரண்டாகவோ பல பாகங்களாகவோ பிரிவது அதற்குத் தீமையையே விளைவிக்கும். பிரிந்த பாகங்களும் நன்மை பெறா. அவை பலவீனமடையும். இன்றைய யுத்தம் நமக்கு ஐக்கியத்தை வலியுறுத்துகிறது. தற்காப்புக்கும் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் வலுத்த மத்திய சர்க்கார் மிகவும் அவசியம். "பொருளாதாரத் துறையில் இந்தியா ஏக அமைப்பு. பிரிந்தால் சிதறும்" என 1942 ஆகஸ்டில் ஜவஹர்லால் நேரு எழுதினர். தரை நூல் புலவர் 'பிர்பல் ஸஹானி' பாகிஸ்தான் பேச்சு தோன்றுவதற்கு முன்னமேயே இயற்கையமைப்புப்படி இந்தியா ஒரே பிரதேசமென்றார்.

பாகிஸ்தான்கள் ஏற்பட்டால் மத்திய ஹிந்துஸ்தானின் பாதுகாப்பு குலைகிறது. வடக்கிலும், வட கிழக்கிலும் வட மேற்கிலும் இயற்கை எல்லையாகவும், அரணாகவும் விளங்கும் இமாலயமும் அதன் கிளைகளும் சென்று விடுகின்றன. பிரிக்கப்பட்ட நாடுகளுள் இயற்கையெல்லையே இல்லை. ஆகவே, எல்லைச் சச்சரவுகளுக்கிடமுண்டு. பஞ்சாபிலும், வங்காளத்திலும் சுதந்திர பாகிஸ்தான் நாடுகள் ஏற்பட்டால் எல்லைகளை மாற்றியமைக்க நேரிடும். பஞ்சாபிலே 17 ஜில்லாக்களிலேயே முஸ்லிம் மெஜாரிட்டியிருக்கிறது. ஆகவே, மற்ற 13 ஜில்லாக்களைச் சுருங்கிய இந்தியாவுடன் சேர்க்கவேண்டும். மேலும் குருதாஸ்பூர் ஜில்லாவில் 49·6% முஸ்லிம்கள் 1921 ஜனக் கணிதப்படி இருந்தனர். 1941லோ, 50·23%. ஆகவே இந்த ஜில்லாவைக் குறித்தும் தகராறு ஏற்படலாம். சீக்கியர் அதிகமாக வாழும் ஜில்லா. பஞ்சாப் பிரிவினைக்கு ஸட்லஜ் நதியே எல்லையாகும். குருதாஸ்பூர் ஜில்லாவிற்கு ரவி நதியை எல்லையாகக்கொண்டால் முஸ்லிம்கள் மைனரிட்டியேயாவர். ஆகவே ரவியையும், ஸட்லெஜ்ஜையும் எல்லைகளாகக்கொண்டால், கிழக்கு பஞ்சாப் அனைத்தும் (முஸ்லிம் மைனரிட்டி பிரதேசம்) சுருங்கிய இந்தியாவுடன் சேரும் மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடன் சேரும். வங்காளத்திலும் மேற்கு பாகத்தில் ஹிந்துக்கள் மெஜாரிட்டி வகுப்பினர். 15 ஜில்லாக்களில் ஹிந்துக்களும் இதர 15 ஜில்லாக்களில் முஸ்லிம்களும் மெஜாரிட்டி. 1921ல் தினாஜ்பூரில் 49·1% ஆக விருந்த முஸ்லிம்கள் 1941 ஜனக்கணிதப்படி 50·57% ஆகயிருப்பதாகத் தெரிகிறது. சிட்டகாங் ஜில்லாவில் முஸ்லிம்கள் தொகை அதிகமானாலும் மலைப் பிரதேசத்தில் அவர்கள் மைனரிட்டி. 1941 ஜனக் கணிதத்தின்போது, ஹிந்துக்கள் பலர் விலக்கப்பட்டனர் என்ற குற்றச் சாட்டை அப்போதே வங்க ஹிந்துக்கள் சுமத்தினர். சென்ற கணிதத்தின்போது பல காங்கரஸ் வாதிகள் பதிவுசெய்து கொள்ள மறுத்ததும் நோக்கற்பாலது. அதுவும் பஞ்சாப், வங்காளம் கணிதத்தைச்சிறிது பாதிக்கலாம். அஸ்ஸாமில் 35%க்குக் குறைவாகவே முஸ்லிம்களிருக்கின்றனர். கிழக்கு வங்காளத்தை ஒட்டிய ஜன நெருக்கமான ஸில்ஹெட் ஜில்லாவிலேயே அவர்கள் (60%) தொகை அதிகம். அவர்களும் வங்க மொழியையே தாய்ப் பாஷையாகக்கொண்டவர்களானபடியால், அந்த ஜில்லா ஒன்றையே வங்க பாகிஸ்தானில் சேர்க்கலாம். ஆகவே வங்காளத்தின் எல்லைகளை நிர்ணயப்பதில் தகராறு எழுவதற்கு இடமுண்டு.

எந்தவிதமாகப் பிரிவினை செய்து கொண்டாலும், இந்து-முஸ்லிம் பிரச்னை தீரப்போவதில்லை. சர்வ கட்சி மகாநாடுகளின் போதெல்லாம், பஞ்சாப், வங்காளம் கவனிக்கப்பட்டபோது ஜில்லாக்களையே அளவுகளாக எடுக்கப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. மாகாண எல்லைகளே புது ராஜ்யங்களின் எல்லைகளாக அமைந்தால், புது ராஜ்யங்களில் மைனரிட்டியின் தொகை மேலும் அதிகமாகும். ஜனக் கூட்டங்களை மாற்றிக் கொள்வதென்பது அசாத்தியம். பஞ்சாப் இந்துக்களுக்குப் பஞ்ச நதியும்

பாயும் பிரதேசமே தாயகம்; புண்ணிய பூமி. அம்மாதிரியே தமிழ் நாட்டில் பிறந்த முஸ்லிம்களுக்குத் தாய் நாடு தமிழகமே. தென்னிந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் 2,000 மைல். ஆனால் பாகிஸ்தானுக்கும் ஹிம்ஹஸ்தானுக்கும்பாகிஸ்தானிலுள்ளஎந்த விடத்திலிருந்தும் 200 மைலே, குடியேற வசதிகளும், தாராள சலுகைகளும் தந்தாலும் இருமதத்தினரும் இருக்குமிடத்தைவிட்டு நகர மாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறலாம். உரிய பாதுகாப்பு கொடுப்பதாக அரசியலமைப்பு உறுதி கொடுத்தாலும் மக்கள் மனதில் மாறுதலில்லை எனின் சச்சரவுகளே எழும். அவநம்பிக்கையும் அதிகார ஆசையுமே பிரிவினையைத் தூண்டுகின்றன. ஆகவே, ஒற்றுமை இருக்குமென்பது நிச்சயமில்லை. தங்கள் மதத்தினர் சரிவர நடத்தப்படவில்லை எனஇரண்டு இந்தியாவும் ஒன்றோடு ஒன்று மோதலாம். அல்லது, இன்று இதர முஸ்லிம் நாடுகள் இந்திய முஸ்லிம்களின தலையெழுத்தில் கவலை கொள்ளாதிருப்பது போல் சுருங்கிய இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் கதியைப் பாகிஸ்தான் கவனிக்காமலுமிருக்கலாம். ஆனால், உள் நாட்டிலுள்ள இருசமூகங்களின் நிலை என்ன ? பிரிவினையினால் ஒரு தனி முஸ்லிம் ராஜ்யம் ஏற்பட்டதென்பதைத் தவிர முஸ்லிம்கள் அடையக்கூடிய நன்மை தான் என்ன ? பம்பாயிலும், கல்கத்தாவிலும் கான்பூரிலும் நடந்த வகுப்புக் கலகங்கள் முஸ்லிம் தனி ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கல்ல. பிரிவினையால் வகுப்புப் பூசல்கள் ஒழியாது. இதுவரை கண்டவர் கண்டபடி மயிர் பிடிச் சண்டை கண்டோம். இனிமேல் (தனி ராஜ்ய சிருஷ்டியால்) உண்மையான நாகரீகப் போரைக் காணலாம்.

ஜில்லாவாரி பிரிவினை ஏற்பட்டால் பஞ்சாப் ஸட்லஜ் நதியையும் ரவியின் ஜலத்தையும் இழக்கும். வளப்பமான ஜில்லாக்களுமிரா. பஞ்சையும் ஆடுமாடுகளையும் இழக்க வேண்டும். மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய மலைப்பிரதேசமுமிரா. நிலஉப்பும், மண்ணெண்ணைக்கிணறுகளுமேவடமேற்கு பாகிஸ்தானுக்கு மிஞ்சும். வேறு உலோகப் பொருள்களே இராது. ஆகவே, கைத்தொழில்கள் எழா. வேளாண்மையையே நம்பவேண்டும். அதனால் வடமேற்கிலுள்ள பலுசிஸ்தானம், சிந்து, எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் தனித்துப் பிரிந்துகொள்ள முயலலாம். மதம் ஒன்றே அவைகளை இணைக்கக் கூடியது. சுருங்கிய இந்தியா

ஸ்ரீ காமகோடி

KAMAKOTI (*A periodical Journal*)

இப்பத்திரிகை கும்பகோணத்தில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டுள்ள ஸ்ரீ காமகோடி பீடத்திற்கும், அதன் சிஷ்ய கோடிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள மானிட வாழ்க்கையின் மேல் நோக்குக்குரிய சம்பந்தத்தை வளர்ப்பதையே பணியாகக் கொண்டது.

தரும நூல் முறையான பணிகளை ஒவ்வொரு ஆன்மாவும் நிறைவேற்றி, தானும் வளர்ந்து பீடஸ்தானத்தின் ஸான்னித்யத்தையும் வளர்த்து, ஆலும் விழுதும்போல் ஒன்றுக்கொன்று பலமாய் நிலை நின்று, உலக ஸேவை புரிவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதைப் பெற விரும்புவோர்கள் சந்தா பணத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட சேவைகளை செய்தனுப்ப வேண்டும்.

1. பசும் பால் வாங்கியோ அல்லது தம் வீட்டில் கறந்ததைக் கொண்டோ தம் வீட்டிலேயே நெய் உருக்கி வருஷத்தில் ஒருமுறை 16 பலம் பார்சல் மூலமாக 'மானேஜர், காமகோடி பத்திரிகை ஆபீஸ் கும்பகோணம்' என்னும் விலாஸத்திற்கு அனுப்பவேண்டியது. இந்நெய் ஸ்ரீ காமகோடி பீடஸன்னிதானத்தில் விளக்குக்கும், ஸ்ரீ தேவிக்கான ஹோமங்களுக்கும் உபயோகப்படுத்தப்படும்.

2. பிரதி வருஷம் ஒரு வெள்ளிக்கிழமை தமது நண்பர்களிடம் யாசகம் செய்து, கிடைக்கும்தொகை எவ்வளவு சிறியதாயிருப்பினும் பெரியதாயிருப்பினும் அதை மேற்கண்ட விலாஸத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பி வைக்க வேண்டியது.

வுடன் போராட்டமிருந்தாலேயே அது பயன்படும். சமாதான வாழ்விலோ, செல்வ நெருக்கடியால் அவை பிரிய முயலும். மதம் அவைகளை ஒன்று சேர்க்காது. துருக்கரையும் அரபுகளையும் அது சேர்க்கவில்லை. ஆப்கானியரையும், ஈனியரையும் அது கட்டுப்படுத்தவில்லை. ஆகவே, ஸிந்து நதி ஜலத்தைக் குறித்து அவைகளுள் தகராறு எழலாம். பஞ்சாப் அதன் ஜலத்தை முழுதும் தேக்கித் தனக்கே பயன்படுத்திக் கொள்ள முயலும். அப்போது ஸிந்து எதிர்க்கும்.

மாகாணங்களையே எல்லைகளாகக் கொண்டாலும், பாகிஸ்தான் முன்னணியில் நிற்காது. கிழக்கு வங்காளம் தனிராஜ்யமானால் இரும்பு, நிலக்கரி, அரிசி இராது. சணல் ஒன்றே மிஞ்சும். இப்போதும் ஸிந்து, பலுசிஸ்தானம், எல்லைப்புற மாகாணம் ஆகியவை மத்திய சர்க்காரிடமிருந்து நன்கொடைகளைப் பெற்றே, அரசு நடத்துகின்றன. பஞ்சாபில் மத்திய ஸர்க்கார் செலவிலேயே மராமத்துகள் செய்யப்பட்டன. அம்மாகாணத்தவரே பெரிதும் ராணுவத்தில் சேர்க்கப்படுவதால், பென்ஷன், சம்பளம் முதலிய வகைகளினால் அது நன்மையடைகிறது. மத்திய சர்க்கார் டெல்லியிலிருப்பதாலும் (கன்டிராக்டு முதலிய) இதர வகைகளிலும் அது லாபம் பெறுகிறது. வங்காளம் பஞ்சத்தின் காரணமாக 10 கோடி உதவி பெற்றுள்ளது. பிரிவினை ஏற்பட்டால் அத்தகைய சலுகைகள் பெறா.

(Foreign Affairs) பாரின் அபார்ஸ் என்ற அமெரிக்க சஞ்சிகையிலே பெஹார் என்னும் தரை நூல் ஆசிரியர் மாகாணவாரியாகவே முஸ்லிம் ராஜ்யங்கள் ஏற்பட்டாலும் அவை பெரிதும் கஷ்டமடையுமெனக் கூறுகிறார். கைத்தொழில் முன்னேற்றத்திற்கு அவசியமான இரும்பும், நிலக்கரியும் வங்காளத்தையும், மத்திய மாகாணத்தையும் ஒரிசாவையும் ஒட்டிய தென்பீகாரி

சந்தோஷகரமான வீடுகள் எப்பொழுதும்
கைத்தறி நெசவு ஆடைகளையே விரும்பும்

தசரா, தீபாவளி பண்டிகைக்கேற்ற புதிய ரகங்கள்
வந்துள்ளன—கட்டுப்பாடான ஒரே விலை
ஆடம்பரமான பார்வை இல்லாமலிருக்கலாம்
மிஷினிலிட்டு சலவை செய்யப்படாதவை எனினும் நீடித்த
உழைப்புக்கும், குறைந்த விலைக்கும் பெயர் போனவை.
எங்கள் எம்போரியங்களை விஜயம் செய்து
நேர்த்தியானதும், உழைப்பிற்கேற்றதும்
மலிவானதும் ஆகிய துணி ரகங்களை
வாங்கி திருப்தி யடையுங்கள்

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்.
158, மவுண்ட்ரோட், மதராஸ்.

லேயே கிடைக்கின்றன. எஃகுத் தகடுகளைச் செய்ய அவசியமான மங்கனீஸ், குரோமியம் முதலியன நாகபுரி, பீகார், கோவா, விசாகை, மைசூர் முதலிய இடங்களிலேயே கிடைக்கின்றன. தங்கம் கோலாரில்; தாமிரம் தென்கிழக்கு நிஜாம் ராஜ்யத்தில்; மைக்கா நெல்லூர், சாம்பரான் ஜில்லாக்களில். பாக்சைட் பெரிதும் சுருங்கிய இந்தியாவிலேயே. எண்ணை ஊற்றுகளும் பாக்சைடும் பாகிஸ்தான் பிரதேசத்திலிருந்தாலும் அவை வெகு சொற்பமே என்கிறார் பெஹர். விரிவாக விளக்கியுள்ள அக்கட்டுரையில் அன்னார் பாகிஸ்தான் படுத்துவிடுமென்கிறார். இந்தியா தரித்திரத்திலிருப்பதாலேயே பிணக்குகள் ஏற்படுகிறதென்றும், செல்வம் கொழிக்குமானால் வேற்றுமைகள் மறையுமெனவும் மேலைநாட்டு வரலாறுகளைக் காட்டிக் கூறுகிறார். முஸ்லிம் தனி ராஜ்ய கொள்கையை ஆதரிக்கும் டாக்டர் அம்பேத்காரும் பெஹர் முடிவுக்கே வருகிறார்.

முஸ்லிம்களின் கட்சியை ஆதரிக்கும் பேராசிரியர் 'கூப்லந்து'ம், பிரிவினை ஏற்பட்டால் தங்கள் வருவாயில் பாகிஸ்தான் இக்காலத்திற்கு வேண்டியபடி நவீன ராணுவத்தை அமைத்துக்கொள்ள சக்தியற்றிருக்குமென்கிறார். ஜப்பானியர் போன்று எவரேனும் எதிர்த்தால் வங்காளம் படுத்துவிடும். அப்போது சுருங்கிய இந்தியாவும் பாகிஸ்தானும் அதன் உதவிக்குச் செல்லுமெனக் கூறலாம். அது உண்மையாகாது. பதினெட்டாம் நூற்றாண்டிலே இந்தியாவில் பாகிஸ்தான்களும் இந்துஸ்தான்களும் பலவிருந்தன. பெரிய வங்க ராஜ்யத்தை ஆண்ட சுராஜ்த்தெளலா தாக்கப்பட்டபோது யாரும் உதவ முன்வரவில்லை. அம்மாதிரியே மராட்டியரும், சீக்கியரும் கைவிடப் பட்டார்கள். இன்றும் அந்நிலையே.

பாகிஸ்தானோ சுருங்கிய இந்தியாவோ உலகத்தில் தனித்து எதும் செய்ய இயலாது. பெல்ஜியம் மிகவும் கைத்தொழிலில் முன்னேறிய நாடாயினும், அதற்குச் செல்வாக்கில்லை. சைனா பிற்போக்கிலிருந்தாலும் அது இந்தியாவைவிட பரப்பிலும் ஜனத்தொகையிலும் பெரிதாயிருப்பதால் வல்லரசுகளால் அதனை அலட்சியம் செய்ய முடியவில்லை. ஆகவே. ஐக்கிய இந்தியாவே உலக வியவகாரத்தில் மதிப்புடன் விளங்க முடியும். இன்றேல் நாமும் ஈரான், ஈராக் நிலையையே அடையவேண்டும். இந்திய ஐக்கியமே நேற்று வந்தது என்றால் இரண்டு நேஷன் கொள்கையும் இன்றையதுதானே. அதிலும் பொருத்தமற்றதாச்சே. சோவியத் யூனியன் செல்வாக்கு ஓங்கியிருப்பதன் காரணம் அதன் ஐக்கியமேயன்றோ. அங்குந்தான் பலமரபினர், மதத்தினர் இருக்கின்றனர்.

அதிகார ஆசை யில்லையென்றால் பஞ்சாபுடன் டெல்லியைச் சேர்ந்த ஜில்லாக்களைச் சேர்த்தால் முஸ்லிம், முஸ்லிமல்லாதார் ஜனத்தொகை சமமாகிவிடும். அதுபோலவே வங்காளத்துடன் பீகார், ஒரிசா மாகாணங்களிலுள்ள வங்கமொழி பேசுவோர் வதியும் பிரதேசங்களைச் சேர்த்தால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஜனத்தொகையில் சமமாவர். இரண்டு மாகாணங்களிலும் ஏற்படும் சர்க்காரில் சம அதிகாரம் கொடுக்கப் பிரிவினைவாதிகள் தயாரா? ஜனநாயகத்தை அமுலுக்குக் கொண்டுவருவாரா? அதைப் பற்றியே அவர்கள் கூறவில்லை. எதேச்சாதிகார கவர்னர்களின் தயவில் லீகின் மந்திரி சபைகள் சிந்து, வங்காளம் முதலிய மாகாணங்களில் நடக்கின்றன. பாகிஸ்தனில் முஸ்லிம் மத ஆட்சியையே நடத்தப்போகிறோம் எனவும் கூறுகின்றனர். பிரிவினைக்கே பொது ஜன வாக்கெடுக்க அஞ்சுகின்றனர். ஆகவே மைனாரிட்டியாக இருப்போருக்கும் சர்க்காருக்கும் அடிக்கடி சச்சரவுகளேற்படுமெனக் கூறவும் வேண்டுமோ? இந்தப் பிரிவினைப் போராட்டத்திலே தேசிய முஸ்லிம்கள், சுதந்திர ஐக்கிய இந்தியாவைக்காண ஆசைப்படும் முசல்மான்களின் தொண்டு என்ன? அவர்களுக்கு இது சோதனைக் காலம். ஒன்றுபட்டால் அனைவரும் மன்னர், பிரிந்தால் அனைவரும் அடிமை.

காளிதாஸரின் உவமைகள்

[புரசு - பாலகிருஷ்ணன்]

" உருவகம் (Metaphor) கவிதா விலாசத்தின் சிறப்புக் குறி. ஏனெனில், அழகுடன் உருவகப்படுத்தும் திறன் வஸ்துக்களை இணைத்துப் பார்க்கும் சமான திருஷ்டியைக் காண்பிக்கிறது," என்று கிரேக்க அறிஞர் அரிஸ்டாடில் கூறுகிறார்.

சம்ஸ்கிருதக் கவிதையில் "உபமா காளிதாஸஸ்ய" என்று புகழ்பெற்றிருக்கும் காளிதாஸருக்கு கவிகளுக்குள் முதன்மை ஸ்தானம் நம் நாட்டில் வழங்கப்பட்டிருக்கிறது. வேதாந்த உபநிஷத்துக்களில் வளர்ந்த காளிதாஸருக்கு சமான திருஷ்டி இருந்ததில் ஆச்சர்யமில்லை. அவர் தம்மைச் சுற்றி இயற்கையில் எங்கும் ஒற்றுமைகளைக் கண்டார். அவருடைய உவமைகள் ஒவ்வொன்றிலும் ஓர் அதி தீவிரமான, மின்வெட்டைப்போல் ஒரு நிமிஷமே பிறந்து பிரகாசித்து முடிவடையும் போக நிலையைக் காணலாம்; காளிதாஸரை ஒரு போகமுனி என்றுகூடச் சொல்லலாம். ஒவ்வொரு உவமையும் ஊடுருவிப் பாயும் ஒரு கவிதா போக நிலை. உலகில் ஷேக்ஸ்பியர் போன்ற கவிகளும் இதர ஆசிரியர்களும் மனித உணர்ச்சிகளை விளக்குவதில் காளிதாஸரை மிஞ்சியிருக்கின்றனர். ஆனால் உலக கவிகளுக்குள்ளேயே அழகுணர்ச்சியின் மூர்ச்சனை நிலைகளை காளிதாஸர் தம் உவமைகளில் சரேல் சரேல் என்று எட்டிப் பிடித்தது போல் ஒருவரும் அவ்வளவு தீவிரமாகவோ அவ்வளவு முறைகளிலோ பிடிக்கவில்லை.

பிரயாகையில் கங்கையும் யமுனையும் சங்கமமாகும் வைபவக் காட்சியை கவி நோக்குகிறார்; அவர் மனது அந்நீர்ப் பரப்பு முழுவதையும் ஆலிங்கனம் செய்துவிட வேண்டும் என்ற பேரவாவில் மயங்கித் தத்தளிக்கும் மூர்ச்சனை நிலையை ஓர் உவமையின் ஓர் உவமை தொடர்ந்து நமக்கு உணர்த்துகிறது.*

"மாசற்றவளே, யமுனையின் அலைகள் மோதிக் கலக்கும் கங்காப் பிரவாஹத்தின் ஒளிக்கோலத்தைப் பார்! முத்துக்களும் மரகதங்களும் இங்கு குவிந்திருக்கின்றன! அங்கு வெண்தாமரைகளையும் நீலோத்பலங்களையும் சேர்த்து தொடுத்த மாலைபோல் தோன்றுகிறது! இங்கு ஹம்ஸங்களும் நாரைகளும் சேர்ந்து இறகடிப்பனபோல் இருக்கிறது! அங்கு ஒழுங்காய் சந்தனபீடத்தில் வரைந்துள்ள கோலம்போல் அமைந்திருக்கிறது! இங்கு மரத்தடியில் நிலாப்பொட்டுகள் கூடிய கருநிழல்போல் விளங்குகிறது! அதோ அங்கு சரத்கால நீல ஆகாசம் வெண்மேகங்களிடையே தென்படும் தோற்றம்! இதோ இங்கு சிவபெருமானின் நாகங்கள் தவழும் சாம்பற்பூசிய மேனி!"

இவ்வர்ணனையில் நாம், அழகுக் கனவைக் கண்ட ஒருவன் வார்த்தைகளாகிய நனவில் அதைக் காண்பிக்க முடியாமல், தூரத் தோன்றும் அவ்வழகு வடிவத்தை அதற்கொப்பான பல்வேறு ஜோடனைகளில் சிறைபிடிக்க முயலும் ஓர் தீவிரமான ஆர்வத்தைக் காண்கிறோம். அவ்வார்வம் மூர்ச்சனை நிலையை எய்துகிறது. விலகி நிற்கும் இயற்கை அழகைப் பிடித்துக் கைகளால் கட்டித் தழுவ முயலும் இவ்வார்வத்தை முற்றும் காளிதாஸரின் தனிக்குணம் என்று சொல்லலாம். அவருடைய உவமைகள் அநேகமாய் அவர் இயற்கை யழகுடன் சேரும் ஆலிங்கன நிலைகளே.

தற்கால ஆங்கிலக் கவியான லாஸிலஸ் அபெர்கிராம்பி கூறுகிறார்: "ஆர்வத்துடன் தானதுவாய் நின்று அனுபவிக்கும் நிலைதான் கவிதா விலாசத்தின் உச்சிநிலை. கவிகளின் மேதை அநேகமாய் அந் நிலையிலிருந்து தான் கற்பனை செய்ய முயலுகிறது. இதற்கு ஓர் அழகான உதாரணம் இந்திய நாடகமான 'சாகுந்தல'த்தில் இருக்கிறது. இந்திரனின் விமானம் மேக மண்டலத்தில் பறந்து செல்லுகிறதாம்: அதன் சக்கரங்கள் மேகங்களின்மேல் சுழலும்பொழுது, நீர்த்திவலைகள் சக்கரங்களின் விளிம்புகளிலிருந்து தெறிக்கின்றனவாம். இச் சித்தி

* சம்ஸ்கிருத மூலத்தின் மொழிபெயர்ப்புகள் எல்லாம் ஆசிரியருடையவை.

ரம் எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது! சக்கரம் மேகங்களின்மீது சுழலும்பொழுது நாம் எதிர்பார்க்கக் கூடியதும் இதுதானே! இதே சித்திரத்தை நாம் நம்கவி 'கீட்ஸ்'ஸின் 'எண்டிமியானி'லும் காண்கிறோம். ஒரு வேளை சர் வில்லியம் ஜோன்ஸ் செய்த 'சாகுந்தல' மொழிபெயர்ப்பிலிருந்து கீட்ஸ் இக்கருத்தை எடுத்திருக்கலாம்."

இவ்விதம் வஸ்துக்களுடனே காட்சிகளுடனே அந்நியோன்னியமாய்ப் போய்விடும் கற்பனா சித்திரங்கள் பலவற்றை நாம் காளிதாஸரின் கவிதைகளில் காண்கிறோம். உதாரணமாக, துஷ்யந்தன் ககனமார்க்கத்திலிருந்து பூமிக்கு இந்திரவிமானத்தில் இறங்கும்பொழுது, தன் கீழே விரியும் பூலோகக் காட்சியைப் பின்வருமாறு வர்ணிக்கிறான்:

"கீழே பூலோகம் தென்படுகிறது பார்! எப்படிப் பரபரவென்று விரிகிறது! மலையின் சிகரங்கள் வேறுபட்டுத் தோன்ற, மலையிலிருந்து கீழே இறங்கி யோடுவது போல் இருக்கிறது பூமி! மரங்கள் இலைக் குவியல்களாய் இல்லாமல், அவைகளின் அடிகளும் நிமிர்ந்தெழுகின்றன! மெல்லிய தந்திபோல் தோன்றும் நதிகளின் பெருக்குகள் விஸ்தாரமடைகின்றன! யாரோ பூமியையே எடுத்து என் அருகே தூக்கிக் கொண்டு வருவதுபோல் இருக்கிறது!"

இத்தகைய மூர்ச்சனை கிரஹிப்பு (Inspired realization) காளிதாஸரின் உவமைகளிலேதான் மிகுதியாய் சோபிக்கிறது. மேலே உதாரணமாகக் கொடுத்திருக்கும் சித்திரங்களிலும் அது தென்படுகிறது. ஆனால் அத்தகைய சித்திரங்கள் விவரமாய் வரையப்பட்டவை. உவமைகளோ விவரமாயில்லாத, பூர்ண சித்திரங்களாயில்லாத, குறுகிய கோடுகளாய் இருக்கின்றன. ஆகவே, குறுகிய அவகாசத்திற்குள்ளேயே அதே மூர்ச்சனை நிலையை உள்ளடக்கிக்கொண்டிருக்கும் விசேஷம் அந்நிலையின் சக்தியை அதிகரிக்கிறது. உதாரணமாக, புஷ்பக விமானத்தில் சமுத்திரத்திற்கு மேல் பறந்து செல்லும் ராமர் தாம் கட்டிய ஸேதுவை ஸீதா தேவிக்குக் காண்பிக்கிறார்:

"வைதேஹி, அதோ பார்! மலைய பர்வதம் வரையில் கடலின் குறுக்கே தோன்றும் ஸேதுவின்மீது அலைகள் பொங்குகின்றன! பிரசன்னமாய் இரவில் சோபிக்கும் சரத்கால ஆகாசத்தின் குறுக்கே சாயாபதம் (பால்வீதி மண்டலம்) அளிக்கும் காட்சியைப்போல் இருக்கிறது!"

இச்சிறு உவமையில் அபெர்கிராம்பி குறிப்பிடும் மூர்ச்சனை கிரஹிப்பை விளக்குவோம். ஆகாசத்தில் பறந்து செல்லும் ஸீதா ராமர்களுக்குக் கீழே சமுத்திரமும் ஸேதுவும் எப்படித் தோன்றும் என்பதை இச்சுலோகம் ஆகாசத்திலிருந்து போட்டோ பிடித்தாற்போல் காண்பிக்கிறது. கவி மூர்ச்சனை நிலையிலிருந்து அழகுக் காட்சியை ஒரே பார்வையில் கிரஹிக்கிறார். சமுத்திரம் எவ்வளவு விசாலமோ, அவ்வளவு விசாலமானது ஆகாசம். ஆகவே, பூமியிலிருந்து பார்ப்பவனுக்கு ஆகாசமும், அதன் குறுக்கே தாரகப் பொடிகள் அடங்கிய சாயாபதமும் (Milky way) எவ்விதம் தோன்றுமோ, அவ்விதமேதான் ஆகாசத்தில் இருப்பவனுக்கு கீழே கருநீலக் கடலும் அதன் குறுக்கே நுரை தாங்கும் ஸேதுவும் தோன்றும். இங்ஙனம் உன்னத இயற்கையின்பத்தை அடையும் சிறு மூர்ச்சனை நிலைகள் போல் அமைந்திருக்கும் உவமைகளைக் காணலாம். இதற்கு இன்னும் ஓர் உதாரணம் தருவோம். புஷ்பக விமானப் பிரயாணத்தில் ராமர் ஸீதைக்குக் கடலோரத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

"இவ் வுயரத்திலிருந்து கடலோரத்திலிருக்கும் தமாலா தாலீ வனங்கள் எவ்வளவு குறுகித் தோன்றுகின்றன! கடலே ஓர் இரும்புச் சக்கரம்போல் இருக்கிறது. அதன் விளிம்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் களிம்பு போல்அமைந்திருக்கின்றன அந்தவனங்கள்!"

இங்ஙனம் செவ்வையாய் உவமைகளை அமைப்பதற்கு ஹிருதயத்திலிருந்து சுரக்கும் ஆவேசம் மாத்திரம் இருந்தால் போதாது; புத்தியிலிருந்து பிறக்கும் அப்பியாஸமும் வேண்டும். இவ்விரு சக்திகளும் காளிதாஸரிடம் சேர்ந்து காணப்படுகின்றன. இந்த இரு சக்திகளின் பிணைப்பு இதர கவிகளில் வெகு வெகு அரிது. இக்குணம் காளிதாஸருடைய மேதையின் தனிச்சிறப்பாய் இருக்கிறது. அவருடைய கற்பனையில் ஒரு கவியின் மனோதர்மத்துடன் ஒரு விஞ்ஞான சாஸ்திரியின் திருத்தமும் கலந்து நிற்கிறது. அவர் இயற்கை அழகை அனுபவிப்பதிலும், ஒரு விஞ்ஞான சாஸ்திரியின் கூர்மையாய், இயற்கை நியமங்களைப் படிக்கும் கண்களுடன் கவனித்தார் என்பதற்குப் பின்வரும் உதாரணத்தைக் காட்டலாம்;

"பார்வதீ, மேற்குத் திசையைப் பார்! ஏரிக்கு அப்பால் அஸ்தமிக்கும் சூரியன் அதன் சிற்றலைகளின் மேல் ஓர் ஒளிப்பாலத்தைக் கட்டியிருக்கிறான்!"

அஸ்தமன சூரியன் ஏரிக்கு வெகு அருகாமையில் இருக்கும்பொழுது, அதன் பிம்பம் ஜலப்பரப்பு முற்றிலும் குறுக்கே விழுகிறது என்பதைச் சரியாய்க் கவனித்திருக்கிறார் கவி.

கவிதையின் நிகரில்லாச் சிறப்பும் அவர் உவமைகளில் உள்ளது. அச்சிறப்பு என்னவெனில், ஒரு சித்திரத்திலேயே அநேக சித்திரங்களை உள்ளடக்கி விடுவது. சிருஷ்டி உலகிலேயே நிகரில்லாத இவ்வாச்சரியத்தை நாம் மகோன்னதமான கவிதை ஒன்றில் தான் காணலாம். சிவபிரானின், தவத்தைக் கலைக்க வந்த மன்மதன் அவருடைய கோபாக்கினியால் எரிக்கப்படுவதைக் கவி பின்வருமாறு வர்ணிக்கிறார்:

" மரத்தின்மேல் இடிபோல் மன்மதன் மீது பாய்ந்தது அவருடைய கோபாக்கினி! பிறகு ஸ்திரீகளின் அருகாமையையே ஒழிக்கவேண்டும் என்று தபஸ்வியான பூதபதி பூதங்களுடன் மறைந்துவிட்டார்."

மேற்படி சலோகத்தில் ஒரே ஒரு சித்திரம் இருக்கிறது. அதாவது மரத்தை இடி அழிப்பதுபோல், சிவன் மன்மதனை அழித்தார். இந்த ஓர் உவமைச் சித்திரம் தனக்குள் எத்தனை சித்திரங்களையும் உணர்ச்சிகளையும் அடக்கிக் கொண்டிருக்கிறது! சிவபிரானின் சினம் திடீரென்று எழுந்ததையும், அதன் அழிக்கும் தீவிர சக்தியையும், மரத்தை அழித்த மின்னல் உடனே சரேலென்று மறைந்து விடுவதுபோல், மன்மத தஹனத்திற்குப் பிறகு சிவன் மறைந்ததையும், அம்மறைவின் விரைவையும், அம்மறைவிற்கு முன்பு ஏற்பட்ட நாசவிளைவின் (மன்மத தஹனத்தின்) பரிபூரணத்தையும், அவ்விளைவிற்குப் பின் எஞ்சி நிற்கும் காட்சியின்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க், லிமிடெட்.

வெளியிடப்பட்டு கோரப்பட்ட மூலதனம்	....	ரூ. 50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 26,43,420
ரிசர்வ் நிதி	....	ரூ. 7,42,500

தலைமை ஆபீஸ்: **மதராஸ்**

பிராஞ்சுகள்:

ஆலப்புழை	பெங்களூர் ஸிடி	பம்பாய்
கள்ளிக்கோட்டை	கண்ணனூர்	கோயம்புத்தூர்
தேவகோட்டை	காரைக்குடி	மதுரை
நாகப்பட்டணம்	புதுக்கோட்டை	சேலம்
	சிவகங்கை.	

பட்டுவாடா ஆபீஸ்: **திவளூர்**

கரண்டு கணக்குகள், சேவிங்ஸ் பாங்கி கணக்குகள் (செக் மூலம் பணம் வாங்கலாம்) ஆரம்பிக்கலாம் பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும். நிபந்தனைகளை பாங்கிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

சூன்யத்தையும் பரிதாபத்தையும் (பார்வதியின் தனிமையையும் பீதியையும்) இந்த ஓர் உவமைப்படம் நமக்கு ஒன்றன்பின் ஒன்றாய் காண்பிக்கிறது. உவமை முதற் பார்வைக்குச் சாதாரணமாய்த் தோன்றுகிறது. ஆனால், கவி உபயோகித்திருக்கும் சந்தர்ப்பத்தில், அது கவிதாசிகரத்தின் உச்சியில் இருக்கிறது. அவ்வுவமையை நாம் படிக்கும்பொழுது நாமே சிருஷ்டி கர்த்தர்களாகி விடும்படி கவிசெய்து விடுகிறார். நாமே உவமையில் மறைவாயுள்ள இதர சித்திரங்களைச் சிருஷ்டிக்கத் தொடங்கி விடுகிறோம். கவிதையின் சக்திக்கு இதற்கு மேல் என்ன வெற்றி கிட்டக்கூடியது ?

இம்முறையில் ஒரு விஷயத்தை வியக்தமாய்ச் சொல்லி, அதன் மூலம் பல விஷயங்களைச் சூசிப்பித்துக் காட்டுவது மகாகவிதையின் சிறப்பு லட்சணம். இக்குணம் காளிதாஸரது கவிதையிலும் உவமைகளிலும் நன்கு விளங்குகிறது. இச்சிறப்பில் அவருக்கு ஈடு ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். இதற்கு ஓர் உதாரணம் கூறுவோம்: நாசகாலத்தை நெருங்கிக்கொண்டிருந்த காமன் நிஷ்டையில் அமர்ந்திருந்த முக்கண்ணனை தூரத்திலிருந்து நோக்குகிறான்; அவன் தைரியம் சிதிலம் அடைகிறது. சிவபெருமானின் அந்தக் கம்பீரக் காட்சியைக் கவி பின்வரும் உவமைகளால் விளக்குகிறார்:

“நீர் நிறைந்து, ஆனால் மழையின் பரபரப்பில்லாத, மேகம்போல் கறுப்பாய்; ஜலத்தின் நிதியாய், ஆனால் அலையின் குழப்பமில்லாத சமுத்திரம் போல் கம்பீரமாய்; உடம்பில் காற்றின் சஞ்சாரத்தை நிறுத்தியதால், காற்றில்லாத இடத்தில் அசைவுறாமல் பிரகாசிக்கும் ஜ்வாலை போல்...” இங்ஙனம் பரபரப்பில்லா கார்முகில் போலும், அலையில்லா மாகடல் போலும், அசைவறு ஒளிச்சுடர் போலும் மன்மதனுக்குக் காட்சி அளித்தாராம் தியானத்தில் வீற்றிருந்த திரியம்பகன். சமஸ்கிருத மூலத்தைப் படிக்கும்பொழுது, நாம் வர்ணனையின் வார்த்தைகளிலேயே விதியின் நிழல் விழுவதைக் காண்கிறோம்; ஏதோ ஓர் ஆபத்து சீக்கிரமே நேரிடப் போகிறது என்ற ஓர் அச்ச உணர்ச்சி நமக்குள்ளே பிறக்கிறது. மன்மதன் கண்ட கார்மேகம் திடீரென்று மழை பொழியத் தொடங்கிவிடுமோ, அவன் முன் விரிந்த ஜலத்தின் நிதியில் அலைகள் எழுந்துவிடுமோ, அவன் எதிரே பிரகாசித்த தீவிர ஜ்வாலையின் காற்றின்மை கலைந்து அது அசைவுறுமோ, என்றெல்லாம் நமக்குத் தோன்றுகிறது. ஏனெனில் எல்லா உவமைகளிலும் ஒரு விபரீத உள்ளர்த்தம் அடங்கியிருக்கிறது; அவைகளைப் படிக்கும் பொழுது, எதிர்மறைச் சொற்கள் தாம் நம் மனத்தில் ஆழமாய்ப் பதிகின்றன. இயற்கைக்கு விரோதமாய் வர்ணிக்கப்பட்டிருக்கும் நிலை அங்ஙனமே அதிக நேரம் நிலைத்திருக்க முடியாது என்று நமக்குத் தோன்றுகிறது. கவியின் வார்த்தை யமைப்பில் அத்தகைய சக்தி இருக்கிறது. மேகம் நீர் நிறைந்திருக்கிறது; கடலில் அளவற்ற ஜலம் அடங்கியிருக்கிறது; ‘உட்காற்றுகள் அடக்கப்பட்டிருப்பதால் தான் ஜ்வாலை அசைவற்று எரிகிறது’ என்று நமக்குக் கவியால் நன்கு நினைவுறுத்தப்படுகிறது. கவியின் சொற்கள் மூலம் நாமே உள்ளே மறைந்துள்ள விபரீத சித்திரங்களை வரைந்து கொண்டு விடுகிறோம்; தமது தெய்விக சக்தியால் நமக்கே சுயமான கவிதா சிருஷ்டி அநுபவத்தை கவி அளித்து விடுகிறார். இத்தகைய சக்தி பொருந்திய மகோன்னத கவிதைதான் உலக இலக்கியத்திலேயே முன்னணியில் நிற்கமுடியும்.

மேலே கூறியபடி, இதர சித்திரங்களைக் கவி நமக்கு ஒரு சித்திரத்தால் எழுப்புவது போல், அவர் மற்ற சந்தர்ப்பங்களில், தமது அர்த்தம் கடினமாய் இருந்தால், அதை விளக்குவதற்கு உவமைச் சித்திரங்களைக் கையாளுகிறார். பார்வதியை அவளுடைய பூர்வஜன்ம வித்தை உபதேச காலத்தில் வந்தடைந்ததாம். ‘அது எப்படி சாத்தியமாகும்? சிக்ஷை பெறாத எவரையாவது வித்தை தானே வந்தடையுமா?’ என்ற கேள்வி எழும். அதற்குப் பதில், பின்தொடர்ந்து வரும் உவமைகளில் நமக்குக் கிடைக்கிறது. முதற் பார்வைக்கு உவமைகள் வெறும் அலங்காரங்கள், அழகு பொருந்திய கவிதைச் சூட்டல்கள் என்று தோன்றுகின்றன; ஆனால் அப்படியில்லை.

“சரத் காலத்தில் கங்கா தீரத்தை ஹம்ஸக் கூட்டங்கள் அடைவது போலும், இரவில் பிரகாச மூலிகைகளை அவைகளுடைய ஒளி வந்தடைவது போலும், உபதேச காலத்தில் பூர்வஜன்ம வித்தைகள் பார்வதியை வந்தடைந்தன ”, என்கிறார் கவி. சரத்காலத்தில் எந்த சக்தி ஹம்ஸங்களை கங்கா தீரத்திற்கு இழுக்கிறது? இரவில் எந்த சக்தி பிரகாசத்தை ஒளஷதிகளிடம் சேர்ப்பிக்-

கிறது ? அதே சக்திதான் உபதேச காலத்தில் பூர்வஜன்ம வித்தையை பார்வதியிடம் சேர்த்தது. அதாவது, அவ்விளைவு இயற்கையின் போக்கு ; இயற்கை நியமங்கள் தங்கள் இயற்கைப்படியே நேருகிறபடி, அதுவும் நேர்ந்தது என்கிறார் கவி.

இதே முறையில் அசாத்தியமாகவோ விபரீதமாகவோ தோன்றும் கருத்துக்களை, கவி, அவைகள் சாத்தியமானவை என்றும் இயற்கையே என்றும் எடுத்துக் காட்டும்படி உவமைகளை அமைக்கிறார். தேவர்களின் அரசனான இந்திரன் மனுஷ்யனான துஷ்யந்தனின் உதவியை அரக்கர்களை அழிப்பதற்கு நாடுகிறான். இந்திரனின் சாரதியான மாதலி இதைத் துஷ்யந்தனுக்குப் பின்வருமாறு விளக்குகிறான் :

"நூறு யாகங்கள் செய்த இந்திரனின் தோழனாகிறாய் நீ ! உன்னால் அரக்கர்கள் அழிவது நிச்சயம். ஏழு குதிரைகள் இழுக்கும் சூரியனின் ஒளிக்கோலம் இருளை வெல்கிறதில்லை ; கடைசியில் சந்திரனே இருளை வீழ்த்துகிறான்." இங்கு ஒரு வானசாஸ்திர உண்மை கவனிக்கத் தகுந்தது. சந்திரனின் ஒளி சூரியனிடமிருந்து பிறக்கிறது. இவ்விஷயம் நம் முன்னோர்களுக்குத் தெரியும் என்று நாம் நம் பண்டைக்கால வானசாஸ்திர நூல்களிலிருந்து அறிகிறோம். ஆகவே, அது காளிதாஸருக்கும் தெரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மற்றொரு உதாரணம்: காமநோய் தன்னை சகுந்தலையைக் காட்டிலும் அதிகமாய் வாட்டுகிறது என்று துஷ்யந்தன் சகுந்தலையிடம் முறையிட்டுக் கொள்கிறான் :

"மெல்லியாளே ! உன்னை மதனன் வாட்டுவது உண்மையே. ஆனால் அவன் என்மீது மிகுதியாய்த் தன் பலத்தைச் செலுத்துகிறான். கதிரவன் குமுத புஷ்பங்களைக் குவியச் செய்கிறான் ; ஆனால் சந்திரனையோ முற்றும் தேய்த்து விடுகிறான்.

இத்தகைய உவமைகளில் நாம் காளிதாஸருடைய மனோ அப்பியாசத்தைக் காண்கிறோம். அவர் எதையும் அறிவால் கூர்ந்து நோக்குபவர் ; கற்பனைக்கு வரம்பில்லாத சுயேச்சை யரசு கொடுப்பதில்லை ; அதை அறிவுடன் இணைத்து, வஸ்துக்களின் இயற்கைப் போக்குக்கு விரோதமில்லாமல், தம் திருஷ்டி தம் விஞ்ஞான நோக்கத்திற்கும் திருப்திகரமாய் இருக்கும்படி அமைத்துக் கொள்ளுகிறார்.

செஹாற் கூறுகிறார் ; "நான் கால்மாறிகளை வர்ணிப்பதென்றால், ஒவ்வொரு வார்த்தையையும் அவர்களுடைய மனத்திலிருந்து பிறந்து, அவர்களுடைய நாவால் உச்சரிக்கப்படுவதுபோல், அவர்களுடைய அந்தரங்கத்திற்குள்ளேயே புகுந்து கொண்டு யோசனை செய்யவேண்டும்." இவ்வார்த்தைகள் தற்கால ஆசிரியர் ஒருவருடையவை. பண்டைக் கவியான காளிதாஸரும் தம் பாத்திரங்களின் அந்தரங்கத்திற்குள்புகுந்து, அவர்களுடைய வார்த்தைகளை அவர்களுடைய மனப்பண்புடனே ஒலிக்கும்படி அமைக்கிறார். அவர்கள் கூறும் உவமைகள் கவியின் அழகுச் சுடரால் பிரகாசித்தாலும், அவைகளில் பாத்திரங்களுடைய மனத்தின் சாயை விழுகிறது. ஆகவே, அழகு உவமைகள் கூட பாத்திரங்களுக்குப் பொருத்தமிலாத கவிதைச் சரக்காய் இல்லை. பாத்திரங்களுடைய மனப்பண்பை வெகு அழகாய்ப் படம் பிடித்துக் காண்பிக்கின்றன. இவ்விரு குணங்களும் ஒருங்கே எப்படிச் சேர்ந்திருக்க முடியும் என்ற ஆச்சரியம் ஏற்படும் ; ஆனால் அவை சேர்ந்திருக்கின்றன. இதற்கு மிகச் சிறந்த உதாரணம், கலையழகின் இயற்கைப்படி, ஆடம்பரம் குறைந்த தாய்த் தான் இருக்கிறது. சகுந்தலையை கண்வருடைய ஆசிரமத்திலிருந்து ஹஸ்தின புரத்திற்கு அழைத்துக்கொண்டு வரும் இரு ரிஷி குமாரர்களில் ஒருவனான சாரத்வதன் அரண்மனையின் செல்வச் செருக்கையும் பட்டணத்து ஜனங்களின் போக வாழ்வையும் கண்டு வியக்கிறான் :

"நண்பா, களியாட்டங்களிலேயே பொழுதைப் போக்குகின்றனர் இவ்வூர் ஜனங்கள் ! சில்லறைச் சுகங்களை மீறும் திருஷ்டி இவர்களுக்கில்லை ! உன் கண்களுக்கோ இவர்கள், ஸ்நானம் செய்தவனுக்கு எண்ணெய் பூசியவன் போலும், ஆசாரமுடையவனுக்கு ஆசார மில்லாதவன் போலும், அதிகாலையில் எழுந்தவனுக்குஅதிக நேரம் துயிலுபவன் போலும், சுயேச்சையாய் இருப்பவனுக்கு தளைபூட்டியவன் போலும், தோன்றுகின்றனர்."

ஆமாம், சந்தேகமென்ன ? ரிஷிகுமாரனுக்குத் தன் வாழ்வின் ஆசாரத்திலும் பரிசுத்தத்திலும் பெருமை இல்லாமலிருக்குமா? மாலினீ தீரத்தில் பல நாட்கள் இந்த ரிஷிகுமாரன் அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டுத் திரும்பி வந்தபொழுது, எண்ணெய் வடியும் உடம்புகளுடைய கானக வேடர்களை

வழியில் கண்டு அருவருப்படைந்திருப்பான் ; வேத மந்திரங்களை அதிகாலையில் ஜபித்துவிட்டு ஆசிரமத்திற்குத் திரும்பி வந்த பொழுது, அவர்கள் தங்கள் குடிசைகளுக்கு வெளியே புழுதியில் பெருந்தூக்கத்தில் வசப்பட்டிருப்பதைக் கண்டிருப்பான் ; தான் சின்னஞ் சிறுகாலையில் எழுந்து, காலை நியமங்களை முடித்த அவ்வளவு நேரத்தையும் இழந்து தூங்கிக்கொண்டிருந்தவர்களைக் கடந்து சென்றபொழுது, எப்படி அவர்களுடைய சூன்ய வாழ்வின் தளைகள் இல்லாமல், அவர்களுக்குக் கிட்டாத காலையின்பத்தை தான் நதிதீரத்திலும் கானகத்திலும் அருந்திக்கொண்டிருக்கிறான் என்று திருப்தி அடைந்திருப்பான். அந்தக் கானக அநுபவங்கள் தாம் அவனுக்கு அரண்மனையிலும் எழுகின்றன. இங்ஙனம் கவி, சில சிறிய உவமைகளினால் ரிஷி குமாரனின் மனப் பண்பை நமக்குக் காட்டி, அவனை நம் எதிரே திரிய வைத்து விடுகிறார். இதே முறையில், துஷ்யந்தன் சகுந்தலையைச் சந்தித்த பிறகு, ஆசிரமத்திலிருந்து தன் நகரத்திற்குச் செல்ல மனமில்லாதவனாய், தன் நிலைமையைப் பின் வருமாறு தெரிவிக்கிறான் :

“என் சரீரம் முன்னே செல்லுகிறது; ஆனால் பேதை மனம் பின்னே விரைகிறது. பட்டுக் கொடியை காற்றை எதிர்த்து இழுத்துச் சென்றாலும், அது பின்புறம் நோக்கியே சலசலத்துப் பறக்கிறது” இவ்வுவமை மஹாரதனான துஷ்யந்தனுக்கு எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது என்பது கவனிப்பதற்குரியது.

இன்னும் இரு உதாரணங்கள் கூறுவோம். அவ்வுவமைகளின் ஆடம்பரமில்லா இயற்கையழகுக்காகவே அவைகளை எடுத்துக் காண்பிக்கலாம். சகுந்தலையின் தோழிகள் துர்வாசரின் சாபத்தை அவளுக்குத் தெரிவிக்கக் கூடாது என்று நிச்சயம் செய்துகொள்ளும்பொழுது, அவர்களில் ஒருத்தி, “நவமல்லிகைக்கு யாராவது வெந்நீர் விடுவார்களா?” என்கிறாள். தினந்தோறும் பூஜைக்குப் புஷ்பம் பறிப்பதிலும், செடி கொடிகளுக்கு ஜலம் விடுவதிலும் காலத்தைக் கழிக்கும் ஓர் ஆசிரமப் பெண்ணின் மனம் தானே இந்த உவமையில் பிரதிபலிக்கிறது? இதே முறையில் அவர்களுடைய ஆசிரமத் தோழியாய் இயற்கை அன்னையின் மடியில் வளர்ந்த சகுந்தலையும், துஷ்யந்தன் அவளைச் சபையில் நிராகரித்த பொழுது அவமானத்திற் குள்ளாகி, அவளுடைய பெண்மையே சுருங்கும் புஷ்பம் போலாகி வெட்கத்தில் துடித்துக் கொண்டிருந்த பொழுது, துஷ்யந்தனை நிந்திக்கும் சுடு சொற்களிலும்கூட, அவளுடைய கானக அநுபவங்கள் தாம் தொனிக்கின்றன.

“அநார்ய! உன் மனத்தினால் நீ என் மனத்தை அளக்கிறாய். உன்னைப்போல் தர்மவேஷம்பூண்டு ஏமாற்றுபவர்களை நான் கண்டதில்லை. புதர்களால் மறைக்கப்பட்ட ஓர் ஆழமான கிணற்றில் நான் காலைவைத்து விட்டேன்!” இவ்வார்த்தைகளில், நாம் சகுந்தலையின் மாசற்ற குணத்தையும், அவளுடைய கோபத்தைக் கூட ஓர் எல்லைக்கு அப்பால் போகவிடாமல் தடுக்கும் புனிதப் பெண்மையும் மாத்திரமில்லாமல், அவளுடைய ஆசிரம அநுபவத்தையும் மனப்பண்பையும் காண்கிறோம். காளிதாஸரின் காலத்தை நோக்கும்பொழுது, அவருடைய நுட்பமான கலைப்பண்பு நமக்கு ஆச்சரியம் விளைவிக்கிறது. மற்றவர்களிடம் இப்படித் தராசில் வைப்பதுபோன்ற ஒரு கலை அப்பியாஸத்தை நாம் காணவில்லை. அவர்கள் நிதானம் தெரியாமல் விபரீதக் கற்பனையில் இறங்கி விடுகின்றனர்.

காளிதாஸர், நாடக சம்பாஷணைகளில், பேசும் பாத்திரம், கேட்கும் பாத்திரம், இருவருக்கும் பொருத்தமாகவே, உவமைகளை அமைக்கிறார். பேசுபவருக்கு அவை எப்படிப் பொருத்தமாய் இருக்கின்றன என்பதை மேலே விவரித்தாகிவிட்டது. எழுதுபவனின் குணத்தை மாத்திரம் இல்லாமல் எழுதப்பெற்றவனின் குணத்தையும் பெறும் கடிதம்போல் இருக்கின்றன காளிதாஸரின் உவமைகள். உதாரணமாக, துஷ்யந்தன் சகுந்தலையைச் சபையில் நிராகரித்ததற்காக அவளிடம் பிறகு வருந்திக் கூறுகிறான் :

“சுந்தரி, என்னைத் தவறாக நினையாதே. நான் உன்னை நிராகரித்தபொழுது, என் மனம் இருண்டிருந்தது. போதையின் அந்தகாரம் தானே வரும் சம்பத்தையும் உதறித் தள்ளுகிறது! ஒரு குருடனின் கழுத்தில் மாலையைப் போட்டால், அவன் அது பாம்போ என்று பயந்து உதறித் தள்ளுகிறான், அதுபோல் என் மனம் அப்போது நிலை தெரியாமல் இருந்தது.”

தன் அநார்யச் செயலுக்குத் துஷ்யந்தன் மேற்படி வார்த்தைகளில் ஈடு செய்கிறான் ; அவைகளில் அன்பும் பச்சாதாபமும் கலந்து நிற்கின்றன. சகுந்தலை ஒரு மாலைபோல் அணிந்து கௌரவிக்கத் தகுந்தவள் என்று

துஷ்யந்தன் மறைவாய் அவளைப் போற்றுகிறான். சகுந்தலையும் பூமாலையும் குணத்தில் பொருந்தி நிற்கின்றன. பிறகு துஷ்யந்தன், மரீச ரிஷிக்கு முன்பு, தன் செயலைப் பின் வருமாறு கண்டித்துக் கொள்கிறான்.

"ஒருவன் தன் எதிரில் ஒரு யானைசென்றும், அது யானையா என்று சந்தேகித்து, பிறகு அதன் காலடிகளைப் பூமியில் பார்த்த பிறகு, சந்தேகம் தீருவதுபோல் இருக்கிறது என் நடத்தை! என்ன விந்தை இது!"

துஷ்யந்தன் தன் எதிரே மன்றாடி நின்ற சகுந்தலையை நிராகரித்துவிட்டு, அவளுடைய மோதிரத்தைக் கண்ட பிறகு பச்சாதாபம் அடைந்ததற்குத் தன்னை இவ்விதம் கண்டித்துக் கொள்கிறான். காமக்குரோத மோஹங்களை வென்ற ரிஷி எவ்விதம் ஒரு விஞ்ஞான சாஸ்திரியின் முறையில் தன்னை நோக்குவாரோ, அதே முறையில் துஷ்யந்தன் பேசுகிறான். முந்திய உவமையில் மறைந்திருந்த ஹிருதயக் கிளர்ச்சி இதில் இல்லை. மேலும், துஷ்யந்தன் தனிமையில் தன் செயலுக்காக வருந்தும் பொழுது, பின் வருமாறு புலம்புகிறான்:

"என் எதிரே வந்து என்னை வேண்டினாள்; நான் அவளை திரஸ்கரித்தேன். இப்பொழுது அவள் சித்திரத்தைப் பார்த்துப் பார்த்துப் பயன் என்ன? ஒரு மகா நதியைத் துச்சமாய்க் கடந்து சென்றேன்; இப்பொழுது ஜலம் வேண்டி, கானல் நீரைத் தொடர்ந்து செல்லுகிறேன். தோழா, என்னைப்போல் எவரேனும் உளரோ?"

இதிலும் விஷயம் ஒன்றுதான்; துஷ்யந்தன் சகுந்தலையைச் சபையில் உணர்ந்து கொள்ளாத மடமையை இது காட்டுகிறது. ஆனால் அத்துடன் துஷ்யந்தனின் அந்தரங்க ஆசையும் இதில் சேர்ந்து நிற்கிறது. அவன், சகுந்தலையிடம் தன்னை நிந்தித்துக் கொண்ட பொழுது, தன் ஆசையை அவளிடமிருந்து

தி செளத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி, லிமிடெட்.

சேவை, தற்காப்பு, சக்தி இவைகளின் சின்னம்

ஆயுள் நிதி

ரூபா 10 லட்சத்திற்குமேல் அதிகரித்திருக்கிறது

தென் இந்தியாவிலேயே முதன் முதலாக விளங்கும் இந்த கோவாபரேடிவ் ஆயுள் நிதி காரியாலயத்தில், வெளி வேலை செய்பவர்களுள் முன்னேறுவதற்கு இடமிருக்கிறது.

உங்களுடைய கையிருப்பு தொகையைப் பத்திரமாக இக்கம்பெனியில் போட்டு வைக்கலாம். ஸிகாய்ஸ் கொள்கை உங்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைக்கும்.—எதிர்காலத்தைப்பற்றி நீங்கள் கொண்டிருக்கும் கவலையை ஒழித்து உங்கள் சொத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

தற்கால ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திற்கேற்ற எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படியான நிபந்தனைகள் அளிக்கப்படும்.

தகவல்களுக்குப் பின் கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள் :—

தலைமைக் காரியாலயம்: சார்ட்டர்டு பாங்கி பில்டிங்க்ஸ்,
அரண்மனைக்காரத் தெரு, எஸ்பிளனேடு, சென்னை

மறைத்துக் கொள்ளுகிறான் ; அவள் பொருட்டுப் புகழ்ச்சிக் கவிதையைச் சேர்க்கிறான். ஆனால் தனிமையில் அவனுடைய மனது, தன் முழு ரூபத்தில் தன்னை வெளிக் காட்டிக் கொள்ளுகிறது. ஆகவே, ஒரே விஷயத்தைக் கவி மூன்று விதங்களில், இடத்திற்குத் தகுந்தவாறு, விசேஷ வேற்றுமைகளுடன், உவமை ரூபத்தில் அமைத்திருக்கிறார். இது அவருடைய கற்பனையின் வளத்தைக் காட்டுகிறது—உவமைகளை ஜோடனை செய்வதில் அவருக்கு இருந்த லாகவத்தைக் காண்பிக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் அவர் இத்தகைய வெளி ஒற்றுமைகளில் மாத்திரம் தம் மனத்தைத் திரியவிடாமல், அந்தரங்க ஒற்றுமைகளுக்குத் திருப்புகிறார் ; புறம்புத் தோற்றங்களை ஊடுருவிச் சென்று, மர்மப் பொருளை நோக்குகிறார் ; ஆத்மாவின் அம்சங்களைத் தொடுகிறார். இம்முறையில் ஏற்படும் கவிதா சிருஷ்டி ஓர் உவமை இல்லை. அதை மாறுபட்ட உவமை எனலாம் ; அது ஓர் உவமையை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது. கவிஞர் அழகுக் காட்சியைக் காண்கிறார் ; உடனே அவர் மனது அதைப்போன்ற ஒரு மனித விவகாரத்திற்குத் திரும்புகிறது. அம்மனித விவகாரத்தை அவர் முதலில் கூறிவிட்டு, அது மேற்படி இயற்கைச் சம்பவத்தைப்போல் இருக்கிறது என்று அந்த இயற்கைக் காட்சியையோ சம்பவத்தையோ ஓர் உவமையாய் அமைத்திருந்தால், அந்த உவமைக்கு ஒரு மகோன்னதமான சக்தி இராது; அது வெகுகாலமாய் அடிபடும் ஏற்பாடான, சம்பிரதாய கவிதைச் சரக்காய் இருக்கும். ஆனால் அந்த இயற்கைக் காட்சியைக் கவி நமக்குக் காட்டிவிட்டு, அதில் திரியும் தம்முடைய ஆத்ம நியமத்தால் தம் மனத்தகத்தே எழும் மனித விவகாரத்தையும் கவிதையில் எழுப்பினால், அவருடைய வாக்கின் உண்மை நம் மனத்தில் ஆழமாய்ப் பதிகிறது ; அது நாமே கண்டுணர்ந்த உண்மைபோல் ஆகி விடுகிறது ; ஏனெனில் நாம் கவியின் மனப்போக்கைப் பின்பற்றி, அவர் காட்டிய வழியைப் பின் தொடர்ந்து, அவ்வுண்மையைக்கண்டு கொள்கிறோம்; ஆகவே அவ்வுண்மை ஒரு தனிச் சக்தியுடன் நம்மை ஆளுகிறது. இம்முறையில் அமைந்திருக்கும் கவிதா சிருஷ்டிக்கு உதாரணமாய் ரஷ்ய ஆசிரியர் 'டர்கனி'வின் வசன கவிதைகளைக் கூறலாம். இவ்விதமே காளிதாஸரும் உவமையை அடிப்படையாய்க் கொண்ட கவிதா முறையைச் சில சமயங்களில் கையாளுகிறார். உதாரணமாக, 'சாகுந்தல'த்தின் நான்காம் அங்கம் அருணோதய காலத்தில் ஆரம்பிக்கிறது. ஒரு புறம் சந்திரன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறான் ; மற்றொருபுறம் சூரியன் கிளம்பிக் கொண்டிருக்கிறான். கவியின் மனத்தில் ஏனோ ஒரு வியாகுலம் குடிபுகுகிறது. இவ்விரு ஜோதிகளும் சேர்ந்து பிரகாசிப்பதே இயற்கைக்கு விரோதம் ; ஒன்று பூர்ண ஒளியுடன் இருந்தால், மற்றொன்று அப்படி இருப்பது சாத்தியமில்லை ; ஒரு ஜோதி மறைந்தால்தான் மற்றொரு ஜோதி பிரகாசிக்கலாம். என்ன கடுமையான தாட்சண்யமில்லாத, இயற்கை விதி ! இவ்விரு ஜோதிகளின் அஸ்தமன உதய காட்சியினால் நம் மனத்திலே ஓர் உண்மையின் ஒளி பிறக்கிறது : அஸ்தமன உதயங்கள் சேர்ந்து நேருவது இயற்கையின் நியமம் ; இப்பிரபஞ்சம் முழுவதும், மனித வர்க்கத்தின் விவகாரங்கள் உட்பட, எல்லா விஷயங்களிலும், ஓரிடத்தில் ஓர் ஏற்றம் இருந்தால், மற்றோர் இடத்தில் ஒரு தாழ்வு இருக்க வேண்டும் ; இப்பிரபஞ்ச விதியை மீறமுடியாது. கவி காணும் காட்சியையும், அதிலிருந்து பிறக்கும் உண்மையையும், நாம் அவருடன் கூடச் சென்று காண்கிறோம். உண்மையின் சக்தி காட்சியின் அழகுடன் மிளிர்கிறது. இம்முறையில் அழகும் உண்மையும் சேர்ந்துப் ஏற்படும் மூர்ச்சனை வடிவங்கள் தாம் காளிதாஸரின் உவமைகள்.

ஜப்பான்-ஸோவியத் போர் வருமா?

[ஏ. ஜி. வெங்கடாச்சாரி]

பஸிபிக் "காட்டு மிராண்டி"யாகிய ஜப்பானைத் திண்ணமாக முறியடிப்பதுபற்றி ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் 'கியூபெக்'கில் கூடியாலோசித்து திட்டம் வகுத்து விட்டார்கள். ஜெர்மனி தோல்வியுற்ற பின், இரண்டு தேசங்களும் தம் முழு பலத்தையும் வசதிகளையும் பஸிபிக்முனைக்கு அனுப்பி, ஜப்பான் மீது மாபெரும் போரைத் துவக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் ஜெர்மன் பிடியிலிருந்து பூர்ணமாய் விடுவிக்கப்பட்டிருக்கக்கூடிய ஹாலந்தும் பிரான்சும், கீழ்க்கோடியில் முன்னர் தமக்குச் சொந்தமாயிருந்த ஏகாதிபத்தியங்களை மறுபடியும் ஆண்டு அனுபவிக்கலாம் என்ற ஆசையுடன் கூட, பஸிபிக் போரில் நேரடியாகச் சேரும். நேசக் கக்ஷியின் மொத்த பலத்தையும் போர்ச்சாதன உற்பத்தி வசதிகளையும் பார்க்குமிடத்து ஜப்பானை இறுதியாக முறியடிப்பதற்கு அவற்றால் முடியும் என்று தாராளமாய் நம்பலாம். ஆனால், ஜப்பானை அது பிடித்துள்ள விசாலமான பகுதிகளிலிருந்து விரட்டிய பின், அங்கெல்லாமிருக்கும் ஜனங்களின் கதி என்னவாகும் என்பதில் நமக்கும் சீனருக்கும், மற்ற கீழ்த்திசை மக்களுக்கும் இணையற்ற சிரத்தையுண்டு.

மறுபடியும் இந்த நாடுகளெல்லாம், பர்மா, மலேயா, டச்சு கிழக்கிந்திய தீவுகள், இந்தோ - சீனா - ஐரோப்பிய வல்லரசுகளின் அடிமைகளாகவே இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. சென்ற யுத்தத்துக்குப் பிறகு இந்திய சுயாட்சி சம்பந்தமாக அனுஷ்டிக்கப்பட்ட பிரிட்டிஷ் கொள்கையே, இந்த சுமார் இருபது கோடி மக்கள் விஷயத்தில் அமல் நடக்குமோ வென்று அஞ்சவேண்டியிருக்கிறது. பிலிப்பைன் தீவுகளை விடுவித்தவுடன் சுதந்திர நாடாக்குவதாக அமெரிக்கா வாக்களித்திருக்கிறது. டச்சு சர்க்கார், ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ, செலிபிஸ், மொலுக்காஸ் ஆகிய தீவுகளடங்கிய தங்கள் கீழ்க்கோடி ஏகாதிபத்தியத்தின் எதிர்கால அரசியலபிவிருத்திக்கு வழிசெய்ய ஒரு ராயல் கமிஷனை நியமிக்கப் போவதாக சமீபத்தில் கூறியிருக்கிறார்கள். இந்தோ - சீனா மீது ஜெனரல் டிகாலின் பிரெஞ்சு சர்க்கார் தங்களுக்குள்ள பாத்தியதையை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். பிரிட்டிஷாரோ பர்மாவையும் மலேயாவையும் பற்றி வாய்திறக்கவேயில்லை. அவற்றிற்கு சுதந்திரத்தை வழங்கும் உத்தேசம் பிரிட்டிஷாருக்கு கொஞ்சமும் கிடையாது என்று நினைப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. அவர்களுடைய உத்தேசங்களுக்கெல்லாம் உரைகல் இந்தியா.

கீழ்க்கோடி வெற்றிகளுக்கு பிரதானப் படைத் தளமாக உபயோகிக்கப் போகும் நம் நாட்டில் அரசியல் சமரஸம் இப்பொழுது அவசியமென ஒப்புக்கொள்ளாத பிரிட்டிஷார், எதிர்காலத்தில் தங்கள் அடிமைகளை விடுவிக்க இசைவர் என்று எதிர்பார்ப்பது துர்லபம். பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியப் பேராசை சற்றும் குறையவில்லை என்பதற்குப்புதிய அறிகுறிகள் தென்படுகின்றன. தாய்லாந்தின்பால் அவர்கள் காட்டும் மனப்பான்மையை கவனிப்போம். ஆசியாவை அடிமைப்படுத்த ஒன்றுக்கொன்று போட்டியாகவும், சில சமயங்களில் கூட்டாகவும் ஐரோப்பிய நாடுகள் செய்த எல்லா முயற்சிகளையும் சமாளித்து சுதந்திரமாய் இருந்துவந்த ஒரே ஆசிய தேசம் தாய்லாந்து. பிரிட்டிஷ் கீழ்க்கோடிக் கொள்கையில் 1941-க்கு முன் காணப்பட்ட முரண்பாடுகளும் பலவீனங்களும், அவற்றின் விளைவாக எழுந்த நிச்சயமற்ற நிலைமையும், இந்த யுத்தத்தில் தாய்லாந்து ஜப்பானுடன் பிணைப்படும்படியாக செய்துவிட்டன. தர்ம நியாயப்படி, யுத்த பிற்காலத்தில், அது பழையபடி பூர்ணசுதந்திர நாடாக வேண்டியதே. அமெரிக்காவின் கருத்து அதுதான். ஆனால் பிரிட்டாஷாரோ, அந்நாட்டில் படை தளங்களும் ராணுவ வசதிகளும் தங்களுக்கு வேண்டுமெனக் கோர ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியா இப்பொழுதுள்ள நிலைமைக்கு அந்நாட்டை மட்-

டத்தட்டிவிடுவது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் உத்தேசம். இதிலிருந்தே பர்மாவினிடமும் மலேயாவினிடமும் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். டச்சு கிழக்கிந்திய தீவுகளில் அமெரிக்கச் செல்வாக்கு வளர்ந்தால், ராஜீய விடுதலை விஷயத்தில் அமெரிக்காவின் தாராளக் கொள்கையை டச்சு சர்க்கார் பின்பற்றி ஏகாதிபத்திய பிரிட்டனை தர்ம சங்கடத்தில் ஆழ்த்திவிடக் கூடும். இவ்வாறு நிகழ்ச்சிகள் உருவாகாமல் தடுப்பதற்காக கீழ்க்கோடிப் போரில் பிரிட்டிஷார், அமெரிக்கருக்கு சளைக்காத விதத்தில் பங்கெடுத்துக் கொள்வதென முடிவுசெய்திருக்கிறார்கள். ஹாலந்தும், பிரான்சும், ஆப்ரிக்காவில் காலனிகளைப் பெற்றுள்ள பெல்ஜியமும், ஒரு மேற்கைரோப்பிய பொருளாதார ஐக்கியத்தில் பிரிட்டனுடன் கூடச் சேரவேண்டுமென்பதாக பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் பெருமுயற்சி செய்துவருகிறார்கள். தங்கள் பொதுப்படையான நலன்களை முன்னிட்டு, கீழ்க்கோடி மக்களை முடிந்தவரை அடிமைகளாகவே வைத்திருப்பதென இவை முடிவு செய்துவிடும் பக்ஷத்தில், அமெரிக்காவுக்கு இது மறைமுகமான தோல்வியாக இருக்கும். மூலப்பொருட்கள் மிகுந்த இந்தப் பிரதேசங்கள், ஸர்வதேச நிர்வாகத்தின்கீழ் வைக்கப்பட்டு, ஒரு காலவரம்புக்குள் விடுவிக்கப்படவேண்டும் என்றே அமெரிக்காவில் பொதுஜன அபிப்பிராயம் அறிவுறுத்துகிறது. சீனரும் இந்தியரும் இதே கருத்துக் கொண்டுள்ளனர். ஆனால் ஐரோப்பாவில்போல, கீழ்க்கோடியில் விடுவிக்கப்படும் நாடுகள் விஷயத்தில் உருப்படியான உடன்பாடெதுவும் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கிடையாது. ஆகையால் தான், இத்தகைய விபரீதப் போக்குகளெல்லாம் காணப்படுகின்றன.

அமெரிக்கப் படைகள் ஜெயிக்கும் தீவுகளெல்லாம் அமெரிக்காவுக்கே சொந்தமாக வேண்டும் என்ற கோரிக்கை அந்நாட்டில், அதிகார வட்டாரத்தினரின் ஆதரவுடன் கூடக் கிளம்பியிருக்கிறது. பஸிபிக் பிராந்தியத்தின் எதிர்கால பந்தோபஸ்தை முன்னிட்டு, ஜப்பான் மாண்டேட்டுகளாக அனுபவித்துவந்த காரொலீன், மார்ஷல் தீவுதொகுதிகளைபடைத்தளங்களாக்கி, சீன கடற்கரைவரை பாதுகாப்பு மண்டலமொன்றை சிருஷ்டிப்பது அமெரிக்காவின் நோக்கம். சீனாவின் எதிர்காலத்தையும் அதன் சுதந்திர வளர்ச்சியையும் இது எவ்வாறு பாதிக்கும் என்பதைப்பற்றி நிச்சயமாக எதையும் சொல்வதற்கில்லை. ஸோவியத்துடன் அதிக உறவு வைத்துக்கொண்டு ஆசிய சமாதான முன்னணியை வகுக்க முயலவேண்டுமென சீன பார்லிமெண்ட் சமீபத்தில் தீர்மானித்தது. இது முக்கியமானதோர் நிகழ்ச்சி. ஐரோப்பிய வல்லரசுகளின் பஸிபிக் கொள்கை சீனாவுக்கு கட்டோடு பிடிக்கவில்லை. கலைத்துறையில் கூட, பிரிட்டிஷாருக்கும் மற்ற ஐரோப்பியருக்கும் கீழ்க்கோடியில் கொஞ்சமும் இடந்தரலாகாது என்பது லின்யுடாங் என்ற சீன பேரறிஞரின் வாதம். இதற்கு சீனாவில் பேராதரவு இருந்துவருகிறது. கீழ்க்கோடிப் போரில் தங்களுக்கு சாதகமாக குறுக்கிடும்படி ஸோவியத் யூனியனை பிரிட்டனும் அமெரிக்காவும் கேட்பது திண்ணம். அப்பொழுது ஸோவியத் யூனியன் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எழுகிறது. அது சும்மா இருந்துவிட்டு, போரிலும் யுத்த பிற்கால ஏற்பாடுகளிலும் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ஸர்வமான்யம் அளித்துவிடுமெனத் தோன்றவில்லை. ஜப்பானுக்கும் ஸோவியத் யூனியனுக்குமிடையே நடுநிலைமை உறவு இப்பொழுது இருந்துவருகிறது. எனினும் கிழக்கத்திய விவகாரங்களில் தன் விருப்பப்படி குறுக்கிடுவதற்கு வேண்டிய பலமும் வசதிகளும் முகாந்தரங்களும்ஸோவியத் யூனியனுக்கு இனி ஏராளமாயிருக்கும். அவற்றை அது எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகிறது என்பதே கேள்வி.

ஜப்பானியன் ஏகாதிபத்திய சிறகுகள் ஒடிக்கப்படுவது அவசியமென ஸோவியத் கருதலாம். நல்ல பலமுள்ள யுத்த பிற்கால ஜெர்மனி ஐரோப்பாவுக்கு அவசியமென்பது ஸோவியத் கருத்து. அதைப்போலவே தன் பொருளாதார வாழ்வை சரிவர நடத்திக் கொண்டு போக முடியாத அளவுக்கு ஜப்பான் பலவீனப்படுவது கூடாதென்றே ஸோவியத் நினைக்கும். இந்த எண்ணம் நிறைவேறுகையிலேயே ஆசிய மக்கள் உண்மையான விடுதலையடைவதற்கு வழி செய்ய முடியுமா என்று ஸோவியத் முயன்று பார்க்குமென்றே தோன்றுகிறது. இல்லாவிடில் ஆசியாவில் ஸோவியத்தின் கௌரவமும் அந்தஸ்தும் அடியோடு பூஜ்யமாய் விடும். தங்களை அந்த நிலைமைக்குத் தாழ்த்திக் கொள்வதற்கு ஸோவியத் தலைவர்கள்

தயாராயில்லை. எனவே, தனக்கு யுக்தமெனத் தோன்றும் தருணத்தில், ஜப்பான் மீது ஸோவியத் யூனியன் போர் தொடுக்குமென்றே புலப்படுகிறது. ஆனால் இது ஸோவியத்தின் பிரத்தியேக யுத்தப் பிரகடனமாக இருக்கும். சீனா உட்பட்ட எல்லா பிரதேசங்களிலிருந்தும் வாபஸாகி, எதிர்கால சமாதானத்துக்கு உத்தரவாதம் அளிக்கும்படியாக இறுதிக் கோரிக்கையை ஜப்பானுக்கு அனுப்பி, அதன் விளைவாக ரஷியா யுத்தப் பிரகடனம் செய்யக்கூடும். அந்நிய ஆதிக்கத்தினின்றும் ஆசிய நாடுகளை விடுவிக்கவே தான் போரில் இறங்கியதாகச் சொல்லி வரும் ஜப்பான், தான் அம்மாதிரி செய்வதாகவும் ஆனால், அந்த பிரதேசங்களில் மறுபடியும் அந்நிய ஆட்சி ஏற்படாமலிருக்க வேண்டும் என்ற மாற்று நிபந்தனைகளைப் போட்டால், அதை ஸர்வ தேச விவாத அடிப்படையாக வற்புறுத்த ஸோவியத்துக்கு உரிமை கிடைக்கும். இந்த உரிமையை ஸோவியத் யூனியன் எவ்வாறாகிலும் கீழ்க்கோடியில் பெற்றே தீரும் என்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. ஸோவியத்தின் இந்தப் போக்கை அமெரிக்கா எதிர்க்கத் துணியாது. சீனா இதை வரவேற்கும். பிரிட்டிஷ், பிரெஞ்சு, டச்சு ஏகாதிபத்திய வாதிகள் மட்டும் முணமுணப்பர். அப்பொழுது தான், நிர்ணயமான வகையில் ஆசிய விடுதலையை உருவாக்குவதற்கு அமெரிக்கா திட்டமான சந்தர்ப்பத்தைப் பெறும். இதுவெல்லாம் எப்பொழுது நடைபெறும் என்று நிச்சயமாய் சொல்வதற்கில்லை. ஆனால் கீழ்க் கோடியில் மாபெருந் தாக்குதல் ஆரம்பமாகுந் தறுவாயில் ஸோவியத் யூனியன் குறுக்கிடுமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஐரோப்பிய ராஜீய பொருளாதார விவகாரங்களை உருப்படுத்துவதில் பிரிட்டனும் அமெரிக்காவும் எவ்விதமாக நடந்துகொள்கின்றன என்பது ஸோவியத்தின் பஸிபிக் கொள்கையை நிர்ணயிப்பதில் பிரதான அம்சமாக விளங்குவது நிச்சயம்.

—

தமிழ்நாடு ஏஜெண்டுகள்
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலக்கோபுர வீதி மதுரை

EASTERNS

‘டிராப்ட் ஹிந்து கோட்’

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜகத் குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் அபிப்பிராயம்.

(1) இந்த ‘ட்ராப்ட் கோட்’டின் முன்னுரையிலே இதைத் தயாரித்த கமிட்டியாரின் நோக்கங்களுள் ஒன்று, “எல்லா ஹிந்துக்களுக்கும் பிரயோகிப்பதற்காக நாட்டிலே பற்பல இடங்களிலும் வெவ்வேருகப் பிரிந்த சட்டக் கோட்பாடு (school of law) களிலிருந்தும் முன்னேற்றத்திற்கு அனுகுணமான பகுதிகளைத் திரட்டி ஒன்ருக்கி, ஒரே ரீதியான ஹிந்து சட்ட நூலாகச் செய்வது என்பதே” என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு, ஸ்மிருதிகளின் விகல்பங்களையும், அவற்ருல் வெவ்வேருக்க் கிளைத்த ஹிந்து சட்ட நிபந்த நூல்களையும், ஹிந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஹிந்து சட்ட திட்டங்களை நன்கு விளக்கும் கருவிகளாகக் கொள்வதை விடுத்து, அவற்றினின்றும் ஒவ்வொரு அமிசத்தை மட்டும் பொறுக்கிக் கொண்டு, மற்ற அமிசங்களை புறக்கணித்து, அழிந்து போம்படி செய்வதே இத்தகைய தொகுதிச் சட்டம் (code) இயற்றுவதின் பயனுகும். தற்காலத்தில் நமக்குள்ள அறிவைக் கொண்டு, முன்னேற்ற முடையவை என்று நமக்குத் தோன்றும் பிரகாரம் நிர்ணயிப்பது உண்மை யற்றதும் உறுதிப்படாததுமான காரியம் ஆகையால், அது முற்றும் தவருகவே முடியும்.

(2) ஆங்கில நாட்டுப் பொதுச் சட்டதிட்டங்கள் மதசம்பந்த மற்றவை யாயினும், அவற்றைத் தொகுத்து (code)ச் சட்டமாக்குவது சாத்தியமில்லை என்றும் அதனுல் அனுகூல மொன்றுமில்லை என்றும் கொள்ளப்படுகின்றது; தொகுக்கப்படாத சட்டத்திற்கு அடிப்படையாய் அமைந்து அவற்றை நிர்ணயிக்கும் சட்ட தத்துவங்கள், தொகுதிச் சட்டத்தில் அமைக்கப்பெருது விடுபட்டுப் போகும். தொகுதிச் சட்டம் ஏற்பட்ட பின்பு, அச்சட்டத்து வாக்கியங்களே பிரமாணமாகும்; அதற்கு முன் வழக்கிலிருந்த சட்ட தத்துவங்களைக்கொண்டு அவ்வாக்கியங்களுக்கு வியாக்கியானஞ் செய்ய முடியாது; செய்யவும் அனுமதிக்கப்படாது; ஆதலால் மூல தத்துவங்கள் நசித்துப் போக நேரும். இதுவே இப்படியானுல், இஹபர நன்மைகளையும் என்றும் அழியாத நிலையையுமே கருதுகின்ற ஸ்மிருதிகளிலும், அவற்றிற்கு முன்னேர் எழுதிய வியாக்கியானங்களிலும், அவற்றைத் தொகுத்து ஒரே ரீதியாக அமைத்த நிபந்தக் கிரந்தங்களிலும், இவற்றையெல்லாம் ஆராய்ந்து நியாய சபையோரால் நிர்ணயிக்கப்பட்ட தீர்ப்புகளிலும் நன்கு விளக்கப்பட்ட ஹிந்து சட்ட விதிகளை முழுவதும் தொகுப்பது என்பது எவ்வளவு அனுசிதமும் அசாத்தியமும் ஆகும் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ? இத்தகைய தொகுதிச் சட்டம் ஏற்பட்ட பின்பு, அதிலுள்ளே காணப்படும் வாக்கியங்களுக்கு அப்பால் ஒன்றையும் கவனிப்பதற்கு இடமின்றிப் போவதால், ஸ்மிருதிகளால் ஹிந்து ஸமூஹத்தினருக்கு ஏற்படும் நன்மைகள் பலவும் கிட்டாதவை யாகிவிடும். எங்கும் ஒரே ரீதியானச்சட்டம் அமைவதையோ, சட்டம் தெளிவாக இருப்பதையோ, சட்டத்தைப் பிரயோகிப்பது எளிதாக இருப்பதையோ மாத்திரம் விரும்பி, ஸ்மிருதிகளால் உண்டாகும் நன்மைகளை மக்களுக்குக் கிடையாதபடிசெய்து, அனுவசியமான பெரு நஷ்டத்திற்கு அவர்களை உட்படுத்துவது தகாத காரியம்.

(3) 1935 வருஷத்து ‘கவர்மெண்ட் ஆப் இந்தியா’ சட்டத்திலும் அதற்கு முன்புள்ள ‘சார்டர் ஆக்ட்’கள், ‘கவர்மெண்ட் ஆப் இந்தியா’ சட்டங்கள் இவற்றிலும் மாட்சிமை தங்கிய மஹ

ராணி யவர்கள் விடுத்த 'உத்கோஷ பத்திரத்'திலும் (Proclamation) அடிப்படையாக அமைந்த கொள்கை என்னவென்றால், பிரஜைகள் அனைவரும் தத்தமக்குரிய மத சம்பந்தமான விதிகளை யாதொரு தடையும் இன்றியே அனுஷ்டிக்கலாம் என்று முழு உரிமை யளித்ததேயாகும். பிரத்யேக (personal) விஷயமான சட்டங்களை அமைப்பதற்கு இந்தியச் சட்ட நிர்மாண சபையோருக்கு (Indian legislature) அதிகாரங் கொடுத்ததும் மேற்கண்ட உரிமையை அனுசரித்தே என்பது மஹா ஸங்கிதானத்தின் அபிப்பிராயம். ஆதலால், இந்த உரிமைக்குப் பாதகமின்றியும் அனுகுணமாகவுமே அந்த அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். இப்படிப் பார்த்தால், இத் 'தொகுதிச் சட்ட'த்தி லுள்ள திருத்தங்கள் இவ்வதிகாரத்தை துஷ்பிரயோகஞ் செய்து அதிக்கிரமித்தவை யாகும்.

(4) எப்படியும், ஹிந்து சட்ட விதிகளைத் தொகுப்பதற்கு இது ஏற்ற காலம் அன்று; உலக மகா யுத்தத்தினால் எழுந்த சங்கடங்களை நிர்வத்திப்பதிலேயே பொது ஜனங்களின் மனம் ஈடுபட்டிருக்கிறது. அவசர காரியங்களையும் யுத்தம் முடிந்த பின்பே கவனிக்க வேண்டும் என்று ஒதுக்கி வைக்கும் போது, 1-1-1946-க்கு முன் ஹிந்து சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று அவசரப்படுவது தகாத காரியம்; பல்வேறு மதஸ்தர்களையும்கொண்ட சட்ட சபைகளை ஹிந்து மதச் சட்டங்களிலே தலையிடச் செய்வதும் நியாய மன்று. இவர்கள் எத்தனையோ வருஷங்களுக்கு முன், குறிப்பிட்ட சில ஆண்டுகளே பிரதிநிதித்துவம் வகிப்பதற்காக, ராஜீயக் கருத்துக்களைக் கொண்டே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகையால், அந்த ராஜீய விஷயங்களிலுங்கூட பிரதிநிதித்துவத்தை இழந்தவர்களாகியும், யுத்தத்தினால் ஏற்பட்ட சங்கடமான நிலைமையை உத்தேசித்துத் தங்கள் பதவிகளிலே வேறு காரணங்களுக்காக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

(5) ஹிந்துச்சட்டத்தைத் தொகுப்பது என்றால் அதை முற்றிலும் ஸ்மிருதி வாக்கியங்களையும் ஸதாசாரத்தையுங் கொண்டே தொகுக்கவேண்டும். ஸ்மிருதி வாக்கியங்களிலும் ஸதாசாரத்திலும் இல்லாமல் அவற்றிற்கு விரோதமாயிருப்பவை ஹிந்துச் சட்டமாக மாட்டா; அவற்றை ஹிந்து மக்கள் சட்டமென்று ஒப்புக்கொள்ள முடியாது. கமிட்டியாரின் முன்னுரையிலே, 'ஹிந்துப் பொதுமக்களால் ஒப்புக்கொள்ளத்தக்கதான பூர்ண ஹிந்துச் சட்டத் தொகுதி சீக்கிரத்திலே அமுலுக்கு வர வேண்டும் என்பதே பொதுவான அபிப்பிராயம்' என்று சொல்லப்படுகின்றது. மத சம்பந்தப்பட்ட வியவகாரங்களிலே எந்தச் சட்டசபையும் தலையிடக்கூடாது. ஆதலால், சட்ட விதிகளை விதிக்கவேண்டும் என்று எந்த மதத்திலிருந்து பிரிந்த கட்சியார் (dissenters) வற்புறுத்தினாலும், அவர்களுக்கு என்று 'ஸிவில் மாரீஜ் ஆக்ட்' போன்ற சட்டங்களை மதக்கொள்கைகளுக்குப் பாதகமில்லாத முறையிலே அமைப்பதுதான் சட்டசபை செய்யவேண்டிய வேலை. எந்த மதத்தைச் சார்ந்த புருஷனையோ, ஸ்திரீயையோ, அந்த மதத்திலே பிறந்தும் நம்பிக்கை யிழந்தவர்களான சிலரோ பலரோ விரும்புகிறார்கள் என்ற காரணத்தால், தத்தம் மதாசாரப்படி நடக்கவொட்டாது தடை செய்வது தவறு. அதனோடு, அடிக்கடி துண்டு துண்டாகச் சட்டத்தைத் திருத்த வேண்டி வருமே என்று திருத்தங்களையெல்லாம் இப்பொழுதே சேர்த்து ஹிந்துச் சட்டத்தொகுதியில் அமைப்பதும் மிகவும் அநியாயமான காரியம். மேலும், பிரஸ்தாவ (draft Code) சட்டத் தொகுதியிலே கூறப்படும் திருத்தங்கள் திருத்தங்களாகமட்டும் அமையாமல், ஹிந்துமத சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு முற்றிலும் விரோதமாகவும் ஹிந்துமதத்தினின்று மாறுபட்ட தத்துவங்களை உட்கொண்டும் இருக்கின்றன.

(6) இவ்வாறு விரோதமாயும், ஹிந்து மதத்திற்கு விருத்தமான தத்துவங்களை யுடையதாயும் அமைந்த அமிசங்களிற் சிலவற்றை உதாரணங் காட்டலாம். (1) தன் (வர்ணம்) சாதிக்குப் புறம்பாக விவாகஞ்செய்து கொள்ளவும், கோத்திர விவாகம் சமானப் பிரவர விவாகஞ் செய்துகொள்ளவும் இடங்கொடுப்பது. (2) விவாகரத்து. விவாக முறிவு (divorce) இவற்றை அனுமதித்து விதிகளை அமைப்பது (3) 'புத்' என் னும் நரகத்தினின்று காக்கவல்லவனுய், ஈமச்சடங்கைச் செய்து பிண்டம் தர்ப்பணம் இவற்றை அளித்து இஹபர சிரேயஸ்களைத் தரத்தக்கவனுன புத்திர னிருக்கும்போது, அவனுக்கே முழு சொத்தைக் கொடாமல் பிறருக்கு அவ னுேடு பங்குரிமையளிப்பது (4) மலடி யான மூத்த மனைவிக்கும் சிரேயஸைப் பிண்ட தர்ப்பணுதிகளால் அளிக்கக் கூடிய புத்திரனைப் பெற்றெடுக்கத்தக்க இரண்டாவது தாரத்தையும் மணப்பது கூடாது என்றும் அப்படி மணந்தால் தண்டனையுண்டு என்றும் விதிப்பது (5) ஸந்நியாஸம் என்னும் நான்காவது ஆசிர மத்தில் இருப்பவர்களும் சொத்துச் சேர்க்கலாம் என்றும் அச் சொத்து களுக்கு வாரீஸ் யார் என்றும் விதித்து, அந்த ஆசிரமத்தின் தூய்மையைக் குலைப் பது.

(7) மேலே குறித்துவாறு மத விஷயங்களில் அவநம்பிக்கை யுடையவர் களை வேறுபடுத்தி அவர்களுக்கு வேண் டிய தனிச்சட்டங்களையோ சட்டத் தொகுதியையோ அமைப்பதுந் தவிர, மத சம்பந்தமில்லாதவையாய் பொருளா தார நிலையால் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கும் தனிப்பட்ட சட்டங் களை அமைப்பதில் யாதொரு ஆக்ஷே பனையும் இல்லை. ஆனல், அவற்றை ஹிந்துச் சட்டத்தொகுதியுள்ளே புகுத்த வேண்டிய அவசியம் இல்லை. (dowry) விவாககாலத்தில் பெண்ணிற்குக் கொடுக் கும் சொத்து சம்பந்தமாய் இந்த (code) சட்டத் தொகுதியிலுள்ள (part IV clause 28) திட்டத்தைக் கண்டு, இவ் வுண்மையை வற்புறுத்த வேண்டியதா யிற்று. சுல்கம் பெறுவது ஸ்மிருதி களுக்கு விரோதம்; ஆனல், வாதக்ஷிணை யாக மணப்பெண்ணுேடு முழுமனதுடன் தானஞ்செய்வது ஸ்மிருதி ஸம்மதம் பெற்றது; அந்த தானத்தைப் பாதிக் காத வகையிலே சட்டதிட்டத்தை அமைக்கவேண்டும்; அதையும் ஹிந்துச் சட்டமாக அமைக்காமல், எல்லா மதஸ் தர்களையும் கட்டுப்படுத்துவதாய், பொது நலத்தை உத்தேசித்தே, பொதுச்சட்ட மாக அமைக்கவேண்டும்.

(8) தென் இந்தியாவிலும் வட இந் தியாவிலும் கிராமங்கள் தோறும் முப் பது வருஷகாலமாய் ஓய்வின்றிச் சஞ் சாரஞ் செய்ததிலிருந்து, மஹா ஸந்நி தானத்திலே மேலோர் கீழோர் என்ற விபாகமின்றி ஹிந்துப் பொது ஜனங்கள் அனைவரோடும் பழகியதிலே அவ்வவர்களு டைய உணர்ச்சியும் மனுேபாவங்களும் நன்கறியப்பெற்றன; ஆகையால் ஹிந்துப் பொது மக்கள் ஸ்மிருதிக்கு மாறுன சீர்திருத்தங்களை விரும்புவதில்லை என்ப தும் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் நிச்சயமாய் விளங்கிவிட்டன. மேனுட்டு வாழ்க்கை யமைப்புகளை விரும்பி, ஹிந்து நாகரிகத்திலே பழகாத வர்களாய், அதிலே நம்பிக்கை யிழந்தவர் களாய், 'சீர்திருத்தம்' என்று கூச்சற் போடும் ஒரு சிலரின் அபிப்பிராயங்களை அதிகாரிகள் பொது மக்களின் அபிப் பிராயமென்று கொண்டு ஸ்மிருதி ஸித்த மான ஹிந்துச் சட்டத்தைச் சில அம்சங்க ளிலே மாற்றி யிருக்கவும், அந்த அமிசங் கள் பொது ஜன ஸம்மதம் பெற்றவை யல்ல என்பதை, அவை பெருவாரியாக அனுஷ்டிக்கப்பெருமல் (dead letter) உயிரற்றவை போன்றிருக்கின்றன என் பதே விளக்குகின்றதல்லவா ?

மேற் கண்ட காரணங்களால், 'ட்ராப்ட் ஹிந்து கோட்' எவ்விதத்தி லும் அங்கீகரிக்கத் தக்கது அன்று என் பதே மஹா ஸந்நிதானத்திலே தீர்மான மாகக் கொண்ட அபிப்பிராயம்.

ஸ்ரீ சந்த்ர மௌலீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின்

வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யாளுடைய
அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது

1. ஸ்ரீ மூகபஞ்ச சதீ—ஸ்ரீமூககவி அருளிச் செய்தது. 500 சுலோகங்கள் கொண்டது. தேவநாகரி மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும். ... 1—8
2. ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம்—ஸ்ரீ சங்கரபகவத் பாதர் இயற்றியது. ஸ்ரீ பண்டிட் ஏ. எம். ஸ்ரீநிவாஸாசார்யாரவர்களும், ஸ்ரீ வே. நாராயணன், எம். ஏ., எம். எல்., அவர்களும் எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடனும், பெடரல் கோர்ட் ஜட்ஜ் கனம் ஸர். எஸ். வரதாசாரி அவர்கள் முன்னுரையுடனும் கூடியது. ... 0—8
3. ஸ்ரீ முகுந்தமாலா—ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளியது. ஸாஹிதீ வல்லப ஸ்ரீ T. ஸுந்தராசார்ய ஸ்வாமிகள், பி. ஏ., பி. எல்., எழுதிய உரையுடன் கூடியது. ... 0—5
4. ஸ்ரீ பஜகோவிந்தம்—ஸம்ஸ்க்ருத மூலமும் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர், பி. ஏ., பி. எல்., எழுதிய தமிழ் அனுவாதமும். ... 0–2½
5. ஸ்ரீ சாந்தி விலாஸம்—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமும் ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், எம். ஏ., பி. எல்., எழுதிய தமிழ் அனுவாதமும்; கனம் ஜட்ஜ் திவான்பகதூர் N. சந்த்ர சேகர அய்யர் அவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. ... 0—6
6. ஸ்ரீ ப்ரச்னோத்தர ரத்ந மாலிகா—ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியதை ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தமிழில் உபதேசித்தது. (தமிழ் லிபியில்) ... 0–2½
7. ஷை (தெலுங்கு லிபியில் தெலுங்கு அனுவாதத்துடன்) ... 0–2½
8. ஷை (ஸம்ஸ்க்ருத மூலமும் ஆங்கில அனுவாதமும்) ... 0–2½
9. ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய சிவ மானஸிக பூஜா, கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸ: என்னும் நூல்கள்: ஸ்ரீ வே. நாராயணன் எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் கூடியவை (2 - ஆம் பதிப்பு). ... 0–10
10. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் எழுதியது ... 0—6
11. ஸ்ரீ தேவி ஸ்தோத்ர ரத்னகரம்—ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய பதின்மூன்று ஸ்தோத்ரங்கள் அடங்கியது. ... 0–12
12. ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி—அல்லது ஸ்ரீ அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகா. ... 0—8
13. ஸ்ரீ ஆர்யா ஷஷ்டி—ஸ்ரீதர அய்யாவாள் இயற்றியது ஸம்ஸ்க்ருத மூலமும், தமிழ் அனுவாதமும் ... 0–10

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்,

4 பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, மதராஸ்.

மூவர் அமுல்

[த்ருஷ்டகர்மா]

அத்தியாயம் 4

அண்டத்திலுள்ளபடியே!

சர்மாவின் சொற்கள் பசுமரத் தாணிபோல் சுந்தரத்தின் மனதில் பதிந்தன. அனுபவத்தினால் நன்கு தேர்ந்த உண்மைகளே அவர் உபதேசம் என்று அறிய அறிய சுந்தரத்தின் அவா அதிகமாகிவிட்டது. மேலும் மேலும் தேக தத்துவங்களை சர்மாவினிடமே கேட்க வேண்டுமென்று வைத்திய சாலையை யடைந்தார்.

சாவகாசமாக கீதையைப் படித்துக் கொண்டிருந்த சர்மா சுந்தரத்தைக் கண்டதும் புஸ்தகத்தை மூடிவிட்டுச் சொன்னார். "சுந்தரம் உனக்கெவ்விதம் ஆயுர்வேத சாரத்தை புகட்டத் தொடங்க வேண்டுமென்று யோசித்துப் பார்த்தேன். எந்த விஷயமும் எனக்கு எளிதிலறியத் தக்கதாகவே படுகிறது. ஆனால் பிறர் மனதில் பதியும் வகையில் எங்கிருந்து தொடங்குவது என்றே வகையறியாதிருந்தேன். இவ்வித நிலையில் எப்பொழுதும் என் வழக்கம் கீதையை பாராயணம்போற் படிப்பது. அப்பொழுது இவ்விதமே செய் என்று தர்மோபதேசம் போல், பதங்கள் சூசகமாக என் மனதைக் கவரும். இன்று மப்படியே செய்தேன். "கர்ம காண்டத்தில் கூறிய வைதிக கர்மாக்கள் முக்குணங்களுடன் கூடியவை. அவைகளினின்றும் விடுபட, முக்குண ரகிதனாகப் பாடுபடு; த்வந்த்வங்களற்றவனாய், நித்ய சத்துவஸ்தனாக, யோகம், க்ஷேம மென்னும் தேடுவதும் காப்பாற்றுவதுமான கவலையினின்றும் விடுபட்டவனாக ஆத்மாவை த்யானித்து அடைந்தவனாகவே இரு" என்று அர்ச்சுனனுக்கு உபதேசம். உனக்கும் இதே உபதேசம்.

டா. சு: மிக்க வந்தனம். ஆனால் சர்மா, தங்களிடம் கீதோபதேசமா கேட்க வந்தேன்! முதலில் ஆயுர்வேதம் உபதேசம் செய்யுங்கள். அப்புறம் கீதையையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்மா: அந்தப் பிரமையைத்தான் விலக்க வந்தேன். ஆயுர்வேதம் வேதத்தைபோல் அனாதி. பகவான் வேத புருஷன் என்றால் ஆயுர்வேத புருஷனும்கூட. வேதாந்தமும் கீதையும்கூட ஆயுளை பற்றிய அறிவு நூல்களே. நான் இப்பொழுது கீதையை சுட்டிக் காட்டுவது எதற்கென்றால் ஆயுர்வேத தத்துவங்களை எல்லாம் கீதையே போதித்துவிடும். அதை யறியும் சக்தியையும் கொடுத்துவிடும் என்பதற்கே. இப்பொழுது கவனித்துக் கேள். விளக்கிக்கூறுகிறேன். பிறப்புஎன்கிற 'பவரோக'த்திற்கு காரணம் ஜீவன் முக்குணங்களால் பீடிக்கப்படுவது, விருப்பு வெறுப்புபோன்ற த்வந்த்வங்களினால் கட்டுப்படுவது. இது கீதை. ஆயுர்வேதம் வ்யாதிகள் த்ரிதோஷங்களென்கிற வாத, பித்த, கபங்களின் கோளாற்றினால் ஏற்படுகின்றன என்று கூறுகிறது. இவைகளை வ்ருத்தியடையவோ குறைந்து விடவோ சந்தர்ப்பங்களளிப்பதால் வ்யாதியை விளைவிக்கும் தோஷங்களுக்குட்பட்டு சரீரம் பீடையை யடைகிறது.

டா. சு: ஆமாம். உபமானம் நன்றாக இருக்கிறது. ஆனால் மற்ற விவரங்களை யாராய்வதற்கு வழி?

ச: மேலும் கவனி. பகவான் விசுவரூபம் எடுத்தார். மறுபடியும் அழகிய மானிட உருவமும் தாங்கினார். இதன் தத்துவம் என்ன? பழமொழி கேட்டதில்லையா? "அண்டத்திலுள்ளது பிண்டத்திலே" என்று.

டா. சு : ஆம். கேள்விப் பட்டிருக்கிறேன். உலகத்தை ஒரு பெரிய சரீரமாக பாவித்து, அதில் நடக்கும் வ்யவகாரங்களையும் ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தா சம்பந்தங்களையும் நன்கு படித்துவிட்டால், அதே ஆராய்ச்சி மானிட சரீரத்திலும் எவ்வாறு பரிணமிக்கலாம் என்று ஆலோசனை செய்யவேண்டும். புரிகிறது உங்களுடைய தத்துவம். ஆனால் அவ்வளவு சுலபமாக ஊகிக்க முடியுமா?

ச : ஏன்! உன்போன்ற புத்திசாலிகள் சுலபத்தில் கிரகிக்கலாம். இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளை கூர்ந்துக் கவனித்துப் பதில் கூறு. உனக்கு உன்னத தத்துவங்கள் விளங்கிவிடும்.

டா. சு : கூறுங்கள், முடிந்த வரையிலும் பதில் சொல்லுகிறேன்.

ச : உலகத்தில் வஸ்துக்கள் வளரும் பொழுது, அதிகமாக எந்த பொருள் வளர்ச்சியில் பெருகி நிற்கிறது? ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு பக்குவத்தை யடையக் காரணமாக இருக்கும் இன்றியமையாத வஸ்துக்கள் எவை? ஒவ்வொரு பொருளும் இடம்விட்டு இடம் மாறும் வகையில் தூண்டுவதும் நிர்வகிப்பதும் எந்தப்பொருளின் அல்லது சக்தியின் உதவியினால்? இந்த மூன்று கேள்விகளுக்கும் ஆலோசித்துப் பதில் கொடு.

டா. சு : வளர்ச்சிக்கு ஆகாரம் ஜலாம்சமே. எவ்வளவு வளர்ந்தாலும் அப்பொருளை ஆராய்ச்சியினால் அளந்து பார்க்கும்பொழுது ஜலமே அதிக பாகம் அதினம்சமாக ஏற்படுகிறது. நவீன விஞ்ஞானிகளினால் கண்டு பிடிக்கப்பட்ட 92 அடிப் பொருள்களாலான வஸ்துக்களே எல்லா வஸ்துக்களிலும் என்றாலும், வளரும் பொருட்களில் அதிகம் பங்கெடுத்துக் கொள்பவை ஜலமே.

வஸ்துக்கள் வளர்வதில் ஏற்படும் வெவ்வேறு பரிணாமங்களுக்கும் ஆகாரம் ஒளியும் உஷ்ணமுமே.

வஸ்துக்கள் சலனமடைய நேரிடவோ மறைமுகமாகவோ காரணம் வெவ்வேறு வாயுக்களினுதவியால் ஏற்படும் ஒரு சக்

ஆயுர்வேதாஸ்ரமம், (ESTD 1898) மதராஸ்
79, கோபதி நாராயணசாமி ரோடு
தியாகராயநகர் — சென்னை

EASTERNS

தியே. காந்தம் போன்றவைகளினால் கவரப்படும் பொழுதும் அச்சக்தியும் வாயு சக்தியைப்போன்ற ஓர் சக்தி விசும்பில் (ether) பரவுவதினாலே இயங்குவதுதான் என்று கூறலாம்.

ச: சரி. இப்பொழுது உலகத்தையே புருஷனாக பாவித்தால் இப்புருஷனுள் பக்குவப்படுத்தும் அக்னி, வளரச் செய்யும் ஜலம் (சோமன் என்று இந்த தத்துவத்தைக் குறிப்பதுண்டு), சலனத்தைக் கொடுக்கும் வாயுக்கள் முதலியவைகளினை இயங்கும் ஓர் சக்தி, இவைகளைக் காண்கிறாயல்லவா?

டா. சு: ஆம். இப்பொழுது இந்த விசுவரூபத்தையே குறுக்கி மனித ரூபமாக்கிக் கொண்டால் அக்னியே பித்தமாகும்; சோமாத்மகமான ஜலாம்சமே கபமாகும்; வாயுவின் ப்ரதிநிதியே வாதமென்கிற தோஷம் என்று தொனிக்கிறது. ஆனால் அப்படியே இவைகளின் காரியாதிகளிருக்கின்றனவா?

ச: பேஷ்! நன்றாக பொருத்திச் சொல்லுகிறாய்? அறிவு வளர்ச்சி எந்த பயிற்சியினா லேற்பட்டாலும் முடிவு வளர்ச்சியே ஒழிய ஒருக்காலும் குறைவு இல்லை. இப்பொழுது இவ்விதம் ஒப்பிடுவது பொருந்துமா என்று கவனிக்கலாம்.

யாதொரு கோளாறும் அடையாத வாதம் உச்வாச நிச்வாசங்களையும் இந்திரியங்களின் சேஷ்டைகளையும், மல மூத்ராதி விசர்ஜனமென்கிற வேகங்களையும் நன்கு நடைபெறும்படி செய்கிறது. ரஸம், ரக்தம், மாம்சம், மேதஸ், அஸ்தி (எலும்பு), மஜ்ஜை, சுக்கிலம் என்ற ஏழு தாதுக்களும் நன்கு தேகத்தில் பரவி புஷ்டி யடைவதற்கும், இந்திரியங்கள் சுறுசுறுப்புடன் வேலை செய்வதற்கும் தூண்டுகோலாக இருந்து தேகத்தைக் காப்பாற்றுகிறது.

அவ்விதமே, பித்தம், ஆகாராதிகளை பக்குவம் செய்தும், தேகத்தில் உஷ்ணத்தை பரப்பி நிலை நிறுத்தியும், பார்வையை போஷித்தும், பசி, தாகம், ருசி, காந்தி, தேகத்தில் ம்ருதுத் தன்மை முதலியவைகளையும் கொடுத்தும் சரீரத்தை யனுக்கிரகிக்கிறது.

கபமோ என்றால் தாதுக்களை கெட்டிப்படச் செய்து, பூட்டுக்களை நன்கு பொருத்தி,மழமழப்பையும் வழவழப்பையும் கொடுத்து, சிரமத்தைத் தாங்கும் சக்தியையும் அதிகரித்து, தேகத்தை போஷிக்கும் ரஸத்தில் ஆச்ரயம் பெற்று விளங்குகிறது.

டா. சு: ஆம். த்ரிதோஷங்கள் வெளியுலகிலுள்ள வாயு, சோமன், அக்னிக்கு ப்ரதிநிதிகளென்றே யறிகிறேன். ஆனால் நவீன விஞ்ஞானிகளாலறியப்பட்ட 92 அடிப் பொருள்களைக் கொண்டல்லவா தேகத்தின் புஷ்டி முதலியவைகளும் சிகித்ஸைக்குரிய ஔடதங்களும் தயாராகின்றன! இத்ரதோஷங்கள் எவ்வாறு இவைகளுடன் வ்யவகாரங்களைச் செய்ய முடியும்?

ச: கேட்ட கேள்வி மிக்கப் பொருத்தமானது. ஆனால் இவ்விஷயத்தை ஆராயவேண்டுமென்றால், த்ரவ்ய குணங்களையும் சிருஷ்டியின் தத்துவத்தையும் நம் முன்னோர்கள் எப்படி போதித்தார்களோ அவ்விதமே அறிய வேண்டும். பஞ்ச பூதங்களினால் இவ்வுலகம் ஏற்பட்டதும், த்ரவ்யங்களெல்லாம் பஞ்ச பூதங்களினாலேற்பட்டவை என்றும் ஆறுவிதச் சுவைகளும் இவைகளினாலேயே உண்டாகும் விதம் முதலியவைகளையும் மற்றொரு நாள் விவரிக்கிறேன். இந்த சூக்ஷ்மத்தில் உபதேசம் செய்யப்பட்ட "அண்டத்தி லுள்ளபடியே" என்பதையே ஆலோசித்துப் பார். பல உண்மைகள் உனக்கே ஸ்புரிக்கும்.

டா. சு: மிக்க வந்தனம். நானே கொஞ்சம் இவைகளைப் படித்துவந்து உங்களிடம் சந்தேகங்களை மட்டும் தெளிவாகக் கேட்டறிந்துக்கொள்ள முயலுகிறேன்.

சுவேதாரண்ய ஆசிரம பாலபாடம் III

[கா. சி. வேங்கடரமணி]

பாடம் 3

தோட்டம்	மலை
கிணறு	காடு
குளம்	ஆறு
ஏற்றம்	வயல்

இதுவரையில் நாம் இருவரும் சேர்ந்து இயற்கையிலுள்ள பல விஷயங்களை வரிசைக்கிரமமாய் நன்கு ஆராய்ந்து தெரிந்துகொண்டிருக்கிறோம். நாரில் தொடுத்த பூமாலைபோல் சிருஷ்டியிலுள்ள ஜீவராசிகளைப் பொறுமையுடன் படிப்படியாய் உணர்ந்தோம். அவைகள் செழித்தோங்கி வளருமிடத்திலே போய் நேருக்குநேராய்ப் பார்த்தோம். இந்த சொந்த அனுபவத்தில், என்ன உணர்ச்சி, என்ன மனப்பெருக்கம், என்ன ஆனந்தம்! உண்மையில் இதுதான் இயற்கை போதனை—இளைஞரின் மனமும் இயற்கையும் ஒன்றாய் லயிக்கிறது.

நாம் இருவரும் இப்பொழுது நமது தோட்டத்திற்குப் போய் உல்லாசமாய் கொஞ்ச காலத்தைக் கழிப்போம். கிணற்றிலிருந்து ஏற்றத்தால் சுப்பியன் தண்ணீர் இரைக்கப் போகிறான். இந்த வருஷம் கோடை மழையே இல்லையாகையால், மரங்களும், செடிகொடிகளும் சோர்ந்து சுருண்டு நிற்கின்றன. குழந்தை மணி, கோடை காலத்தில் தோட்டத்தில் செடி கொடிகளுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இரைப்பது ஏழைகளுக்கு பஞ்சகாலத்தில் சத்திரத்தில் அன்னதானம் செய்வதுபோல ஒரு பெரிய தர்மம்.

நான் தோட்டத்திற்கு வந்தால் எனக்கு என்ன தருகிறாய், அப்பா?

குரும்பை பொறுக்கித் தருகிறேன், மணி. இளநீர் வெட்டிக் கொடுக்கிறேன். பம்ப்ளீஸ் நார்த்தம்பழமும், மாதலம்பழமும் பறித்துத் தருகிறேன்—அணிப்பிள்ளை தின்றதுபோக, பாக்கியிருந்தால். பிறகு நம்ம வயலையும் பார்த்துவிட்டு வாய்க்காலின் கரையோரமாகவே நாம் கடற்கரை போய், கடலில் காவிரி சுழிட்டுக் கலக்கும் கண்கொள்ளாத அழகையும், ஓடும் அன்பு வெள்ளத்தையும் கண்டுகளிப்போம்.

ஒரு மரக்கால் கிளிஞ்சல் பொருக்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு மணி குதித்துக்கொண்டு புறப்பட்டான்.

— —

சரஸ்வதிக்கும் லக்ஷ்மிக்கும் சண்டை

[சூடாமணி]

நளினி வெகு அழகாகப் பொம்மைகளையெல்லாம் கொலுவிலே வைத்தாள். அவளுடைய மாமா வடஇந்தியாவிலிருந்து வாங்கி வந்த சலவைக் கல்லிலே செய்த லக்ஷ்மிப் பொம்மையையும் ஸரஸ்வதிப்பொம்மையையும் கொலுபொம்மைகளின் நடுவிலே வெகு அழகாக வைத்தாள். லக்ஷ்மிப் பொம்மைக்குத் தன் நகைகளை யெல்லாம் பூட்டினுள். ஸரஸ்வதிப் பொம்மை மட்டும் கடையிலே இருந்து வந்தபடியே இருந்தது. கொலு எல்லாம் வைத்து முடிந்ததும் கொலு அழகைப் பார்த்தபடியே தூங்கிவிட்டாள்.

நல்ல தூக்கம், அதனிடையே ஒரு கனவு. லக்ஷ்மிப் பொம்மையிலிருந்து லக்ஷ்மியே சுய ரூபத்திலே இறங்கி வந்தாள். கொஞ்ச நேரத்திலே ஸரஸ்வதிப் பொம்மையிலிருந்து ஸரஸ்வதியும் வெளிப்பட்டாள். லக்ஷ்மி திரும்பிப் பார்த்து, "நீயேன் என் கூட வருகிருய்? நகையுமில்லே; நல்ல உடையுமில்லே. வெள்ளைப் புடவை கட்டிக்கொண்டு என் கூட வரவேண்டாம், அபசகுனமாக," என்ருள்.

"அப்படிச் சொல்லாதே. முன் ஒரு நாள் அந்த மகிஷாஸுரனிடம் அம்புட்டுண்டு முழிச்சையே; அந்த மாதிரி இப்பொவும் எங்கேயானு அம்புட்டுண்டு முழிச்சா, நான்தானே உன்னைக் காப்பாத்தணும்? அதுக்காகத் தான் ஒன் பின்னுலேயே வறேன்," என்ருள் ஸரஸ்வதி.

"இந்தக் காலத்திலே அந்த மாதிரி ராக்ஷஸாள் கூடவா இருக்கா? இன்னமே என்னே ஒத்தராலேயும் சிறையிலே வைக்க முடியாது. நீ எங்கூட வராதே. போ" என்ருள் லக்ஷ்மி.

"ஒன் நிலைமை தெரியாமல் உளருகிருயே. இந்தக் காலத்திலே உன்னைச் சிறையிலே அடைத்து வைக்க மூன்று பேர் வெகு மும்முரமாக வேலை செஞ்சிண்டு இருக்கா. அநேகமாக நீ அமெரிக்காவிலே அடிமையாகச் சிறையில் அடைபட்டுப் போவே என்று தான் பயப்படுகிறேன். அதனுலே தான் ஒன் கூடவே வருகிறேன்."

"என்ன சொன்னே? நீ அடிமையா? நான் அடிமையா? உன்னேயே தெய்வமாக் கொண்டாடறவா எல்லாரும் என் வாசலிலே காத்துண்டு நான் காலால் இட்ட வேலையைத் தலையாலே செஞ்சுண்டு அடிமைகளாட்டமாக் கடக்கறு. இது தெரியாமல் உளருதே, போ," என்று சொல்லி விட்டு சரேல் என்று வெளியே போனுள்.

ஸரஸ்வதியும் கூடவே போனுள். இவர்கள் இருவருக்கும் தெரியாமல் கனவிலே நளினியும் கூடவே பின்னுலே போனுள். அதை ஸரஸ்வதி பார்த்து விட்டாள். உடனே நின்ருள். நளினி கிட்ட வந்ததும், "நளினி, என்கூட வர இஷ்டமா? அப்படியானுல் வா. நான் கூட்டிக்கொண்டு போகிறேன்,"என்ருள். இருவருமாக லக்ஷ்மி சென்ற வழியிலே போனுர்கள்.

ஒரு பெரிய காடு. அதிலே ஒரு வேடன். துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு காட்டிலுள்ள மிருகங்களைச் சுட்டுத் தோலை உரித்து விற்றுப் பிழைத்து வந்தான். அவனுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. தலையெல்லாம் பறக்கக் காட்டுமிராண்டி போல இருந்தான். அவனைக் கண்டதும் லக்ஷ்மி அவன்மேல் இரக்கம் கொண்டாள். அவனேடு வாழத் தொடங்கினுள்.

என்ன மாறுதல் அந்த வேடன் வாழ்ந்த குடிசை மாடமாளிகையாகி விட்டது. காட்டாளுக இருந்த அவன் முகம் வெகு அழகாகிவிட்டது. மன்மதனும் அவன் அழகுக்கு இணை இல்லை என்னும்படி உருமாறிவிட்டான். அவன் வாழ்ந்த காட்டுக்குப் பக்கத்திலே ஒரு நகரம். அது ஒரு மகாராஜ்யத்தின்

BRASS UTENSILS
AT
CONTROLLED RATES

BRASS CONTROLLED UTENSILS ARE ALREADY IN THE MARKET AND WILL BE AVAILABLE FROM ALL OUR APPROVED DEALERS.

PRICES FOR CONSUMERS RANGE FROM A MINIMUM OF RS. 1—14—0 PER LLB TO A MAXIUM OF RS. 2—4—0 PER LLB ACCORDING TO VARIETIES AND WITH OR WITHOUT PURE TIN ON THEM.

THE PUBLIC ARE REQUESTED NOT TO PAY ANY PRICE HIGHER THAN THE ONE STAMPED ON THEM.

THE MYSORE PREMIER METAL FACTORY

124, Mint Street, : : G. T. Madras

Phone : 2535 Telegrams : "SUN BRAND"

தலைநகர். அந்த நகரத்தின் அரசர் ஒரு நாள் காட்டுக்கு வேட்டை ஆட வந்தார். அவர் வேடனுடைய அழகைக் கண்டு பிரமித்துப் போனார். அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அந்த மகாராஜாவுக்கு ஒரே மகள். அவள் பெயர் மோகனவல்லி. மகாராஜா அந்த வேடனுக்கு லக்ஷ்மி மனோஹரன் என்று பெயரிட்டார்.

மோகனவல்லி லக்ஷ்மிமனோஹரனைக் கண்டு ஆசை கொண்டாள். அரசரும் அவர்கள் இருவரும் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்றே விரும்பினார். இப்படி இருக்கும்போது, ஒரு நாள் லக்ஷ்மி அந்த வேடன் முன் தோன்றி, "மனோஹரா, நான் உன் கூட இருக்குமட்டும் உனக்கு ஒரு குறையும் இல்லை. ஆனால் நான் போகும் போது எல்லாம் போய்விடும்" என்றாள். அப்போது வேடன், "நல்லது ; ஆனால் போகும்போது என்னிடம் சொல்லி விட்டுப் போகவேணும்" என்றான். லக்ஷ்மி அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டாள்.

மறுநாள் மகாராஜா ராஜ ஸபையிலே மந்திரிகள், பிரதானிகள் எல்லாரும் சூழ்ந்து இருக்கையில், மனோஹரன் ஓடி வந்தான் ; அந்த மகாராஜாவின் கிரீடத்தை எட்டி உதைத்தான். உடனே இப்படி மரியாதை தெரியாமல் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட வேடனைக் கொல்ல ராணுவ வீரர்கள் துப்பாக்கிகளை நீட்டிச் சுடப்போனார்கள். அப்போது அரசர் "அவரைச் சுட வேண்டாம்! அவர் மகா ஞானி! திரிகாலமும் உணர்ந்தவர்!" என்று கத்தினார். ஜனங்கள் எல்லாரும் கீழே விழுந்த கிரீடத்திற்குள்ளிருந்து பெரிய நாகப்பாம்பு வெளியே சீறிக்கொண்டு வந்து ஒரு பக்கமாக ஓடிமறைவதைக் கண்டார்கள். அப்பொழுது அந்த சபையார் எல்லாரும் அந்த வேடனை எப்படிக் கொண்டாடி இருப்பார்கள்?

இந்தச் செய்தியைக் கேட்டவுடனே மோகனவல்லிக்கு மனோஹரனிடம் இருந்த காதல் ரொம்பவும் வளர்ந்தது. அவள் அவனைவிட்டுப் பிரிய மனமில்லாமல், அப்பாவிடம் சீக்கிரமாகவே கலியாணத்தை முடித்துவைக்கும்படிக் கேட்டுக்கொண்டாள். பதினைந்து நாட்களுக்குள்ளாகக் கலியாணம் முடித்துவைப்பதாக அரசர் வாக்களித்தார்.

இரண்டாம்நாள், நடுராத்திரியில் மகாராஜாவும் மகாராணியும் தூங்கும்போது வேடன் சகல காவல்களையும் கடந்து அந்தப் பள்ளியறைக்குள்ளே புகுந்து, அவ்விருவரையும் கட்டிலில் இருந்து கற கற என்று வெளியே இழுத்துக்கொண்டு வந்தான். இப்படிப்பட்ட அக்கிரமமான காரியம் செய்கிறவனை வீரர்கள் சும்மா விடுவார்களா? உடனே அவனைப் பிடித்துக்கட்டி வெட்டிக்கொல்ல வாளை ஓங்கினார்கள். அதே சமயத்தில் ராஜாவும் ராணியும் படுத்து உறங்கின பள்ளி அறையின் மேல்மாடி இடிந்து கட்டிலிலேயே படீர் என்று விழுந்தது. உடனே மகாராஜா, "அவர் ஞானி ; அவரை ஒன்றும் செய்யாதீர்கள்!" என்று கத்தினார். உலகமே மனோஹரனை மகாஞானி என்று கொண்டாடத் தொடங்கிவிட்டது.

மூன்றாவது நாள் அரசர் தம் பரிவாரங்களோடு காட்டிலே வேட்டையாடப் போனார். அப்போது, மகாராஜா ஒரு மரத்தின் அடியிலே படுத்திருந்தார். அதே மரத்தின் கிளையில் ஒரு கருடன் ஒரு நாகப் பாம்பைக் கொண்டுவந்து கொத்தித் தின்றுகொண்டிருந்தது. அப்போது அந்த நாகத்தின் வாயிலிருந்து கொடிய விஷத்தில் ஒரு துளி அரசன் கழுத்திலே விழுந்தது. உடனே வேடன் தன் கத்தியின் நுனியால் அதை வழித்தான். அதைக்கண்ட வீரர்கள் அரசனை அவன் கொலை செய்கிறதாக நினைத்துப் பிடித்துக் கொல்லப் போனார்கள். அப்போது அரசர் விழித்து மேலே நிகழ்ந்த காட்சியைப் பார்த்துப் பிரமித்து, மூன்றாவது முறையும் "என் உயிரைக் காப்பாற்றின மகா ஞானி; அவரை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று கத்தினார்.

தேச முழுவதும் மனோஹரனுடைய குண விசேஷத்தைக் கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள். அரசரும் தம் மகளைக் கலியாணம் பண்ணிக் கொடுத்து அவனையே நாட்டுக்கு ராஜாவாக்கிவிட வேண்டும் என்று நினைத்துவிட்டார். நல்ல நாளில் சுப முஹூர்த்தத்தில் கலியாணமும், வெகு கோலாகலமாக நடந்தேறியது. அன்றைக்கு ராத்திரி மாப்பிள்ளை மண அறையிலே புகுந்து நித்திரை செய்தபோது, லக்ஷ்மி அவன் முன்னே தோன்றி, "நான் போகிறேன்!" என்றுசொல்லி மறைந்தாள்.

வேடன் திடுக்கிட்டு எழுந்தான். அங்கே இருந்த நிலைக்கண்ணாடியிலே தன் ரூபத்தைப் பார்த்தான். ஐயோ! என்ன பயங்கரமான ரூபம். இனி இங்கே இருந்தால் உயிருக்கு மோசம் வரும் என்று நினைத்தான். உடனே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மோகனாவின் நகைகளையெல்லாம் கழற்றி மூட்டையாகக் கட்டிக்கொண்டு காட்டைப் பார்த்து ஓடினான்.

இதற்குள்ளாக அரண்மனையில் மகாராஜாவும் யாவரும் விழித்துக்கொண்டார்கள். மோகனவல்லி அழத்தொடங்கினாள். உடனே பல வீரர்கள் குதிரைகளில் ஏறிக்கொண்டு வேடனைப் பிடிக்கக் காட்டுக்கு ஓடிப்போனார்கள். அரசனும் சேனைத் தலைவர்களும் கூடவே சென்றார்கள்.

வேடனுக்கு முன்னே சென்ற லக்ஷ்மியை ஸரஸ்வதி வழியிலே சந்தித்தாள். "இப்படித்தானா ஒரு மனிதனைத் திண்டாட வைப்பது? இது உனக்கு அழகா?" என்று கேட்டாள். "இதுதான் என் வழக்கம் என் கருணைக்கு ஆளானவனை என்றைக்காவது மோசந்தான் செய்வேன்; உன்னாலே அவனைக் காப்பாற்ற முடியுமானால் உன் திறமையைக் காட்டு; பார்க்கலாம்" என்றாள்.

உடனே ஸரஸ்வதி அந்த வேடன் நாவிலே புகுந்துகொண்டாள். வீரர்கள் கிட்டவந்தபோது, அவன் புதிய அழகோடு விளங்கினான். மலர்ந்த முகத்தோடு, "ஏன் என்னைத் தொடர்ந்து வந்தீர்கள்? நானாகவே வந்திருப்பேனே," என்றான் மனோஹரன்.

அரசன், "ஏன், அப்பா, இப்படி நகையைத் திருடிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு அவன் "இது எங்கள் குலாசாரம். கலியாண தினத்திலே முதல்நாள் இரவில் மணப்பெண்ணின் நகையைத் திருடிக் காடு மட்டும் ஓடிக் காலையிலே திரும்பி வரும் வழக்கம் எங்கள் வேடுவர் குலத்தாருக்கு உரியது" என்றான்.

அரசன் வெகு ஸந்தோஷமாக மனோஹரனை நகரத்திற்கு அழைத்துக் கொண்டு போனான். அவனுக்கு முடி சூட்டினான். மனோஹரன் தேசமெங்கும் குடிகளினிடையே கல்விச் செல்வம் ஓங்கி வளர்வதற்காக பெரிய பெரிய பள்ளிக்கூடங்களையும்கலாசாலைகளையும் ஸ்தாபித்தான். எல்லாரும் அவனை அறிவில் சிறந்த அரசன் என்று கொண்டாடினார்கள்.

லக்ஷ்மி வெட்கத்தோடு திரும்பவும் கொலுப் பொம்மைக்குள்ளே வந்து புகுந்துகொண்டாள். ஸரஸ்வதியும் திரும்பி வந்து கொலுப் பொம்மைக்குள்ளே புகுந்தாள். நளினி திடுக்கிட்டு எழுந்தாள். லக்ஷ்மிப் பொம்மையின் மேலிருந்த நகைகளை எல்லாம் கழற்றினாள். எல்லாவற்றையும் ஸரஸ்வதிப் பொம்மைக்குப் பூட்டினாள். அன்று முதல், அவள் ஸரஸ்வதியையே கொண்டாடத் தொடங்கிவிட்டாள்.

“கல்வி” அன்றும் இன்றும்

[டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி]

[சரஸ்வதி பூஜா மலரில் கல்வியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி சமர்ப்பிப்பது சரியே என்ற எண்ணத்துடன் என் உணர்ச்சியில் உண்டான சில எண்ணங்களை தகுந்த மேற்கோள்களுடன் தெரிவித்திருக்கிறேன்.]

“இருள் அகற்றும் கைவிளக்கே
கற்ற அறிவுடைமை”

என்று ஒரு புலவர் பாடியிருக்கிறார். கற்றல் மாத்திரம் மன இருளைப் போக்காது என்பதனால் கற்றதனால் அடையும் பயனாகிய அறிவு வேண்டும் என்று கருதியே ‘கற்ற அறிவுடமை’தான் ‘இருள் அகற்றும் கைவிளக்கு’ என்று உறுதியுடன் நமக்கு உணர்த்தி இருக்கிறார். கல்வியின் பயன் உண்மை அறிவு. அதனை இயல்பாகவுடைய கடவுளை ஒருவன் வணங்காது இருப்பானேல், அவன் கற்ற கல்வி அவனுக்கே யாதொரு பயனும் இலது என்பதாக குறள் ஆசிரியர் எவ்வளவோ காலத்துக்கு முன்னதாக நமக்கு போதித்திருக்கிறார்.

“கற்றதனால் ஆயபயன் என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்?”

இன்பத்தைத் தேடுவதே மக்கள் நோக்கம். நிலைத்த இன்பம் கடவுளின் திருவடிகளைப் பற்றியவர்கள் தான் அடைய முடியும் என்பது அவர் உபதேசம்.

கம்பர் கல்வியின் பயனை கோசலையாகிய ஞானபூமியில் மக்கள் எவ்விதமாக அனுபவித்தார்கள் என்பதை நமக்கு எப்படி விளக்கிக்காட்டி இருக்கிறார் என்று பார்ப்போம்.

“எகம் முதற்கல்வி முளைத்
தெழுந்து, எண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண்பணை போக்கி,
அரும் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு
அரும்பித் தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று
பழுத்தது போலும் அன்றே.”

கல்வியை ஒரு பெரிய கற்பக விருக்ஷமாகக்கொண்டு, எண்ணிறந்த கேள்விகளை அதன் கிளைகளாகவும், இலைகளை தவமாகவும், மொட்டுக்களை அன்பாகவும் தர்மத்தை மலராகவும், கனியை போகமாகவும் மக்கள் பலன்களை அடைய வேண்டும், கோசலை நாட்டு மக்களைப் போல, என்று வெகு அழகாக, எக்காலத்தும் அழியாத உண்மையை நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

திருவள்ளுவரும் கம்பரும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே இறைவன் திருவடிகளை அடைந்து விட்டார்கள். நாம் நாகரீக வாழ்க்கையில் அதிகமாக முன்னேறி விட்டதாக பெருமை அடித்துக் கொண்டுதான் இதுவரை இருக்கிறோம். அவர்கள் நம்முடைய வாழ்க்கையையும்,கல்வியினால்அடைந்த சார்த்தகங்களையும் இப்பொழுது பார்க்க முடியுமானால் என்ன சொல்வார்கள்? எப்படி பரிதபிப்பார்கள்? தற்போதய உலக நிலையைக் கண்டு கண்ணீர் விடமாட்டார்களா? நல்ல வேளையாக அவர்கள் மறுபிறவி இன்றி கடவுளின் திருவருளில், திரு ஒளியில், கலந்துவிட்டார்கள்.

கம்பர் கண்ட காட்சியில் கல்லாது நிற்பார் இல்லை, ஆகையால் இல்லாரும் இல்லை. கற்றவர் ஆண் மக்கள் மாத்திரம் அல்ல. “பெரும் தடம்கண் பிறைநுதலார்க்கெலாம், பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தது”. ‘பொருந்து’ என்ற அடைமொழியை ஊன்றிப் பார்க்குமிடத்து, பொருந்தாத செல்வமும் உண்டு, பொருந்தாத கல்வியும் உண்டு என்பதை குறிப்பால் அறியலாம். லோபியின் செல்வத்தை பொருந்திய செல்வ

மாக சொல்ல முடியுமா? ஒழுக்கத்தை செம்மைப்படுத்தாத கல்வி பொருந்தாத கல்விதான். தெய்வ பக்தி, தேசபக்தி அன்பு, தியாகம் முதலான உணர்ச்சிகளை உண்டாக்காத கல்வி கல்வி ஆகாது; அது பயனற்ற பொருந்தாத கல்வி.

போட்டியையும், பொறாமையையும், பேராசையையும், வேற்றுமையையும், பஞ்சத்தையும், பிணியையும், மனிதன் மனிதனைக் கொன்று குவித்து மார் தட்டிக் கொள்ளும் ராக்ஷசப் போர் மனப்பான்மையுமே உலகம் கல்வியால் இப்பொழுது அடைந்திருக்கும் பலன்கள் என்றால், கம்பருடைய இருதயம் எவ்வாறு துடிக்கும்? நம்மால் இப்பொழுது நடைபெறும் உலக நிகழ்ச்சிகளை அவருக்கு தெரிவிக்க முடியாது. தெரிந்தால் அவர் மனம் அவிந்து புண்ணாகும், ஆத்மா சஞ்சலப்படும், அதன் அமைதி குலையும்.

தேவலோகத்தில் திருவள்ளுவரும் கம்பரும் மற்ற மஹாத்மாக்களோடு தேவாமிருதத்தை உண்டு இன்புற்றிருக்கட்டும். அவர்கள், வாழையடி வாழையாக வரும் உலக மக்கள் எல்லோரும் அவர்களைக் கேட்காமலே அவர்கள் சமூக நற்கதிக்காகவும், உலக சீர்திருத்த மேன்மைகொண்ட நாகரீகத்திற்காகவும், வாரி வழங்கியுள்ள அமுதை பூவுலகத்திலேயே உண்டு களிக்காமல், இந்த பிற்போக்கான நிலையில் ஜன சமூகம் இருக்கிறதே என்பதை யோசிக்கும்போது, இந்த உலகத்திற்கும் ஒரு நல்ல காலம் வருமோ என்று ஐயுற வேண்டி இருக்கிறது.

எல்லாரும் நல்ல முறையில் கல்வி கற்கவும், உயர்ந்த பலன்களை அடையும் நோக்கத்துடனும் கல்வித் திட்டங்கள் அமைத்து ஒவ்வொரு நாட்டினரும் கல்வி யறிவைப் பரவச் செய்யவும் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் முதலானவற்றை நிறுவினால் ஒழிய, மக்கள் மனத்தைப் பண்படுத்த முடியாது. மக்கள் மனத்தின் மாசை அகற்றி அதன் மேன்மையை ஒளி பெறச் செய்யக் கூடிய கருவி நேர் முறைக் கல்வியே. மனித வர்க்கத்திற்கு உய்வு கல்வியினால் தான் ஏற்படும்.

ஒரு தேசத்தின் முன்னேற்றத்தை அளவிட ஐந்து விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். இந்தக் குறளை நன்றாக கவ

தொல்காப்பியம்

வித்துவான்-சி. கணேசையர்

உரை விளக்க குறிப்புகளுடன்

யாழ்ப்பாண வெளியீடு

எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியருரை	ரூ.	5	0	0
தபாற் செலவு	,,	0	14	0
சொல்லதிகாரம் - சேனாவரையருரை	,,	6	0	0
தபாற் செலவு	,,	0	14	0
பொருளதிகாரம் - பேராசிரியருரை	,,	9	0	0
தபாற் செலவு	,,	1	4	0

தனலக்குமி புத்தகசாலை

சுன்னாகம் : : இலங்கை

வித்துப் பார்க்கவேண்டும். இவ்வைந்து குண விசேஷங்கள் பூரணமாக தேசத்திற்கு ஆபரணங்களாக ஜொலிக்க வேண்டும். இந்த ஆபரணங்களை முறைப்படுத்தி இருப்பதிலும் உண்மை காணலாம்.

“ பிணி யின்மை, செல்வம், விளைவு, இன்பம்,
ஏமம், அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்து.”

நோய்கள் இல்லாமல் இருக்கவேண்டும்; பொருள்வளம் பெருக வேண்டும்; விளைவு வேண்டியதற்கு மிகுதியாகவே காணவேண்டும்; சகல சுகபோகங்களும் நல்ல முறையில் அனுபவிக்க எல்லா வசதிகளும் பெறவேண்டும்; தற்காப்புக்கு வேண்டிய படை அரண் முதலானவைகள் அமைந்து இருக்கவேண்டும். இவைகளை தெரிந்துகொண்டு தான் எந்த நாடு எந்த ஸ்தானத்தில் இருக்கிறது என்பதை ‘உலகத்தில் உள்ள சகல நாடுகளின் பட்டி’யில் குறிப்பிடலாம்.

நமது தேசத்தைப் பார்ப்போம். பாரததேவியின் உடலில் திருவள்ளுவர் கூறிய ஐந்து அணிகளில் ஒன்றுவது இருக்கிறதா? நீங்களே பாருங்கள். நமது தேசம் இந்த ஆராய்ச்சியில் எந்த இடத்தில் அமரும் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் நிர்ணயிக்க முடியும். தற்போதைய, தாழ்வடைந்த, குறியில்லாது நெறிதவறிய, வறுமைக்கும் பஞ்சத்திற்கும் உட்பட்டு வருந்தும் வாழ்க்கைக்கு காரணம் என்ன? குறிக்கோள் இல்லாத கல்வி, ஆண்மை தராத கல்வி, அடிமை மோகம் பரப்பும் கல்வி, வேற்றுமை மனப்பான்மையை அதிகரிக்கும் கல்வி, போட்டிப் பிசாசு, சமயப் பூசல், பொறாமைப் பூதம் முதலானவைகளை அதிகரிக்கும் கல்வி; சுயநல மனப்பான்மையைக் கிளறிவிட்டு, போரை விளைவிக்கும் கல்வி; இயற்கை அறிவு, இயற்கை உணர்ச்சி இவைகூட எழாமல் அடித்துவிடும் கல்வி, தேசபக்தியையும் தெய்வபக்தியையும் துடைத்து விடும் கல்வி, உண்டா இல்லையா? நீங்களே யோசியுங்கள்.

நமது நாட்டில் கல்வி பரவிக்கொண்டு தான் இருக்கிறது என்பது அரசாங்க வருஷாந்தர அறிவிப்பினல் தெரிய வருகிறது. ரொம்ப நிதானமாகத் தான் இருந்தாலும் அதனல் பரவாயில்லை. வருத்தம் எப்பொழுது உண்டாகிறது என்ருல் கல்வியின் பலாபலன்களை பார்வை யிடும்போது தான்.

ஸ்ரீ. எல். ஆர். விசுவநாதன் இன்றைய பாரதநாட்டை ஆகஸ்டு மாத ‘பாரத மணி’யில் வெகு நன்ருக வர்ணித்துப் பாட்டாக இயற்றி இருப்பதை எல்லாரும் வாசிக்கவேண்டும். அதில் ஒன்று கீழ்வருமாறு :—

“ உழைப்பிலே வெறுப்பு, உண்மையில்
கைப்பு, உண்டு உறங்க இனிப்பு,
பிழைக்க வகைஇன்றிப், பிறரை அண்டிச்
சோம்பித் திரிவதிலே மதிப்பு ”

கட்டுரை நீண்டுவிட்டதால், பாரதியாரின் பாடல் இவ்விடத்தில் பொருந்தும் என்பதை உத்தேசித்து, ஒன்றை கீழே கண்டிருக்கிறேன். கவைக்கு உதவாத தற்காலக் கல்வியைப்பற்றி அவர் கொண்ட அபிப்பிராயம் முற்றிலும் உண்மை. ஏளனமாக பாடியதல்ல.

“செலவு தந்தைக்கு ஓர்ஆயிரம் சென்றது,
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன;
நலம் ஓர்எள் துணையும் கண்டிலேன்; இதை
நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன் ”

இவர் அபிப்பிராயம் நிஜமாக இல்லாமல் இருந்தால், இவ்வளவு அழுத்தம் திருத்தமாக ஒரு எள்ளளவும் தற்காலத்துக் கல்வி முறையால் குணத்தை நான் காணவில்லையே! நான் சொல்வது சத்தியம், வேண்டுமென்ருல் எந்த கோயிலில் வேண்டுமானலும் சரி, கடவுள் சன்னிதிக்கு முன்பாக சத்தியம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லத் துணிவாரா? மகாகவி பாரதியாரின் நினைவுவாரமும் முடிந்து போய்விட்டது. இந்த வருஷமும், கல்வி முறையில் சீர்திருத்தங்கள் அமையப் பெறவில்லையே! அவர் முறையிட்டதை நாம் கேட்டும் ஏன் வாளா இருக்கிறோம்?

க லை ம க ள்

அல்லது

கல்வியின் கதா சங்கிரகம்

[பி. ஸ்ரீ.]

மனிதன் நிலத்தை உழுது பண்படுத்தக் கற்றுக்கொண்டபோதே, உள்ளத்தையும் பண்படுத்தத் தொடங்கிவிட்டான்.

விவசாய முயற்சி ஆரம்பமாவதற்கு முன், மனிதன் மிருகங்களை வேட்டையாடி வயிறுவளர்த்து வந்தான். மிருக வேட்டை மனித வேட்டையாக மாறி விடுவதும் உண்டு: ஆம்; மிருகமே வேடனை வேட்டையாடித் தீர்த்துவிடுவதும் உண்டு. அத்தகைய மிருகப் பிராயமான வாழ்க்கையிலிருந்தவன் நாளடைவில் சில மிருகங்களைப் பழக்கி உபயோகித்துக் கொண்டான். ஆடு மாடுகளை மேய்க்கக் கற்றுக்கொண்டான்; ஆடுகளை அழித்துவந்த நாய்களை ஆட்டு மந்தையைக் காக்கும்படி பழக்கிக் கொண்டான். மாடு கட்டி உழுது விதைக்கத் தெரிந்துகொண்டதும், கலைமகளின் அருள் என்ற படிக்கட்டிலே ஒரு முக்கிய கட்டத்தை அடைந்து விட்டான்!

* * * *

சுமார் 20,000 வருஷங்களுக்குமுன் விவசாய முறைகளை மனிதன் அறிந்ததில்லையென்றும், காட்டுப் பயிராக விளைந்து கிடந்த கோதுமை போன்ற சில தானியங்களை மாவாக்கி உபயோகித்துவந்த பின்புதான் மெள்ளமெள்ள விதைக்கக் கற்றுக்கொண்டானென்றும், எனவே விதைக்கக் கற்றுக்கொள்வதற்கு முன்பே அறுவடை செய்யக் கற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்றும், ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். விதைக்கக் கற்றுக்கொண்ட பின்பு, விதை சரியாக விளைவு தருவதற்கு உழுது நிலத்தைப் பண்படுத்த வேண்டுமென்பதையும் மனிதன் காலக்கிரமத்திலே கற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆகவே, கல்வி விவசாயக் கல்வியாக ஆரம்பித்திருக்க வேண்டும். விவசாயிக்குத்தான் கல்வித் தெய்வம் முதல்முதல் அருள்செய்திருக்கவேண்டும்.

* * * *

நிலத்தை ஒழுங்காக உழுது பண்படுத்தக் கற்றுக்கொள்வதற்கு முன்பே, நிலத்தைத் தோண்டிக் கிழங்கு எடுக்கவும், தினை விதைக்கவும் மனிதன் (முக்கியமாகத் தமிழ்நாட்டிலே) கற்றுக்கொண்டானென்று ஊகிக்கலாம்.

கிழங்குகிள்ளித் தேனெடுத்து
வளம்பாடி நடிப்போம்

என்று மலைக்குறத்தி பாடுவதாகக் "குற்றாலக் குறவஞ்சி"யில் வரும் செய்யுளடியில் ஒரு பழைய உலக சரித்திர உண்மை புதைந்து கிடைக்கிறதென்று கருதலாம். "கிழங்கு கிள்ளுதல்" என்பது "கிழங்கு கல்லுதல்" என்பதன் சிதைவு :

பொருள், "கிழங்கு தோண்டுதல்". மலைமேல் கிழங்கைக் கல்லி வருவேன் என்று குகன் சொல்வதாகக் கம்ப ராமாயணத்திலும் வருகிறது. "மலை கல்லி எலி பிடிக்கிறது" என்றுசாதாரணமாய்த்தமிழ் ஜனங்களும் சொல்லுகிறார்கள் அல்லவா? "தோண்டு" என்ற பொருளில் வரும் "கல்" என்பதுதானே "கல்வி" என்ற சொல்லுக்குப் பகுதியாக அமைந்திருக்கிறது?

நிலத்தைத் தோண்டி உழுது பயிர் செய்வதுபோல், உள்ளத்தையும்

தோண்டித் தோண்டி ஆராய்ந்து பயிர் செய்யும் விவசாயம்தானே உண்மைக் கல்வி ?

விவசாயிகள் ஆற்று நீரை உபயோகித்துக் கொண்டார்கள். ஆற்றில் நீரோட்டமில்லாத காலத்தில் மணலைத் தோண்டிக் கேணியாக்கி அந்த ஊற்று நீரையும் உபயோகித்துக் கொண்டார்கள், — ஆற்று நீரையும் மழை நீரையும் ஏரியாக்கி உபயோகிக்க கற்றுக்கொள்வதற்கு முன்பே.

தொட்டனைத் தூறும்
மணற்கேணி: மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும்
அறிவு

[தொட்டனைத்து - தோண்டிய அளவிற்கு. கற்றனைத்து - கற்ற அளவிற்கு.]

என்ற திருக்குறளைப் பாருங்கள். தோண்டத் தோண்ட மணலில் ஊற்று ஊறுகிறது ; கற்கக் கற்க (அதாவது, உள்ளத்திலே தோண்டத் தோண்ட) அறிவும் ஊற்றாக ஊறிவருகிறது—என்பது பொருள்.

விவசாயத்தை ஒட்டி அறிவுப் பயிரும் வளர்ந்து வந்திருக்கிறது ; விவசாயிகளின் ஊற்றோடு ஊற்றாக ஆராய்ச்சியறிவும் ஒருவாறு ஊறிவந்திருக்கிறது. விவசாய ஆரம்பம் நல்ல நாகரிக ஆரம்பமும்தான். மலைக்காடுகளில் வேடர்களாகத் திரிந்தவர்கள்—இருந்து யோசிக்கவும் அவகாசமில்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்கள்—ஆடுமாடு மேய்த்துப் பயிர்செய்த நிலையில் காடுகெடுத்து நாடாக்கி நாகரிக வாழ்வு வாழ ஆரம்பித்தார்கள். இந்த நாகரிகம் நதிக்கரை - நாகரிகமாக விசேஷ வளர்ச்சி அடைந்தது, நமது நாட்டிலே. கலைமகளின் அருமைத் திருப்பெயராகிய ஸரஸ்வதி என்பதே ஆதியில் ஒரு நதியின் பெயர்தான்.

* * * *

நதிக்கரை-நாகரிகம் கடற்கரை சென்றதும் அன்னிய நாட்டினர்களின் தொடர்பு ஏற்பட்டது. இதனால் அறிவு விரிந்தது ; நாகரிகம் வளர்ந்தது. எனினும் பழைய வேடர்-சுபாவம் போகவில்லை. மனிதன் மனிதனை வேட்டையாட ஆரம்பித்தான். மனிதனை மனிதன் அடிமையாக்க முயன்றான். போர்களும் பூசல்களும் மலிந்தன. நாகரிகத்தை அநாகரிகம் விழுங்க முயன்றது. இந்த நிலையில், கவிகள் தோன்றி நாகரிகத்தைப் பாதுகாக்க முயன்றார்கள். இந்தக் கவிகளில், சிலர் ஞானிகளாகவும் தீர்க்கதரிசி களாகவும் விளங்கி நல்வழி காட்டினார்கள்.

உதாரணமாக, நமது நாட்டிலும் வேத மந்திரங்கள் பாடிய முனிவர்களைச் சுட்டிக் காட்டலாம். இவர்களை இந்தியாவின் ஆதி கவிகள் என்றும், ஆதி ஞானிகள் என்றும் சொல்லலாம். இவர்களில் சிலர் தீர்க்கதரிசிகளாகவும் காணப்பட்டார்கள். உலகத்தின் மற்றப் பகுதிகளிலும், கவிகளும் கருணையுள்ள மகான்களும் சில கால விசேஷங்களிலே தோன்றினார்கள். இவர்களாலேதான் அறிவு நல்லறிவாயிற்று ; நாகரிகமும் உண்மையான நாகரிகமாயிற்று.

வால்மீகி, ஹோமர் போன்ற பழைய மஹா கவிகளும், கன்பியூஸியஸ், புத்தர் போன்ற மஹா ஞானிகளும், யூத ஜாதியில் தோன்றிய தீர்க்க தரிசிகளும் கலைமகளின் அருள்பெற்றுப் பழைய நாகரிகத்தை நல்ல முறையில் வளரச் செய்தார்கள் என்று சொல்லலாம்.

* * * *

மேலே சொன்ன குறிப்புக்களையெல்லாம் சிந்தித்துப் பார்த்த பின், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் "சரஸ்வதி துதி"யைப் படித்துப் பாருங்கள் :

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்,
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்,
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்,
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன் பாதம்
அடைக்கலமே.

[புலங்கள் - வயல்கள்,]

சரஸ்வதி எங்கே உத்ஸாகமாக விளங்குகிறாள் என்ற கேள்விக்குப் பதில்

இங்கே கிடைக்கிறது. நல்ல நிலங்களை நாடி உழுது பண்படுத்தும் கையிலே இருக்கிறாளாம் கலைமகள். அந்தக் கை தானே ஆதி நாகரிகத்தை—ஆதியான கல்வியை—உருவாக்கிய கை? நிலத்தைப் பண்படுத்திய கை, உள்ளத்தையும் கலைமகள் வந்து வசிக்கும்படி பண்படுத்தியதாம்.

மனிதன் உணவினுல் மட்டும் உய்ந்து போக முடியுமா? உள்ளத்திற்கு உணவை, ஹிருதயத்திற்கு உணவைக் கவிகள் தேடிக்கொடுத்தார்கள். எனவே, கவிவாணர் நாவிலும் கலைமகள் உவந்து நடம்புரிவதாகக் கூறுகிறுர் கவிமணி. வேதம் பாடிய கவிகளும், வால்மீகி, ஹோமர், காளிதாஸர், கம்பர், ஷேக்ஸ்பியர் போன்ற மஹா கவிகளும் உலகத்திற்குச் செய்திருக்கும் உபகாரத்தை என்னென்பது? நாகரிக வளர்ச்சியில், அறிவு - வளர்ச்சியில், இவர்களுடைய ஸ்தானம் எவ்வளவு முக்கியமானது! இதனுல்தான் உழவர் கரங்களில் நடம்புரிந்த கலைமகள் கவிஞர் நாவிலும் நடம்புரிகின்றுள்!

இதே கலைமகள் கருணைக்கடலான புத்தர், கிறிஸ்து, நம்மாழ்வார், மகாத்மா காந்தி முதலான மஹா புருஷர்களின் நெஞ்சிலும் நடம்புரிகின்றுள் என்பதைத் தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, "செழுங்கருணை—ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம் ஆடிக் களிக்கும் மயிலே!" என்ற அழகான செய்யுட்பகுதியில் குறிப்பிடுகிறுர்.

* * * *

கல்வியின் உலக சரித்திரத்திலே உழவர்களுக்கும், கவிவாணர்களுக்கும், 'பிறர் துன்பம் நெஞ்சிலே படுவதால் நாட்டுக்காகத் தாம் மன்றுடும்' மகாத்மாக்களுக்கும் விசேஷமான ஸ்தானம் உண்டு.

பிரஸிடெண்ட்

ஆம்லா கூந்தல் தைலம்

EASTERN

எங்கும் கிடைக்குமிடம்:

நார்ஸிஸஸ் ரோஸ் ஜாஸ்மின் லிலாக் முதலிய வாஸனை எஸ்ஸென்ஸுகள் விற்பனைக்குத் தயார்

விலை விபரங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்

RATHOD TRADING Co.,

Manufacturing Chemists

21, Tholasingam Street, Sowcarpet. Madras

போகிற போக்கில்

இயற்கையில், அதுவும் என் இளம் பிராயத்தில், என்னை ஒரு அவசரக் குடுக்கையென்று என் தாயார் அடிக்கடி என்னிடம் சொல்லுவது வழக்கம். "பொறுத்தார் பூமி யாள்வார்" என்ற பழமொழியையும் கையோடு சொல்லுவாள். அதற்குப் பதிலாக, விறுவிறுப்புடன், "பொறுத்துப் பொறுத்துத் தான் நாம் இந்தக் கதிக்கு வந்துவிட்டோம். செயலற்ற அடிமை நாட்டிற்கு 'பொறுத்தார் பூமி யாள்வார்' என்பது சரியான அடிமைக் கொடிதான். ஆயிரம் வருஷ காலமாக நமது கூரையின் மேல் இந்தக் கொடிதான் பறந்துகொண்டிருக்கிறது. உண்மையில் "பொறுத்தார் பூமியைப் பிறர் ஆள்வார்" இது தான் சரியான பழமொழி என்று படபடப்பாய்ச் சொல்லிவிட்டு, கெட்டுப் போன பென்ஸில் எங்கேயென்று தேடுவதில் கையி லிருக்கும் பேப்பரை எங்கே யாவது வைத்து விட்டு, மறுபடியும் அதைத் தேடுவேன். இவைகளை யெல்லாம் என் தாயார் பொறுமையுடன் தேடி யெடுத்துக் கொடுத்து, என் அரசியல் கொள்கைகளைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல், மறுபடியும் "பொறுத்தார் பூமி யாள்வார்" என்ற பழமொழியை வற்புறுத்துவார். நான் முணு முணுத்துக்கொண்டே, 'பொறுத்தார் பூமியைப் பிறர் ஆள்வார்' என்று மறுபடியும் சொல்லிக்கொண்டே வாசலில் போவேன். இதுவெல்லாம் என் இளம் பிராயத்தில்; சுயராஜ்ய இயக்கம் காந்தீயத்தால் தூண்டப்பட்டுத் தேசத்தில் ஒரு உயர்தர கிளர்ச்சியையும் பரபரப்பையும் உண்டுபண்ணிய காலம். சுமார் இருபத்தைந்து வருஷத்திற்குமுன்; பாகிஸ்தானம் முளைக்கும் முன். அப்பொழுது தான் முஸல்மான்களுக்குத் தனித் தொகுதி என்கிற பாகிஸ்தான் விரையை லார்ட் மிண்டோ தன் விரலாலேயே குழி கல்லி, பாரத பூமியின் அரசியல் கோபுரத்தில் புதைத்தார் – கோபுரத்தின் கல்லிடுக்கில் முளைக்கும் ஆலம் வித்துபோல்.

* * *

இயற்கையில் எனக்கு அமைந்திருந்த அவசரக் குடுக்கைத்தனம் ஆறு வருஷம் 'பாரதமணி' மூலம் செய்த உழைப்பால் மாறிவிட்டது. என் தாயின் "பொறுத்தார் பூமி யாள்வார்" என்ற தேன் மொழியின் அருமையை நான் இப்பொழுது நன்கு உணர்கிறேன். இது நமது ஹிந்து நாகரிகத்திற்கே அடிப்படையான கொள்கை. அன்னிய பதார்த்தங்களை ஜீர்ணம் செய்து நமது நாகரிகத்தோடு ஒட்டிச் சேரும்படியாகச் செய்யும் சக்தி இந்தப் பொறுமைக்குத் தான் உண்டு. 'பாரதமணி' யின் கொள்கையும் இந்த ஆறு வருஷமாக இதுவே.

* * *

பழமொழிப்படி பூமியாள்வதற்கு—நம்முடைய சொந்த பூமியை நாம் ஆள்வதற்குப் பிரதம மந்திரி சர்ச்சில் நமக்கு

இடங்கொடுக்கா விட்டாலும்—30 லட்சம் வீரர்களையும் ஏராளமான பொருள் உதவியையும், நமக்குச் சேர வேண்டிய நாணயமே பத்தாயிரம் லட்சம் ஸ்டர்லிங் கடனாக, லண்டனில் தங்கி நிற்கிறது. ஆனால் இதைக் கடன்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் திருப்பிக் கொடுக்கலாமாம்—இந்த வசதியில் நூறில் ஒரு பாகமாவது ஆசிரியர்களுக்குக்கிடைத்தால்,பத்திரிகையை எவ்வளவு நன்றாய் நடத்தலாம்—பழமொழிப்படி, சொந்த பூமி ஆள்வதற்கு மேற்சொன்ன காரணங்களால் நமக்கு இடமில்லாமல் போனாலும், பொறுத்துத் தான் பார்ப்போம், அதில் என்ன பயன் ஏற்படுகிறது என்று நம்பி, ‘பாரத மணி’யைப் பல கஷ்டங்களிலும் சலிக்காமல் ஆறு வருஷம் நடத்திவந்தேன். இந்த மாதம் ‘பாரத மணி’க்கு ஏழாவது வருஷப் பிறப்பு. உண்மைதான், பொறுத்தார் பூமியாள்வார். இந்த மனோ ராஜ்யத்தில் தொண்டு செய்வதாலுண்டாகும் உள்ளப் பெருக்கமும் ஆனந்தமும், ஓர் பரவசமுள்ள சாந்தமும், செயல்களைப் பொறுமையுடன் செய்வோருக்குத் தான் தெரியும் என்பதற்குப் ‘பாரத மணி’யே சாட்சி.

* * *

எதிர்பாராத, சாமான்யமாய்க் கிடைக்கக் கூடாத பாக்யமொன்று ‘பாரத மணி’க்கு இந்த ஏழாவது பிறந்த ஆண்டு தினம், நவராத்திரி கொண்டாட்டத்தில் கிடைத்து விட்டது. காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களின் ஸ்ரீமுகத்தையும்

தீபாவளி தினுசுகள்

●

பல்லாயிர ரூபாய் பெறுமான புதுமோஸ்தர் ஜவுளிகள்
தீபாவளிக்கென்று பிரத்யேகமாக
வரவழைக்கப்பட் டிருக்கின்றன.

பட்டணம் வரும்பொழுது
கட்டாயம் வந்து பாருங்கள்

ஜெனரல் சுதேசிஸ் லிமிடெட்

எஸ்பிளநேட் & வேப்பேரி

ஆசியையும் 'பாரதமணி' பெற்று விட்டது. இனிமேல் தன் நடையிலேயே ஓட்டம் ஓடுவதற்கு வேண்டிய சக்தியை 'பாரதமணி' பெறும் என்பதில் ஐயமில்லை. அதற்கு இந்த சரஸ்வதி பூஜா மலரே சாட்சி.

இலக்கியப் பெருக்கும், கல்விப் பெருக்கும், வாழ்வை ஊட்டி வளர்க்கும் கருத்துகளின் பெருக்கும் இல்லாமல், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் உண்மையான பெருக்கு எப்படி உண்டாகும்? சோனை மழையில்லாமல் ஆற்றில் வெள்ளமேது? குடகு நாட்டில் மழையில்லாது காவிரி வெள்ளமேது? மறுமலர்ச்சிக்கு முக்கியத் தொண்டாகிய இந்த சேவையையே ஈசன் அருள் பெற்றுப் 'பாரத மணி' எக்காலமும் செய்ய வேண்டுமென்பதுதான் தமிழ் நாட்டைக் காக்கும் ஏழுமலையானுக்கு நான் செய்யும் தினசரி வேண்டுகோள்.

—மணி

டெலிபோன் : தலைமை ஆபீஸ் 2429
தொழிற்சாலை 3439

கே. சுவாமிநாதன் & கம்பெனி

2, எர்ரபாலு செட்டித் தெரு, ஜி. டி. சென்னை

தமிழ் நாட்டின் சிறந்த ரைஸ் மில்ஸ்டோர்



மாவு மில்,
நெல் மிஷின்,
காபி மில்,
சீக்காய் மிஷின்,
தண்ணீர் பம்புகள்
முதலியவற்றிற்கும்
ஸ்பேர்
சாமான்களுக்கும்
நம்பிக்கையான
இடம்!!

சகலவிதமான வார்ப்பட
என்ஜின் ரிப்பேர் வேலைகளுக்கும் தகுதியான
தொழிற்சாலை :

சுவாமிநாதன் பவுண்டரி

7, வால்டாக்ஸ் ரோட்

பிராஞ்சு : பென்னிங்டன் ரோட், தஞ்சாவூர்

ஸோல் புரொப்ரைட்டர் : **K. சுவாமிநாதன்**

வ லை வீ ச் சு

1

சாமானிய மனிதர்களும் செய்யக்கூடிய சாச்வத தர்மங்கள்

1. சொரிந்து கொள்வதற்குக் கையில்லாத பசுக்கள் கூடுமிடத்து, அகலமான கருங்கற்களை நாட்டுதல்.

2. ஆங்காங்கு சுமை தாங்கிகளைக் கட்டுதல்.

3. உபயோகப்படுமிடத்து உறை கிணறுவது அமைத்தல்.

4. சவுகரியமான இடங்களில் பால் மரங்களைப் பயிர் செய்து வளர்த்தல். பால் மரங்களாவன :—வனஸ்பதி, ஆல், இச்சு, அத்தி, அரசு முதலியன.

5. நெல்லி மரங்களை ஏராளமாக வைத்துப் பயிர் செய்து, வளர்த்தல்.

6. நமது சக்திக்குத் தகுந்தவாறு ஜீர்ணமான ஒரு சிறு பிள்ளையார் கோயிலையாவது பழுது பார்த்தல்.

7. ஒரு ப்ரம்மசாரிக்காவது (ஒரு வேதத்தையும் வேதாந்தத்தையும், தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனை) உபகரித்து வித்தையைப்பூர்த்திசெய்வித்தல்.

8. மலைகளில் ஸ்வாமி தர்சனார்த்தம் போகும் வழியில் இடைஞ்சலான இடங்களில் நன்றாகச் சில படிகள் வெட்டுதல் அல்லது கட்டுதல்.

9. புண்யாத்மாக்களில் யாரேனும் ஒருவர் சரித்ர ஸங்கிரஹத்தைச் சாச்வதமாகக் கல்லில் வெட்டி வைத்தல். (இதைக் கண்ணால் பார்க்கும் ஆயிரக் கணக்கான பேர்வழிகளில் யாராவது ஒருவனுக்காவது, பாவ வழிகளை விட்டுப் பரோபகாரத்திலும், நல் நெறியிலும் செல்லவேண்டுமென்று எண்ணமுண்டாகலாம்.)

10. பெரியோர்களுடைய புஸ்தகங்களுக்குள் நம்முடைய மனதிற்குச் சாந்தத்தைக் கொடுக்க உதவியாக அனுபவத்திலுள்ளஒருபுஸ்தகத்தையாவதுஅச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்தல்.

11. படித்தவர்களாயும், சாந்தர்களாயும், ஏழைகளாயும் அனுஷ்டானமுள்ளவர்களாயும், குடும்பிகளாயும் இருப்பவர்களுடைய வீடு ஜீர்ணமாயிருந்தால், அதைப் பழுது பார்த்துக் கொடுத்தல் ; முடிந்தால் அவ்வீட்டை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி, அவர்களுடைய வம்சஸ்தர்கள் விற்கப் பாத்யமில்லாமல் குடியிருந்து வர மாத்திரம் ஸெட்டில்மெண்டுப் பத்திரம் எழுதி வைத்தல்.

12. தரிசான கோயில் பூமிகளைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல்.

—காமகோடி

2

காலை பிராம்ம முகூர்த்தத்தில் நாராயண வனத்திலிருந்து புறப்பட்டுச் சுமார் $4\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள கைலாசகோனைக்கு வரப்பட்டது. அங்கிருக்கும் வனத்தின் வனப்பைச் சொல்லிமுடியாது. கைலாசம் என்ற பெயர் அதற்குச் சரியானதுதான். அங்கே குதிரைக் குளம்பைப்போல் ஒன்று சேர்ந்து நெருங்கிய பர்வதத்தின் மூலையில் இடைவிடாது நெருங்கிய பெரிய மரங்களின் நிழலும், பெரிய மரங்களும், கொடிகளும், வேர்களும், அடர்ந்திருக்க ஆகாயத்தில் வெகு தூரத்தினின்று ஒரு தீர்த்த தாரை விழுந்துகொண் டிருக்கிறது. அத்தீர்த்த தாரை சென்று அணுகமுடியாதபடி அவ்வளவு அதிகமாகவுமில்லை; ஒரே மொத்தமாகவுமில்லை. விழும்பொழுதே எதிலேயோ பட்டுச் சிதறிப் பெரும் மழை பெய்வதுபோலேயே காற்றில் அங்குமிங்கும் அசைந்து தூவுகின்றது. விழும் இடத்திலும் கீழேயும் பள்ளமே யில்லை. குழந்தையும் பயமும் ஆபத்துமின்றி ஸ்நானம் செய்யலாம். எக்காலத்தும் நீர் வீழ்ச்சி குன்றுவதில்லை. அரை பர்லாங்கு வரை மோட்டாரில்கூட போகலாம். அவ்வளவு மார்க்கச் சவுகரியம். பக்கத்துக் குகைகளில் மகாலிங்கங்களும் அம்பிகையும் வீரபத்திரரும் வீற்றிருக்கின்றார்கள். இதுபோல் இம்மலையின் பக்கத்திலேயே இன்னும் இரண்டு இடங்

களில் போகக் கஷ்டமான வழியில் வனத்தோடும் நிழலோடும் நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன. இங்குப் பிராதஸ்நானம் செய்து சிவலிங்க பூஜைகளையும் செய்துகொண்டு இங்கிருந்து நாகலாபுரம் போகும் மார்க்கத்தில் சுமார் 8 மைல் தூரம் கிழக்கேயுள்ள பெரிய மகோன்னத பர்வதமான ஸ்ரீராமகிரியை அடைந்தார்கள். இம்மலை அடிவாரத்தில் ஒரு தீர்த்தம் உத்பவிக்கிறது. அது பக்கலில் விழுந்து ஒரு சரஸ் ஆகிறது. அது மற்றொரு பக்கலில் விழுந்து இன்றொரு பெரிய சரஸ் ஆகிறது. இங்கிருந்தும் வெளியில் பிரவேசித்துப் பாய்கிறது. சரஸின் கரையில் ஒரு பைரவ ஆலயம் இருக்கிறது. அதில் அம்பாள் பத்ரகாளியும் வீற்றிருக்கிறாள். இது தொடர்ந்தே மரகதவல்லி ஸமேத வாலீசுவருடைய தேவாலயமும் இருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் வெகு விசாலமான கற்கோட்டைகள் அமைந்திருக்கின்றன. சுமார் 4, 5 வருஷங்களுக்குள் இரண்டு சிறு சத்திரங்கள் கட்டியிருக்கிறார்கள். சமீபத்தில் ஜனவாசமே கிடையாது. ஆலயம் வெகு ஜீரணம். மண்டபத்தில் மேற்புறங்களெல்லாம் புல் முளைத்திருப்பதனாலேயோ அல்லது கல்லின் கனத்தினாலேயோ மலை சமீபித்திருந்தும் வைகாசி மாதமாயிருந்தும் கல் மண்டபமாயிருந்தும் உஷ்ணமே காட்டாமல் வெகு சீதளமாயிருக்கிறது. மலையின் உச்சியேற 5 மணி பிடிக்கும். அங்கு ஒரு தடாகமும் ஜர்ணாலயமும் இருக்கின்றன. முதலில் உள்ள சிறு குன்றின்மேல் முருகனுடைய ஆலயம் ஒன்று ஜீரணமாயிருக்கின்றது. ஆஞ்சனேயரால் ராமேசுவரத்திற்குக் கொண்டுபோகப்பட்ட லிங்கம் இங்குப் பைரவரால் நிறுத்தப்பட்டது என்பது ஐதிஹ்யம். இங்கிருந்து காளஹஸ்தி 30 மைல் தூரம். இம்மலையின் தென் அடிவாரத்தில் இந்த க்ஷேத்ரமும் வட அடிவாரத்தில் காளஹஸ்தியுமாம். இம்மலையின் நான்கு திக்குக்களிலும் இவ்விதமான தீர்த்த தாரை குமிழியிட்டுக் கொண்டிருக்கின்றதாம். —காமகோடி

ஜப்பானியப் பிரசாரகர்கள் இந்தியாவை நாங்கள் விடுதலை செய்வோம் என்று ஜெபிக்கிறார்கள். தம் சொந்த நாட்டிலேயே ஒருபோதும் சுயேச்சையோடில்லாத மக்கள் இப்படிப்பட்டதோர் வாக்குறுதி கொடுப்பது வெகு அழகுதான். இந்தியா சுயராஜ்யத்தை நாடுகிறது. யுத்தத்திற்குப் பிறகு அதை அடையத்தான் போகிறது. மற்ற ஆசிய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமேயொழியவிடுவிக்கக்கூடாது என்னும் எண்ணம் கொண்டுள்ள இராணுவத் தலைவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள நாட்டவரின் உதவி எதுவும் இந்தியாவுக்குத் தேவை யில்லை.

வெற்றி வழியே விடுதலை

AAA

1019 TM

சென்ற மாத நிகழ்ச்சிகள்

இந்தியா

ஆகஸ்டு

16. உபாத்தியாயர்களின் பஞ்சப்படியை கோரி சர்க்காரிடம் மகாகனம் சாஸ்திரியார் தூது.

இந்தியாவின் விடுதலையை வற்புறுத்தி ஸ்ரீ பிலிப்ஸ் ரூஸ்வெல்டுக்கு அனுப்பிய அந்தரங்க கடிதம் பிரசுரம்.

பம்பாய் மாகாணத்துக்கு 15 வருஷ திட்டம் பிரசுரம்.

17. காந்திஜியின் இடைக்கால சர்க்கார் யோசனையை கிராகரித்து வைசிராய் நடத்திய கடிதப் போக்குவரத்து பிரசுரம்.

20. "டைகர்" வரதாச்சாரியாருக்கு மைசூர் மகாராஜா "சங்கீத சாஸ்திர விசாரதர்" என்ற பட்டத்தை வழங்கினர்.

காந்திஜியின் சமரஸ முயற்சிகளுக்கு பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கக்ஷியின் ஆதரவு.

குஜராத்தில் பெருவெள்ளம்.

21. பாகிஸ்தானை கைவிடுமாறு காந்திஜிக்கு மகாகனம் சாஸ்திரி கோரிக்கை.

22. பர்மாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கவேண்டுமென இந்திய அகதிகள் சங்க கோரிக்கை.

23. பாபநாசம் மின்சாரத் திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

24. கிலக்கரிமீது வரி விதிக்க இந்தியா சர்க்கார் தீர்மானம்.

25. எஸ்டேட் வரி விதிக்க மத்திய சட்டசபைக்கு அதிகாரமில்லை யென பெடரல் கோர்ட் தீர்ப்பு.

டில்லியில் கவர்னர்களின் மகாநாடு.

அக்டோபர் 24உ யுத்தம் முடிவடையுமென்று ஒரு பௌத்த ஸன்யாஸி ஜோஸ்யம்.

30. செப்டம்பர் 7உ சந்தித்துப் பேசலாமென காந்திஜிக்கு ஸ்ரீ ஜின்னாவின் தந்தி.

செப்டம்பர்

7உ சென்னை இந்திய வைத்திய பள்ளிக்கூடத்தில் ஸ்டிரைக்.

காந்தி - ஜின்னா சம்பாஷணை ஆரம்பம்.

10. வட பீஹாரில் காலராக் கொள்ளை நோய் மும்முரம்.

11. இந்திய வைத்திய பள்ளிக்கூடத்தை சென்னை சர்க்கார் மூடிவிட்டனர்.

பம்பாய் துறைமுக தீவிபத்து அறிக்கை பிரசுரம்.

பாரதி விழா வாரம் : தமிழ்நாடெங்கும் கொண்டாட்டம்.

தண்டு நாராயண ராஜு தஞ்சை சிறையில் காலமானர்.

14. ஜின்னாவுடன் ஸர் அஜீஜுல் ஹேக் (இந்தியா சர்க்காரின் வர்த்தக மெம்பர்) பேச்சு.

16. பிரசுரமாகாத காந்தி - ஜின்னா கடிதங்களை வெளியிட இந்தியா சர்க்கார் அனுமதி மறுப்பு.

உலகச் செய்திகள்

ஆகஸ்டு

16. ராணுவ வகையில் முக்கியமான தீவுகளை அமெரிக்கா உலக வியாபகமாகப் பெற வேண்டும் என்ற பிரேரணை அமெரிக்க செனேட்டில் வந்தது.

17. ஹிட்லர் கொலை முயற்சி சம்பந்தமாக லீப்ஜிக் மேயர் கோலொர்ட்லர் கைது.

21. யுத்த பிற்கால உலக பந்தோபஸ்து மகா நாடு அமெரிக்காவில் ஆரம்பம்.

22. சீனவுக்கு அமெரிக்க ராணுவ தூது.

28. 'வேண்டாத மனிதர்' என்று இந்தியா சர்க்காரால் வருணிக்கப்பட்ட ஸ்ரீ பிலிப்ஸ் அமெரிக்காவுக்குத் திரும்பினர்.

29. யுத்த பிற்கால பந்தோபஸ்து மகாநாட்டின் முடிவு பிரகடனம்.

செப்டம்பர்

1. பிலிப்ஸ் சம்பவத்தைப்பற்றி யு. எஸ். காங்கிரஸில் பிரேரணை.

2. இந்தியாவைப் பற்றி முழுத் தகவலை ரூஸ்வெல்ட் தரவேண்டுமென அமெரிக்க செனேட்டில் கோரிக்கை.

3. இலங்கை சீர்திருத்தக் கமிஷனை பகிஷ்கரிக்க இலங்கை தேசிய காங்கிரஸின் தீர்மானம்.

6. ஜெர்மனி சரணகதி யடைந்ததாகவும் சமாதான தூதுகளை அனுப்பி யிருப்பதாகவும் வதந்திகள்.

10. கியூபெக்கில் சர்ச்சில் - ரூஸ்வெல்ட் மந்திராலோசனை ஆரம்பம்.

13. லண்டனிலுள்ள ஸ்ரீ பட்டேல் என்ற இந்தியர் பிரிட்டிஷ் ஸைன்யத்தில் சேர மறுத்துவிட்டார்.

சிறு சேமிப்புத் திட்டம்

பதுக்கி வைக்கவோ
அளவிற்கு மீறி செலவு
செய்யவோ
வேண்டாமென்றும்
எதிர்காலத்தில்

❋

தனக்காகவும்
தன் குழந்தைகளுக்காகவும்

மிச்சம் செய்ய வேண்டு
மென்றும் கேட்டுக் கொள்ளு
கிறது.

உங்கள் பணத்தை

பெருக்குகிறது

ஒவ்வொரு		நீங்கள் பெறுவது
ரூ. 10-க்கும்	12 வருஷங்களுக்கு பிறகு	ரூ. 15
,, 50		,, 75
,, 100		,, 150
,, 500		,, 750
,, 1000		,, 1500
,, 5000		,, 7500

இதற்கு
வருமான வரி கிடையாது

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

கிடைக்குமிடம் :—

அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள், தபால் ஆபீஸ்கள், ஸேவிங்ஸ் பீரோக்கள், வருஷத்திற்கு 100-க்கு 4 1/6 வட்டி கிடைக்கும்.

❋ ஒவ்வொருவரும் ரூபா 5000-க்கு அதிகப்படாமல் சர்டிபிகேட்டுகள் வாங்கலாம்.

A. A. & S. N. S. 4

யுத்தச் செய்திகள்

கிழக்கு ஐரோப்பா

ஆகஸ்டு

17. கிழக்கு பிரஷ்யாமீது ஸோவியத் பீரங்கி நடவடிக்கை ஆரம்பம்.

19. தங்கள் பால்டிக் படைகளுடன் தொடர்பை ஏற்படுத்த ஜெர்மனியரின் எதிர்த்தாக்குதல்.

22. ருமேனியாவில் ஜாஸ்வி ரஷியர் வசமாயிற்று.

கிழக்கு ரஷ்யாவுக்குள் ஸோவியத் ரோந்துப் படைகள் பிரவேசம்.

24. ருமேனியா நேசக்கக்ஷியில் சேர்ந்தது.

25. எஸ்தோனியாவில் டார்ட்டு (டோர்பாட்) செஞ்சேனை வசம்.

சுதந்திர ஜெர்மன் கமிட்டியில் 24 ஜெனரல்கள் இருப்பதாக ஸோவியத் அறிவிப்பு.

26. டான்யூப் தீரத்தில் ரஷியர்.

ஜெர்மனி மீது ருமேனியா யுத்தப் பிரகடனம்.

பல்கேரியா சமாதான நிபந்தனைகளைக் கோருகிறது.

28. ஹங்கேரிக்குள் செஞ்சேனை பிரவேசம்.

29. கான்ஸ்டான்ஜா வீழ்ந்தது.

30. புளோஸ்டி வீழ்ந்தது.

31. புகாரெஸ்ட் ரஷியர் வசமாயிற்று. போலந்தைப்பற்றி பிரிட்டிஷ் ரஷிய வேற்றுமை.

செப்டம்பர்

1. பல்கேரிய மந்திரி சபை ராஜீநாமா.

2. பின்லாந்துக்கு ரஷிய சமாதான நிபந்தனைகள் அனுப்பப்பட்டன.

3. பல்கேரிய எல்லையில் செஞ்சேனை.

4. தெற்கு பின்லாந்தில் போர் நிறுத்தம்.

5. பல்கேரியா மீது ஸோவியத் யுத்தப் பிரகடனம்.

6. யுகோ எல்லையில் செஞ்சேனை.

7. பல்கேரிய ஸோவியத்திடம் சரணடைகிறது.

10. பல்கேரியாவில் புது சர்க்கார் அமைப்பு.

13. கிரீஸுக்குள் ஸோவியத் துருப்புகள் புகுந்து ஈஜியன் கடற்கரையை நெருங்குகின்றன.

ருமேனிய யுத்த நிறுத்த உடன்படிக்கை கையெழுத்து.

14. செகோஸ்லோவாகியாவுக்குள் செஞ்சேனை பிரவேசம்.

16. பல்கேரிய தலைநகரில் ரஷியர். ஜெர்மனிமீது பின்லாந்து யுத்தப் பிரகடனம்.

மேற்கு ஐரோப்பாவில்

ஆகஸ்டு

16. தென் பிரான்ஸ்மீது நேச படையெடுப்பு.

17. ஷார்ட்டர்ஸ், ஆர்லியான்ஸ் விடுதலை. நார்மண்டியில் நாஜிகள் தோல்வியுற்று வேகமாய் வாபஸாகலாயினர்.

19. பாரிஸ் அருகில் அமெரிக்கப் படைகள்.

26. பாரிஸ் பரிபூர்ணமாய் விடுவிக்கப்பட்டது.

27. டிகாலே கொல்ல முயற்சி. லவாலேயும் பெட்டெய்னையும் ஜெர்மனியர் அப்புறப்படுத்தினர்.

28. ல்யான்ஸ் விடுதலை.

செப்டம்பர்

1. பிரான்ஸிலிருந்து இத்தாலிய எல்லைக்குள் நேசப் படைகள் பிரவேசம். நைஸ் பெஜியர்ஸ் அமெரிக்கர் வசம். டியெப் கனேடியர் வசமாயிற்று.

3. பெல்ஜிய - பிரெஞ்சு எல்லையை நேசத் துருப்புகள் கடந்தன.

4. ஜெர்மன் எல்லையில் அமெரிக்க 3-வது சைன்யம்; ஹாலந்துக்குள் பெல்ஜியத்திலிருந்து நேச பிரவேசம்.

5. ஸ்வித்தர்ஜர்லாந்தின் எல்லைப்புறத்தில் அமெரிக்கர்.

7. ஸிக்பிரெட் அரணை நோக்கி அமெரிக்க முன்னேற்றம்.

9. பிரஸ்ஸெல்ஸ் ஆஸ்டெண்ட் வீழ்ந்தன.

11. லக்ஸெம்பர்க் விடுதலை.

12. ஜெர்மனிக்குள் நேசத் துருப்புகள் 8 மைல் முன்னேறின.

16. பிரெஸ்ட் துறைமுகம் பிடிபட்டது.

Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras Printed by T. V. Volaganatha Mudaliar, Sadhu Press, 12, Ganapathy Mudali Street, Royapettah, Madras